# சதுரங்கத்தில் வாழ்க்கை



மைதிலி தயாபரன்

# சதுரங்கத்தில் வாழ்க்கை

(கட்டுரைத் தொகுப்பு)

# சதுரங்கத்தில் வாழ்க்கை

**(கட்டுரைத் தொகுப்பு)**

**மைதிலி தயாபரன்**

வெளியீடு:
வெளியீட்டு இல.08
**கிருஷ்ணிகா வெளியீட்டகம்**
வவுனியா.

# சதுரங்கத்தில் வாழ்க்கை

(கட்டுரைத் தொகுப்பு)

எழுதியவர் : மைதிலி தயாபரன்
தொலைபேசி : 0770178014
மின்னஞ்சல் : maithilieet@yahoo.com
பதிப்புரிமை : எழுத்தாளருக்கே
வெளியீடு : கிருஷ்ணிகா வெளியீட்டகம், வவுனியா.
முதற் பதிப்பு : 20-10-2017
அட்டை வடிவமைப்பு : கந்தையா கோபில்ராஜ்
அச்சுப் பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்
விலை : ரூபா 300

## PATHAM KAADDUM PATHAI

(short story collection)

Author : Maithiliee Thayaparan
Telephone : 0770178014
E- mail : maithilieet@yahoo.com
Copy Rights : For Author
Publication : Kirushniga Publications, Vavuniya
First Edition : 20-10-2017
Cover Design : Kandaiah Kobilraj
Printers : Vaani Computer Printing Centre
Price : Rs. 300

ISBN : 978 - 955 - 38691 - 0 - 4

# வெளியீட்டுரை

எமது வெளியீட்டகத்தால் வெளியிடப்படும் எட்டாவது புத்தகம் இதுவாகும். கடந்த வருடத்தில் திருமதி மைதிலி தயாபரனின் மூன்று புத்தகங்களை வெளியிட்டிருந்தோம். "ஆத்திகனுக்கு அகப்படாதவன் (கவிதை)", "என் செல்வ மகளே (நாவல்)", "பாதம் காட்டும் பாதை (சிறுகதை)" என்பவற்றைக் கடந்த வருடத்தில் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்தும் இந்த வருடமும் அவருடைய புத்தகங்களை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015 ஆம் வருடம் வெளியிடப்பட்ட அவரின் நான்கு நூல்களில் இரு நூல்களுக்கு விருது கிடைத்திருந்தது. "சீதைக்கோர் இராமன்" என்ற அவரின் கவிதைத் தொகுப்பிற்கு வட மாகாண சிறந்த மரபுக் கவிதைக்கான விருதும் "அநாதை எனப்படுவோன்" என்ற அவரது நாவலுக்கு வவுனியூர் இரா உதயணன் அவர்களின் சிறந்த இளம் படைப்பாளிக்குரிய விருதும் கிடைத்திருந்தது. நாம் சேவையைத் தொடங்கிய முதலாவது வருடத்திலேயே இரு நூல்களுக்கான விருதைப் பெற்றிருந்தது பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

இந்த வருடத்தில் அவரின் பதினோராவது புத்தகமாகிய "சதுரங்கத்தில் வாழ்க்கை" என்ற கட்டுரையை வெளியிடுவதில் பெருமை அடைகின்றோம். தொடர்ந்தும் சில தொடர்களைக் கொண்டுவர வேண்டிய தொகுப்பின் ஒரு வெள்ளோட்டமாகவே இதனை எமக்குப் பார்ப்பதற்கு முடிகின்றது. இதிகாசங்களில் ஒன்றாக மிளிரும் மகாபாரதத்தின் ஆதிபர்வத்தில் இடம்பெறும் சில விடயங்களை எடுத்து அவற்றைக் கால ஒழுங்கு தவறாமல் தந்து இன்றைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பற்றிப் பேசுவது இங்கு சிறப்பம்சமாக இருக்கின்றது. மைதிலி அவர்கள் தொடர்ந்தும் பல படைப்புகளைத் தரவேண்டும் என்றும் எமது வெளியீட்டகத்தின் ஊடாக அவரின் பல ஆக்கங்களும் வரவேண்டும் என்றும் வாழ்த்தி நிற்கின்றோம்.

உரிமையாளர்,
**கிருஷ்ணிகா வெளியீட்டகம்**

# அணிந்துரை

தமிழ்மொழிக்கான இலக்கியவரலாறுஎன்பதுதொல்காப்பியத்திலிருந்து ஆரம்பமாகிறது. தமிழ்மொழியின் வரலாற்றுப்பாதை தமிழர்கள் அறிவியல் சார்ந்து வாழ்ந்தவர்கள் என்பதனை பல இடங்களில் வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆரம்பகாலங்களில் ஓலைச்சுவடிகளில் ஆவணப்படுத்தப்பட்ட நமது இலக்கியங்கள் ஐரோப்பியர்களின் வருகைக்குப்பின் புத்தகங்களாக ஆவணப்படுத்தப்பட்டன. இப்பெரும்பணியை உ.வே.சாமிநாதையர், ஆறுமுகநாவலர் போன்றோர் சிறப்பாகச் செய்து தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர்.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரான தமிழ் இலக்கியங்களின் பரிணாம வளர்ச்சியாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுகதைகள், நாவல்கள், மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், தகவல் களஞ்சியங்கள் என கடந்தகால, நிகழ்கால இலக்கியங்கள் நூலுருவில் ஆவணப்படுத்தப் படுகின்றன.

அவற்றுக்கும் மேலாக கட்டுரைகள் வடிவில் பல அறிஞர்களின் கருத்துக்கள் நூலுருவாகின. கட்டுரைகளில் ஆய்வுக்கட்டுரைகள் சிறப்பான பதிவுகளாக இடம்பிடித் துள்ளன. அந்த ஆய்வுக்கட்டுரைகள் ஏராளம் வெளிவந்தாலும் ஒப்பாய்வுக் கட்டுரைகள் என்பது மிகவும் குறைவென்றே கூறவேண்டும். ஒப்பாய்வு என்பது வாசகர்களை சிந்தனை ரீதியில் பல பரிமாணங்களை தொட்டுவிடத் தூண்டும் முயற்சியாகும். இது மிகவும் கடினமான பணி என்பதனால் இதனைப்பலர் தவிர்த்து விடுவதுண்டு.

ஆனால் மைதிலி தயாபரன் அவர்கள் துணிச்சலுடன் இந்த ஒப்பாய்வு முயற்சியை மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளார் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். வாழ்த்துக்கள்.

தனது பதினோராவது நூலாக "சதுரங்கத்தில் வாழ்க்கை" என்னும்

இந்நூலினை வெளியீடு செய்கிறார். இந்நூலில் மகாபாரதத்தினை மிகவும் நுணுக்கமான ஆய்வுக்குட்படுத்தி இன்றைய நமது வாழ்வியலோடு பல நிகழ்வுகளை ஒப்பீடு செய்துள்ளார்.

இந்த ஒப்பாய்வுக்காக நிறைய தரவுகளை பல நூல்களிலிருந்து திரட்டி ஒரு தகவல் களஞ்சியமாகவும் இந்நூலிற் தந்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். உதாரணமாக சதுரங்க வரலாறு பற்றி அவரது தரவுகள் வாசகர்களுக்கு பல்சுவை கொண்டதாக அமையும். அத்தோடு நிலையாமை பற்றிப் பல இடங்களில் தொட்டுச்செல்வதும் சிறப்பாகும்.

"மானுடப் பிறவியின் தேடல்கள் எத்தனை அனுபவங்களைப் பெற்ற பின்பும் அடங்கி விடுவது கிடையாது. பிறவியில் ஏற்படுத்தப்படும் மாயை எப்பொழுதும் சரியானதை எண்ணிக்கொள்வதற்கு அவர்களை வழிப்படுத்துவதில்லை. இதனால் புதிதாக வித்தியாசமான அனுபவங்களைப் பெறுவதற்கு அவர்களை ஆற்றுப்படுத்தியவாறு இருக்கும்" என்ற ஆழ்ந்த உண்மையை தனது என்னுரையில் குறிப்பிட்டதிலிருந்தே உட்புகும் ஆவலைத் தொடக்கி வைக்கிறார்.

"கேள்வி எழும்போதே தேடலும் ஆரம்பமாகி விடுகின்றது. போருக்கு முன்னதான நிலைமைகளை கருத்திற்கொண்டு சதுரங்கத்துடன் வாழ்க்கையை ஒப்பிட்டுப்பார்க்கலாமா?" என்ற கேள்வியை "கலியுகத்திற்குச் தேவையான பாரதத்தின் சாரம்" என்ற அத்தியாயத்தில் உட்புகுத்தி வாசகர்களின் வாசிக்கும் விருப்பை மேலும் தூண்டி விடுகிறார்.

"உலகம் எவ்விதமாக அமைக்கப்பட்டு இருந்தாலும் மனிதவாழ்க்கை என்பது திணிக்கப்படும் விதம் மிகவும் அழகாகவே காட்டப்பட்டுள்ளது. உலகில் அனைத்து ஜீவராசிகளுக்கும் மேலாக மனிதனின் வாழ்வு அமைக்கப்பட்டு போட்டிகளின் மூலமாக வழிநடத்தப்படுகின்றது." என்று "இழந்தது ஏதும் உன்னுடையதா? " என்ற பகவத்கீதையின் சாராம்ச வாக்கியத்தை தனது அத்தியாயமாக்கி மனிதவாழ்வை ஆய்வு

செய்துள்ளதோடு மரணஞானம் பற்றியும் பல தேவையான கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

“எமக்குப் பிரியமானவர்கள், எமக்கு நம்பிக்கையானவர்களையே நாம் கேள்வி கேட்கவும் கோபித்துக் கொள்ளவும் முடியும். எமக்கு ஏற்படும் அதீத நம்பிக்கை உடைத்தெடுக்கப்படும்போதே ஆத்திகர்களாக இருக்கும் நாம் கடவுளை வெறுக்கும் நிலைக்கு ஆளாகிவிடுகின்றோம்” என்ற வாழ்க்கைத் தத்துவத்தை “மாற்றம் என்னும் மாறாத உண்மை” என்ற அத்தியாயத்தில் அழகாக தூவி வாசகர்களை சிந்திக்க வைத்துள்ளார்.

“வெறும் காற்றாக எழுந்து கண்ணுக்குப் புலப்படாது இருக்கும் இந்த உயிருக்கு இங்கிருந்து எந்தப்பொருளையும் எடுத்துச் செல்லும் வல்லமை கிடையாது. அது உயிரின் பாவபுண்ணியங்களை மட்டுமே சுமந்து செல்கின்றது” என்று “அரங்கை அமைத்தனர் ஆடுவதற்கு” என்ற அத்தியாயத்தில் உயிர் பற்றி அலசி ஆராய்ந்துள்ளார்.

“கல்வி எவ்வளவு உயர்ந்து நின்றபோதும் அதற்கு ஏற்றவாறு தொழில்வாய்ப்பும் பொருளாதாரமும் இல்லாதுவிடின் கற்ற கல்வியின் உச்சப் பயனை பெறமுடியாது என்பது இலங்கையில் கல்வி கற்ற இளைஞர்களின் எண்ணப்பாடாகும். இதனால் மூளைசாலிகளின் வெளியேற்றம் என்ற விடயம் வெகு சாதாரணமாகப் போய்விட்டது.” என்று “ஆட்டத்தை தொடங்கவென வந்தவர்கள்” என்ற அத்தியாயத்தில் இலங்கை இளைஞர்களின் உணர்வுகளின் எண்ணப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இளமையை நன்கு பாவித்துக் கொள்வதற்கு இளையவர்களுக்கு உரியநேரத்தில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு செய்யப்படாத விடத்து அவர்களின் ஆற்றல்கள் தேசவிரோத செயல்களை நோக்கிச் சென்றுவிடும். அவற்றினால் நாடு அனுபவிக்கும் தீவினைகளிலிருந்து அத்தனை சீக்கிரத்தில் மீண்டுகொள்ளமுடியாது. என “வளைந்து செல்லும்

வாழ்க்கைப்பாதை” என்ற அத்தியாயத்தில் இன்றைய இளைஞர்களின் யதார்த்த நிலையை எடுத்தியம்புகிறார்.

“நற்பிரசைகளை உருவாக்குவதில் இன்றைய கற்றலின் பங்கு” என்ற இறுதி அத்தியாயத்தில் கல்வி பற்றிய பலநிறுவல்களுடன் சிறப்பான ஒரு கட்டுரையை வரைந்து நூலை முடித்துள்ளமை சிறப்பு.

ஒப்பாய்வில் ஆர்வமுள்ள வாசகர்களுக்கு மிகச்சிறந்த நூலாக இது அமையும். ஆசிரியர் தொடர்ந்து இலக்கியப் பயணத்தில் தனது தடங்களைப் பதிக்க எனது வாழ்த்துக்கள்.

**தமிழ்மணி.மேழிக்குமரன்**
சின்னப்புதுக்குளம்
வவுனியா.

# என்னுரை

எனது இலக்கிப் பயணத்தில் பதினோராவது புத்தகமாகிய கட்டுரைத் தொகுப்பு இதுவாகும். கடந்த சில ஆண்டுகளாக சில படைப்புக்களைச் செய்த வரிசையில் 2017 ஆம் ஆண்டுக்குரிய ஆக்கமாக இந்தத் தொகுப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன்.

உலகில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் மேலாக, மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆறாம் அறிவு அவனுடைய தேடலையும் அதனாலே இயற்கையை விஞ்சுவதற்கு உரிய ஆற்றலையும் அவனுக்கு வழங்கியிருக்கிறது. ஆதிகாலத்தில் சாதாரணமாக விலங்கோடு விலங்காக வாழ்ந்து வந்த மனிதன், இன்று விண்ணைத்தொடும் அளவிற்கும் தொழில்நுட்ப விருத்தியால் இன்னொரு மனிதனை உருவாக்கும் அளவிற்கும் வளர்ந்து விட்டமைக்கு ஏதுவாக அமைந்தது அவனுடைய இந்த சிந்திக்கும் ஆற்றலே. இருப்பினும் சிந்தனை என்பது தேவையின் கட்டாயத்தில் உதிப்பதாக இருப்பதால் அது ஒரு சிலருக்கு மட்டும் உந்துதலாக அமைகின்றது என்பது கண்கூடு.

ஆற்றல்கள் அனைத்தும் எமக்கு வழங்கப்பட்டு இருந்தாலும் அவற்றைத்தூண்டும்காரணிகளாகசந்தர்ப்பம்என்பது அமைந்திருக்கின்றது. இந்த உலகில் அறிவுக்காகவும் ஆர்வத்துக்காகவும் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை விடவும் அவசியத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களே அதிகம். இந்த வகையில் அனுபவம் எனப்படும் உலக அறிவு, அதாவது தன்னுடைய சொந்த வினைகளை அனுபவிப்பதாலும் மற்றவர்களுடைய வாழ்க்கையைக் கண்ணுறுவதாலும் உண்டாக்கப்படும் சமுதாய அறிவு பரீட்சையை நடத்திய பின்பு ஒருவருக்குக் கொடுக்கும் தெளிவான விளக்கத்தைப் போன்று பலதையும் அறிவித்து விடுகின்றது.

அவசியம் என்பது அறிவைப் பாவிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வெகுவாக வழங்கி விடுவதால் பற்றாக்குறை என்பதும் தேவை என்பதும் எமக்குரிய பாதையைத் திறந்து வைக்கும் திறவுகோல்கள் என்பதை சுலபமாக விளங்கிக் கொள்வதற்கு முடியும். அவ்வாறு விளங்கிக்

கொள்வோமாயின், துன்பங்கள், துயரங்கள் அனைத்துமே எம்மை வழிகாட்டும் ஆசான்கள் என்பதை சுலபமாகப் புரிந்து கொண்டு விடலாம். பெரும் கடலினை ஒத்த இந்த மானுடப் பிறவியும், துன்பங்களை சுமந்து வாழும் மாணாப்பிறப்பும் அர்த்தமுள்ளதாக அமைந்துவிடும்.

ஆனாலும் மானுடப் பிறவியின் தேடல் எத்தனை அனுபவங்களைப் பெற்ற பின்பும் அடங்கி விடுவது கிடையாது. பிறவியில் ஏற்படுத்தப்படும் மாயை எப்பொழுதும் சரியானதை எண்ணிக் கொள்வதற்கு அவர்களை வழிப்படுத்துவதில்லை. இதனால் புதிதாக வித்தியாசமான அனுபவங் களைப் பெறுவதற்கு அவர்களை ஆற்றுப்படுத்தியவாறு இருக்கும். இதனால் போட்டி என்ற விடயம் இயல்பாகவே புகுத்தப்பட்டு விடும். எந்த ஒரு விடயத்திலும் போட்டி என்ற உப்பைக் கலக்கும்போது வாழ்க்கை என்னும் கூட்டு சுவையைத் தருவதற்குத் தொடங்கிவிடும்.

எமது உடலுக்கு சக்தியை வழங்கும் குளுக்கோசு பிரிகை அடையும் தாக்கத்திற்கு பெருமளவு வெப்பநிலை தேவைப்படுகின்றது. இருப்பினும் உடல் வெப்பநிலையில் அதை இடம்பெறச் செய்வதற்கு நொதியங்கள் எனப்படும் ஊக்கிகள் உதவிபுரிகின்றன. இதனால் வெப்பநிலை மாறாதிருக்க ஏவற் சக்தியைக் குறைத்து தாக்கத்தை நடாத்துகின்றன. இவ்வாறு உடலின் செயற்பாடுகள் அனைத்தையும் கொண்டு நடத்துவதற்கு ஓமோன்கள் உதவுகின்றன. அதே போன்று அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் எனப்படும் ஊக்கிகள் பாவிக்கப்படுகின்றன.

வரையறுக்கபட்ட வாழ்நாளுக்குள் வாழ்ந்து முடிக்கும் மனிதன், உலகம் உள்ளவரையிலும் போற்றப்படுவதற்கு உரிய காரணமும் இதுவே. நிலையில்லாததும் நித்தமும் நோய்க்கு உட்படுவதுமான இந்த உடலைக் கொண்டு அழியாத புகழைப் பெற்றுவிடுகின்றனர். அவ்வாறான புகழைத் தரும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தப்படும் போட்டிகளையும் பாராட்டாமல் இருக்க முடிவதில்லை.

ஆனால் அவ்வாறான போட்டி நிலை உச்சக்கட்டத்தை அடைந்து விடும்போது அது பலவிதமான அழிவுகளையும் கொண்டு வந்துவிடும்.

உலக வரலாற்றிலே போட்டிகளுக்கும் போர்களுக்கும் குறைவு இருக்கவில்லை. ஒருசில நல்லவர்களாற் கட்டி எழுப்பப்பட்ட நாகரீகங்களும் சாம்ராஜ்ஜியங்களும் போட்டி என்ற விடயத்தால் சின்னாபின்னம் ஆக்கப்பட்டு, அழிக்கப்பட்டு அவற்றின் சிறப்பான அம்சங்களை அடுத்த தலைமுறையினரால் அறிய விடாமல் செய்து வைத்தது. அந்தப் போட்டிகளில் வெற்றியை அடைவதற்காக மானுட தர்மத்துக்குப் புறம்பான சில விடயங்களைக் கைக்கொண்டு இருந்தார்கள். ஆனால் முள்ளை முள்ளால் எடுப்பதைப் போன்று அநீதியைக் களைவதற்காக அவை பாவிக்கப்பட்டதாக சில வழுவமைதிகளையும் குறித்துக் காட்டினார்கள்.

இவ்வாறான உச்ச மட்ட போட்டியைக் காட்டும் இடமாக மகா பாரதப் போர் இடம்பெற்ற குருக்ஷேத்திரம் என்ற இடம் காட்டப்பட்டது. அவதாரங்கள் என்றும் செயற்கரிய செய்த பெரியார்கள் என்றும் விபரிக்கப்பட்ட சான்றோர்களாலே யுத்த நெறிகள் மீறப்பட்டதாகவும் அதர்மத்தை ஜெயிப்பதற்காக சில நெளிவு சுளிவுகளைப் பாவித்தாகவும் சொல்லிச் சென்றார்கள். இதனால் போட்டிகளின் உயர் மட்டத்தை அனுபவித்த அந்த களத்தை என்னுடைய ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன்.

பாரத தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டு பார் முழுவதும் பரப்பப்பட்டு, மூளைக்கு அதிக வேலையைக் கொடுக்கும் சதுரங்க விளையாட்டு அடிக்கடி என்னுடைய சிந்தனையைத் துளைத்ததுண்டு. அதன் நகர்வுகளும் மகாபாரத்தில் இடம்பெற்ற சில அறிவு பூர்வமான விடயங்களும் என்னுடைய கருத்தைக் கவர்ந்தது. வாழ்க்கையில் பயங்கரமான போட்டிகளுக்கு நான் தனியாக முகங்கொடுத்த சந்தர்ப்பங்களில் இந்த இரண்டு விடயங்களும் எனக்கு உதவியளித்தது. இதனால் மனித வாழ்க்கையில் இருக்கும் போட்டிகளை இந்த இரண்டு விடயங்களையும் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் இந்தப் புத்தகத்தை எழுதுவதற்குத் தூண்டியது.

உலகில் படைக்கப்பட்ட பலவற்றையும் ஒப்பிட்டு ஆராயும் மனிதனின் பண்பு பிற்காலத்தில் கணிதமாக வளர்ச்சி அடைந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதே ஒப்பிடு, உவமை மற்றும் உருவகம் போன்ற அணிகளாக உருவெடுத்து மொழிக்கும் படைப்புக்கும் அழகு

சேர்த்ததை யாராலும் மறுத்துவிட முடியாது. இதனால் எனக்குக் கணித அறிவையும் மொழி அறிவையும் ஊட்டிய அனைத்து ஆசான்களையும், இலக்கியங்களையும் புராணங்களையும் கதைகளாகச் சொல்லித் தந்த என்னுடைய பெற்றோரையும் இந்த இடத்தில் நன்றியுடன் நினைவுகூருவதற்குக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

சதுரங்க விளையாட்டை ஆரம்பிக்கும் சுறுசுறுப்பில் எனது கை இயங்குகின்றது. அதன் நகர்வில் மகா பாரதக்கதையிற் பலவும் இடம்பெற விழைகின்றன. நிகழ்வுகளின் நிழல்கள் பலவற்றையும் புகுந்து குழப்பத் தொடங்குகின்றது. அந்த ஆட்டத்தில் நுழைந்தவாறு ஓட்டத்திற்குத் தயாராக இருக்கும் நான் உங்களது கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**மைதிலி தயாபரன்**
20.10.2017

# சதுரங்கத்தின் கட்டங்கள்


| | | |
|---|---|---|
| 01. | கலியுகத்திற்குத் தேவையான பாரதத்தின் சாரம் | 15 |
| 02. | புயலுக்குப் பின்னதான அமைதி | 24 |
| 03. | மகாபாரதச் சுருக்கம் | 31 |
| 04. | இழந்தது ஏதும் உன்னுடையதா? | 40 |
| 05. | மாற்றம் எனப்படும் மாறாத உண்மை | 49 |
| 06. | அண்ட பிரபஞ்சத்தில் எமக்குரிய பங்கு | 58 |
| 07. | சதுரங்கமும் வரலாறும் | 67 |
| 08. | கதைக்கு ஆசிரியர் வரவு | 75 |
| 09. | அரங்கை அமைத்தனர் ஆடுவதற்கு | 84 |
| 10. | ஆட்டத்தைத் தொடங்கவென வந்தவர்கள் | 93 |
| 11. | ஆடுகளத்திற்கு குருகுல வீரர் வருகை | 102 |
| 12. | தந்தை வயிற்றில் உதித்த தனயன் | 111 |
| 13. | ஏட்டிக்குப் போட்டியாகும் வாழ்க்கை | 120 |
| 14. | வளைந்து செல்லும் வாழ்க்கைப் பாதை | 129 |
| 15. | கதா நாயகனின் முதல் நகர்வு | 137 |
| 16. | தேவர்க்கு மேலாக மானுடர்க்கு அன்னை | 145 |
| 17. | செயற்கரிய செய்த பீஷ்மர் | 153 |
| 18. | பேதை என்பதாற் பேதமையா | 162 |
| 19. | இடம் மாறும் இளமையும் முதுமையும் | 171 |
| 20. | மன்னரை மயக்கவந்த மான் | 180 |
| 21. | நம்பிக்கைப் பயிரிலே விளைவாகும் துரோகம் | 188 |
| 22. | காலமின்றிக் கவர்ந்திழுக்கும் களவியல் | 196 |
| 23. | நற்பிரசைகளை உருவாக்குவதில் இன்றைய கல்வியின் பங்கு | 203 |

# 1. கலியுகத்திற்குத் தேவையான பாரதத்தின் சாரம்

ஒருவனுடைய தனித்துவமான ஆளுமையுள் ஆசை கலந்து வரும்போது, மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை எனப் பற்பல வடிவெடுத்து அவனைத் தூண்டி எழுப்புகின்றது. அவ்வேளை, தன்னைச் சார்ந்திருக்கும் அனைத்தையும் தன்பக்கம் சேர்த்து கொண்டு, தன் நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்கென மற்றையவர்களைத் தாக்குவதற்கு முனைந்து எழுந்து கொள்வான் அவன்.

அவ்வாறானதொரு ஆசையின் விளைவு, அன்றொரு நாள் குருஷேத்திரத்தில் மையம் கொண்டது. ஒருவனது அல்லது பலரினது முறை தகாத ஆசை இரண்டு அணியினரை தமக்குள் மோத விடுவதற்குத் தயாரானது. ஒரு தாயின் வயிற்றில் உதித்திராத இரு சகோதரர்கள் எதிரெதிரே வந்து நின்றனர்.

தம்பி உடையவன் சண்டைக்கு அஞ்சான் என்ற பழமொழியை நன்கு தெரிந்து வைத்ததனாலோ என்னவோ, இருபகுதியினரும் தம்பிகளுடனே களத்திற்கு வந்தனர். ஒருவனுக்கு முத்தாக நான்கு தம்பியர். மற்றவனுக்கு சொத்தாக நூறு தம்பியர். அனைவரும் தத்தமது அண்ணர்களுக்காகக் களத்தில்.

ஒத்தாசை புரிவதற்கெனத் தாய்வழி மாமன்மாரும் அவர்களின் புதல்வர்களாகிய உறவு முறை மைத்துனர்களும் வந்து நின்றனர். பெண் கொடுத்தவர், பெண் வழிச் சகோதரர்கள், பொருள் கொடுத்தவர் (கப்பம் செலுத்தியவர்கள்) என அவரவர் பக்கத்திற்கு அரசனைக் காக்கவென அணிவகுத்த அநேகர். அனைவரின் ஆதங்கத்தில் ஒரு முடிவினைத் தேடும் அவா.

முடிவு என்பது இரு பகுதிக்கும் சுபமாக அமைந்து விடுவதில்லையே! முடிவினைச் சேர்ந்துவிட்டால் பாபத்தைச் சுமப்பது யார்? பார்த்த(வ)னுக்கு வந்தது அதில் மயக்கம். காண்டீபத்தை நழுவ விட்டுத் தேர்க் கட்டில் சாயவிழைந்தான்.

மயக்கத்தினைத் தெளிவாக்குவதற்கு அவசியம் எழுந்து விடவும் பரமாத்மா தன்னுடைய உருவை எடுத்தது. வாழ்வியலை உணர்த்த வென யதார்த்தத்தை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று.

யதார்த்தத்தைச் சுட்டியினும் தொடர்ந்து வந்த கலகத்தை நிறுத்திவிட முடியவில்லை. கலகத்தினையும் கடமை என்ற பெயரில் கட்டாயமாகத் திணித்து விடும் மானுடனின் நோக்கமே அங்கு வெற்றி பெற்றது.

காட்சியில் லயிக்கும்போதும் கண்ணுக்குத் தெரியாதை எல்லாம் ஒழுங்குபடுத்தும் போதும், நாம் வடிவமைத்துக் கொள்ளும் பொருள் கடவுள். நம்முடைய செயல்களுக்கு எல்லாம் நம்மை மீறிய சக்தியை (அமானுஷ்ய சக்தியை) வடிவமாக மாற்றிப் பார்க்கின்றோம். அனைத்தும் அவன் செயலே என்று எம்மை ஆறுதல்படுத்திக் கொள்கின்றோம்.

நிகழ்வின் சுவடுகள் பல ஆண்டுகளைக் கடந்து வந்த பின்னும் அவ்வாறானதொரு நிலையைப் படம் பிடித்துக் காட்டியது கூடத்தில் வைக்கப்பட்டிருந்த கட்டங்கள். எட்டுக்கு எட்டாக அறுபத்து நான்கு எண்ணிக்கையில் அமைந்த சதுரங்கத்தின் இருபுறமும் நிரை நிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த காய்கள்.

பதினாறு படையணிகளைக் கொண்ட இரண்டு படைகள் எதிரெதிர் அணியாக. ஒவ்வொருவருடைய நோக்கமும் தமது அரசரைக் காப்பதும் அடுத்த அணியிலுள்ள அரசரை சிறைப்பிடிப்பதும்.

இந்தக் காட்சி போருக்கு மட்டுமே பொருத்தமானதாக அமைவதா என்ற சிந்தனையைத் தூண்டுகின்றது பகுத்தறிவு. களத்தில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் பல இடங்களில் மோதிக் கொள்ள வேண்டியவர்களாக மனிதர் படைக்கப்பட்டு இருக்கின்றார்களா? போட்டி என்பதும் போர் என்பதும் அவர்களுடனேயே பிணைக்கப்பட்டு இருக்கின்றதா?

கேள்வி எழும்போதே தேடலும் ஆரம்பம் ஆகிவிடுகின்றது. போருக்கு முன்னதான நிலைமைகளைக் கருதிற் கொண்டு சதுரங்கத்துடன்

வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கலாமா?

ஒப்பிடுவதற்கு ஏதுவான பொதுத் தன்மைகளை ஆயும் ஆவல் மனிதனின் தோற்றம் உலகில் எழுந்த நாள் முதலாகவே எழுந்ததுதானே! நன்மைக்கும் தீமைக்கும் தன்(நிலை)மையை ஒப்பிடுவது அவனிடம் இருந்து பிறந்ததுதானே!

உலகிலுள்ள பொருட்கள் அனைத்தினதும் உருவாக்கம் என்பது பிரபஞ்சத்தின் ஆக்கக்கூறுகளான நிலம், நீர், காற்று, ஆகாயம் தீ எனும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதும், அவை சேர்க்கப்படும் விகிதாரசாரத்திற்கு ஏற்ப உயிரினத்தின் பிறப்பு என்பது அமைகின்றது என்பதையும் சொல்லிச் செல்கின்றது மெய்ஞ்ஞானம்.

உயிரினங்கள் பூமியில் வந்துசேர்ந்த நாள் முதலாக வாழ்க்கைக்கான கடுமையான போராட்டத்தில் ஈடுபடுகின்றன. அவற்றின் போராட்டம் அவற்றினுடைய அடிப்படைத் தேவைகளை முக்கியமாக உணவு, வாழிடம் போன்றவற்றை முதன்மைப் படுத்துவதாக அமைகின்றன.

ஆனால் மனிதப் பிறவியின் போராட்டமோ அவ்வாறு வகையிட்டுக் கொள்ளும் அளவிற்கு சிறியதாக அமைந்து விடுவதில்லை. உணவு, உடை, வாழிடம், போக்குவரத்து, தொடர்பாடல், அபிவிருத்தி எனப் பலவாறாகவும் விரிந்துகொண்டே செல்கின்றது.

மனிதனுடைய ஆசைகள் அவ்வளவு சீக்கிரத்தில் ஒரு வரையறைக்குள் அடக்கப்படுவதில்லை. ஒரு கணத்தில் வானமே எல்லை என்று சொல்லிப் பாய்ந்துவிட முனைகின்றது. அடி வாங்கும் வரையிலும் அகிலத்தையே ஆட்சி செய்யப் போவதாக சொல்லி நிற்கின்றது.

அனுமனின் வாலிலே தீயை மூட்டுவதற்காக துணி சுற்றப்பட்டபோது அது பருத்துக் கொண்டே போனதைப் போல வளர்ந்து கொண்டே செல்கின்றது. திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக

துர்ச்சாதனின் கையில்பட்டு வந்த துகில், பெரும் மலையினை ஒத்து எழுந்ததைப் போல் எழுந்து விடுகின்றது.

ஆனால் மரணம் என்ற பள்ளத்தில் இது முழுமையாக மூடப்பட்டு விடுகின்றது. அவனுடைய மூச்சு அடங்கும்போது ஆவியும் பிரிந்து விடுகின்றது. ஒருவனின் சிந்தனை, ஆசைகள், ஆர்வம் அனைத்தையும் மூடி அதில் பிறவி தன்னுடைய திரையைப் போட்டு விடுகின்றது.

உலகையே வெல்லுவதாக ஆர்ப்பரித்த மனிதன் கணப்பொழுதில் ஒருவருக்குமே புலனாகாமல் மண்ணோடு மண்ணாகி விடவும் அந்த இடத்தில் புல் முளைத்து நிற்கின்றது. மற்றவர்களைக் காலடியில் மிதிப்பதாகச் சொல்லி எழுபவன், அனைவரின் காலடி படும் மண்ணுக்குள் வைக்கப்பட்டு விடுகின்றான்.

அவ்வாறு மண்ணுக்குள்ளே புகுந்த உடல் கண்ணுக்குத் தெரியாமற் போய்விடுமா? அவர்களுடைய ஆத்மாவின் தாகம், ஆவல் மற்றவர்களுக்கு உணர்த்தப்படமாட்டதா? அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவே முடியாதா? என்ற கேள்வி எம்மிடம் சாதாரணமாகவே எழுகின்றது.

எமது பிறவியில் நாம் சந்தித்திராத ஒருவருடைய எண்ணங்கள் எதிர்பார்ப்புக்களை நாம் கண்டு கொள்ள முடியாதா என்று கேட்கத் தோன்றுகின்றது.

முடியும் என்பதுதான் அதற்குரிய பதிலாகும். உலகில் பல கோடிக் கணக்காகத் தோன்றி மறைந்து விடும் உயிரினங்களின் வாழ்க்கையும், படிப்படியாகக் கட்டி எழுப்பப்பட்ட மனித நாகரிகமுமே இதற்குச் சான்றாகும். மறைந்து விட்ட மனிதனின் எண்ணங்களின் அதிர்வலைகள் எமது சுற்றாடலில் இருந்து கொண்டு எம்மை ஆற்றுப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பது யதார்த்தம். மனிதனுக்கு வழங்கப்பட்ட அபூர்வமான பகுத்தறிவு, இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு செயற்படுகின்றது.

சோழ குலத்து அரசனாகிய பார்த்தீப மகாராஜா தன்னுடைய சந்ததி, வீரத்தில் எவ்வாறெல்லாம் சிறந்து விளங்க வேண்டியதாக எதிர்பார்த்தாரோ அவற்றை சுவரில் ஓவியமாக வரைந்துவிட்டு இறந்தபோது, அவரின் சந்ததி அதனைப் பின்பற்றி இமயத்தில் புலிக் கொடி பறித்ததையும், திரைகடல் ஓடித் திரவியம் தேடியதையும் சான்றாகக் குறிப்பிடலாம்.

"ஒருவன் புதைக்கப்படுவதில்லை. அவன் விதைக்கப்படுகின்றான்" என்ற வாசகம் போராளிகளை மட்டும் நினைவுபடுத்துவது இல்லை. அவர்களின் கொள்கைகள், போராட்டங்கள், வெற்றி தோல்வி அனைத்தையுமே சொல்லிச் செல்கிறது.

மனிதன் இருக்கும் வரையில், அவனுக்கு உடன்பிறப்பாய் ஆறாம் அறிவு கொடுக்கப்படும் வரையில் போராட்டங்கள் நடந்து கொண்டே இருக்கும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. அவ்வாறான போராட்டங்கள், தங்களுடைய பாதுகாப்பு அல்லது இருப்பு என்ற பெயரைக் கொண்டு நடாத்தப்படுகின்றன.

வாழ்க்கைப் போராட்டத்தில் உயிரினங்கள் ஒன்றோடு ஒன்று தாக்குதலை நடத்தி, வலிமையுடையவை வெற்றி பெறுகின்றன என்பதை "சாள்ஸ் டாவின்" அவர்கள் தக்கெனப் பிழைத்தலும் தகாதன அழிதலும் என்ற கொள்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். இயற்கையிலே சில பிராணிகளிடையே இயல்பாகக் காணப்படும் அந்நியோன்னியமும் வேறு சில பிராணிகளுக்குக் காட்டப்படும் எதிர்ப்பும் இதற்குச் சான்று பகர்கின்றது.

ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதனோ தன்னுடைய இனத்துடனே மோதிக் கொள்கின்றான். இதன் அடிப்படையில் எழுந்ததுவே ஓரங்காட்டல் என்பது. இது சாதி, மதம், பால், இனம், மொழி என்று பலவாறாகவும் உருவமைந்தது மட்டுமல்ல, இந்தப் பாகுபாட்டை எந்தக் காவியங்களும் எடுத்தியம்பத் தவறவில்லை என்பதும் அவதானிக்கக் கூடியதே.

ஆனாலும் நாம் வாழும் இவ்வுலகம் எமக்கு ஒரு தற்காலிகமான இடம் என்பதும் இங்கு எமக்கானதென கொண்டாட வேண்டியது எதுவுமில்லை என்பதையும் கீதாசாரம் எடுத்தியம்புகின்றது.

"உன்னுடையதை எதை இழந்தாய்...
எதற்காகக் கலங்குகின்றாய் ?
எது இன்று உன்னுடையதோ ..
அது நாளை மற்றொருவருடையதாகின்றது
பிறிதொரு நாள் வேறொருவருடையது ஆகின்றது"

என்கிறது கீதாசாரம்

அந்த வேதாந்த மொழிகள் நிகழ்வுகளின் யதார்த்தத்தை மட்டும் சொல்லிவிட்டுச் செல்லவில்லை. எமக்கெனச் சொந்தமானது எதுவும் இல்லை என்பதை மட்டும் சொல்லவில்லை. எதையும் எதிர்பார்த்துச் சலிப்படைந்து விடாத மனநிலையை வேண்டுவதன் அவசியத்தை உணர்த்துகின்றது. நாம் வாழ்ந்தே ஆக வேண்டிய கட்டாயத்தையும் சொல்லுகின்றது. எத்துணை துன்பம் வரினும் துடைத்து எறிந்து விட்டு, கடமையை மேற்கொள்ள வேண்டுவதன் அவசியத்தை எடுத்துரைக்கின்றது. இவ்வாறாக பலனை எதிர்பாராது இயங்கிக் கொள்ளும் இயல்புகளை வலியுறுத்தி நிற்கின்றது.

ஆறுதலாக எண்ணிப் பார்க்கும்போது அதுவும் நியாயமானதே என்று தோன்றுகின்றது. நிலையற்ற இந்த உடலை எடுத்து நிலைக்கும் நற்காரியங்களைச் செய்து நற்பேறு அடைய வேண்டிய பெரும் பொறுப்பில் இருப்பவர்கள் இந்த மானுடர். அவர்கள் தம்மையும் மறந்து தமது பெருமையையும் மறந்து மாக்கள் போல வாழ்தல் ஏற்கத் தகாதன்றோ !

எளிமையான ஒரு உதாரணத்தை எடுத்துப் பார்ப்போமானால், ஒரு பாடத்தை எழுதிப் பார்ப்பதற்காக, அல்லது ஒரு கணக்கைச் செய்து பார்ப்பதற்காக ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொள்கின்றோம். கணக்கைச் செய்து பார்த்துவிட்டு காகிதங்களை

வீசிவிடுகின்றோம். ஆனால் நாம் எடுத்துக் கொண்ட கல்வி வீசி எறியப்படுவதில்லை. ஒரு பிறவியில் நாம் கற்ற கல்வி ஏழேழு பிறவிக்கும் தொடர்கின்றது என்பதை திருவள்ளுவர் சொல்லியிருக்கின்றார்

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பதில் இருந்து உள்ளத்தால் அழிக்கப்படாத கல்வியையும் பிறவியில் மறக்கப்படாத புகழையும் எமதாக்கிக் கொள்ளும் வல்லமை எம்மிடம் இருக்கின்றது ஆனால் அதற்காகப் பயன்படுத்தப்படும் (draft) எனப்படும் காகிதத்தைக் கொண்டு அதை எழுதி விட்டு வீசி விடுகின்றோம். கிழிந்து விட்டால் சட்டையினை வீசத்தான் வேண்டுமென்று கீதையில் கண்ணபிரான் சொல்லி நின்றார். எதற்காகவும் யாரும் அழுது கொண்டிருக்கத் தேவையில்லை. இந்த உலகிலே எத்தனையோ முக்கியமானவர்கள் நல்லவர்களை இழந்த பிறகும் பூமி சுற்றிக் கொண்டுதான் இருக்கிறது. இந்தப் பிறவியைக் கொண்டு செய்ய வேண்டியவற்றை மாத்திரம் கருத்திற் கொள்ள வேண்டியதே சாலச் சிறந்தது.

வாழ்க்கையின் போக்கில் கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்று பல தடவைகளில் நாம் சிந்திப்பதற்கு ஏதுவாக இடம் அமைகின்றது. கலியுகத்தின் வேகத்திலும் விஞ்ஞான விருத்தியிலும் கடவுளை இல்லையென்று சொல்லி வாதாடுவதற்குப் பலர் வருகின்றனர். பகவானால் ஏற்கெனவே சொல்லப்பட்டது போலவே கலியுகத்தில் கடவுளை மறந்துவிட, மறுத்துவிடத் துணிபவர்கள் அதிகமானோர்.

அதற்கு முதற்காரணமாக அமைவது மானுட வாழ்க்கையின் வேகம். எதையும் நிறுத்தி நிதானித்து, சிந்திக்க வைத்திடாத எமது தொழில்நுட்ப விருத்தி, மனிதனின் பகுத்தறிவை விரைவாகவே சூறையாடி விடுகின்றது என்பதை யாருமே மறுக்கவில்லை.

போலி மாயையில் அனைத்தையுமே கைக்குள் வைத்திருப்பதைப்

போல காட்டுவதால் தொழில்நுட்பத்தில் ஊறியிருக்கும் ஊனக் கண்களால் வாழ்க்கையின் யதார்த்தத்தைப் பார்த்துவிட முடிவதில்லை.

போலியான வாழ்க்கையை உண்மையென நம்பி கானல் நீரைக் கையால் அள்ளச் செல்பவர்களைப் போல, வாழ்க்கையினை இலகுவாக்க முடியும் என்று காத்திருக்கும் எமது இளைய தலைமுறையினரை, விஞ்ஞானம் படு குழியிற் தள்ளுவதற்குக் காவல் இருக்கின்றது என்பது அனைவருமே புரிந்து கொள்ள வேண்டிய விடயமாகும்.

மலைத் தொடரில் ஓய்வில் இருக்கும் பாறாங்கல் ஒன்று வேகமாக உருளத் தொடங்குகின்ற ஒரு நிலையை திடீரென என் மனது கற்பனையில் கொண்டு வருகின்றது. அப்போது, அதிலிருந்து தப்பிக் கொள்வதற்கென நினைத்த ஒரு குரங்கு வேகமாக ஓடிச் செல்கின்றது. ஆனால் என்ன பரிதாபம்! அது கல்லுக்கு முன்பாக ஓடுகின்றது. இவ்வாறாகத்தான் தொழில் நுட்பத்திற்கு முன்னால் இன்றைய மனிதனுடைய ஓட்டம் இருக்கின்றது என்பது புரிந்துவிடுகின்றது.

அப்படியானால் இந்நாளில் மதத் தலைவர்கள், தீர்க்கதரிசிகள், மக்கள் சேவையாளர் இதனைப் புரிந்து கொண்டு செயலாற்றவில்லையா? என்று ஒவ்வொருவரும் கேட்கும் கேள்வி எனக்குப் புரிகின்றது. அவர்களின் சேவை அப்படியே மக்களிடம் சென்று விடுகின்றதா என்ற கேள்வியையே நான் இங்கு முன் வைப்பதற்கு வருகின்றேன்.

அந்த விடயத்தை முன் வைக்கும்போதே எட்டுத் திசைகளிலும் அலசி ஆராய்ந்து கொள்ள வேண்டும் எனத் தோன்றுகின்றது. காரணமாக இருக்கலாம் என்று பலவற்றையும் நினைக்கத் தோன்றுகின்றது.

தொழில்நுட்பத்திற்கு வழங்கப்படும் இடம் கலைகளுக்கு வழங்கப்படாததால், இவ்வாறு சிந்தனைகளைத் தூண்டுமாறு படைப்புக்களைச் செய்ய முடியாது இருக்கின்றது என்பது ஒரு சாராரின் வாதமாகும். மனித நாகரிகத்தை ஒழுங்கமைக்கக்கூடிய சட்டங்கள் வலுப்பெறாமலும் பிரயோகிக்கப்படாமலும் இருப்பது முக்கிய காரணம்

என இன்னொரு சாராரும், ஆன்மீகக் கல்வி பற்றிய விழிப்புணர்வுகள் குறைந்து விட்டதனால் மனித விழுமியங்கள் பேணப்படுவதில்லை என்பதை இன்னொரு சாராரும் சொல்லியபடி செல்கின்றார்கள்.

ஆக எங்கேயோ பிழை நிகழ்ந்திருக்கின்றது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்கின்றார்கள். அது எங்கே என்பதுதான் புரியவில்லை. எமக்குள்ளே என்பதை அவ்வளவு சீக்கிரத்தில் ஏற்றுக் கொள்வதற்கு எம்மால் முடிவதில்லை.

நாம் ஒவ்வொருவரும் இரகசியமாக எம்மை சுய பரிசோதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது. எம்மை ஒரு பாத்திரமாக மாற்றி எமது குறை நிறைகளை ஆராயலாமா?, நாம் இலக்கியங்களுக்குட் சென்று அந்தப் பாத்திரமாக மாறி உலகைப் பார்க்க வேண்டுவதா?.

## 2. புயலுக்குப் பின்னதான அமைதி

நாம் ஒவ்வொருவரும் சுய பரிசோதனை செய்து எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். மகா பாரதம் அதற்கு ஏற்ற ஒரு இலக்கியமாக விளங்குகின்றது. இங்கே பலரின் வாழ்க்கை வெகு தத்ரூபமாகக் காட்டப்படுகின்றது. நாயகர்கள் என்பதனால் மிகைப்படுத்தி அவர்களைக் கடவுளுக்குச் சமமாகக் காட்டிவிட முனையவில்லை. தேவர்களின் அம்சமாகவே பிறந்திருந்தாலும், சாதாரண மனிதனுக்குரிய பலவீனங்கள் அனைத்தையும் கொண்ட மானுடர்களாகச் சித்தரிக்கப்படுகின்றார்கள்.

மனித வர்க்கத்திடையே காணப்படும் அதிகார வர்க்கத்தின் கொடுமைகள், பெண்ணுக்கு மதிப்பளிக்காமை, அறம், வீரம் போன்ற அம்சங்களின் தோற்றுவாய்கள், அறத்தின் பாற்பட்டும் அதர்மத்தைச் சொல்லி நிற்கும் வீரம் எனப் பலதையும் காட்டிச் செல்கின்றனர்.

கதையில் காட்டப்படும் சம்பவங்கள் மிகைப்படுத்தப்பட்டவையாகவோ, வாழ்க்கையில் நடக்கவே நடக்காதோ என்பதற்கில்லை. இன்றைய உலகில் விஞ்ஞான விருத்தியை வைத்து சாத்தியமானவற்றை நிறுவிக் கொள்ளமுடியும். மகாபாரதத்தில் பாவிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பிரம்மாஸ்திரம் எனப்படும் ஆயுதம், இன்றைய அணு ஆயுதத்தை ஒத்தது என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். அதற்குச் சான்றையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1945 இல் இரண்டாம் உலகப் போரின்போது யப்பானில் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி என்ற இரு நகரங்களிற்கு அணுகுண்டு வீசப்பட்டதன் பின்பாக இன்று வரை புல் பூண்டும் முளைக்கப்படாத இடங்களாக இருக்கின்றது. அதைப் போலவே, மகாபாரத யுத்தம் இடம்பெற்ற குருஷேத்திரம் என்ற பகுதியும் இன்று தரிசாகக் கிடப்பது யாம் அறிந்ததே.

அதைவிடவும் பிரம்மாஸ்திரத்தைப் பாவிக்கும்போது ஏற்படுத்தப்படும் தாக்கங்களும் அசைவுகளும் அணுவைப் பிளக்கும்போது உருவாகும்

கருச்சக்தியின் தாக்கத்தினை ஒத்ததாகவே இருந்திருக்கின்றது.

யப்பான் நாட்டைப் பற்றிச் சொல்லியபோது எனக்கு எழுந்த ஒரு நேர்முகமான விடயத்தை இங்கு குறிப்படலாம் என்று நினைக்கின்றேன். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாம் ஆண்டில் இரண்டாம் உலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை யப்பானையே சாரும். இந்த வருடத்தில் ஆகஸ்ட் மாதம் ஆறாம் திகதி அமெரிக்காவின் B-29 என்ற குண்டுதாங்கி உலகின் முதலாவது அணுகுண்டை ஹிரோஷிமா என்னும் நகரத்தின் மேலாகப் போட்டது. அந்தக் குண்டுத் தாக்குதலில் தொண்ணூறு சதவீதமான நகரம் பாதிப்படைந்ததுடன் எண்பதினாயிரம் மக்கள் உடனடியாகவே இறப்பைத் தழுவிக் கொண்டனர். மேலும் பத்தாயிரம் பேர் கதிர்வீச்சினால் அடுத்தடுத்து மரணம் அடைந்தனர்.

அடுத்த மூன்று தினங்களில் அதாவது ஒன்பதாம் திகதியில் நாகசாகி என்ற நகரத்தின் மீது போடப்பட்ட அணுகுண்டினால் நாற்பதினாயிரம் பேர் உடனடியாகக் கொல்லப்பட்டனர். “சின்னப் பையன்” மற்றும் “குண்டு மனிதன்” ஆகிய இந்த இரு அணுகுண்டுகளினால் ஏற்பட்ட தாக்கத்தினை அடுத்து அந்நேர ஆட்சியாளராக இருந்த ஹிரோஹிட்டோ நியந்தனையின்றி அடிபணிவதாக அந்த மாதம் பதினைந்தாம் திகதி அறிவித்தார். யப்பான் நாட்டின் வானொலி ஒன்று “புதிதானதும் மிகவும் கொடூரமானதுமான குண்டு” என்று அதனை வர்ணித்தது.

அன்றைய நாட்களில் அந்நாட்டு மக்கள் அனுபவித்த துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. அந்த அதிர்ச்சியில் இருந்து உடனடியாக மீண்டு கொள்ள முடியாமல் தவித்தார்கள்.

ஆனால் அத்துடன் முடிந்துவிடவில்லை. அவர்களின் தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் அவர்களைத் தொடர்ந்தன. விளைவு???

இன்னொரு உலகப்போரை சந்தித்துவிடக் கூடாது என்ற எண்ணத்தினால், அதே வருடம் ஒக்டோபர் இருபத்து நான்காம் திகதி, ஜெனிவாவில் அனைத்து நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒன்றுகூடி,

ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கினர். பொதுச் சபையில் ஐம்பத்து நான்கு நாடுகளும், "வீட்டோ" அதிகாரம் என்னும் அதிகாரத்தைக் கொண்ட ஐந்து நாடுகளும் அறிவிக்கப்பட்டன. அது தவிரவும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் யுத்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளையும் செய்து வருகின்றது.

அது நிற்க. யப்பானில் அதற்குப் பின்னதாக ஏற்பட்ட மறுமலர்ச்சியும் எழுச்சியும் யப்பானை அபிவிருத்திக்குக் கொண்டு சென்றன. உலக நாடுகளில் முதன்மையான ஒரு இடத்தை வழங்கி நின்றது. போரினால் மட்டுமல்ல இயற்கை அனர்த்தங்களாலும் அடிக்கடி பாதிக்கப்படும் இடம் இதுவாகும். பெரும் நீர்ப்பரப்பான பசுபிக் சமுத்திரத்திற்கு முகம் கொடுப்பதால் அந்தச் சிறிய தீவின் மீதான இயற்கை அனர்த்தங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்கின்றன. சுனாமி, பூகம்பம் முதல் அனைத்து விதமான இயற்கை அழிவுகளைச் சந்தித்துக் கொள்ளும் நாடாக இருந்த போதிலும், அபிவிருத்தியிற் பின்னோக்கிச் சென்றுவிடாமல் அனைத்து விதத்திலும் பேணப்படுகின்றது.

யுத்தத்திற்குப் பின்னதான எழுச்சி என்பது மனித சமுதாயத்திற்குப் புதிதான ஒன்று அல்ல. ஆனால் அதற்குக் கொடுக்க வேண்டிய முன்னுரிமையும் செயற்பாடுகளும் வேகம் பெற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். இந்த நாளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும், எங்களது பங்கு என்ன என்பதைப் பகுத்தறிந்து துரிதமாகச் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

இற்றைக்கு அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பாக உலகில் உள்ள ஏனைய நாடுகளை உற்று நோக்குவோமாயின், மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த பல நாடுகள் இன்று அபிவிருத்தியில் எம்மைவிடவும் எவ்வளவோ முன் நோக்கிச் சென்றுவிட்டன. அதிலும் புயலுக்குப் பின்னதான விருத்தியைக் கருத்திற் கொண்டு பிரயாசையால் முன்னேற்றப்பட்டன.

இன்று நாம் எதிர்கொள்ளும் நிலைமையும் கிட்டத்தட்ட அந்தக் காலத்தில் அந்த நாடுகள் எதிர்நோக்கிய நிலையை அவ்வாறு தத்ரூபமாகப் படம்பிடிப்பவையாக இருக்கின்றன. ஆனால் அன்று அவர்கள் கைக்கொண்ட அதே முறைகளை நாமும் எதிர்நீச்சலுக்காகப் பின்பற்றுவோமா என்பது கேள்விக்குறியே

இரண்டாம் உலகப் போரில் தோல்வியைத் தழுவிக் கொண்ட ஜேர்மனி, அடுத்தடுத்த தசாப்தங்களில் காட்டிய துரிதமான வளர்ச்சிப் போக்கு, போருக்குப் பின்னதான எழுச்சியை விரிவாக எடுத்துக் காட்டி இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பியாவின் மிகப் பெரிய பொருளாதார வலுவை உறுதிப்படுத்தியது.

ஜேர்மனியை மறுபடியும் கட்டியெழுப்புவது என்பது மிகவும் காலத்தை எடுத்துக் கொள்ளும் ஒரு வேலைத்திட்டமாகக் காணப்பட்டது. இரண்டாம் உலகப் போரினால் பொருளாதார ரீதியிலும் வாழ்வியல் ரீதியிலும் இடர்பாடுகளை அவர்கள் எதிர்நோக்கினர். போரில் 7.5 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். அது கிட்டத்தட்ட 11 சதவீதமான மக்களின் தொகையைக் கொண்டது. அதைவிடவும் நாட்டிலுள்ள பல நகரங்கள் குண்டுத் தாக்குதலினால் சீரழிக்கப்பட்டதுடன் விவசாய உற்பத்திகள் கிட்டத்தட்ட முப்பத்தைந்து வீதமாகவே காணப்பட்டது.

போஸ்டம் கருத்தரங்கின்போது வெற்றி பெற்ற இணைந்த படைகள், இருபத்தைந்து சதவீதமான ஜேர்மனியர்களை போலந்திலும் சோவியற் யூனியனிலும் சிறை வைத்தார்கள். இதன்போது ஜேர்மனியர்களின் குடித்தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 0.5 முதல் 2 மில்லியன் மக்கள் அதனால் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகின்றது. போருக்குப் பின்னாலும் பல்வேறு காரணங்களால் மக்கள் மரணத்தைத் தழுவிக் கொண்ட நிலை இங்கு காட்டப்படுகின்றது. இது கிட்டத்தட்ட தற்காலத்தில் எம்மவர் அனுபவிக்கும் பல சமுதாயச் சீர்கேட்டு நிலைமைகளை முன் கொண்டுவர முனைகின்றது.

அதற்குப் பின்பாக போஸ்டம் ஏற்றுக் கொண்டவாறே, ஜேர்மனியில் பஸ்ரறல் மற்றும் விவசாயத்தைக் கொண்ட தேசியத்தை உறுதிப்படுத்தி சிறிய கைத்தொழில்களை நிறுவுவதற்கு அனுமதியளித்தது. ஆனாலும் மில்லியன் கணக்கான ஜேர்மனிய போர்க் கைதிகள், கட்டாயத் தொழிலாளர்களாகப் பல ஆண்டுகளுக்கு மேற்கு அலிசாலும் சோவியற் யூனியனாலும் பாவிக்கப்பட்டு வந்தமையால் கைத்தொழில் விருத்தியை அத்துணை எளிதாக முன்கொண்டு வர இயலவில்லை.

தொழில் நுட்பத்தையும் விஞ்ஞானத்தையும் வழங்கக்கூடிய வேலைத்திட்டத்தை, ஜேர்மன் சரணாகதி அடைந்த அடுத்த இரு வருடங்களில், ஐக்கிய அமெரிக்கா முன் வைத்தது. ஜோன் கிம்பள் என்பவர் தன்னுடைய "போரின் அழிவுக்குப் பின்னதான ஜேர்மனியின் விஞ்ஞான தொழில்நுட்ப இழப்பீடு" என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேவேளை ஜேர்மனியில் இருந்து நாசிப்படைகளை வெளியேற்றும் முயற்சிகளை இணைந்த படைகளால் செய்யப்பட்டு வந்தன. ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தேழின் நடுப்பகுதியில் இந்த பணி கிட்டத்தட்ட வெற்றியடைந்தது.

அதேவேளை அங்கு ஆரம்பிக்கப்பட்ட குளிர்யுத்தமானது, அரசியல் கொள்கைகளை புனரமைப்பதற்கு உதவியது. அத்துடன் ஐரோப்பியாவின் பொருளாதார விருத்திக்கு ஜேர்மனியின் கைத்தொழில் மறுமலர்ச்சி முக்கியமாக உணரப்பட்டது. இருப்பினும் சோவியற் யூனியனின் கிழக்கு வலயத்திலுள்ள பப்பெற் வலயத்தினால் அதன் பொருளாதார நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தேழில் மார்ஷெல் திட்டத்தினால் ஆரம்பத்தில் ஐரோப்பிய மறுமலர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்தக் காலத்திலேயே அதாவது 1947 முதல் 1952 வரையிலும் கிட்டத்தட்ட பதின் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தொழில்நுட்ப

உதவித் தொகை மேற்கு ஐரோப்பாவிற்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து மேற்கு ஜேர்மனி உருவாக்கப்பட்டு அதற்கு 14.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உதவித்தொகை வழங்கப்பட்டது.

யுத்தத்தின் பின்னதான புனரமைப்பு வேலைகளுக்காகத் தொடர்ந்தும் வெளிநாடுகளின் உதவித் தொகைகள் பல வழிகளாலும் எமக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மனிதம் என்பது நிலைத்திருப்பதால் ஒருவருக்காக ஒருவர் செய்து கொள்ளும் பரஸ்பர உதவிகள் எக்காலத்திலும் வழங்கப்படுகின்றன.

ஆனால் அவை உரியவர்களை உரிய முறையில் சென்றடைந்து விடுகின்றனவா என்பதை மக்கள் பிரதிநிதிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் ஆகின்றது. அந்த விடயத்தில் தங்கள் தன்னலமற்ற உதவிகளை அரச அதிகாரிகள் வழங்குவதற்குத் தவறுவதில்லை.

ஆனால் உதவிகளைப் பெற்றுக் கொண்ட மக்கள் அவற்றைச் சரியாகக் கைக்கொண்டு முன்னோக்கிச் செல்கின்றார்களா என்பதுதான் இங்கு எமக்கு இருக்கும் பிரச்சனையாகும். அரச மற்றும் வெளிநாட்டு உதவித் தொகைகளை தொடர்ந்தும் எதிர்பார்த்தபடியே அவர்கள் இருப்பது அபிவிருத்திப் பாதையில் எம்மை அழைத்துச் செல்வதாக அமைவதில்லை.

ஆனால் அன்றைய ஜேர்மனியர்கள் அவ்வாறு இருந்து விடவில்லை. அந்த நாடு மிகவும் சாவகாசமாக ஆனால் தொடர்ச்சியாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் நடவடிக்கை எடுத்தது. முக்கியமாக உள்நாட்டு உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டு, அவை முறையாக நுகர்வு செய்யப்பட்டு அனைத்தும் அரசினால் கண்காணிக்கப்பட்டது.

நாட்டின் விருத்தி என்பது முற்று முழுதாகவும் அரசியல் திட்டங்களிலே தங்கி இருக்கும்போது தனிப்பட்டவர்களால் என்ன

செய்துவிட முடியும் என்பது ஒவ்வொருவரின் மனதிலும் எழுவது புரிகின்றது. ஆனால் நாடு என்பது மக்களால் ஆக்கப்பட்டதே. இங்கு ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சிந்தனையும் பொதுச் சிந்தனையாக அமைய வேண்டியது அவசியம் ஆகின்றது.

அரும்பாடு பட்டு ஒருவர் பிரயாசைப்பட்டு விறகுகளைப் பொறுக்கி எடுத்து வந்து அடுப்பை மூட்டுவார். அதற்கு அருகாமையில் பலர் அமர்ந்து கொண்டு குளிர் காய்வார்கள். பல பேருக்கு விருந்தளிப்பதற்காக ஒருவர் அடுப்படியில் நின்று காய்ந்து கொண்டிருப்பர். பலர் அவற்றை ருசித்துச் சாப்பிடுபவர்களாக இருப்பர்.

அவ்வாறான நிலைதான் வாழ்க்கையில் பல கட்டங்களில் இடம் பெறுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்னாலே இருப்பவர்கள் நினைவு கூரப்படுவதில்லை. ஆனால் அவர்களின் செயல்கள் சரித்திரம் ஆக்கப்படுகின்றன.

செயல்களுக்கு முன்னோடியே சிந்தனைகள்தாம்..! நாம் சிந்தித்துச் சரிவரத் திட்டமிடாத ஒன்றை எவ்வாறு நாம் செயற்படுத்த முடியும். ஆதலால் சிந்திப்போம். அனைத்தையும் சிந்திப்போம். அறிவு பூர்வமாக சிந்திப்போம்.

# 3. மகா பாரதச் சுருக்கம்

ஐந்தாம் வேதம் எனச் சிறப்பாக அழைக்கப்படும் மகாபாரதமானது ஆதி பஞ்சகம், உயுத்த பஞ்சகம், சாந்தித்திரயம், அந்திய பஞ்சகம் என்னும் நான்கு வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த நான்கும் ஆதி பர்வம், சபா பர்வம், ஆரண்ணிய பர்வம், விராட பர்வம், உத்தியோக பர்வம், பீஷ்ம பர்வம், துரோண பர்வம், கர்ண பர்வம், சல்லிய பர்வம், சவுத்திக பர்வம், ஸ்ரீ பர்வம், சாந்தி பர்வம், அனுசாசநிக பர்வம், அசுவமேத பர்வம், ஆசிரமவாச பர்வம், மௌசல பர்வம், மஹா பிரஸ்தானிக பர்வம், சொர்க்காரோகண பர்வம் ஆகிய பதினெட்டுப் பர்வங்களாக அமைக்கப்பட்டுள்ளது.

பெருமளவிலான கதை மாந்தர்கள் மூலமாக வாழ்வியலின் ஒவ்வொரு வகையினரையும் படம் பிடித்துக் காட்டியுள்ளது இந்தக் காவியத்தின் சிறப்பாகும். ஏனைய காவியங்களைப் போல் அல்லாது வீரத்திலும் ஆற்றலிலும் சரிசமமாக இரு பகுதியிலும் படைகள் அமைந்திருந்ததும் கலகத்தை சகோதரர்களிடமே வழங்கியதும் கதையின் சிறப்பான அம்சமாகும். ஆரம்பத்தில் இருந்து இறுதி வரையிலும், போட்டி போட்டுக் கொண்டு தன் நிலையையும் தக்க வைத்துக் கொள்ளும் அதே சமயம், மற்றவரையும் தாக்குவதற்கு முற்படும் சதுரங்கக் காய்களை நகர்த்துவதைப் போன்றதாக கதை நகர்வது விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் அமைந்திருக்கும்.

காக்கும் கடவுளாகிய பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஒன்பதாவது அவதாரம் என வர்ணிக்கப்படும் இந்தக் கதையில், அவரின் அண்ணராகிய எட்டாவது அவதாரமாகிய பலராமரும் இடம்பெற்றிருப்பது சிறப்பைத் தருகின்றது. அவதாரம் இரண்டைக் கொண்டு யதார்த்தத்தை உணர்த்துவதற்கு முனைந்த வியாசரின் அணுகுமுறை வியப்பைத் தருகின்றது. யுகங்களைக் கடந்து வாழும் பரசுராமரும் சத்திரியர்களை ஒழிக்கவென அவர் முன்னெடுத்த நடவடிக்கைகளும் பல செய்திகளைச் சொல்லி நிற்கின்றன.

உலகிலே மன்னராட்சி முறைமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆரம்ப கர்த்தாவாக பரசுராமரை எடுத்துக் கொள்ள முடியும். முடியாட்சி எனப்படும் அதிகாரப் போக்கினரை இல்லாது ஒழித்து, மக்கள் தாமே தம்மை ஆண்டு கொள்ளும் ஒரு மக்கள் ஆட்சிமுறைக்கு வித்திட்டவர் என்ற பெருமை கொள்ள வைப்பவராக அவர் திகழ்கின்றார்.

பரசுராமரைப் பற்றி சொல்லும் போதே இன்னொரு விடயத்தையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்ள வேண்டும். காத்தவீரியர்ச்சுன் என்ற மன்னனால் பரசுராமரின் தந்தை முனிவர் யமதக்னி கொல்லப்பட்டபோது, வெகுண்டெழுந்த அவர், சத்திரிய குலத்தையே இல்லாது ஒழிப்பேன் என்ற சபதத்தினால் மன்னர்களைக் கொன்று குவித்தார். ஆண்கள் இல்லாத அந்த சந்ததியைச் சேர்ந்த சத்திரியப் பெண்கள் தீயிலே குதித்து இறந்துவிடத் தீர்மானித்தனர். அந்தவேளை அவர்களைத் தடுத்து நிறுத்தி, மன்னர்கள் இல்லாது போனால் அந்தந்த குலத்து ஆசாரியாரைக் கலந்து புத்திரர்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஒழுங்கு அமைக்கப்பட்டது. இதன் விளைவாக உருவாகியவர்களே பாரதத்தில் நடமாடிய பெரும்பாலான வீரர்கள்.

சந்தனு மகாராஜாவுக்கு சத்தியவதியிடம் பிறந்த குமாரர்களான சித்திராங்கதனும் விசித்திர வீரியனும் சந்ததியைப் பெறு முன்பாக இறந்து போய்விடுகின்றனர். விசித்திர வீரியனின் மனைவியரான அம்பிகை, அம்பாலிகை போன்றோர், வியாசர் மூலம் பாண்டு, திருதராட்டிதன் மற்றும் விதுரன் போன்ற புதல்வர்களைப் பெறுகின்றார். அதற்குப் பின்பாக பாண்டுவால் சந்ததியை உருவாக்க முடியாது போகவே, சூரியன் முதலானவர்களின் துணை கொண்டு பஞ்ச பாண்டவர்கள் ஐவரையும் கர்ணனையும் பெற்றாள் குந்தி.

சந்ததி, வாரிசு என்ற பெயரிலும் அரசியல் என்ற மாயத் திரைக்குள்ளும் அவர்கள் செய்ய முனைந்த காரியங்கள் பாரதப் போரினால் முறியடிக்கப்பட்டன. சத்திரிய குலத்தை உருவாக்குவதற்கு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பண்பாட்டு மீறல்கள் அவர்களின் அடுத்தடுத்த சந்ததியினரை ஒரே

யுத்தத்தில் பதினெட்டு நாட்களில் அழித்துவிட்டன. போரினாலே உருவாக் கப்பட்ட அந்த வீரர்கள் போரின்போதே உயிரிழந்தனர்.

இதேபோல ஒரு கட்டத்தில்தான் எமது சமுதாயமும் இப்பொழுது இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது. அன்றைய சமுதாயம் ஆண்களை இழந்து சமநிலையற்ற நிலையிற் காணப்பட்டது போலவே இன்று எமது சமுதாயமும் காணப்படுகின்றது. எமது இக்கட்டான நிலையைக் கருத்திற் கொண்டு காலத்திற்காக எமது பண்பாட்டையும் வழக்கத்தையும் சிதைத்துக் கொள்வோமாயின் பாரதப்போரைப் போன்ற அவலமான நிலையைச் சந்திப்பதைத் தடுக்க முடியாது.

பல்வேறு காரணங்களுக்காப் போர் மூழ்வதும் மக்கள் கூட்டமாகக் கொன்று குவிக்கப்படுவதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. மனிதனுக்குள்ளே அபரிமிதமான தேடல் இருக்கும் வரை போட்டிகளும் யுத்தங்களும் குறைந்து விடப் போவதில்லை.

பாரதத்தின் யுத்தக்களமாகிய குருஷேத்திரம் ஏனைய காவியங்களைப் போல் அல்லாது பெருமளவிலான மானுடர்களையும் குதிரை, யானை போன்றவற்றையும் கொண்டதாக அமைந்திருந்தது. பாண்டவர் பக்கம் ஏழு அக்குரோணியும், கௌரவர் பக்கம் பதினொரு அக்குரோணியுமாக மொத்தம் பதினெட்டு அக்குரோணி சேனைகளைக் கொண்ட யுத்த களமாக அமைந்தது. ஒரு அக்குரோணி என்பது பல்லாயிரக்கணக்கான வீரர்களையும் வளங்களையும் கொண்ட படைத்திரள் ஆகும். அது இவ்வாறு விளக்கப்படுகின்றது.

ஒரு பந்தியில் தேர் 1, யானை 1, குதிரை 3, காலாள் 5 ஆகவும் அவ்வாறான 3 பந்தியில்(ஒரு சேனா சமூகம்) தேர் 3, யானை 3, குதிரை 9, காலாள் 15 ஆகவும் அவ்வாறான 9 சேனா சமூகத்தில்(ஒரு கணகம்) தேர் 27, யானை 27, குதிரை 81, காலாள் 135 ஆகவும் அவ்வாறான 3 கணகத்தில்(ஒரு வாகினி) தேர் 81, யானை 81, குதிரை 243, காலாள் 405 ஆகவும் அவ்வாறான 3 வாகினியில்(ஒரு புலுதம்) தேர் 243, யானை 243, குதிரை 729, காலாள் 1215 ஆகவும், அவ்வாறான 3

புலுதத்தில்(ஒரு சமுத்திரம்) தேர் 729, யானை 729, குதிரை 2187, காலாள் 3645 ஆகவும், அவ்வாறான 3 சமுத்திரத்தில்(ஒரு சமாக்கியம்) தேர் 2187, யானை 2187, குதிரை 6561, காலாள் 16935 ஆகவும், அவ்வாறான 10 சமாக்கியத்தில்(ஒரு அக்குரோணி) தேர் 21870, யானை 21 870, குதிரை 65610, காலாள் 169 350 ஆகவும் காணப்பட்டது.

இவ்வாறாகத் தொடங்கிய பாரதப் போரில் பாண்டவர்கள் தவிர அனைத்து வீரர்களும் அழிந்தார்கள் எனவும், பூமியின் பாரம் பெருமளவிற் குறைவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. அனைத்து உறவினர்களின் குருதியின் மீது ஆரம்பித்த பாண்டவ சாம்ராச்சியம் முப்பத்து ஆறு வருடங்கள் தொடர்ந்ததாகவும் பாரத காவியம் சொல்கின்றது.

எண்ணிலடங்கா மக்களையும் அநேக வீரர்களையும் கொன்று குவித்த இப் பாரதப் போர், போட்டிகளினால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் மானுட சமுதாயத்திற்கு நல்லதொரு பாடமாக அமைகின்றது. பாரதப் போரில் ஏற்படுத்தப்பட்ட யுத்த மீறல்கள் அதர்மத்தை தருமம் வெல்லும்போது நேர் வழியிற் செல்லாகாது என்பதை மறைமுகமாக உணர்த்திவிட்டுச் சென்றது. கத்தியை ஏந்துபவனை எதிர் கொள்ள நீயும் கத்தியையே தூக்க வேண்டும். மாறாக கையை நீட்டினால் கை துண்டாடப்படும் என்பதைச் சொல்லியது

பாரதப் போரில் நேருக்கு நேரே மோதி ஒருவர் உயிரை மற்றவர்க்கு வேண்டி நின்றவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருந்தனர். பாண்டவர்களுக்கும் அவர்களுடைய பெரிய தந்தையின் புதல்வர்களாகிய கௌரவர்களுக்குமான போரில், பாண்டவர்களின் பாட்டன், சிற்றப்பன், குருமார், நண்பர்கள் என அனைவரும் அவர்களுக்கு எதிராக துரியோதனனுடைய பக்கமாகவும், பாண்டவர்களுடைய சம்பந்தி பகுதியினராகிய பாஞ்சாலன், திருஷ்டதுய்மன், விராடன் போன்றவர்கள் பாண்டவர்களுடைய பக்கமாகவும் போரிட்டனர்.

அனைத்து உற்றாரையும் உறவினரையும் பெரியோரையும் அழித்து பாரதப் போரின் பின்னதாக, தீராப் பழியினை உலகம் உள்ளவரைக்கும்

அருச்சுனன் சுமந்துவிடப் போகின்றான் என்று எண்ணிய பகவான், போர் தொடங்குவதற்கு முன்பாக அருச்சுனன் இதனை எண்ணி சோர்வை அடைந்ததாகவும், அவனை ஆற்றுப் படுத்துவதற்கென சொல்லப்பட்ட பகவத்கீதை என்னும் ஒப்பற்ற தத்துவம், உலகின் நிலையாமைக்குள் மனிதனுக்கு வழங்கப்படும் கட்டாயமான பணிகளை உணர்த்துவதாகவும் அமைந்திருந்தது. அதர்மம் அழிந்துவிடவும் தருமம் ஓங்குவதற்கும் கருமம் செய்வதற்கு மனிதன் கடமைப்பட்டு இருக்கிறான். அதன் பலாபலன் அவனுக்கு உரியதன்று. சொந்தம், பந்தம் என்ற மயக்கத்தினால் எந்தக் கருமத்தையும் செய்துவிடாது யாரும் ஒதுங்கிவிடல் ஆகாது என்பது தெளிவாக விளக்கப்பட்டது

பாண்டவர்கள், கௌரவர்கள் இவர்களுக்கு மைத்துனனாகிய பகவான் கிருஷ்ணனின் படைகள் அனைத்தும் கௌரவர் பக்கமாகவும், கிருஷ்ணர் மாத்திரம் பாண்டவர்களின் பக்கமாகவும் நின்றார். எல்லா வளங்களையும் வழங்குபவனைக் கடவுள் காத்துவிடுவதில்லை. ஒன்றையும் பெறாத ஒருவனுக்கு, அதாவது திக்கற்றவனுக்கு அருகில் சென்று கடவுள் அவனைக் காப்பாற்றி விடுவதுண்டு என்ற உயரிய தத்துவமும் அங்கு விளக்கப்படுகின்றது.

அதாவது "நான் ஒருவனாக உங்களுக்கு வேண்டுமா, என்னுடைய படைகளும் ஆயுதங்களும் வேண்டுமா?" என்று பரமாத்மா கேட்டபோது, அவருடைய படைகளை மட்டும் இரந்து நின்ற துரியோதனனின் சிற்றறிவும், ஆயுதமோ படைகளோ இல்லாமல் என் அருகே வந்துவிடு பரந்தாமா என்று கேட்ட உண்மையான பக்தனின் உயர்வையும் காட்டியது.

அதர்மம் என்றும் தலையெடுத்து விடுவதில்லை. அதை தர்மம் தோற்கடித்துவிடும் என்பதை மகாபாரதத்தின் முடிவு தெளிவாகச் சொல்லி நின்றது. ஆனால் பாரதப் போரில் முதல் நாளிலேயே அதிரதர், மாவீரர் பிதாமகராலேயே யுத்த விதிகள் மீறப்பட்டு விட்டன. விராடனின் புத்திரர்களாகிய உத்தரன், சிவேதன் ஆகிய இருவரையும், நேர்மையான முறையில் யுத்தம் செய்யாமல் அவர் அநீதியாற் தோற்கடித்தது முறையல்ல

என்பதைப் பலரும் சொல்லிச் சென்றார்கள்.

என்னதான் உயரிய படைகளையும் ஆயுதங்களையும் வைத்திருந்த போதும், ஆயுதத்தால் மட்டுமே வெற்றியைச் சந்தித்ததாக அவர்கள் கதையை முடித்திருக்கவில்லை. மந்திரம் கால்: மதி முக்கால் என்பதற்கு அமைய அத்தனை வளங்களைக் கொண்டு அடைந்திடாத வெற்றியை மதியைக் கொண்டு அடைந்ததாகக் காட்டப்படுகின்றது. அதிலும் மறைக்கும் மறையாக நின்று மக்களைக் காத்து நிற்கும் மாயவனுடைய திருவிளையாடல், நல்லவனுக்கு வெற்றியையும் அல்லாதவனுக்குத் தோல்வியையும் கொடுத்தது.

தர்மத்தின் வெற்றி என்பது அத்தனை சீக்கிரத்தில் கிடைத்து விடுவதில்லை. படிப்படியாகவே கிடைக்கும் என்பதை பாரதப் போர் எடுத்துக் காட்டியது. முதல் நான்கு நாட்களில் பாண்டவரின் படைகளிலே சேதம் அதிகமாக இருந்தது. அதனால் தர்மம் அழிந்தாக யாரும் பிரஸ்தாபிக்கத் தேவையில்லை.

ஆனால் அதற்குப் பிறகு படிப்படியாக கௌரவர்களின் சேனை பின்னடையத் தொடங்கியது. பத்தாம் நாள் பீஷ்மரின் வீழ்ச்சியோடு கௌரவர்களின் படைகள் ஆட்டம் காணத் தொடங்கின. அடுத்த ஐந்து தினங்களில் சேனாபதியாக விளங்கிய துரோணரின் மறைவுக்குப் பின்னால் இரு நாட்களுக்கு கர்ணன் சேனாபதியினது ஆட்டம் அடங்கிவிடவும், பதினெட்டாம் நாள் சூரியனின் அஸ்தமனத்தில் அரவக் கொடியோனின் சப்த நாடிகளும் ஒடுக்கப்பட்டு அவனின் மூச்சு நிறுத்தப்பட்டு மரண தேவனிடம் பரிசளிக்கப்பட்டு பாரதப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அத்தோடு நின்றுவிடாது அன்றைய நாள் இரவில் உப பஞ்ச பாண்டவர்களையும் சென்று அஸ்வத்தாமன் அழித்து விடுகின்றான். அருச்சுனனின் வாரிசாக உலகத்தாருக்கு தெரிவிக்கப்படாமல் எங்கேயோ அரசாண்டு கொண்டிருந்த பப்பிரபாகன் மட்டுமே பாண்டவர்களின் சந்ததியில் இறுதியில் எஞ்சுகின்றான்.

நிலையாமை என்பதைப் பலவழிகளிலும் காட்டுவதற்கு முனைந்திருக்கும் வியாசரின் முயற்சி வாழ்க்கையை முற்று முழுதாகவும் அனுபவித்து முடித்து, வாழ்விலே அனைத்து சுக துக்கங்களையும் அனுபவித்தவனின் ஞானத்தை எமக்கு வழங்கி விடுகின்றது. பாரதத்தின் தோற்றுவாயாகத் திகழ்ந்து கதையில் ஒரு நாயகனாகத் திகழ்ந்த பீஷ்மரின் வரலாற்றைப் பார்க்கும்போது இது தெளிவாகின்றது.

"நெருநல் உளன்ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

என்னும் பொய்யாமொழிப்புலவரின் வாக்கே யுத்தத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் நிலைத்தது. நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம். அதாவது மாற்றம் என்பது மாறாததாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

உயிர், இந்த நாடகத்தில் தனக்கு வழங்கப்பட்ட வாடகை வீட்டைக் காலி செய்து விட்டு அடுத்த வீட்டை நோக்கிச் செல்கின்றது. அதாவது, உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்கவும், அதைவிட்டு வேற்றிடத்திற்குப் பறவை பறந்து செல்வதைப் போன்றது.

"குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

என்றெல்லாம் குறள் மூலம் திருவள்ளுவர் சொல்லிய வாழ்வின் யதார்த்ததை வெவ்வேறு பாத்திரங்களின் விருப்பு வெறுப்புக்கள், நடவடிக்கைகள் மூலமாக வியாசர் எடுத்துக் காட்டியிருப்பது சிறப்பானதே.

அவ்வாறாயின் நிலையில்லை என்பதைத் தெரிந்து கொண்ட பின்னும், அந்த உடலில் உயிர் தங்கியிருந்தது எதனாலோ? அதற்குத் தங்கியிருப்பதற்கு வேறு இடம் அமையவில்லையா? தன்னுடைய காரியத்தை முடிப்பதற்காக வந்து சேர்ந்த உயிருக்கு அதன் பின்னே

அழிந்துவிடும் உடலைப் பற்றிய அக்கறை இல்லையா?. அந்த உடலுக்காகத் தன் ஆத்மாவின் மீது நேசம் பாராட்டிய பந்துக்கள் பற்றிய கவலை இல்லையா?

அக்கறையில்லை என்பதை உடனடியாகச் சொல்லிவிட முடியாது. உயிர் தான் கொண்டிருந்த உடலின் மீது உள்ள ஆசையில் இருந்து விடுபட வேண்டும் என்பதனாலேயே மரணத்தின் பின்னதான கிரியைகள் (அபரக்) கிரியைகள் அனைத்து மதத்தினராலும் நடாத்தப்படுகின்றன.

இந்த உலகத்தில் எமக்கு மிகவும் பிடித்தமான பொருள் என்ன என்று தெரியுமா? அது எமது உடலே. அது இருப்பதாலே வாழ்கின்றோம். அதன் ஆசைகளை நிறைவேற்றப் பாடுபடுகின்றோம். அதற்கு ஏதாவது நோய் வந்துவிட்டால் மாத்திரமே உயிரை எடுத்துக் கொள் என்று கடவுளிடம் கேட்கத் தோன்றும். ஆம். நாம் உயிருடன் இருக்கும்போது எமது உடம்பில் அளவு கடந்த ஆசைகளை வைத்துக் கொண்டிருக்கின்றோம். அதனால் உயிர் பிரிந்த பிறகு, தான் ஆசை வைத்த உடல் அடக்கம் செய்யப்படும்வரை அதன் அருகில் இருந்து பார்த்துக் கொள்ளுமாம். தன்னைத் தேடி யார் வருகின்றார்கள்? அவர்கள் என்ன விதமாகத் தங்களுடைய பிரியத்தை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை அவதானித்துக் கொள்ளுமாம்.

மரணக் கிரியைகள் முடிவடைந்து மயானத்தை நோக்கிச் செல்லும் போது அதன் உடலைத் தொடர்ந்து செல்லுமாம். அதன் பந்துக்களிடம் உள்ள அன்பால் அது மறுபடியும் பந்துக்களிடம் வந்துவிடலாம் என்பதால் சுடலையில் கொண்டு சென்று எரியூட்டியதும் திரும்பிப் பாராமல் வருவதும் வாசல் கதவில் உலக்கையை வைத்துவிடுவதும். உலக்கையைத் தாண்டி அந்த ஆத்மா மறுபடியும் வீட்டுக்குள் வந்துவிடாதாம்.

ஆத்மா இந்த பந்தத்தில் இருந்து முழுமையாக விடுபடுவதற்கும் அடுத்த பிறவிக்காகத் தயார் செய்வதற்காகவும், அபரக் கிரியைகள் கிரமமாக நிறைவேற்றப்படும். முதலாம் மாத முடிவில் வீட்டில் நடத்தப்படும் வீட்டுக் கிரியைகளின்போது அவற்றைத் தொடர்ந்து

செய்வதற்காக அந்தணர்களுக்கு அரிசி மற்றும் பொருட்கள் தானமாக வழங்கப்படும். இவ்வாறு அது அடுத்து பிறவியை எடுத்துக் கொள்ளும்.

**"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு"**

நோய்களுக்கு இடமாகிய உடம்பில் ஒரு புறத்தில் குடியிருந்த உயிர்க்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரையில் அமைய வில்லையா? என்று கேட்கின்றது. நிலையாக ஒரு இடத்தில் நின்று கொள்ளாது. அவ்வாறு நின்று கொள்ளாமல் இருப்பதன் காரணமாகவே அது மனிதனின் எண்ணங்களைக் கட்டி ஆள்கின்றது.

நிலையற்றவற்றை அவ்வாறு உணர்ந்துவிட்ட மனிதன் அறத்தின் வழியில் நடக்க வேண்டும். அதற்கு என்ன சோதனை வந்த போதிலும், தன் நிலை மறவாமல் கடமையில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதை சொல்லாமற் சொல்கின்றது மகா பாரதம்.

பாரத காவியத்தில் அரசுக்கு உரியவனாகிய திருதராட்டிதனின் மகனாகப் பிறந்ததால் துரியோதனனும் அரசுக்கு உரியவனே. ஆனால் பாண்டு ராஜாவின் மகனாகப் பிறந்ததால் யுதிஷ்டனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இரு பகுதியினரதும் எதிர்பார்ப்பும் கோரிக்கைகளும் நியாயமா னவையே. ஆனால் போரில் வெற்றியை யாருக்கு வழங்குவது என்று யோசித்தபோது, அங்கு தருமத்துக்கே இடம் வழங்கப்பட்டது.

நற்செயலும் பிறரை உறுத்தாத பண்பும் நடுவு நிலைமையும், அன்பு காட்டுதலும் என மானிடப் பிறவியைத் தேவர்களுக்கும் மேலாக உயர்த்திக் கொள்ளும் அற்புத பண்புகளே அறம் எனப்படுகின்றன. அந்த அறத்தின் பாற்பட்டவர்கள், சில சில யுத்திகளைப் பாவித்து, நெளிவு சுளிவுகளுடன் வெற்றியைச் சந்தித்தார்கள் என்பது இங்கே காட்டப்பட்டது.

# 4. இழந்தது ஏதும் உன்னுடையதா?

எமது வாழ்க்கை என்பது குறுகிய கால எல்லையைக் கொண்டது. ஆம் பூமி தோன்றிய காலத்துடன் ஒப்பிடும்போது, மனித நாகரிகம் வளர்ச்சியடைந்த காலத்துடன் ஒப்பிடும்போது, எமது வாழ்நாட்கள் குறுகிய கால எல்லைகளே. வாழ்க்கையின் குறுகிய காலத்திற்குள் பலவற்றையும் அடைந்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் வேகமாக ஓடிக் கொண்டு இருப்பவனுக்கு, உன்னுடையது எதுவும் இல்லை. எதற்காக ஓடுகின்றாய் என்று கேட்கும்போது எவ்விதமான உணர்வுகள் மேலிடும்? ஆனால் அதுதான் உண்மை என்பதை அவன் வருந்தாமல் தெரிவிப்பது எவ்வாறு?

வெகு காலத்திற்கு முன்பாக நான் படித்த ஒரு கதை இப்போது நினைவுக்கு வருகின்றது.

திருமணமாகி பல வருடங்களின் பின்னாலும் சந்ததி இல்லாமல் இருந்த தம்பதியருக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தப் பிள்ளையை அவர்கள் தங்கள் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்தனர். ஆனால் என்ன துரதிருஷ்டமோ, சிறு வயதிலேயே குழந்தை இறந்து விடுகின்றது.

அந்தத் தாயும் தந்தையும் சொல்லொணாத துயரை அடைகின்றனர். அந்தத் தினத்தில் எதுவும் செய்ய இயலாமல் அவர்கள் துன்பத்திலே உழன்று கிடக்கின்றனர். ஆனால் அடுத்த நாள் காலையானதும் அவளின் கணவன் தன்னுடைய தொழிலுக்குப் புறப்பட்டுச் செல்கின்றான். அந்தத் தாயால் பொறுக்க முடியவில்லை.

"எங்கள் அருமைக் குழந்தை இழந்து போனது எத்தனை வருத்தமாக இருக்கிறது எனக்கு. நீங்களோ எந்தத் துன்பமும் இல்லாமல் புறப்படுகிறீர்களே" என்று அவனைக் கேட்டாள். அவனோ குழப்பம் சிறிதும் இன்றிப் பதிலுரைத்தான்.

"நான் இரவு ஒரு கனவு கண்டேன். அதிலே நாங்கள் இருவரும் ஒரு

தேசத்திற்கு அரசனாகவும் அரசியாகவும் இருக்கின்றோம். எங்களுக்குப் பத்துப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களோடு ஆனந்தமாக வாழ்ந்து வருகின்றோம். ஆனால் திடீரெனக் கனவு கலைந்தது. எங்களுடைய அனைத்து சந்தோசமும் மறைந்துவிட்டன. இப்பொழுது நான் இழந்துபோன அனைத்திற்காகவும் அழட்டுமா? அல்லது அந்த ஒரு பிள்ளைக்காக அழட்டுமா" என்று அந்தத் தந்தை கேட்டார்.

தந்தை உலகம் அடிபட்டவர். புத்திசாலி. அதனாலேதான் தன்னுடைய இழப்பை அவர் அத்தனை விரைவில் சீரணித்துக் கொண்டார். ஆனால் அந்தத் தாயால் அது முடியவில்லை. புலம்பித் தீர்த்தாள்.

வாழ்க்கை என்பது அவ்வாறானதே. எதுவும் இல்லாமலே, உடுத்த உடையும் இன்றி இந்த உலகிற்குள் பிரவேசிக்கின்றோம். எல்லாம் உள்ள இந்த உலகில் எமக்குக் கிடைப்பவற்றை மாத்திரம் கொண்டே வாழ்க்கையை நடத்துகின்றோம். இறுதியில் எதுவும் இல்லாதவர்களாக மாண்டு போகின்றோம்.

"உன்னுடையது எதை இழந்தாய்....? " என்ற கேள்வி மறுபடியும் மறுபடியும் எம்மைக் குடைந்து கொள்கின்றது. சற்று ஆறுதலாக ஆராய்ந்து நோக்கினால் அந்த உண்மை வெகுவாகவே எமக்கு விளங்கிவிடும்.

குழந்தைகள் விளையாட்டு இடம் ஒன்றுக்குள் குழந்தை ஒன்று நுழைகின்றது. அதில் கண்ணிற் படுவனவெல்லாம் மிகவும் அழகாகவும் ரம்மியமாகவும் இருக்கின்றன. ஓடித் திரியும் அந்தக் குழந்தை தனக்குப் பிடித்தவற்றை எல்லாம் தன்னுடைய கைகளினால் எடுத்துக் கொள்கின்றது. அல்லது அங்கு இருக்கும் பெரியவர்களின் உதவியுடன் பெற்றுக் கொள்கின்றது.

சில பொருட்களைப் பெற்ற மாத்திரத்தில் சலிப்பு ஏற்படுகின்றது. அவற்றை வீசிவிட்டு வேறு பொருட்களை எடுக்கின்றது. ஒரு சில பொருட்களில் இருக்கும் விருப்பமோ குறைவடைவதே இல்லை. அவற்றை ஆசையுடன் தன்னுடன் வைத்துக் கொண்டு விளையாடுகின்றது.

விளையாட்டு முடிவடைந்து போகவேண்டிய நேரம் வருகின்றது. எடுத்த பொருட்களைப் போட்டுவிட்டுப் போகும்படி பிள்ளைக்குச் சொல்கின்றார்கள். பிள்ளை அழத் தொடங்குகின்றது. அதை வலுக்கட்டாயமாக வெளியில் கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

"அது ஒன்றும் உன்னுடைய பொருள் அல்ல. அவற்றை வைத்து விட்டுப் போக வேண்டும்." என்று அம்மா அணைத்தபடி சொல்லவும் அந்தக் குழந்தை ஓரளவு சமாதானம் அடைகின்றது. அன்னையின் கையைப் பற்றி மெதுவாக நகர ஆரம்பிக்கின்றது.

உலக வாழ்க்கை என்ற விடயத்தில் அந்தப் பிள்ளையைப் போன்ற ஒரு மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். எதுவும் எங்களுடையது அல்ல என்பதை மறுபடியும் நாம் எமக்கே சொல்லிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அப்படியானால் இந்த உலகில் முடிவானது எது? அதாவது முற்றிலும் உண்மையானதும் நிலைத்திருப்பதுமானதும் எது என்ற கேள்வி சுலபமாகவே மனதினுள் புகுந்து விடுகின்றது.

அந்தக் கேள்வியின் அர்த்தம் புரிந்து விடும்போதே எம்மை ஆட்டி வைப்பதான ஒரு செயலை உடனடியாக மனம் கற்பனை செய்து கொள்கின்றது. இந்த உலகில் பிறப்பெடுத்த அனைவரும் ஒரு நாள் மடிந்து விடுவர் என்பது மட்டுமே இங்கு முற்றிலும் உண்மையான ஒரு விடயமாகும்.

அப்படியானால் எனது கண்முன்னால் காட்டப்படும் இந்த உலகமும் அழகும், உறவுகளும் அனைத்தும் பொய்யானவையா என்று அழுது கொண்டே கேட்கத் தோன்றுகின்றது. ஆம் அவை பொய்யானதே. மாயை என்ற பொருளில் இருந்த உலகம் என்ற மாயப்பொருள் தோன்றியது.

அந்த மாயை உண்மை ஆக்கிவிட முடியாதா? மரணத்தை வென்று கொண்டு மனிதன், வாழ்வின் யதார்த்தத்தைச் சொல்ல முடியாதா

என்று மறுபடியும் கேள்வி எழுகின்றது. மரணம் என்பது வெல்ல முடியாதது என்பதை விளக்குவதற்கு நான் இன்னொரு கதையை இங்கு சொல்லுகின்றேன்

கணவனை இழந்த பெண் ஒருத்தி தன்னுடைய பிள்ளையுடன் வாழ்ந்து வந்தாள். ஏதோ நோய் பீடிக்கப்பட்டு குழந்தை இறந்து விடுகின்றது. அதனால் ஆற்றாத் துயருறும் அந்தப் பெண் கௌதம புத்தரிடம் வருகின்றாள். தன்னுடைய பிள்ளையின் உயிரை மீட்டுத் தரும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றாள்.

அவளின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட புத்தர், இதுவரை யாரேனும் இறந்திருக்காத ஒரு வீட்டில் சென்று ஒரு பாத்திரத்தில் நெய் வாங்கிக் கொண்டு வந்தால் அந்தப் பிள்ளையை உயிர்ப்பித்துத் தரமுடியும் என்று சொல்கின்றார். மிகுந்த நம்பிக்கையுடன் அந்தப் பெண் அதைப் பெற்று வருவதற்குச் செல்கின்றாள்.

நம்பிக்கையுடன் ஊருக்குள் சென்றவளுக்கு ஏமாற்றமே கிடைத்தது. அவளால் புத்தர் சொன்ன நிபந்தனைக்கு அமைவதாக ஒரு வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளின் கோரிக்கையைக் கேட்டு அவளை விநோதமாகப் பார்த்தனர்.

இன்னொரு வீட்டில் "இங்கே இருப்பவர்களை விடவும் இறந்தவர்களே அதிகம். இங்கு வந்து எதையும் கேட்காதே. போ" என்று விரட்டிவிட்டார்கள். ஒரு நாள் பொழுது முழுவதும் அலைந்து திரிந்த அந்தப் பெண் வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து கொண்டாள். தன்னுடைய குழந்தையை அடக்கம் செய்துவிட்டு புத்தரின் பாதத்தைப் பணிந்தாள்.

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ..?" என்ற முதுமொழியை அந்தப் பெண்ணுக்குப் புரியும்படியாக அழகாக செயல் மூலம் விளக்கியிருந்தார் அவர்.

மனித வாழ்வின் நிலையாமையையும் உலகத்தின் மாயையையும் பல்வேறு பெரியவர்கள், மதத் தலைவர்கள் என்போர் யாவருக்கும் புரியும்படியாக எத்தனையோ விதமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். மனிதர்களும் அதை வெகுவாகவே ஏற்றுக் கொள்பவர்களாகவும் ஆகி விட்டார்கள்.

உலகம் எவ்விதமாக அமைக்கப்பட்டு இருந்தாலும் மனித வாழ்க்கை என்பது திணிக்கப்படும் விதம் மிகவும் அழகாகவே காட்டப்பட்டுள்ளது. உலகில் அனைத்து சீவராசிகளுக்கும் மேலாக மனிதனின் வாழ்வு அமைக்கப்பட்டு, போட்டிகளின் மூலமாக வழி நடத்தப்படுகின்றது. தனக்குத் தேவையான அடிப்படையானவற்றையுமே பலர் கடும் முயற்சியின் பின்பாக அடைந்து கொள்கின்றனர்.

அவ்வாறு கடும் முயற்சியினால் அடைந்து கொண்டவற்றைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் எண்ணுவதில் தவறில்லை. நல்லதோர் வீணையைச் செய்தபின் அதை நலங்கெடப் புழுதியில் எறிவதற்கு யாருக்கும் விருப்பம் வருவதில்லை. உடம்பைப் பாவித்து பலவிதமான செயல்களையும் செய்த பின்னாலும் உடம்பு அழிந்துவிடுவதை யாரும் விரும்புவதில்லை.

உடம்பை உயிர் சேர்ந்து நிற்கும்போது அதனால் வரும் பயன்களைக் கொண்டே அவர்கள் இவ்வாறு திட்டமிடுகின்றார்கள் என்பது தெரிகின்றது. உதாரணமாக, பத்து வயதுக்குட்பட்ட இரண்டு அல்லது மூன்று குழந்தைகளைக் கொண்ட ஒரு தாய் இறந்துவிடுகின்றாள் என்று வைப்போம். அந்த இடத்தில் அந்த மரணத்தை யாராலுமே ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதை ஏற்றுக் கொள்ளாமல் புலம்பிக் கொண்டிருப்பர்.

இதேபோலவே இளமையில் சாவுகளையும் அபத்தமான சாவுகளையும் அத்தனை சுலபமாக எம்மால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. தன்னுடைய காலத்தில் வாழ்ந்து முதுமையால் இறப்பவரை இயற்கை எய்தினார்

என்றும், காலத்துக்கு முன்னதாக எதிர்பாராமல் இறப்பவரை அகால மரணமடைந்தார் என்றும் சொல்லுகின்றோம். அவருடைய ஆத்மா அமைதியின்றி உலகில் தவித்து உழல்வதாக நினைக்கின்றோம்.

ஆனால் அனைத்துமே காலத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதையே நாம் கண்ணுக்குத் தெரியாத கடவுள் என்றும், காலம் என்றும் சந்தர்ப்பம் என்றும் பலவிதமாகவும் சொல்லிக் கொள்கின்றோம் எதுவாக இருந்தாலும், அதை ஏற்றுக் கொண்டு இயங்கும் பண்பை மனிதன் இயற்கையாகவோ பயிற்சியினாலோ பெற்று விடுகின்றான்.

பாரதப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பாக உலகத்தின் மாயையைப் பற்றியும் உயிரின் நிலையாமையும் பற்றி பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அருச்சுனனுக்குப் போதித்தார் என்று பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதாபிமானம் என்பதை உணர்த்துவதற்கு அந்த உபதேசத்தைக் கொண்டு வந்ததாகவே எனக்குப் படுகின்றது. அது மட்டுமல்லாமல் அவ்வாறான உபதேசத்தை வேறு எந்த நிலையிலேனும் அருச்சுனனைத் தவிர வேறு யாருக்கேனும் உபதேசிக்க முடியாது என்பதும் தெளிவாகின்றது.

அதற்கு ஏதுவான காரணம் என்னவெனக் கேட்கின்றீர்களா? மகாபாரதத்தில் பெருமளவு மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அவர்களின் எண்ணிக்கையைப் பற்றி ஏற்கெனவே கடந்த அத்தியாயத்திற் குறிப்பிட்டிருந்தேன். அத்தனை தொகையிலான மக்களின் சாவுக்கு அருச்சுனன் பொறுப்பாளி ஆகிவிடுவானே! உலகிலே மனிதாபிமானம் என்பது ஒரு மானுடனால் உடைக்கப்பட்டு விட்டதே என்று நாளை சரித்திரம் அவனைச் சாடிவிடக் கூடாது என்பதிலே பகவான் பெரும் குறியாக இருந்தார்

இதனாலே போர் தொடங்கும் முன்பாகவே மாவீரன் அருச்சுனன் சோர்வடைந்ததாகவும், அத்தனை மக்களின் உயிர்களை அழித்துத் தனக்கு இராச்சியம் வேண்டாமெனச் சொன்னதாகவும் அவனுக்கு கடமையின் கட்டாயத்தை எடுத்துச் சொல்லி, உலகத்தை அழிக்கும் முழுப் பொறுப்பையும் கடவுளே எடுத்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகின்றது.

மகாபாரதத்திலே இன்னொரு விடயத்தை ஆழமாகக் கவனித்தாக வேண்டும். கடவுளை உறவினராக்கி தங்களுடன் நடமாட விட்டார்களே யன்றி, நடப்புக்கள் அனைத்துக்கும் மானுடர்களே பொறுப்பாளியாக இருந்திருக்கின்றனர். ஆனால் அத்தனை பேரைக் கொன்று குவிக்கும் நடைமுறையில் மட்டும் கடவுள் அங்கு பொறுப்பேற்று இருக்கிறார்.

மானுடனின் வாழ்க்கையை முற்று முழுதாக ஆட்சி செய்யும் இன்ப துன்பங்களுக்கு அப்பாலும் கடமை என்கின்ற விடயத்தைத் தெளிவாகப் புகுத்தி, நடைமுறையிற் சாத்தியமான விடயங்களைக் காட்டி இருக்கிறார்கள். இராமாயணத்தைப் போல கதா நாயகனைக் கடவுளாகக் காட்ட விழையாமல் அனைத்துக் குறை குற்றங்களும் உள்ள மனிதர்களாக சித்தரித்து இருக்கிறார்கள்.

"இந்த உலகத்தில பிழ விடாதவன் யார். ராமரும் பிழை விட்டிருக்கிறார். சீதையும் பிழை விட்டிருக்கிறார்.. கிருஷ்ணரும் பிழ விட்டிருக்கிறார்..." என்று சாதாரணமானவர்கள் சொல்வது நாமும் அறிந்ததே. ஆனால் அந்த வார்த்தையைக் கேட்கும்போது எனக்குள் சந்தோசம் மேலிடுகின்றது. அவர்கள் அனைவரும் பிழை செய்ததனால்தான் நானும் மனிதனே என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகின்றது. இல்லாவிட்டால் அவதாரமாக மானுட உருவில் அவர்கள் வரும்போது அவர்களால் செய்ய முடிந்ததை ஏன் என்னால் செய்ய முடியவில்லை என்று என்னுடைய மனம் கேட்டுக் கொடுமை செய்திருக்கும்.

ஆக அவ்வாறு அவர்களும் பிழை விட்டிருந்ததால்தான் நாமும் மனிதர்களாக இருக்கின்றோம். இல்லாவிட்டால் உலகத்தில் வாழும் அத்தனை பிராணிகளுள் நான் கடையானவன் என்ற நினைப்பல்லவா எனக்கு வந்திருக்கும். அந்த நினைப்பை உண்டாக்காத அந்த மாமனிதர்களுக்கு நன்றிகள் சொல்லவேண்டும். இனி கீதோபதேசத்திற்குச் செல்வோம்.

"மரணம் அறிவுறுத்தும் நியாயம் மனங்களிக்கும் வாழ்க்கையில் இல்லை" என்ற கண்ணதாசனின் வார்த்தைகள் எனக்கு இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றன. மரண வாசலில் வைத்து ஒருவன் சுயபரிசோதனை செய்து கொள்கின்றான். அந்த நேரத்தில் அவனுக்குள் இருக்கும் உள்ளுணர்வான ஆத்மா தன்னுடைய தவறுகளைப் பற்றியே சிந்தித்துக் கொள்கின்றது. மற்றவர்களுக்குத் தன்னால் செய்ய வேண்டியது ஏதும் இருக்குமா என்பதையும் அளவிடத் துணிகின்றது.

போருக்குப் பறப்பட்ட வீரன் எதையுமே சிந்தித்தாக வேண்டும். அங்கு அவனுக்கு மரண வாசல் திறந்திருந்தபோது அருச்சுனன் அவ்வாறு எண்ணியது சரியானதே. இன்னொரு புறம் நோக்கினால் மரணம் என்பதை நினைக்கும்போது ஏற்படும் அமைதி வேறு எவற்றிலாவது வருகின்றதா என்பதும் ஆராய வேண்டியதுதான்.

உலகத்தில் மரணம் இல்லாத ஒரு நிலையைக் கற்பனை செய்து பார்ப்போம். அதாவது விஞ்சிவிடும் விஞ்ஞானத்தால் மரணத்தை வென்றுவிட்ட ஒரு சமுதாயத்தை எமது மணக்கண் முன்பாக நிறுத்தி நோக்குவோம். "ஐயோ..." என்று அனைவரும் அலறுவதைப் போல எனக்கு ஒலிக்கிறது.

மரணம் என்பது இல்லாதுவிடின் துஷ்டர்கள் எவ்வாறு அழிந்திருப்பர். உலகில் தர்மம் என்பது எவ்வாறு நிலைநாட்டப்பட்டு இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கும்போதே பயமாக இருக்கின்றது. அதுவன்றி மறத்தின் சிறப்பும் வீர மரணமும் எவ்வாறு சாத்தியமாக இருக்கும் என்பதும் கேள்விக் கணையாகவே வந்து நிற்கின்றது.

தீராத நோயால் பீடிக்கப்பட்டு இருப்பவர்கள் எவ்வாறு மரணமின்றி விடுதலை பெற முடியும் என்பதும் வினாவுதற்கு உரியதே! அது தவிரவும் நரை திரையுடன் முதுமையை அடைந்தவர்கள் மரணம் இல்லாமல் எவ்வாறு விடுதலை அடைந்து கொள்ள முடியும் என்பதை யோசிக்கும்போதே அனவருக்கும் வழங்கப்படும் வரமே இந்த மரணம் என்பது தெளிவாகின்றது.

அதெல்லாம் இருக்கட்டும். இளமையில் அரசர்களையும் வாலிபர் களையும் கொன்று குவித்த பாரதப் போருக்கு எவ்வாறு இவ்வாறான நியாயங்களைத் திணிக்க முடியும் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. இப்படிச் சொல்வதாக இருந்தால் முதியவர்களையும் நோயாளிகளையும் மட்டுமே பாரதப் போருக்கு அனுப்பியிருக்கலாமே எதற்காக அத்தனை இளவயதினரை அழித்தார்கள் என்று மறுபடியும் கேட்கின்றீர்கள்.

அதுவே உலக நியதி. அதுதான் வாழ்வின் இரகசியம். அப்படித்தான் வாழவேண்டுவது முறைமை என்று சொல்லி நான் நழுவிவிடப் பார்க்கின்றேன். இருப்பினும் தங்களது பகுத்தறிவு என்னை மறுபடியும் கவர்ந்திழுத்து உங்களுக்கு அருகில் கொண்டு வருகின்றது.

முதலில் மாற்றம் என்ற விடயத்திற்கு வருவோம்..

## 5. மாற்றம் என்னும் மாறாத உண்மை

நிலையாமை அல்லது நிலைக்கும் தன்மையற்றது என்பதைச் சொல்லும்போதே, மாறுதல் என்ற விடயம் இயல்பாக எழுந்து விடுகின்றதே! அனைத்தும் மாறும் அண்டமும் மாறும் அவரவர் இயல்புகளும் மாறி நிற்கும் என்பதை ஒரே வார்த்தையால் குறிப்பது எப்படி?

"மாற்றம் என்பது மாறாதது" அதாவது, மாற்றம் என்பது மட்டுமே உலகில் மாறாதது என்பதைச் சொல்லுகின்றது. அல்லது மாறாத விடயம் எதுவெனக் கேட்கும்போது மாற்றம் என்ற ஒன்று மட்டுமே என்று சொல்லப்படுகின்றது.

இது விடயமாக மேலோட்டமாகப் பார்க்கும்போது எளிமையாகத் தென்பட்டாலும், மயக்குவதும் ஆராய்ந்து அறிய முற்பட்டால் அறிவையே கலக்கி நிற்பதுமான ஒரு யதார்த்தத்தைத்தான் அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள் என்பது புலனாகின்றது. இந்த வாக்கியம் மிகவும் அருமையான ஆழமான வரிகளைக் கொண்டிருக்கிறது. இந்த வார்த்தையைச் சொல்லியவரைத் தேடிப் பிடித்து மெச்ச வேண்டும் என்று தோன்றுகின்றது.

அதாவது ஒவ்வொரு மாறுதலும் கண்ணுக்குப் புலப்படாததுமாக அமைவதைக் காட்டுகிறது. உதாரணமாக பிறந்து விட்ட சிசு ஒரு நாளைக்கு அரை மில்லி மீற்றர் அளவுக்கு வளர்கின்றது. அவ்வாறாயின் ஒரு மாதத்திற்கு அண்ணளவாக 15 மில்லி மீற்றரும், முதல் வருடத்தில் 187 மில்லி மீற்றர் அதாவது 18 சென்ரி மீற்றரும் வளர்ந்து விடுகின்றது. பிறந்த நாட்களில் பார்த்துவிட்டு ஒரு வருடம் கழித்துப் பார்ப்பதாயின் அந்த வித்தியாசத்தை யாராலும் கண்டுகொள்ள முடியும்.

ஆனால் அந்தப் பிள்ளையை, அருகில் வைத்து வளர்த்துக் கொண்டிருக்கும் அன்னையால் அதை ஒவ்வொரு நாளும் இனம் கண்டு கொள்ள முடியாது. அதுதான் மாற்றம்! அதாவது கண்ணுக்குப் புலப்படாத

மாற்றம்! மாற்றத்தைத் தரும் மாற்றம் அதாவது மாறாத உண்மையாகத் தந்துவிட்ட மாற்றம்!

மனிதனில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களும் மிகவும் மெதுவான தாகவே தோற்றம் பெறுகின்றது. இதனாலே சாவகாசமாகச் சொல்லிக் கொடுக்கும் படியாக பாடத்திட்டங்களை அமைத்திருக்கின்றார்கள். ஒரு வருட ஆரம்பத்திலும் அந்த வருட இறுதியிலும் மாணவர்களை அணுகி வினாவும்போது இந்த விடயம் தெளிவாகின்றது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும், நம்மைக் காத்துக் கொண்டிருக்கும் இந்தப் புவியை அவதானித்துப் பார்ப்போமேயானால், பூமி தனது அச்சிலே சுழன்று கொண்டிருப்பதால் ஒரு நாள் அதாவது இரவுடன் பகலும் வருகின்றது. அது சூரியனைச் சுற்றி வருவதால் சுற்றுகை என்பது உருவாகின்றது. ஆனால் இவை அனைத்தும் மாற்றங்களாகவும் நாம் உணர முடியாத சிறு இடைவெளியிலும் இருப்பதால் அவற்றை மாற்றமென நாம் உணருவதில்லை.

அடுத்தடுத்து வரும் நாட்களைக் கருதும்போது, அதிலே ஏழு என்கின்ற எண்ணைப் பாவித்திருக்கிறார்கள். ஏழு எண் என்பது மிகவும் பிரிதகவு குறைந்த ஒரு எண்ணாகும். மூன்று, ஐந்து போன்றவையும் முதன்மை எண்களாக இருந்தபோதும், பிரிதகவில் அதிக தொகையைக் காட்டின. இதனால் மிகவும் பிரிதகவு குறைந்த முதன்மை எண்ணாகிய ஏழு என்பது தெரிவு செய்யப்பட்டு வாரத்தின் நாட்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

அவ்வாறு பிரிதகவு குறைவதால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் முன்னே வந்தது வருகின்ற சந்தர்ப்பம் இல்லாது போய்விடும். அதனால் மாற்றம் என்பதை மிகவும் எளிதாகக் கொண்டு வர இயலும் என்பதை அறிந்தே வாரத்தில் ஏழு நாட்கள் என்ற கணக்கை விதித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

பூமிக்கு அருகில் மிக அருகாமையில் இருப்பதால் பூமியில் இருப்பவர்களுக்கு சந்திரன் புலனாகும் விதத்தையும் கொண்டே திதி

என்பது கணக்கிடப்படுகின்றது. முழுமையாகப் புலனாகாது விடும் சந்திரன், தன்னுடைய முழு ஒளியைக் காட்டும் வரையிலுள்ள காலம் பூர்வ பக்கம் என அழைக்கப்படுகின்றது.

அந்தப் பூர்வ பக்கத்திற்குரிய காலம் பதினான்கு நாட்களை விட அதிகமாக அதாவது நாழிகைப் பொழுதில் வித்தியாசம் காட்டுமளவில் அமைந்திருக்கின்றது. இதனால் ஒரு பௌர்ணமிக்குப் பின்பாக இன்னொரு பௌர்ணமியைக் காணும் வரையிலும் இருபத்தொன்பது நாள் இடைவெளியைக் கொண்டிருக்கும். இதனால் அமாவாசையோ அன்றி பௌர்ணமியோ அடுத்தடுத்து ஒரே தினங்களில் வருவதில்லை.

முழுமதி திதி அல்லது அமாவாசை திதிகளுக்கு இடையிலான இடைவெளி ஒரே அளவாக இருந்தபோதிலும் மாதங்கள் ஒரே அளவிலான எண்ணிக்கையில் அமைவதில்லை. முதலாம் மாதத்தில் முப்பத்தொரு நாட்கள் அடுத்த மாதத்தில் இருபத்தெட்டு நாட்கள் தொடர்ந்து வரும் மாதத்தில் முப்பத்தொரு நாட்கள் என செல்லும் சீரான ஒழுங்கைக் குழப்பி வைத்திருப்பது இம்மாற்றத்தை எதிர்பார்ப்பதனாலோ!

ஒரு வருடம் என்னும் கணக்கை நோக்கும்போது முந்நூற்று அறுபத்தைந்தே கால் நாட்கள் என்ற அளவை வைத்திருப்பதால், கிழமைக் கணக்கைப் பார்க்கும்போது ஏழால் பிரித்தாலும் ஒன்றே கால் நாட்கள் மிகுதி வருவது போலவே அமைந்திருப்பதால் ஒரு வருடத்தில் ஒரு திகதி வந்த அதே கிழமையில் அடுத்த வருடத்தில் வர முடியாது. ஒரு நாள் தள்ளியே வந்துவிடும். அதனைக் கொண்டு மாற்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அவ்வாறு வருடங்கள் ஒரே அளவில் வந்துவிடுமா என்று கேட்டால், அதுவும் கிடையாது. நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை லீப் வருடம் என்ற இன்னொரு கணக்கு முந்நூற்று அறுபத்தாறு நாட்களுடன் வந்து சேரும். இதனால் மீண்டும் ஒரு மாற்றம் பிரேரிக்கப்படுகின்றது. இவ்வாறு அனைத்திலுமே சிறு வித்தியாசத்தை ஏற்படுத்தி மாற்றம் என்பதை மென்மையாகப் புகுத்தியுள்ளார்கள்.

ஆதியில் பூமி உருவாக்கப்பட்டதும் அது குளிர்வடைந்து அதன்மீது நீர் தோற்றம் பெற்றதும் மெதுவான மாற்றங்களாகப் பன்னெடுங்காலம் எடுத்தே நடைபெற்றிருக்கின்றது. முதன் முதலில் நீரில் உயிரினம் தோன்றியதும், கூர்ப்பினாலே உயிரினங்கள் தோற்றம் பெற்றதும், குரங்கிலிருந்து மனிதன் தோற்றம் பெற்றதும், அதே போல பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே ஆகும்.

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கான செயற்பாடுகளாக மெதுவாக இயற்கையில் நடைபெறும் மாற்றங்களை கூர்ப்பு அதாவது evalution என்று சொல்லுவார். சடுதியாக மனிதனால் ஏற்படுத்தப்படும் விருத்தியையும் எழுச்சியையும் revolution அதாவது புரட்சி என்று சொல்லுவார்கள்.

இந்த இரண்டாலுமே ஏற்படுத்தப்படுபவை பொதுவாக மாற்றங்கள் என்று கொள்ளப்படுகின்றன.

ஆனால் மனிதனைப் பொறுத்தவரையில் மென்மையான சீரான மாற்றத்தையே சந்தோசமாக ஏற்றுக் கொள்கின்றான். சடுதியாக மாற்றம் ஏற்படின் மற்றவர்களின் கண்களை உறுத்தி அவனுடைய வாழ்க்கை மிகவும் மோசமாகத் தள்ளப்படுகின்றது.

குப்பை மேட்டில் இருப்பவன் திடீரெனக் கோமகன் ஆவதும், கோபுரத்தில் இருப்பவன் திடீரெனக் குப்பை மேட்டுக்கு வந்துவிடுவதும் இவ்வாறானதே. இந்த நிலைமையில் முன்னவனைத் திடீர்ப் பணக்காரன் எனவும் இரண்டாமவனை வாழ்ந்து கெட்டவன் என்றும் அழைத்துக் கலவரப் படுத்தவே அனைவரும் முயல்கின்றனர்.

அதனால் சடுதியான மாற்றங்களால் சாதகமாக எதுவும் ஏற்படுத்தப்படுவதில்லையா? என்று அனைவரும் ஒரு முகமாகவே கேட்கும் கேள்விகள் காதில் ஒலிக்கின்றன.

மனிதன் விரும்புவதுதான் சாவதானமான மாற்றம் என்பதைச் சொன்னேன். மனிதனுக்குப் புகுத்தப்படுவது அது அல்ல. அவசியம்

ஒன்று எழும்போது அவன் வெகுண்டு தன்னை மீறிய அனைத்தையும் செய்யத் துணிகின்றான்.

சீனப் புரட்சி, இரஷ்சியப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி போன்றவற்றால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இவற்றுக்குச் சான்று பகர்கின்றன. கடமைகளையும் விருப்பு வெறுப்புகளையும் தாண்டிய தேவைப்பாடு அங்கு முன் நிற்கின்றது.

"Necessity is the mother if invention" என்ற ஆங்கிலப் பழமொழி இதற்குச் சான்று பகர்கின்றது. மனிதனின் அறிவுக்காகவும், ஆர்வத்துக்காகவும் கண்டுபிடிக்கப்படாத எத்தனையோ விடயங்கள் அவசியத்திற்காகக் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதைக் காண்கின்றோம். ஒவ்வொரு மாற்றத்திற்காகவும் அவனைத் தூண்டி நிற்பது சந்தர்ப்பம் என்று சொல்லப்படும்

Un predictable and un determined முற்கூட்டியே தீர்மானிக்கப்பட முடியாததும் யாராலும் சொல்லப்பட முடியாததுமாகிய ஒரு விடயமே இந்த மாற்றம் என்று கொண்டுவிடலாமா?

முற்கூட்டியே சொல்லப்படவும் நினைத்துக் கொள்ள முடியாததுமாகிய மாற்றங்களை ஏற்படுத்திச் செல்வதில் யாருக்கு என்ன இலாபம்.? வந்தவர்கள் அனைவரினதும் எதிர்பார்ப்புகளைத் தகர்த்தெறிவதில் யாருக்கு அத்துணை இன்பம்?

இந்தக் கேள்வி ஒரு ஆஸ்திகனிடம் இருந்து எழும்போது, அவன் கடவுளைத் தூற்ற முனைகின்றான். ஒரு குற்றவாளிக் கூண்டிலேற்றிக் கேள்வி கேட்க முனைகின்றான். அவன் முற்றுமுழுதாக இறைவனை நம்புவதாலேயே இந்தக் குழப்பம் எழுகின்றது.

எமக்குப் பிரியமானவர்கள், எமக்கு நம்பிக்கையானவர்களையே நாம் கேள்வி கேட்கவும் கோபித்துக் கொள்ளவும் முடியும். எமக்கு ஏற்படும் அதீத நம்பிக்கை உடைத்தெடுக்கப் படும்போதே ஆத்திகர்களாக இருக்கும் நாம் கடவுளை வெறுக்கும் நிலைக்கு ஆளாகிவிடுகின்றோம்.

கடவுளை வணங்கிடாத, விரும்பிப் போற்றிடாத கணநிலை உணர்வுகள் எம்மிடையே வந்து போகாமல் விடுவதில்லை. அப்படியான நிலைகளை நாம் அனுபவிப்பதால்தான் நாம் ஆஸ்திகர்களாக இருக்கின்றோம். கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டே எமது துன்பங்களைக் கடக்க முனைகின்றோம்.

சற்றே ஆராய்ந்து பார்க்கும்போது மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களும் மிகவும் மெதுவாகவே இடம்பெறுவதை உணர்ந்து கொள்ளலாம். மூன்று தலைமுறைக்கு மேலாக வாழ்ந்தாரு மில்லை. மூன்று தலைமுறைக்கு மேல் கெட்டவர்களும் இல்லை என்ற வார்த்தையே மாற்றத்தைத் தெளிவாகக் காட்டுவதாக இருக்கின்றது.

சாதாரணமாகத் தொடங்கும் ஒரு மனிதனின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். விறகு வெட்டியோ, விவசாயம் செய்தோ, வேறு பொருட்கள் செய்தோ அவன் வாழ்க்கையைத் தொடங்குவதாக வைத்துக் கொள்வோம். அவனுடைய வாழ்க்கை சீராகப் போய்க் கொண்டிருக்கும்.

தனது தலைமுறையினருக்காக அவனது பிரயாசைகள் அவனுக்கு நல்ல பயனைத் தருவதாக அமையும். தன்னைவிட சற்று உயர்ந்த நிலைக்கு தன்னுடைய வாரிசுகளை உருவாக்கிவிட வேண்டும் என்று விரும்புவான். மிகுந்த பிரயாசைக்கு மத்தியில் அவனுடைய வாழ்க்கை வெளிச்சத்துடன் இயங்கத் தொடங்கும்.

அவனுடைய மகன் தன் தந்தையினுடைய துயரங்களை அருகிருந்து பார்த்து வளர்ந்ததால் அவனும் சற்றுக் கவனத்துடனும் இயங்குவான். அவனுடைய காலத்தில் தந்தையாரை விடவும் அதிகமாகப் பொருளையும் புகழையும் சேர்த்தவனாக இருப்பான். தந்தையின் ஆசையை நிறைவேற்றி தானும் முன்னேறிச் செல்லும் ஒருவனாக அமைந்து விடுவான்.

அவனுடைய மகன் செல்வச்செழிப்புடனே அவதரிப்பான். தன்னுடைய பாட்டனாருடைய பிரயாசையும் வாழ்க்கையும் தெரிவதில்லை. அவனுடைய

கண்களில் தெரிவது அனைத்தும் நிலையானது நிரந்தரமானது என்ற எண்ணப்பாட்டைக் கொண்டிருப்பான். அவனுடைய வாழ்க்கையில் அதிகமான பிரயாசை இருப்பதில்லை.

அவனுக்கும் ஒரு வாரிசு தோன்றுவான். அவனுடைய வாழ்க்கையில் தன்னுடைய பூட்டனாரைப் பற்றி நினைக்கத் தோன்றுவதில்லை. எத்தனையோ பரம்பரையாகவே செல்வத்தில் கொழித்து வளர்ந்த ஒருவன் என்ற நிலைப்பாட்டையே கொண்டிருப்பான். தனக்குச் சேர்த்து வைக்கப்பட்ட அனைத்து செல்வங்களையும் கண்மண் தெரியாமற் கரைத்து அழித்து விடுவான்.

அவனின் வாரிசு வறுமையிலே பிறப்பான். வாழ்ந்து கெட்டவன் என்ற பெயரும், அவனுடைய சந்ததியினரால் செய்யப்பட்ட அநீதிகளும் தலையெடுக்கத் தொடங்கும். அனைத்தும் பழியைத் தீர்த்துக் கொள்வதற்காக அவனையே நாடிச் செல்லும். இந்த உலகத்திலேயே மிகவும் கீழான நிலைக்கு அவன் தள்ளப்படுவான்.

அவனுக்குத் தோன்றும் வாரிசு ஓரளவு தெளிவானவனாகவே இருப்பான். தன்னுடைய தந்தை பட்ட துன்பமும் பாட்டனார் செய்த தவறுகளும், தன்னுடைய வாழ்க்கையை முன்னேற்றிவிட வேண்டும் என்ற துடிப்புடன் இருப்பான். அவனுடைய வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாகவே இருக்கும். நினைக்கும் எதுவும் கைகூடாமல் இருக்கும் அல்லது மிகுந்த பிரயாசையின் பின்பாகவே கைகூடும். மிகுந்த கஷ்டப்பட்டு ஓரளவு நிலைக்குத் தன் சந்ததியினரைக் கொண்டு வந்துவிடுவான்.

அவனுக்குத் தோன்றும் மகன் மிகுந்த அதிஷ்டசாலியாக இருப்பான். அவனுடைய வாழ்க்கையிலே ஓரளவு பிரயாசையுடனும் அனைத்தையும் சாதித்துக் கொள்வான். மிகுந்த சிறப்புப் பெற்றவனாக மற்றவர்கள் போற்றும்படி வாழ்வான்.

இவ்வாறாக மூன்று தலைமுறைகளுக்கு மேலாக சக்கரம் போல சுழலும் வாழ்வைக் காட்டியே மனிதனின் வாழ்க்கைப் பாதை அமைக்கப்பட்டு இருந்தது. செல்வந்தன் எனப்படுபவனும் வறியவன் எனப்படுபவனும் இவ்வாறுதான் ஒரே சந்ததியிற் தோன்றி மறைந்தனர்.

மாற்றம் என்பதை நிச்சயமாகக் கொண்ட போதிலும், கண்ணுக்குப் புலப்படாது அவற்றை மென்மையாக மாற்றி அமைத்துக் கொள்ளும் மனிதனின் வாழ்க்கையின் இரகசியம் என்பது இதுதான். அந்த விதிக்குக் கட்டுப்படாதவாறு யாருடைய வாழ்க்கையும் அமைக்கப்படவில்லை.

ஆனால் இந்த ஒழுங்கில் அன்றி சடுதியாக பணக்காரர் ஆனவர்களும் ஏழை ஆனவர்களும் இல்லாமல் விடவில்லை. இதுதான் கலியுகத்தின் மிக உச்சகட்ட நிகழ்வு என்றும் சொல்லலாம்.

சாதாரணமாக தனது அன்றாட வாழ்க்கைக்கே செலவழிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தவன் கோடீஸ்வரன் ஆகிவிட்ட வரலாறு நாம் அறிந்ததே. புலம்பெயர் வாழ்க்கையை மேற்கொண்ட ஒரு சிலர் இவ்வாறு திடீர்ப் பணக்காரராக இருபது வருடங்களுக்கு முன்பாகப் பேசப்பட்டார்கள்.

உள்நாட்டிற் பாதுகாப்பின்றி வெளிநாடுகளிற்குப் பயணம் செய்தவர்கள், தம்முடைய நிலையைத் தாள முடியாமல் கடத்தல் முதலான பல தேச விரோத முயற்சியில் ஈடுபட்டபோது அவர்களின் பெற்றோர் இங்கு செல்வத்தில் மிதந்தனர். வேறு சிலர், பண்பாட்டை மறந்து வெளிநாட்டு வரன்களை மணந்து, அவர்களின் செல்வத்தால் தமது குடும்பத்தை பணத்தில் மூழ்கடித்தனர்.

அவர்களுடைய வாழ்க்கை நிலைக்கவில்லை. மிகக் குறுகிய காலத்திற்கு உள்ளாகவே அனைத்தும் போய்விட அமைதியின்மையைத் தேடிக் கொண்டார்கள். அனைவரின் கவனத்தை ஈர்த்துவிட்டு அடிமட்ட நிலைக்குப் போய்விட்டார்கள்.

யுத்த காலத்தில் பொருட் கடத்தல் மற்றும் வேறு விதமான தொழில்களைச் செய்து முன்னணியில் வந்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிப்படையாகவே திடீர்ப் பணக்காரர் என்ற நிலையிற் தென்பட்டனர்.

இவற்றைத் தவிரவும் யுத்தம் முடிவடைந்த காலத்தில் சீட்டு எனப்படும் மறைமுகமான சூதாட்டத்தினால் பணக்காரராக கருதப்பட்டவர்களும் இருக்கின்றார்கள். வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் கொண்டு போய்விட்ட கதையாக அவர்கள் அனைத்தையும் இழந்து தவித்தும் அனைவருக்கும் தெரிந்ததே.

மாற்றம் என்பது புலப்படாததாக இருக்கும் வரையில் அதனை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர் என்பதும் சடுதியான மாற்றங்கள் இயற்கையாலுமே பொறுத்துக் கொள்ள முடிவதில்லை என்பதும் மேலே காட்டப்பட்டுள்ள சம்பவங்கள் வாயிலாகத் தெளிவாகின்றது. மற்றவர்களின் கண்ணுக்கு உறுத்தாமல் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் என்றும் நிலையாகத் தென்படுவதை யாராலும் மறுத்துவிட முடியாது. அவ்வாறானதொரு மாற்றம் நிச்சயமானதால் நாமும் நம்புவோம், எமது வாழ்க்கையிலுமே வசந்தத்தை எதிர் கொள்வோம் என்று..

## 6. அண்டப் பிரபஞ்சத்திலே எங்களுக்குரிய பங்கு

எல்லாம் காட்டப்படும் இந்த உலகிலே எமக்கென ஒதுக்கப்பட்டதை, அரும்பெரும் முயற்சியினாலோ அல்லது சந்தர்ப்பத்தினால் வரும் அதிஷ்டத்தினாலோ, கிடைக்கப்பெற்றவர்களாக நாம் அனுபவித்துக் கொண்டுவாழ்கின்றோம்என்பதைநான்ஏற்கெனவேகுறிப்பிட்டிருந்தேன்.

ஒரு சிறு உதாரணத்தை இங்கு கொண்டு வருவதற்கு முற்படு கின்றேன். ஒரு பெரிய சாப்பாட்டு மேசையைச் சுற்றி நாம் அநேகர் உட்கார்ந்து இருக்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சாப்பாட்டு மேசையில் பலவிதமான உணவுப் பொருட்களும் வெவ்வேறு இடங்களிற் பரவி வைக்கப்பட்டு இருக்கின்றது.

எனக்கு அருகில் இருக்கும் பொருட்களை நான் சுலபமாகவே எடுத்துக் கொள்ளலாம். சிலவற்றை அருகில் இருப்பவர்களின் துணையுடன் எடுத்துக் கொள்ளலாம். இவற்றைத்தான் விதியின் பலனாக நாம் அனுபவிக்கும் விடயங்கள் என்று சுலபமாகச் சொல்லி விடுகின்றோம்.

மேலும் சில பொருட்களை எத்துணை முயற்சி செய்தாலும் பெறக் கூடியதாக இருப்பதில்லை. இவற்றை எம் வாழ்வில் கிட்ட முடியாதவை என்று நினைத்துக் கொள்கின்றோம். அதேபோல எமக்குத் தூரத்தில் இருப்பவர்களுக்கு, எம் அருகில் இருக்கும் வளங்களும் கிட்ட முடியாதவையே ஆகும்.

எமக்கு மிக அருகாமையில் இருக்கும் ஒரு சில பொருட்களை எமக்குப் பிடிப்பதில்லை. எம்மை நோக்கிக் கைகளை நீட்டிக் கொள்ளும் சிலருக்கு அதை வழங்கி விடுகின்றோம். அவர்கள் அதனை மகிழ்ச்சியுடன் உண்டு கழிப்பர். அதற்காக சந்தோசப்படுவர். இது விரும்பியோ விரும்பாமலோ மற்றவர்களுக்காக நாம் செய்யும் நல்லதையும் கெட்டதையும் குறிக்கின்றது. இதுதான் அண்டப் பிரபஞ்சத்தில் எமக்கென வழங்கப்படும் பங்கு என்பதை நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

உலகம் என்பது எண்ணிலடங்கா வளங்களையும் வசதிகளையும் கொண்டது. இவை அனைத்தையும் நாம் கண்களால் பார்த்து இரசிக்க முடியும். கைகளினால் தீண்டுவதோ கொண்டாடுவதோ முடியாது. அதைத்தான் "உன்னுடையது எதை இழந்தாய்.. எதற்காக வருந்துகின்றாய்...?" என்று கீதையிற் பரமாத்மா அருச்சுனனுக்குக் கேட்பதாக அமைத்திருக்கிறார்கள்.

எல்லோருடைய வாழ்வும் சமமாக இருப்பதில்லை. இதனால் ஒருவர் மீது மற்றொருவர் பொறாமை கொள்கின்றோம். அல்லது அந்த வளங்களைத் தட்டிப் பறிக்க முயல்கின்றோம். அதனால் வெறுப்பு, விரோதம், காழ்ப்புணர்வு என்பன எம்மிடம் வருகின்றது. பல சந்தர்ப்பங்களில் எம்மிடமே எமக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. மற்றவர்களாலும் சமுதாயத்தாலும் ஒதுக்கப் பட்டவர்களாக வந்து விடுகின்றோம்.

பல பேருடன் வாழும் சமுதாயத்திலே தன்னுடைய சுயநலத்திற்காக மற்றவர்களுக்குத் தீங்கு செய்து விடாதிருக்கும் வகையிலும், அவரவர் தம்முடைய வாழ்க்கையை விளக்காக ஒளிரச் செய்யும் வகையிலும், ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அமையவேண்டும் என்பதற்காகவே வேதங்கள் எனப்படும் வாழ்க்கையின் தத்துவங்கள் இறைவனால் நேரடியாக வழங்கப்பட்டது என்பதை இந்து மதம் நினைவிற் கொண்டு வருகின்றது. வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டியவற்றை வேதங்கள் சொல்லி நின்றன. மகாபாரதத்தில் பலபேருடைய வாழ்க்கை பலவிதமாகக் காட்டப்படுவதால், அதை ஐந்தாவது வேதம் என்று சொல்லும் வழக்கமும் இருக்கிறது.

இவற்றைவிடவும் ஒவ்வொரு மதங்களும் அனைவரும் வாழ வேண்டிய முறைமையை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. அன்புவழிஎன்பதைஅடிப்படையாகக்கொண்டு,அனைவரின்வாழ்வுக்காக, அதிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்காக, அல்லல்படுபவர்களுக்காக் குரல் கொடுப்பவர்கள் தொண்டர்களாகப் போற்றப்பட்டனர். மதக் கொள்கைகள் அவர்களைச் சார்ந்து உருவாக்கப்பட்டன.

மனித நாகரிகத்தை ஏனைய விலங்குகளிடம் இருந்து வேறுபடுத்தும் ஒரு களமாக மதம் என்பது பாவிக்கப்பட்டது. கலாசாரம் பண்பாடு என்பவை எல்லாம் மதங்களை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டன.

ஒரு மதம் உருவாக்கப்பட்ட காலத்தைக் கொண்டோ, அதைப் பின்பற்றும் தொகையினரைக் கொண்டோ மதம் பெருமைப்படுத்தப் படுவதில்லை. அனைத்து மதங்களிலும் கூறப்படும் அன்பு நெறியும், ஒருவரை ஒருவர் துன்புறுத்தாத மனித வாழ்க்கையும் அனைவருக்கும் எடுத்துக் காட்டாக வேண்டிய விடயங்களும் அனைத்து மதத்தினரிடையேயும் காணப்படுகின்றன. மதத்தின் பெயரால் மதம் பிடிக்காதவர்களாக இருக்க வேண்டும் என்பதே அனைத்து மதத் தலைவர்களினதும் குறிக்கோள் ஆகும்.

அகிம்சை என்பதன் மூலம் ஏனையவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருக்கும் நிலையையும், அறம் என்பதன் மூலம் அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காக துணை புரியும் விடயங்களையும், மதங்கள் சாத்வீகமாகவே எடுத்து உரைக்கும்போது, சட்டங்கள் கட்டாயமான நிபந்தனைகளை விதித்து நிற்கின்றன. மதி கெட்டு மாக்களாகத் திரியும் மூடர்களுக்கு, அச்சுறுத்தல் என்ற சிறு விழிப்புணர்வின் மூலமாக வாழும் முறைமையை விளக்கும் நோக்கோடு எழுந்தவையே சட்டங்கள் ஆகும்.

பூமியில் பல்வேறு இடங்களிலும் அவர்களின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் மத ரீதியாகப் பேணுவதற்குரிய சட்டங்கள் உருவாக்கப்பட்டபோது உலகில் பலராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான பொதுவான விடயங்கள் ஐரோப்பியரால் தொகுக்கப்பட்டன. அதிலும் ஒல்லாந்துக்காரர்களே முதன் முதலில் உலகிற்குச் சட்டத்தை வழங்கிய வர்கள் என்ற பெருமை பெறுகின்றனர்.

தண்டனைகள் அதிகமானதாயின், குற்றங்கள் குறைக்கப்படலாம் என்ற எண்ணம் யாவரிடமும் இருக்கின்றது. பிழைகள் செய்யும்

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மனசாட்சியின் பிடியில் இருந்து விலகிச் சென்றே தன்னுடைய கருமங்களை ஆற்றுகின்றான். அந்த செயலுக்காக மனதில் பயந்து கொண்டிருக்கின்றான். ஆனால் காட்டிக் கொள்வதில்லை. தன்னைக் கண்டு அடித்து விடுவார்களே என்ற பயத்தில் பாம்பு மறைவதைப் போன்று, உலகிற்கும் மக்களிற்கும் பயந்து ஒதுங்கி வாழ்க்கையை நடத்துகின்றான்.

இன்று நாடுகள் ஒவ்வொன்றுக்கும் அரசியல் யாப்பிற்கேற்ப சட்டங்கள் இயற்றப்பட்டு விட்டன. சட்டங்கள் எனப்படுபவை கடுமையாக ஆக்கப்பட்டு, கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டியவை என்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. இவ்வாறாக கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களால் குற்றங்கள் குறைக்கப்படவும் அனைவரின் பாதுகாப்பும் சுகவாழ்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே ஒவ்வொரு அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாகும்.

இதனால் குற்றங்கள் முற்றாகக் குறைக்கப்பட்டோ தடுக்கப்பட்டோ விடுகின்றதா என்ற கேள்வியும் எம்மிடம் எழாமல் இல்லை. அவற்றில் தென்படும் ஓட்டைகளைப் பயன்படுத்தி அவற்றைத் தாண்டிவிடவும் இன்றைய மக்கள் தயங்குவதில்லை. இதனால், யாருக்கோ தப்புவதைப் போல காட்டிக் கொண்டு, தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர்.

எழுதப்படாத சட்டங்களான சில இயற்கையின் நிகழ்வுகளும் மனிதனைச் சமப்படுத்தி விடுகின்றது. அவற்றை பண்பாடு என்ற வகையில் அடக்கி விடுவர். சமுதாயமாக வாழும் மனித வாழ்க்கையில் ஏற்கெனவே நற் சிந்தனையுடன் வாழ்ந்த பெரியவர்களால் ஆராயப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறைகள் அந்த விதத்தில் அடங்கிவிடுகின்றன.

**"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பெழுந்து வேங்காற் துயராண்டுழவார்**
**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**
**வருங்காற் பரிவதிலர்"**

என்ற நாலடியாரின் மூலம் உடம்பாகிய கரும்பாகிய உடம்பின் பலனை பிரயாசைப்பட்டுக் கைக்கொண்டவர்கள், இறப்பு என்று வரும்போது அதற்காகக் கவலைப்படுவதில்லை என்பதைச் சொல்லு கின்றது. ஒரு பொருள் தோற்றம் பெறும்போதே அழிவு என்பதும் நிச்சயமாக்கப்பட்டு விடுகின்றது. இது பூட்டும் சாவியும் போன்றது. பூட்டுக்கு நாங்கள் ஓட்டைகளை வைத்துத் தயாரிக்கும்போது, அதற்குப் பொருந்துமாறு சாவியையும் தயாரித்தாக வேண்டும். இது இரண்டும் வித்தியாசமாக பரிமாணங்களைக் கொண்டது. ஆனால் ஒன்று இல்லாமல் மற்றொன்று செயற்பட முடியாது. அதேபோல பிறப்பிற்கு இறப்பு என்பதும், ஆக்கத்திற்கு அழிவு என்பதும் அடிப்படையானதே.

இதனால், இனிப்பான சாற்றை விட்டு எடுத்ததும் கரும்பின் சக்கை அழியும்போது அதற்காக வருந்துபவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அதேபோல நிலையில்லாத இந்த உடம்பில் பலனை பிரயாசைப்பட்டுக் கைக்கொண்டவர்கள், இறப்பு வரும்போது வருந்துவதில்லை. அது இயற்கையானது சாதாரணமானது என்ற மனநிலையைப் பெற்றுவிடுவார்கள்.

ஆனால் மனிதனின் நிறைவைக் காணாத மனது, அங்கும் திருப்தியைக் கொண்டுவிடுவதில்லை. இன்னும் சிறிது காலம் இருந்திருக்கலாம். இன்னும் சிலவற்றைச் செய்திருக்கலாம் என்றெல்லாம் அதன் பெறாத பக்கத்தையெல்லாம் புரட்டிப் பார்த்துக் கவலைப்பட்டுக் கொள்ளும். கிடைத்தது போதாதென்று மென்மேலும் ஆசைகளைப் பெருக்கிக் கொள்ளும்.

சிலருடைய வாழ்க்கையில் நினைத்தது எதுவும் நடப்பதில்லை. என்று சொல்லுவார்கள். அவர்களுடைய தேடல் நிறைவேறாத ஒன்றாக வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லுவார்கள். இதில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையின் சுவையை அதிகரிப்பதற்காக, ஆண்டவன் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டுப் பரிசோதனையே இதுவாகும். அந்த ஒரு தேடலை வைத்துக் கொண்டே

வாழ்க்கை ஓடிக் கொள்ளும். அதிலும் எமக்குப் பிடித்தமான, எம்மால் இழப்பதற்கு விருப்பப்படாத ஒரு சில விடயங்களுக்காக மட்டுமே சோதனைகள் நடத்தப்படும்.

அதனால் உடையும் மனம் அடிக்கடி அலைக்கழிக்கப்பட்டும் அமைதியை இழந்தும் பரிதவித்துக் கொண்டிருக்கும். "நீ இருக்கிறாயா.. இருக்கிறாயா" என்று தனக்குள் வாழும் இறைவனையே அடிக்கடி கேட்டுக் கொள்ளும்.

எதுவும் நிலையில்லாத இந்த உலகை அமைத்துவிட்டு நிலையான பேற்றை வேண்டும் கடவுளின் படைப்பு ஆச்சரியத்துக்கு உள்ளாவதாகவே இருக்கின்றது. அதிலும் அவற்றை நிலையானதென எண்ணி மயங்கும் மனிதனையும் அவனது ஆட்டங்களையும் அசைவுகளையும் வேடிக்கை பார்த்தவாறாக ஓய்வில் இருக்கும் கடவுளின் இயல்பு பிரம்மிக்க வைப்பதாகவே அமைகின்றது.

இல்லாததில் இருந்து உள்ளதைப் பெறும் மனிதனின் அதீத திறமை இங்கு காட்டப்படுகின்றதா?. அல்லது இருட்டில், இரவில் இருந்து கொண்டு, தனக்குச் சுயவொளி இல்லாத தண்மதியிடம் ஒளியைப் பெற்றுக் கொள்ள விழையும் அதனைக் கண்டு மகிழ்ந்திடும் தன்னறிவற்ற மனிதனின் மடமையை எடைபோடுவதா?

கேள்வி எழும்போதே பதிலைத் தரவேண்டும் என்ற ஆவலும் துடித்தெழுந்து நிற்கின்றது. இல்லாததில் இருந்து உள்ளதைப் பெறுவதற்கு முடியுமா? அணைந்துவிட்ட ஒரு தீபத்தைக் கொண்டு ஆயிரம் தீபங்களை ஏற்றுவிக்க முடியுமா?

முடியும். பூச்சியத்தில் இருந்து கொண்டு ராச்சியத்தை ஆளும் நாயகனால் முடியும். ஒன்றுமே இல்லாததில் இருந்து மாயையில் இருந்து மண்ணுலகையும் அனைத்து உலகங்களையும் சிருஷ்டித்த அதி நாயகனால் முடியும்.

அது எப்படி என்று சற்று விளங்கும்படியாகவே பார்க்கலாம். நாம் ஒரு தொலைகாட்டியின் ஊடாக நுண்ணங்கிகளைப் பார்க்கின்றோம். அதை பன்மடங்கு பெரிதாக்கிப் பார்க்கின்றோம். அது ஒரு சாதாரண பூச்சியைப் போல எமது கண்களுக்குத் தோற்றம் அளிக்கின்றது.

அதே பூதக் கண்ணாடியை வைத்து எமக்குப் புலனாகும் ஒரு உருவத்தைப் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். அது பன்மடங்காகப் பெரிகும்போது அதன் நிழலுருவை எம்மால் காண முடியாது அது எங்களுடைய கண்களின் பார்வை எல்லையைத் தாண்டியும் அளவிற் பெரிதாகிவிடும். அதனால் எமது கண்கள் அதனை அடையாளம் கண்டு கொள்வதில்லை.

இதனால் அந்தப் பூச்சியைப் பரிமாணம் இல்லாதது என்றோ நுண்ணங்கி என்றோ கொள்ள முடியுமா? நிச்சயமாக இல்லை. அது பரிமாணமுள்ள பிராணி. அந்த சந்தர்ப்பத்தில் எங்கள் கண்களில் தெரியவில்லை. அவ்வளவுதான்.

பறவையாகவும் விலங்காகவும் கணிக்கப்படும் வௌவால் என்னும் பிராணி எழுப்பும் ஒலியை நாம் கேட்க முடிவதில்லை. அதனால் வௌவால் ஒலியை எழுப்புவதில்லை என்று சொல்லலாமா?

எங்கள் காதுகளின் கேள்தகு எல்லை இருபது ஹேட்ஸ் மீடிறன் அளவிற்கும் இருபதினாயிரம் ஹேட்ஸ் மீடிறன் அளவிற்கும் இடைப்பட்டதாகும். அதனால் அந்த எல்லைக்குள் அடங்காத வௌவாலின் ஒலி அதாவது கழியொலியை எம் காதுகள் உணர்வதில்லை.

இந்த விடயத்தை உபநிடதத்தில் வெகு அழகாகச் சொல்லி இருக்கின்றார்கள். ஒரு ஆல் வித்தை எடுத்து உள்ளே பார்க்கச் சொன்னார் குரு. அதைத் திறந்து பார்த்த அவன் அதற்குள்ளே எதுவுமில்லை என்பதைத் தீர்க்கமாகச் சொன்னான்.

கிளைபரப்பித் தழைத்திருந்த பென்னம்பெரிய மரத்தை குரு நாதர் காட்டி, அந்த மரம் இதற்குள் இருந்துதான் வந்தது அது உனக்குத் தெரியவில்லையா என்று கேட்டார்.

பாலிலே உள்ள வெண்ணெயைப் பார்த்தவர்கள் யாரும் இருப்பார் களா? அதனால் பாலுக்குள்ளே வெண்ணெய் இருப்பதில்லை என்ற சொல்வது எத்தனை முட்டாள்தனம். அது போன்றே இல்லாததில் இருந்து உள்ளது உருவாவது அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதொன்று.

பூச்சியத்தில் இருந்து கொண்டு தனது இராச்சியத்தை ஆண்டு கொண்டிருக்கும் நாயகன் அனைவருக்குமே புதிராக இருக்கின்றானா? அவ்வாறாயின் புலன்களைக் கடந்துவிடும் பகுத்துணர்வு தனது அருகில் கடவுளை அவதானித்துக் கொண்டிருப்பது என்பது வெறும் பிரமையா?

பூச்சியத்தை எடுத்து நோக்கினால் தனிப்பட அதற்கு எந்தப் பெறுமதியும் கிடையாது. ஆனால், எந்தவொரு எண்ணையும் பெருமைப் படுத்த உதவும் ஒரு இயல்பு இருக்கின்றது. இதனால் ஒன்று பத்தாகின்றது. பத்து நூறாகவும் ஆயிரமாகவும் பெருகிக் கொண்டே வருகின்றது.

எந்தவொரு வலியுமின்றி எண்ணுக்குப் பின்னதாக பூச்சியங்களை அதிகரித்துக் கொண்டு வரும்போது, ஆயிரம், பத்தாயிரம், இலட்சம், பத்து இலட்சம் (மில்லியன்), நூறு இலட்சம் (கோடி), பில்லியன்..... இவ்வாறு மடங்குகளாகப் பெருகுவதற்குக் காரணம், தன்னளவில் எந்தப் பெறுமதியையுமே கொண்டிராத பூச்சியமே. ஆனாலும் பூச்சியம் முன்னாலே சென்று சாதித்துவிட முடியாது. எந்தவொரு எண்ணுக்கு முன்பாகவும் பூச்சியத்தை இடுவதால் பெறுமதியை அதிகரிக்க முடியாது. இது எண்கணிதத்தைக் கற்றுக் கொண்ட அனைவருக்குமே தெரிந்ததே.

எம் செயல்களுக்கெல்லாம் எம்மை சமாதானப் படுத்துவதற்கென அர்த்தங்களைக் கற்பிப்பதும், துன்பம் வரும் வேளையில் முற்றிலும் அறியாத முன்னைய பிறப்பின் தொடர்பு என்பதும் முட்டாள்தனமாக செயல்களாகவே முதிர்ந்த மனதிற்குப் படுகின்றதா?

முன்னால் வந்தால் பெறுமதி இல்லாமற் போய்விடும் என்று உணர்ந்து கொண்ட பூச்சியத்தின் நாயகனுக்கு, முன்னாலே வந்து நின்று தன்னுடைய பெருமையைக் குறைத்துக் கொள்ள வேண்டாம் என்பது படுகின்றதா?

அதனாற்தானா துன்பத்தில் துயருற்று பக்தன் அழைக்கும்போதும் பாராமுகமாக இருக்கின்றாரா?

தன்னைக் காணவிழையும் பக்தனின் இறை நம்பிக்கை பூச்சியத்திற்குள் இருப்பதாற் தெரியவில்லையா?

அல்லது தான் பின்னாலே நின்றுதான் மனிதர்களின் பெறுமதியை அதிகரிக்க முடியும் என்பதைத் திடமாக வலியுறுத்துகின்றாரா?

உண்மைதான். தன்னை முற்றும் சரணடைந்து விடாத மனித முயற்சியை ஊக்குவிக்கின்றார். அனைவற்றையும் மாயைக்குள் அடக்கிக் கொண்டு பூச்சியமாகக் காட்டிக் கொண்டு பெறுமதியைக் கூட்டிச் செல்கின்றார்.

நுண்மைக்குள் நுண்மையாயும் பருமைக்குள் பருமையாயும் இருப்பதால் இரு நிலைகளிலுமே அவர் தெரிவதில்லை. எங்கள் கண்களின் பார்வை வீச்சம் அவ்வளவே என்று நினைத்து அமைதிப்பட வேண்டியதுதானோ !

# 7. சதுரங்கமும் வரலாறும்

வாழ்க்கையில் சதுரங்கங்கள் பலவற்றில் நுழைய வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். தொழில் சதுரங்கம், உறவின் சதுரங்கம், அரசியல் சதுரங்கம் என வேறுபட்ட பல வலைகள் எமக்கு வெளிப்படையாகவே விரிக்கப்படுகின்றன.

அவற்றில் சிக்குண்டு அழிவைத் தேடுபவர்களாகப் பல பேர் இருந்தபோதும், ஒரு சிலர் அவற்றை வெட்டி விழுத்தி முன்னேறிச் செல்வதை நாம் பார்க்கின்றோம். அவர்களின் வெற்றியின் இரகசியம் என்ன என்பதை நோக்கும்போது, படித்த அறிவு, அதை விட அனுபவத்தினால் பெற்ற அறிவு, சந்தர்ப்பம் என பலவகையான விடயங்களும் சதுரங்கங்களில் வெல்ல எமக்கு உதவி அளிக்கின்றது. சதுரங்க விளையாட்டை சற்று உற்று நோக்க வைக்கிறது.

சதுரங்கம் என்பது மூளையைக் கசக்கி விளையாடக்கூடிய அற்புதமான விளையாட்டாகும். சதுரங்கா என்று ஆரம்பத்தில் அழைக்கப் பட்ட இந்த விளையாட்டு பாரதத்தின் வட பகுதியிலே குப்தர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இவ்விளையாட்டுக்கு சதுரங்கள் பெயரானது ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. இதனுடைய கருத்து நான்கு பிரிவுகள் என்பதாகும். அதாவது காலாட்படை, தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை என்பதாகும் இவை முறையே போன் (pawn), பிஷப் (bishop), நைட் (knight), றொக் (rock) என்று தற்காலத்தில் அழைக்கப்படுகின்றது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் 'அஷ்டபாதா' எனவும் சதுரங்கம் எனவும் இது அழைக்கப்பட்டது. அஷ்டபாதா என்ற வார்த்தைக்கு 'எட்டுக்கு எட்டு கட்டங்களைக் கொண்ட சதுரப் பலகை' என அர்த்தம் ஆகும். அஷ்டபாதா என்னும் வார்த்தைக்கான அர்த்தத்தை கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் தனது "மகா பாஷ்யா" எனும் புத்தகத்தில் வழங்கியுள்ளார்.

சதுரங்கத்தின் வரலாறு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளை விட பழமை வாய்ந்தது. அது வட இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டு, பேர்சியாவுக்கு பரப்பப்பட்டது. பேர்சியாவை அரேபியர்கள் கைப்பற்றிய பின்பாக அது இஸ்லாமியரிடையே பரவத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து மொரிஷியர் ஸ்பெயினைக் கைப்பற்றிய பின்பாக தெற்கு ஐரோப்பாவிற்குப் பரவியது.

பேர்சியனினதும் அரேபியனினதும் விளையாட்டு எனப்படுவது, ஆறாம் நூற்றாண்டில் பேர்சியாவில் சாத்திரம் என்ற பெயரால் வழங்கப்பட்டு அதன் விதிமுறைகள் உணர்த்தப்பட்டன. ஷா (shah) என்ற பெயருடன் விளையாட்டை ஆரம்பிப்பர் (அரசர் என்பதைக் குறிக்கும் சொல்லாகும்), எதிர் முனையிலுள்ள அரசரை அச்சுறுத்தும்போது ஷா மேட் (shah mate) என்ற சொல்லைப் பாவிப்பர். (அந்த அரசன் முடிந்து விட்டான் என்று பொருள்படும்), அந்த நிலையில் மாட்டப்பட்ட அரசனால் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ள முடியாது.

ஆனால் தற்காலச் சதுரங்கமானது, எட்டுக் கட்டங்களை நீளமாகவும் அகலமாகவும் கொண்டு அறுபத்தி நான்கு சதுர அமைப்புக்குள்ளாக அரைக்கு அரைவாசிக்கு வெற்றிடங்களைக் கொண்டு, சம பலத்துடன் விளையாட்டு ஆரம்பிக்கும். தமிழில் நாற்படைகள் எனக் குறிக்கப்படும் காலாட்படையைச் சேர்ந்த எட்டு வீரர்கள் முன்பாகவும், பின் வரிசையில் யானையிலிருந்து ஆரம்பித்து குதிரை, தேர், மந்திரி, அரசன், தேர், குதிரை, யானை என்ற வரிசையில் அமைக்கப்பட்டிருக்கும். படைகள் இரண்டும் ஒன்றையொன்று நோக்கியவாறு காணப்படும்.

காலாட்படை வீரர்கள், முன்னோக்கிச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர். அவர்கள் முதலாவது தடவையில் விரும்பினால் இரண்டு கட்டங்களைத் தாண்ட முடியும். ஏனைய சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு கட்டத்தையே தாண்டி வருவர். ஒருவர் பின் ஒருவாராக இரு பகுதியினரும் தமது நகர்வுகளை மேற்கொள்ளுவர்.

காலாட்படைகள் வெட்டும்போது சரிவாக அருகில் ஒரு கட்டத்தில் இருப்பவர்களையே வெட்ட முடியும். அதை விடவும் ஒரு பகுதியிலுள்ள

காலாள் எந்தவித பாதிப்பும் இன்றி அடுத்த பகுதியிலுள்ள இறுதி வரிசையை அடைந்துவிட்டால் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படும். அவர்களின் பின் வரிசையில் இருக்கும் பெரிய படைகள் எதனையும் எதையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பின்னால் இருக்கும் படைகள் முன்னோக்கியோ பின்னோக்கியோ எத்தனை தூரமும் சென்று வரக்கூடியவை. அதிலே இருபுறமும் இருக்கும் யானைகள் நேராக எவ்வளவு தூரமும் செல்லும், அதே போலவே வெட்டிக் கொள்ளும். தேர்ப்படையானது சரிவாக எத்தனை கட்டங்களும் தாண்டிச் செல்லும் அதே போலவே வெட்டிக் கொள்ளும்.

அரசரும் மந்திரியும் நேராகவும் சரிவாகவும் தாண்டிக் கொள்ளும், வெட்டிக் கொள்ளும். ஆனால் அரசரால் ஒரு கட்டம் மட்டுமே பாவித்துக் கொள்ள முடியும். இந்த விளையாட்டில் உள்ள மிகப் பெரிய சிறப்பு இதுவே. அரசரானவர், பல கட்டங்களைக் கடந்து செல்வாராயின் எந்தவொரு நிலையிலுமே அவரைக் கைப்பற்ற முடியாது.

குதிரைப்படைகள் இவர்கள் யாரினதும் நகர்வு போலே அமையாது "ட" வடிவப்பாதையில் செல்லும். இப்பாதையை சரியாகத் தீர்மானிக்க முடியாததால், எந்தவொரு படையையும் மேலாகத் தாண்டிச் செல்லும். அதே போல வெட்டும். ஆனால் சதுரங்கத்தில் ஏனையவற்றுக்கு அவ்வாறு தாண்டிச் செல்வதற்கு அனுமதி கிடையாது.

இவ்வாறு தொடங்கும் நகர்வுகள் எதிர்ப் பகுதியிலுள்ள அரசரை சிறை எடுப்பதிலும், தங்கள் பகுதியின் அரசரைக் காப்பாற்றுவதிலும் கருத்தை ஊன்றியதாக இருக்கும். ஒவ்வொருவரும் தங்களது படைகளைக் கொண்டு வியூகத்தை அமைத்துக் கொண்டிருப்பர். படைகளை முன்னோக்கி நகர்த்திச் சென்று தங்களது காரியத்தில் வெற்றிக்குச் சென்று கொண்டிருப்பர்.

ஒரு படைவீரரால் செய்யக் கூடிய நகர்வுகளை ஏனையவர்களால் செய்ய முடிவதில்லை. இதுவே இந்த விளையாட்டின் மிகச் சிறந்த

அம்சமாகும். எந்தவொரு படையை இழந்தாலுமே அதன் இழப்பை வேறொன்றால் ஈடு செய்து கொள்ள முடிவதில்லை.

ஆனால் முற்புறமாகச் செல்லும் காலாட் படையணிகள் அடுத்த அரசரின் இறுதி நிரையை அடைந்துவிட்டால் அவர்கள் ஏதாவதொரு புதிய படையைப் பெற்றுவிட முடியும். மகா பாரதத்திலே சத்திரியர்களாகக் காட்டிக் கொள்வதற்கு சத்திரியர் அல்லாதவர்களைப் பெற்றுக் கொண்டதைப் போன்ற ஒரு செயற்பாட்டை இது குறிக்கின்றது.

மன்னர்களின் புத்தகம் (The book of kings) என்ற நூலில் சதுரங்கம் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதை ஒன்று உள்ளது.

கி.பி ஆறாம் நூற்றாண்டில் ஒரு இந்திய அரசர் சவாலான ஒரு விளையாட்டைக் கண்டுபிடிப்பவருக்கு அவர்கள் விரும்பும் பரிசை அளிப்பதாக அறிவித்து இருந்தார்.

மன்னர் எதிர்பார்த்த விளையாட்டைக் கண்டுபிடித்ததாக சிசா இபின் தாகிர் என்பவர் கூறி அதன் விதி முறைகளைக் கூறினார். அதுவே 'சதுரங்கா விளையாட்டு'. இது சதுரங்க விளையாட்டின் முன்னோடியாகக் கருதப்படுகின்றது. ஆனால் தற்காலத்தின் சதுரங்கம் சற்று வித்தியாசமானது.

அரசரைக் காப்பதற்கு அணி வகுத்து நிற்கும் சிப்பாய் படைகளும் ராணுவத்தின் நால்வகைப் படைகளும் கொண்ட சதுரங்கா விளையாட்டின் விதிமுறைகள் மன்னரைக் கவர்ந்தன. போர்ச் சூழலும் தர்க்க சிந்தனையும், விரைவாக முடிவெடுக்கும் ஆற்றலும் கொண்ட அற்புதமான விளையாட்டாக சதுரங்கா அமைந்ததைக் கண்டார். மன்னர் மகிழ்வடைந்து இந்த விளையாட்டைக் கண்டுபிடித்ததற்காக பொன்னும் பொருளும் வழங்குவதாகச் சொன்னார். சிசா தனக்கு இவை எதுவும் வேண்டாம் தான் விரும்புவதைத் தந்தாற் போதும் என்று சொன்னார்.

அவரின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மன்னர் தயாரானார். சதுரங்கா விளையாட்டில் மொத்தம் அறுபத்து நான்கு சதுரங்கள் உள்ளன. இதில் முதற் சதுரத்தில் ஒரு கோதுமையும் இரண்டாம் சதுரத்தில் இரண்டு கோதுமையும் மூன்றாம் சதுரத்தில் நான்கு கோதுமையும் நான்காம் சதுரத்தில் எட்டு கோதுமையும் என்ற முறையில் ஒவ்வொரு சதுரத்திலும் அதற்கு முன் அமைந்த சதுரத்தில் இருந்த தானியங்களின் அளவைப் போல இரு மடங்கு தானியங்களை வைத்து இறுதிச் சதுரம் வரை நிரப்பி, அவ்வாறு வரும் மொத்த கோதுமைகளையும் தனக்கு வழங்க வேண்டும் என்று சொன்னார்.

இவ்வளவுதானே ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்ன மன்னர் அவர் கோரிக்கைக்கு ஏற்ப கோதுமையை வழங்குக என்று அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.

வெகுகாலம் ஆகியும் சிசா கேட்ட கொதுமைகளை அவர்களால் வழங்க முடியவில்லை. இதை அறிந்து மன்னர் மிகவும் வேதனைப் பட்டார். அருமையான விளையாட்டைக் கண்டுபிடித்து அவரை சந்தோசப் படுத்திய அந்த அறிஞருக்கு அவர் கேட்ட மிகவும் எளிமையான ஒரு சன்மானத்தை வழங்க முடியவில்லையே என்று வருந்தினான்.

அதிகாரிகளை அழைத்து அதற்குக் காரணம் கேட்டான். அதற்கு அதிகாரிகள் அவரின் கணக்கை சரியாகப் புரிந்து கொள்ளமல் ஒப்புக் கொண்டு விட்டோம். ஆனால் அவர் கேட்ட அளவை எம்மால் எப்போதுமே கொடுக்க முடியாது என்று அவர்கள் சொன்னார்கள்.

உடனே மன்னர் திடுக்கிட்டார். அறுபத்து நான்கு சதுரங்களில் அமையும் கொதுமையைக் கொடுக்க முடியாதா என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கவும் இந்த அதிகாரி மன்னருக்குப் பரியும்படியாக விளக்கமாகச் சொன்னார்.

சிசா கேட்ட தானியங்களின் அளவைக் கணக்கிட்டதில் ஒவ்வொரு சதுரத்திலும் மற்றயதன் இருமடங்கு இடம்பெற வேண்டும்.

ஆகவே முதற் கட்டத்தில் ஒன்று, இரண்டாம் கட்டத்தில் இரண்டு(2), மூன்றாம் கட்டத்தில் நான்கு (4) இவ்வாறாக 1 + 2 + 4 + 8 + 16 + 32 + 64 + 128 + ........................... + என்றவாறு அந்தத் தொடர் செல்கின்றது

இவ்வாறாகச் செல்லும் கணித வரிசை பெருக்கல் விருத்தி என்று அழைக்கப்படும். இத்தொடரின் முதல் அறுபத்து நான்கு உறுப்புகளின் கூட்டுத் தொகை என்பதைப் பார்க்கும்போது அது 9, 223, 372, 036, 854, 780, 000 என்ற தொகையைக் காட்டுகின்றது. இந்த அளவிலான தானியம் எமது பூமியை நிரப்பக் கூடியவை என்று சொன்னார்கள்.

அதை அறிந்த மன்னர் மலைத்து விட்டார். சிசாவை அழைத்துப் பாராட்டினார். இப்படியான ஒரு சிந்தனையை ஒரு தலை சிறந்த மேதையால் மட்டுமே வழங்க முடியும். உங்கள் அறிவிற்குப் பொன்னோ பொருளோ ஈடாகாது என்று மெச்சினார். தொடர்ந்து அவரைத் தன்னுடைய அரன்மனையில் ஆலோசகராக இருக்குமாறு வேண்டிக் கொண்டார்.

கணித அறிவால் உயர்ந்து நின்ற சிசா, மன்னரின் முதன்மை ஆலோசகராக விளங்கி நாடு நலம் பெற பேருதவி புரிந்தார்.

படையணியினர் அனைவரும் வித்தியாசமான நகர்வுகளையும் வெற்றிகளையும் கொண்டிருப்பதால் ஒவ்வொருவருடைய பங்களிப்பும் இச் சதுரங்கத்தில் மிக முக்கியமானது என்பதை ஏலவே குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அனைவரின் நோக்கமும் தங்களின் அரசரின் பாதுகாப்பாக இருந்தமையால், அவர்கள் தங்கள் உயிரைத் துறந்து அரசரைக் காப்பாற்ற முன் வருகின்றனர்.

பாரதப் போரிலும் அனைவருடைய நோக்கமும் அரசரைக் காப்பாற்றுவது மட்டுமாகவே இருந்திருக்கின்றது. போருக்கு வந்திருப்ப வர்கள் உறவினர்கள் என்பதையும் கருத்திற் கொள்ளாது, அவர்களின் வயது, குணம், உறவு முறை பற்றிய எதையுமே எண்ணிக் கொள்ளாது, பாண்டவர்களைக் காப்பாற்றுவது மட்டுமே மகா பாரதத்தில் பாண்டவர் பக்கத்தின் குறிக்கோளாக இருந்திருக்கிறது.

தர்மரை உயிருடன் சிறைப்பித்தாக வேண்டும் என்ற நிபந்தனை யினாலேயே அவரைத் தாக்கவிடாது அபிமன்யு முன்னாலே வருகின்றான். மாவீரனாகிய அவனை மிகுந்த சூழ்ச்சி செய்து பத்ம வியூகத்தை அமைத்து அதற்குள் இறங்கும்படி செய்கின்றார்கள். அபிமன்யுவைத் தொடர்ந்து சென்ற பீமனுக்கு முன்னால் சிவ பூசையில் வைத்து எடுத்த மாலையைப் போட்டு விடுகின்றனர்.

சிவ பக்தனாகிய பீமனால் அதைத் தாண்ட முடியவில்லை. எதிரிகளின் சூழ்ச்சி அவனுக்குப் புரிந்து விடுகின்றது. இருந்தும் அந்த மாலையைத் தாண்டாது அந்தப் புறத்தில் நின்று கொண்டு எதிரியைத் தாக்க முனைகின்றான். இருப்பினும் சூழ்ச்சியால் துரோணர், கர்ணன், துரியோதனன், சகுனி போன்ற நால்வரும் சூழ்ந்து கொண்டு அந்தச் சிறுவனை வதைத்து விடுகின்றனர்.

துரியோதனனின் அணியில் மட்டும் இது விதி விலக்கல்ல. குலப் பெரியார், குரு துரோணர் போன்று யாரையும் விடாமல் அனைவரையும் களத்திற்குக் கொண்டு வந்தனர். பாண்டவர்களின் அணியிலும், அவர்களின் இளவல்கள் யாரையும் எஞ்ச விடாது அவர்களைக் கொன்று அழித்தார்கள். வயோதிபர்கள், இளையவர்கள், குழந்தைகள் எனக் களம் புகுந்த அனைவரையும் முற்றாக அழித்து அரசரைக் காப்பாற்றவென படைகள் விரைந்தெழுந்தன.

ஒவ்வொரு வீரர்களையும் விழுத்துவதற்கு அவர்கள் அமைத்த வியூகம் சதுரங்க நகர்வுகளை ஒத்ததாகக் காணப்பட்டது. தமது எல்லைக்குள் இறங்கி அரசரை அணுகும்போது, அந்தப் படையை விரட்டியடிக்க உடனடியாக சுதேச படைகள் எடுத்துக் கொள்ளும் நகர்வுகள் அற்புதமாக இருக்கும். அரசரைச் சுற்றிலும் மற்றய புறத்தை நோக்கியபடி இருக்கும் படை அணிகள் 'செக்' அதாவது 'அரசருக்கு அவதானம்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் அரசரின் அருகில் சென்று போராடுவார்கள்.

சதுரங்கக் காய்களுக்குள்ளே அரசருக்கு அடுத்த படியாக முக்கியமாகக் காணப்படும் மந்திரியையும் ஆரம்பத்தில் இருந்தே குறிபார்க்க ஆரம்பித்து

விடுவார்கள். மந்திரி நேராகவும் சரிவாகவும் எத்தனை கட்டங்களையும் கடந்து செல்ல வல்லவர் என்பதால், மந்திரியை முடிப்பது அனைவரின் எண்ணமாக அமையும். சில விளையாட்டுக்களில் மந்திரிக்கு அவதானம் என்று சொல்வதும் உண்டு.

மகாபாரதத்தில் பாண்டவர்கள் மட்டுமன்றி வீரத்திற்கு எடுத்துக் காட்டாகப் பலர் காணப்பட்டனர். அவர்களை விழுத்துவதற்கு பல்வேறு வியூகங்களையும் உத்திகளையும் இரு பகுதியினரும் பாவித்து இருந்தார்கள்.

பாண்டவர்களுக்கு வெற்றியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக கர்ணனைப் பலவகையிலும் ஒடுக்க முயற்சி செய்திருக்கிறார்கள். தேவேந்திரன் சென்று கர்ணனிடம் கவச குண்டலத்தைப் பெற்றமையை இங்கு குறிப்பிடலாம். அவற்றைப் பெற்றதன் பின்னாகக் கடோற்கஜனை அழிக்கக்கூடிய வேற்படை ஒன்றையும் கொடுத்து இந்திரன் மறைந்தான். அவர் எதற்காக கடோற்கஜனை அழிக்க வேண்டும் என்று யோசிக்கலாம்? கடோற்கஜனிடம் இருக்கும் மாய வித்தையும் மறவன்மையும் பாரதப் போரை பதினெட்டு நாட்களுக்கு முன்னதாக முடித்துவிடுமோ என்ற எண்ணத்தினாலேயே பகவானின் ஆணைப்படி அவ்வாறு செய்திருக்கலாம் என்பது தெளிவாகின்றது.

போரிலே ஒரே நேரத்தில் பல மாவீரர்களின் வருகையைத் தடுப்பதற்காக, கர்ணனை முதல் பத்து நாட்களில் யுத்தத்தில் பங்கு பெறாது விடச் செய்திருக்கின்றார்கள். துரோணரின் மகனாகிய மாவீரன் அசுவத்தாமனிடம் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தச் செய்திருக் கிறார்கள். விதுரரின் வில்லை அவராகவே முறிக்க வைத்துப் போருக்குச் செல்ல விடாமல் செய்தார்கள்.

இவ்வாறான மற்றைய வீரர்களை அழிக்கும் முயற்சியில் சதுரங்க நகர்வுகள் ஆரம்பத்திலே முன்னெடுக்கப்பட்டன. அவை படிப்படியாக அரசரை நம்பிக்கை இழக்கச் செய்வதற்கு கைகொடுத்தன.

பாரதத்திலும் சதுரங்கத்திலும் மட்டுமல்ல வாழ்க்கையிலும் பல நகர்வுகள் அமைதியாகவே வைக்கப்படுகின்றன.

## 8. கதைக்கு ஆசிரியர் வரவு

வாழ்ந்தவர்களின் வாழ்க்கையானது வாழ்பவர்களுக்குப் பாடம் என்பது யதார்த்தம். வாழ்க்கையின் ஒழுங்கு பற்றியும் நன்மை, தீமை பற்றியும் உண்ண வேண்டிய உணவு பற்றியும் உண்ணத் தகாத உண்டி பற்றியும், கொண்டாடிக் கொண்டு கூட வேண்டியவர்கள் பற்றியும், கூடத்திற்குள்ளே எடுக்க முடியாதவர்கள் பற்றியும், அறம் பற்றியும் மறம் பற்றியும் அண்டம், அகிலம் பற்றியும் அனைத்தையும் நம்மை அறிந்துணர வைப்பவர்கள் ஏற்கெனவே வாழ்ந்து மறைந்தவர்களே.

உலகம் தோன்றி வளர்ந்த காலத்துடன் ஒப்பிடுகையில் மனிதனின் வாழ்க்கைக் காலம் மிகவும் குறுகியதே. இந்தக் குறுகிய காலத்திற்குள் வாழ்ந்து முடித்தவர்கள் தம்முடைய காலத்தில் வாழ்ந்த உதாரண புருஷர்கள் பற்றியும், அவர்களுக்கு முன்னதாக ஒரு மூன்று அல்லது நான்கு தலைமுறையினரைப் பற்றியும் அறிந்து வைத்திருப்பர். தன்னுடைய முன்னோர்களைப் பற்றி அறியும் ஆவல் எந்த மனிதனிடமும் இல்லாமற் போவதில்லை.

அந்த வகையிலான எண்ணம் கொண்ட ஒரு முனிவரின் எண்ணம் வாழ்வியலை ஆராய்வதற்கும் ஒழுங்கமைத்து வழங்குவதற்கும் முற்பட்டது. வசிட்டரின் மைந்தனாகிய சத்தியின் மைந்தன் பராசரருக்கு ஒரு விருப்பம் உதித்தது. பராசரர் உலகத்திற்கு நன்மை உண்டாக்கும் வகையில் புத்திரன் ஒருவனைப் பெறவேண்டும் என்று திருவுளம் கொண்டார்.

அவர் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரம் உச்சமாகும் காலத்தில் ஒரு ஸ்திரீயைக் கூடவேண்டும் என்று யோசித்து, அந்தக் காலம் வரும் வரையிலும் தவத்தில் இருந்தார். அந்தக் காலம் சமீபித்ததும் தன்னுடைய தவநிலை விட்டெழுந்து நகரங்களுக்குச் செல்வதற்கென அதி வேகமாய் வந்தார்.

குறுக்கே யமுனை ஆறு அவருடைய பயணத்தை நிறுத்தியது. அதுவும் தொடர் மழையின் காரணமாக பெருக்கெடுத்து இருந்தது. மறுகரைக்குப் போவதற்கு மார்க்கம் புரியவில்லை. அந்த ஆற்றங் கரையில் படகோட்டிக் கொண்டிருந்த மச்சகந்தி என்ற பெண்ணின் அருகில் வந்தார். அவளிடம் தான் அவசரமாக நகரத்திற்குள் செல்ல வேண்டி இருப்பதால் படகை செலுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஒருவருடன் படகினைச் செலுத்துவதற்கு அவள் இசையவில்லை. ஆறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருப்பதால், அவரை மட்டும் ஏற்றிக் கொண்டு செல்லும்போது படகு கவிழ்ந்துவிடும் என்பதை மரியாதையாகக் கூறினாள்.

அதற்குப் பராசரர் படகுக்குத் தகுந்த பாரத்தைத் தன்னால் கொடுக்க முடியும் என்று சொல்லவும், அவர் யாரோ மகானாக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்த அவள், அவர் சொல்லியபடியே படகைச் செலுத்திக் கொண்டு போனாள்.

ஐயர் வரும் வரையிலும் அமாவாசை காத்திருக்குமா? அவர் படகில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் அவர் நாடிய நட்சத்திரம் உச்சத்தில் வருகின்ற தருணமானது. தாம் நினைத்து வந்த காரியத்தை நிறைவேற்று முகமாக ஒரு ஸ்திரீயைத் தேடிக் கொள்ள வேண்டிய அவசரத்தை உணர்ந்தார். அவ்வேளையில் படகினைச் செலுத்திக் கொண்டு வந்த மச்சகந்தி மட்டுமே இருப்பதை அவர் உணர்ந்து கொண்டார். அவருக்கு வேறு வழி தெரியவில்லை.

இதனால் தன்னுடைய கோரிக்கையைக் கூறி, அந்தப் பெண்ணாக அவளை மனங் கொள்ள வேண்டுமெனக் கேட்டு நின்றார். முனிவரின் மீது அளவு கடந்த மரியாதை வைத்திருந்த அப்பெண்ணும் தயங்கியபடியே அதற்கு இசைந்தாள்.

அவள் கேட்டுக் கொண்டதன்படி அவளின் மேனியில் வீசிய மச்ச கந்தத்தைப் போக்கி பரிமள கந்தம் வீசும்படி செய்தார். அப்பொழுது தான் பருவமடையாத பெண் என்பதையும் தெரிவித்தாள்.

அவளைப் பருவமடையச் செய்து, ஆற்றின் மத்தியிலே திட்டுத் தோன்றும்படி செய்து திருநீற்றில் கொஞ்சம் எடுத்து ஆகாயத்தில் ஊதினார். உடனே ஆயிரம் கதிர்களோடு பிரகாசிக்கின்ற சூரியனை மறைக்குமாறு மூடுபனி சூழ்ந்தது. மச்சகந்தியிடம் மூன்றே முக்கால் நாழிகைக்குள் வேதவியாசர் உதயமானார்.

இவர் உதயமானபோதே மான் தோல், புலித்தோல், காவிகாம்பர ஜடாடவிதாரராய், வேதத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு உதயமானார். மச்சகந்தி அவரைப் பார்த்து வியப்பை அடைந்தாள். அவர் தமது தாயை வணங்கி, "ஓ அம்மணி என் தந்தை எங்கே" என்று கேட்டார். அவள் அவர் சென்ற திசையைக் காட்டினார்.

"அம்மா நீ நினைக்கும்போது வருகிறேன்" என்று சொல்லி தந்தையிடம் சென்று அவரும் தவம் செய்யலானார். வியாசரின் பிறப்பு நிகழ்ந்தேறியதும் மறுபடியும் மச்சகந்தி கன்னிகையாகி பரமளகந்தி என்ற பெயருடன் வாழ்ந்தாள். பராசரரால் அருளப்பட்ட பரிமளகந்தம் அவளின் உடலில் இருந்து எப்போதும் வீசுவதாக இருந்தது. தனக்குக் கிடைத்த பேறை எண்ணி மகிழ்ந்த பரிமளகந்தி தனது இருப்பிடம் திரும்பினாள்.

அப்போது சில காலமாய் உலகத்தில் காலகதியால் வேதங்கள் ஒன்றோடொன்று கலந்து கருத்துக்கள் வேறாய்ப் பலவிதமாக மாறுபட்டிருந்தன. அந்த வேதத்தை அவ் வேதவியாசர் சிக்கறுத்து, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து, பதினெண் புராணங்களையும் வெளிப்படுத்திய பின்பு யாவருக்கும் புண்ணிய லோகத்தை அளிக்கும் இந்த மகா பாரதத்தை நான்கு வேதங்களோடு ஐந்தாம் வேதமென யாவரும் ஏற்றுக் கொள்ள, கணபதி தனது கொம்பை ஏடும் எழுத்தாணியாகவும் மஹா மேருவை ஏடாகவும் கொண்டு எழுதி முடித்தார்.

பராசரர் ஒரு குமாரரைப் பெறுவதற்கு ஒரு செம்படவரின் மகளாகிய மச்சகந்தி எனப்படும் ஒரு சிறுமியை எதற்காக அணுக வேண்டும் என்ற எண்ணம் அனைவரின் மனதிலும் உதிப்பது நியாயமானதே. தேவர்கள், மூவர்கள், உலகை உய்விக்க வந்தவர்களை வானத்தில் இருந்து குதிக்க வைத்திருக்கலாமே என்று நினைப்பதும் சாத்தியமே.

இங்கு முக்கியமான ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். எந்தவொரு முனிவனோ தேவனோ அன்றி இறைவனோ இந்தப் பூவுலகிற்கு வரவேண்டுமாயின் இதுதான் ஒரேயொரு நுழைவாயில். ஆண் பெண் உறவின் மூலமாகத்தான் வரவேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு தேவனைத் தானும் பூவுலகிற்கு அனுப்ப வேண்டுமாயின் ஆண் பெண் என்ற இருபாலரின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதற்காக, மானுடப் பிறவி என்பதை ஆண்-பெண் உறவுக்குள் வைத்து அமைத்திருக்கின்றான் இறைவன். இதனால் எந்தவொரு செயலைச் செய்தவரும் அன்னை தந்தை இல்லாமற் பிறந்திருப்பதாக சரித்திரம் எழுதப்படவில்லை.

இவ்வாறாகப் பிறவியில் கொடுத்திருக்கும் இடமே ஆண்-பெண் சமத்துவத்தை இயம்பி நிற்கின்றது. ஒரு இனத்தில் தக்கவைப்பில் நிலைக்கும் தன்மையில் ஆண்- பெண் இருவரின் ஒத்துழைப்பைத் தாராளமாக ஏற்று நிற்கின்றது.

இனம் என்பது என்ன? தம்முடன் ஒன்று சேரும்போது வளமான எச்சங்களை உருவாக்கக்கூடிய தனியன்களின் கூட்டமே இனம் என்று சொல்லப்படுகின்றது. வளமான எச்சங்கள் எனப்படும்போது மேலும் சந்ததியைப் பெருக்கக்கூடிய எச்சங்கள் என்பது பொருள். இது விஞ்ஞானம்

உதாரணமாக குதிரையும் கழுதையும் சேர்வதால் கோவேறு கழுதை எனப்படும் ஒரு இனம் உருவாக்கப்படும். இந்தக் கோவேறு

கழுதைகள் சந்ததிகளை உருவாக்குவதில்லை. இதனால் குதிரையும் கழுதையும் ஒரே இனத்துக்குள் அடக்கப்படுவதில்லை.

ஆனால் மனிதர்களின் நிலைமை அவ்வாறானதல்ல. அவர்களிடம் விஞ்ஞான அடிப்படையில் இனம் என்ற பாகுபாட்டை எடுத்தியம்ப முடிவதில்லை. ஆனாலும் வேறு விடயங்களைத் தாங்களாகவே உருவாக்கித் தம் நிலையை எவ்வாறெல்லாமோ மாற்றிக் கொள்கின்றார்கள்.

இவற்றை எல்லாம் உடைத்து எறியும் நோக்கத்துடன் அன்றைய முனிவர்கள் இயங்கி இருக்கிறார்கள் என்றும் எண்ணத் தோன்றுகின்றது. நதி மூலம் ரிஷி மூலம் என்பது தேடப்பட முடியாது. உலகிற்கு நல்லவர்களை வழங்குவதற்காக, தாங்கள் எதிர்பார்க்கும் தருணம் வரும்போது எந்தவிதமான சுகங்களையும் கருத்திற் கொள்ளாது மானுடர்களைப் பெறுவித்தார்கள் முனிவர்கள். அவர்களின் நோக்கம் பழுதுபடாமையால் செயல்கள் அனைத்தும் நன்மையை விதைத்தன.

இவ்வாறான விடயங்கள் சாதாரண மக்கள் பின்பற்றுவதற்குப் பொருத்தமானவை அல்ல. இவை புறநடைகள். அதுவும் முற்றிலும் துறந்தவர்களால், கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்களால், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கிடும் பண்பாளர்களால் செய்யக் கூடியவை மட்டுமே. காமத்திற்காகவும், அடிமைப்படுத்தும் நோக்குடனும் இவ்வாறாக ஈடுபடுபவர்கள் கடும் தண்டனைக்கும் அப வாதத்திற்கும் உள்ளாக்கப் படுவார்கள்.

பருவம் அடைந்திராத பெண்ணை, பதினெட்டு வயதிற்கு உட்பட்ட பெண்ணைக் கூடுதல் பாபம் என்பதை உணர்த்தும் வகையில் இக்காலத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன. இவ்வாறு நடைபெறும் சந்தர்ப்பங்களில் பெண்ணின் சம்மதம் இருக்கின்றதா இல்லையா என்பதை சட்டம் கணக்கில் எடுப்பதில்லை.

ஒரு குறிப்பிட்ட வயதிற்கு முன்பாக பெண்ணுக்குத் தன்னுடைய

வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் உரிமையும் அறிவும் இல்லை என்பதை அரசாங்கம் கருதுகின்றது. இதனால் பெண்ணின் சம்மதம் பெறப்படுகின்றது என்ற விடயத்தை சாதகமாக எடுத்துக் கொள்ளுவதில்லை.

மேலும் திருமணத்திற்கேற்ற பொருளாதார நிலை மனப்பக்குவம் என்பதை கருத்திற் கொள்ளும்போது, திருமணத்தைத் தீர்மானிப்பதற்கென ஒரு வயதெல்லையைச் சொல்லுகின்றது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே இவ்வாறான சட்டங்கள் இக்காலத்தில் உருவாக்கப்பட்டன.

பருவம் அடையாதவர்கள் புதிய சந்ததியை உருவாக்கினால் அவர்களால் பராமரிக்க முடியாது என்பதற்காகவே அவ்வாறு திருமணத் திற்கான வயது நிர்ணயிக்கப்பட்டது. தானும் சொந்தக்காலில் நின்றிராத ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையைப் பராமரிக்குமா என்று அரசாங்கம் யோசிக்கிறது.

ஆனால் இவ்வாறான நிலைமை எல்லா நாடுகளிலும் கிடையாது. உழைப்பதற்குரிய வயதெல்லையைக் குறைத்துக் கொடுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் திருமண வயதெல்லையும் குறைவாகவே காணப்படுகின்றது. மக்களுக்கு வேண்டிய அனைத்து வளங்களையும் வழங்கும்போது பிள்ளைகளின் பராமரிப்புச் செலவின் ஒரு பகுதியை அரசாங்கம் முற்று முழுதாக பொறுப்பேற்று விடுகின்றது. எந்த அரசிற்கும் இருக்கும் மனிதாபிமானமே இதற்குக் காரணம்.

ஆனால் வியாசருடைய நிலை அவ்வாறானது அல்ல. பிறந்தவுடனுமே தந்தையைப் பின்தொடர்ந்து தவம் செய்வதற்காகச் சென்ற அவருக்குத் தாயாரினால் தனியான பராமரிப்பு எதுவும் வேண்டி இருக்கவில்லை. இதனால், வியாசரின் உதயத்தில் செய்ய வேண்டியதை அவர்கள் சரியாகவே செய்திருக்கிறார்கள் என்பது பொருந்தும். வேறொரு துர் நோக்கமும் இன்றி ஐந்தாம் வேதத்தைப் படைக்கப் போகின்றவருக்கு உருவம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் இருவரிடத்தும் இருந்தது.

மக்களின் எண்ணிக்கை அதிகமாகவும் குற்றச் செயல்கள் அதிகரித்தும் இருக்கும் இக்கால கட்டத்தில், கடுமையான சட்டங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. இற்றைக்கு சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னாலும், பால்ய விவாகம் என்பது இருந்திருக்கின்றது. தற்காலத்திலும் பெற்றோரின் அனுமதியுடன் வயது குறைந்தவர்கள் வாழ்க்கையில் சகல வசதிகளுடனும் இணைந்து கொண்டார்கள்.

பெற்றோரின் அனுமதி இல்லாமலும் பெண்ணின் விருப்பம் இன்றியும், மற்றும் பலர் சேர்ந்து கடத்திக் கொண்டு சென்று சீரழிப்பதும் பரவலாகிவிட்ட இந்த நாட்களிலே சிறுவர் பாதுகாப்புச் சட்டங்கள் பலமாக்கப்பட வேண்டும். எந்தவித பாவத்தையும் செய்யாமல் அனைத்து உறவினர்கள் இருக்கும்போதும் அநாதை என்ற பெயரைச் சுமந்து கொண்டு அழிந்தொழியும் இளைய சமுதாயம் முன்னேற்றம் பெற வேண்டும்.

ஆனால் அந்தக் காலத்தில் மக்களுடைய நடமாட்டமும் தேவைகளும் அவ்வாறானதாக இருக்கவில்லை. மக்களின் தொகை என்பது தாவரங்களினதும் விலங்குகளினதும் தொகைகளுடன் ஒப்பிடுகையில் மிக மிகக் குறைவாக இருந்த காரணத்தால், வம்ச விருத்தி என்பது முக்கியமானதாகக் காணப்பட்டது.

முக்கியமாக சத்திரிய குலத்தில் பிறந்தவர்கள் தங்கள் இருப்புக்களைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்காக பலவாறான உத்திகளையும் இவ்விடயத்தில் பாவித்திருக்கின்றார்கள். மற்றவர்களின் கண்களைக் கட்டிவிட்டுத் தங்கள் குறைகளை ஒளிப்பதாகக் காட்டிக் கொண்டு ஒன்றுக்கு மேலாக பல கெடுதல்களையும் விதி மீறல்களையும் செய்துள்ளனர். அவ்வாறு பண்பாட்டுப் பிறழ்வுகளை செய்த அவர்கள் எதனைத்தான் சாதித்தார்கள்?

இக்காலத்தில் சத்திரிய வர்க்கம் ஓரளவிற்கு முடிவுக்கு வந்துவிட்டது. பிறப்பால் கிடைக்கும் அரசையும் வளங்களையும் ஒருவன் அனுபவிக்கும்

காலம் மாறி, இன்று மக்கள் தம்முடைய விருப்பப்படி தம்மை ஆள வேண்டிவர்களைத் தெரிவு செய்யும் காலம் மலர்ந்து விட்டது. விதியாக கிடைக்கும் வாழ்க்கை என்பது மாறி, வாக்குக்களைப் பெறுவதற்காக வேனும் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு ஆள்பவர்கள் தள்ளப்படுகின்றனர்.

வேதங்களைத் தொகுத்து வைத்தபோதே விதிகளையும் நிர்ணயித்து விட்டார்கள் என்பது அறிவிக்கப்பட்டும் இருந்தது. இருப்பினும் வேதங்களைத் தொடர்ந்து பின்பற்றினார்களா என்ற கேள்வி எழுந்தபோது பலவிதமான நிகழ்வுகளும் கண்முன்னால் வந்து நிற்கின்றது.

அக்காலத்தில் அயக்கிரீவன் என்னும் அசுரனால் வேதங்கள் சூறையாடப்பட்டு, தன் வசத்திற் கொண்டு சென்றபோது, அதன் விளைவாகப் பூமியே அழிவைச் சந்தித்தது. பரமாத்மா மச்ச அவதாரம் எடுத்து வந்து சப்த ரிஷிகளைக் காத்து அவர்களை பாதிப்பில்லாத இடத்திற்கு அழைத்துச் சென்றாதாக புராணங்கள் சொல்லுகின்றன.

அந்த இடத்தில் இருந்து கொண்டு சப்த ரிஷிகள் உலகத்தைப் படைத்தாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறே உயிரினங்கள் படைக்கப்பட்ட போது சில உயிரினங்கள் கருதப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

ஏற்கெனவே இருந்து இன்று அருகிவிட்ட உயிரினங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. உதாரணமாக நளவெண்பாவில் நளமகாராச னுக்கும் தமயந்திக்கும் தூதாகப் பாவிக்கப்பட்ட அன்னம் எனப்படும் பட்சி இன்று எங்குமே காணப்படுவதில்லை. சில வகையான சிங்க இனங்கள் இந்நாளில் எந்த வனத்திலும் காணப்படவில்லை. இதேபோல டேனோசர் எனப்படும் உயிரினமும் அழிக்கப்பட்டு விட்டது.

இவ்வாறு அருகிவிட்ட பலவற்றை படைப்பின்போது கைவிட்டதாக எண்ணிக் கொள்ளலாம். ஆகவே சப்த ரிஷிகளால் மறுபடி உலகம் படைக்கப்பட்டபோது பலவற்றுக்கு உயிர் கொடுக்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

இன்றைய உலகின் வேகமாக பயணமும், மனிதர்களிடையே உள்ள பகுத்தறிவு வளர்ச்சியும், அவர்களின் வேகத்தை மேலும் அதிகரித்து பண்பாட்டையும் வேதத்தையும் பிறழ்வுறச் செய்யலாம். ஆனால் அவற்றைக் கொண்டு மரணத்தை வென்றுவிட முடியாது. உலகின் அழிவை நிறுத்திவிட முடியாது. தற்காலிகமான எதனையும் நிரந்தரம் ஆக்கிவிட முடியாது.

அண்டத்தில் அந்தரத்தில் அனைத்துச் சுமைகளுடன் சுற்றிக் கொண்டிருக்கும் இந்தப் பூமியில் மானுடர்களின் வாழ்க்கையை விளிம்பு நிலையிலே வைத்திருக்கும் இந்த நிபந்தனையை எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் மாற்றிவிட முடியாது. எந்தத் தொழில்நுட்பத்தாலும் வென்றுவிட முடியாது.

உலகம் உள்ளவரைக்கும் நிலைத்திருக்கும் புகழ் கடமையால் எழுகின்றது. எதற்கும் கலங்கிடாத மனம் வாழ்க்கையால் உணர்த்தப்படுகின்றது. எமக்கென என்ன தேவை இந்த இடத்தில்? எம்மாலே செய்யக்கூடியது என்ன இந்தப் பூமியில்?

# 9. அரங்கை அமைத்தனர் ஆடுவதற்கு

என்னதான் வாழ்க்கையின் விசித்திரமான நாடகங்களைப் பார்வையிட்ட பின்னாலும் நாடகம் அமைப்பதற்கும் நடிப்பதற்கும் அதனைப் பார்ப்பதற்கும் மானுட குலத்திற்கு என்றுமே ஆர்வம் உண்டு. தன்னுடன் இல்லாதவற்றை இந்தப் பிறவியில் அடைய முடியாதவற்றை அடைந்ததாகக் காட்டும் மானுடனின் தேடலே அது என்று சொன்னாலும் மிகையில்லை.

அக்காலத்தின் நீதி நூல்களையும் மருத்துவக் குறிப்புக்களையும் போல் அல்லாது காவியங்கள், இதிகாசங்கள் நிலைத்திருக்கக் காரணம் அவை நாடகம் எனப்படும் கட்டமைப்புக்குள் இருப்பதனாலே. கதைகளாக ஒவ்வொன்றையும் அறிவுறுத்தும்போது அது மக்கள் மனதிற் பதிந்து விடுகின்றது. என்றும் மறந்துவிட முடியாததாக இருக்கின்றது.

நாடகம் நடிப்பவர் மட்டுமல்ல அதனைப் பார்ப்பவர்களும் திருப்தியை அடைகின்றார்கள் என்பது உண்மையே. ஒரு ஏழை, நன்றாகச் செலவழித்துச் சாப்பிட வசதியில்லாதவன், பணக்காரன் ஒருவனின் கதையை நாடகத்திற் பார்க்கும்போது, தான் அவனாகக் கற்பனை செய்து கொள்கின்றான். அது மட்டுமல்ல அவனுக்கு களத்திற் கொடுக்கப்படும் அனைத்தையும் தனக்குக் கிடைத்ததாக எண்ணி சிறிது நேரம் மகிழ்ச்சி அடைகின்றான்.

அரங்கில் மிளிர வேண்டும் என்பதற்காகவே கடும் அமைப்புடன் கதாநாயகன், கதா நாயகி போன்ற பாத்திரங்கள் அமைக்கப்பட்டன. அவை கண்ணுக்கும் மனதுக்கும் குளிர்ச்சியைத் தரும் வகையில் கண்களைக் கவர்ந்திழுக்கும் அழகு கொண்டவர்களால் தோற்றம் பெற்றது.

இவற்றிலே ஒப்பனை முதலிடம் பெற்றது என்பதை யாரும் மறந்துவிடல் ஆகாது. ஓரளவு அழகானவர்களையும் மிகுந்த அழகாகக் காட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒப்பனையை வடிவமைத்தார்கள்.

ஆள் பாதி ஆடை பாதி என்பது போல நாடகத்திற்கு நடிப்புப் பாதி அரங்கு பாதியாக அமைகின்றது என்பார்கள். மகா பாரதத்தில் அனைத்து விதமான மக்களுக்கும் உரிய அரங்க அமைப்பின் சிறப்பே அந்தக் காவியத்தைத் தூக்கி நிறுத்தியது என்பதைச் சொல்லலாம். ஸ்ரீமத் நாராயணன் பூமியில் வந்து உதிப்பதற்குத் தயார் படுத்தப்படும்போது, அவர் தோன்றுவதற்கு முன்பாகவே, அரங்க அமைப்பு சாவகாசமாக இடம்பெற்றது என்பதை மகாபாரதம் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வுலகில் அவதாரம் உருவாக வேண்டிய தோற்றுவாயும் அரங்க அமைப்பும் அவர்களுக்கு வேண்டிய துணை நடிகர்களும் முற்கூட்டியே ஆயத்தப் படுத்தப் படுகின்றனர் என்பதை நான் ஒரு உதாரணம் மூலமாகச் சொல்லிக் கொள்ள முடியும்.

ஒரு அரசன் தன்னுடைய அறியாமையால் ஒரு உயிரைப் பலி வாங்கிவிட்டான். அதனால் அவனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அவனை நின்றாலும் இருந்தாலும் விடாது துரத்திக் கொண்டு சென்றது. அதனால் விரக்தியுற்ற அவ்வரசன், அந்தத் தோஷம் நீங்கப் பெறுவதற்கு ஒரு மகானைத் தேடி வந்தான்.

அந்த நேரத்தில் அவர் அங்கு இருக்கவில்லை. அவருடைய மகனிடம் விடயத்தைக் கூறவும், அவனோ அங்கு அருகில் இருந்த ஒரு தடாகத்தில் நீராடி, உள்ளம் உருக முருகனின் நாமத்தை மூன்று தடவைகள் உச்சரிக்க வேண்டும் என்று சொன்னான்.

அவ்வாறே செய்த அவ்வரசன் பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்று அப் புத்திரனை வணங்கி விடைபெற்றுச் சென்றான். அதற்குப் பிறகு அவ்வழியாலே வந்த மகான், அங்கு யாரோ வந்துவிட்டுப் போயிருப்பதை உணர்ந்து கொண்டார். மகனிடம் அதுபற்றி வினாவினார்.

மகன் நடந்ததைச் சொல்லவும் அவருக்குக் கோபம் எழுந்தது. அவரின் கோபத்தின் காரணத்தை அறிந்திட முடியாமல் மகன்

மலைத்துவிட்டான். அஞ்சி நடுநடுங்கி தான் செய்த தவறென்ன என்று தாழ்மையுடன் கேட்டு நின்றான்.

"முருகனின் பெயரை ஒரு தடவை சொன்னால் ஆயிரம் பிரம்மஹத்தி தோஷங்கள் நீங்குமே. நீ எதற்காக மும்முறை சொல்லச் சொன்னாய். முருக நாமத்தின் பெருமை அறியாத நீ வேடனாகப் பிறக்கக் கடவது" என்று அவர் சாபமிட்டார்.

தன்னை மன்னித்துவிடும்படி அந்தச் சிறுவன் மன்றாடிக் கேட்டான். சிறுவனுக்கு மனமிரங்கி அவன் கங்கைக் கரையில் முருகனின் நாமங்களுள் ஒன்றாகிய குகன் என்ற பெயருடன் பிறப்பான் என்றும், இனி அவதாரம் எடுக்க இருக்கும், இராமருக்குத் துணையாக இருப்பான் என்றும் சொல்லி அவனுக்கு ஆசீர்வதித்தார்.

அதன்படி குகன் வேடனாகப் பிறக்கின்றான். இராமர் சீதையுடனும் இலக்குவனுடனும் வனவாசம் செய்வதற்கு வரும்போது இவர்களுக்கு உதவி புரிகின்றான். அவனைத் தன்னுடைய நான்காவது தம்பியாக இராமர் ஏற்றுக் கொள்கின்றார்.

குகனை சகோதரனாக்கிக் கொண்டதால் ஐவரானோம், பின்னால் சுக்கிரீவனைத் தம்பியாக்கி அறுவரானோம், அதற்குப் பிறகு விபீஷணனுடன் எழுவரானோம் என்று சொல்லி அவர் பாடிய ஒரு பாட்டில் இருந்து புலனாகின்றது.

கதாநாயகர் வந்து தோற்றம் பெறும் முன்பாகவே துணை நடிகர்கள் உதித்து, தங்கள் பங்கை முடித்து விட்டுக் காத்திருக்கின்றனர் என்பது இதனாற் புலனாகின்றது. இவ்வாறே நாராயணர் தன்னுடைய அவதாரத்தைத் தோற்றுவிக்கும் முன்பாகவே மகா பாரதத்திலும் வீரர்கள் உருவாகி தம்முடைய முடிவுக்காகக் காத்திருந்தனர். அது எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை நோக்குவோம்.

திரேதா யுகத்தில் சூரிய வம்ச திலகனாகிய கார்த்தவீரியார்ச்சுனன் சமதக்கினியினது தலையைத் துணித்ததால் அவரின் மகனாகிய பரசுராமர்

கோபம் கொண்டு ரகு வம்சத்தினரை அழித்தொழித்தார். பின்னர் காசிப முனிவருடைய வேண்டுகோளை ஏற்று, உலகை பரிபாலனம் செய்யும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்.

காசிபர் உலகம் முழுவதையும் கைப்பற்றி மனுநீதி தவறாது அரசோச்சும் காலத்தில் சூரிய வம்சத்து ராஜஸ்திரீகள் எல்லாரும் ஒன்று கூடி, "கணவர் இல்லாமல் நாம் வாழ்வதிற் பயனில்லை. நமக்குக் கணவருமில்லை. புத்திரர்களும் இல்லை. அதனால் நாம் அக்கினியில் விழுந்து கதியடைவோம்" என்று ஆலோசித்து யாவரும் அக்கினிப் பிரவேசம் செய்ய எத்தனித்தார்கள்.

தாங்கள் குலமே அழியப் போவதாக அவர்கள் நினைத்தனர். ஆண் சமுதாயமற்ற அந்தச் சமுதாயத்தில் உயிரை வைத்திருக்க அவர்கள் விரும்பவில்லை.

அது அறிந்த காசிப முனிவர், "ஓ! மோசம் வந்தது. நீதி தெரியாமல் ரகு வம்சத்து ஸ்திரீகள் எல்லோரும் அக்கினிப் பிரவேசமாகின்றார்கள். அவர்களுக்குச் சில நியாயங்களைச் சொல்லி, முன்போல் சூரிய வம்சத்தைப் பெருக்க வேண்டும்" என்று நினைத்து அவர்களின் முன்னாகச் சென்று இயம்பினார்.

'ஓ பட்டதரசிகளே! புருஷன் இருந்தாலும் புத்திரனில்லாமற் போனால், பட்டத்தரசிகள் அந்தந்தப் பட்டத்து ஆசாரியாரைக் கலந்து புத்திரனைப் பெற்றுக் குலத்தை விருத்தி செய்யலாம்' என்று வேதத்தில் முறை இடுகின்றது. ஆகையால் நீங்கள் உங்களுடைய ஆசாரியாரைச் சேர்ந்து புத்திரர்களைப் பெற்று குலத்தை விருத்தியாக்குங்கள். இதனால் ஒரு கெடுதியுமில்லை.' என்று கட்டளையிட்டார்.

காசிபர் சொல்லிய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, அவரவர்கள் தங்களுடைய குலாசிரியர்களை அழைப்பித்து, எவ்வெட்டுப் புத்திரர்களையும் இரண்டிரண்டு புத்திரிகளையும் பெற்று வளர்த்து, ரகு வம்சத்தை விருத்தியாக்கினார்கள்.

அப்போது காசிபர் தமது வசத்திலிருந்த பூமியை அந்தந்தப் பட்டத்தரசிகளுடைய புத்திரர்களுக்கு பகுத்துக் கொடுத்து முடி சூடி அரசு செய்யக் கட்டளையிட்டார். அவ்வாறே அவர்களுடைய வம்சம் ஒருவாறு தழைத்து எழுந்தது.

மனு சாத்திர விதி பிறழாமல் அவர்கள் ஆட்சி செய்து வந்ததால், பிணி பயம், கள்ளர் பயம், சத்துரு பயம், விஷ பயம், ஐம்பூத பயம் என எதுவும் இன்றி தரும தேவதைகள் நான்கு பாதங்களினாலும் நடந்தது

சத்திர வம்சம் என்னும் பாகுபாடு இருந்தபோது, போட்டியாலும் சில விடயங்களைத் திணித்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்தோடு, தாம் வாழ்வதற்கென விதவிதமாய் வரிகளை விதித்ததுபோல தமக்கென விதிகளையும் தாமே விதித்து அவர்கள் வாழ்க்கை நடத்தியிருக்கின்றார்கள். அதனாலேதான் இவ்வாறான செயல்கள் அறியும் போதே அருவருப்பை ஏற்படுத்த முனைகின்றன.

ஆனால் இவ்வாறு உருவாக்கப்பட்ட அந்த சந்ததி மகாபாரதப் போரின்போது அழிக்கப்பட்டு விட்டது. சத்திரிய வகுப்பை நிலை நிறுத்த அனைவரும் செய்த காரியங்கள் தோல்வியின் உச்சத்தையே கண்டன. இன்று இவர்கள் இல்லாமலே உலகம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

சத்திரிய குலத்தை அழித்தாக வேண்டும் என்று பரசுராமருக்கு முதன் முதலில் எழுந்த எண்ணம், ஒவ்வொரு நாடுகளிலும் வலுப் பெற்று கலியுகத்தில் கடும் போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டன. அதன் விளைவாக மக்களாட்சி என்று சொல்லப்படும் ஜனநாயகம் என்ற அமைப்புக்குள் வாழ்கின்றோம்.

அது அவ்வாறிருக்க, ரகு வம்சத்தின் பட்டத்து அரசிகள் பெற்ற புத்திரர்களால் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தபோது, உலகில் பிரஜைகள் பெருகி நின்றார்கள். ஆகையால் பிரஜா பாரத்தைச் சுமக்க முடியாமல் பூமாதேவி வருத்தமடைந்து, திரிமூர்த்திகள் ஒன்றாகக் கூடியிருந்த நேரத்தில் வந்து முறையிட்டாள்.

அப்போது மும்மூர்த்திகளும் தமக்குள் ஆலோசனை செய்து, ஸ்ரீமத் நாராயணனும் தேவர்களும் அசுரர்களும் மானுட தேகத்தினராய் வந்து பிறந்து பூமியின் பாரத்தை நீக்குவார்கள் என உறுதியளித்து நின்றார்கள். அவ்வாறாக அவர்கள் ஆற்றிய செயலே மகாபாரதத்தில் சொல்லப்படுகின்றது.

சிருஷ்டித் தலைவனாகிய பிரமனுடைய உடலில் அத்திரி, அரிசி, புலத்தியன், கிரன்.கிரத்த.புலகன் என்னும் ஆறு புத்திரரும், பிரமனின் வலது பாத விரலில் தக்கனும் இடது பாத விரலில் தரணியென்னும் பெண்ணும் உதித்தார்கள்.

பிரமனுக்குப் பிறந்த ஆயிரம் புத்திரர்கள் பிரமசாரியத்தை மேற்கொண்டு தவத்தைப் புரிந்து கொண்டு பரமபதம் அடைந்தார்கள். பின்பு ஐம்பது பெண்களைப் பெற்றார். இவர்கள் மூலமாக உருவாகிய சந்ததியினர் காசிபர் சந்ததியென அழைக்கப்படுவர்.

இதேபோல இப்பிரமன் புத்திரர்களாலும், அப்புத்திரர் வருக்கத்தாலும் பிரபஞ்சம் உருவாக்கப்பட்டது.

தம்முள் ஒன்று சேரும்போது வளமான எச்சங்களை உருவாக்கும் தனியன்களின் கூட்டமே இனம் எனப்படும். வளமான எச்சம் என்பது சந்ததிகளை உருவாக்கும். இது இன விருத்திக்குக் காரணமாக அமையும்.

ஆனால் கூர்ப்புக் கொள்கையின் தந்தையாகிய சாள்ஸ் டாவினின் கருத்துப்படி, உலகில் அதிகமாக இருக்கும் உயிரினம் விரைவில் அழிக்கப்பட்டு விடும் என்று சொல்லியிருக்கிறார். எண்ணிக்கையில் அதிகமாகவுள்ள உயிரினம் அழிக்கப்படுவதற்கு ஏதுவாக பல வித காரணங்களும் அமையலாம்.

அதிகரிக்கும் சனத்தொகைக்கு போஷிப்பதற்கு வேண்டிய உணவு இல்லாமையாலும், அவர்களுக்கு வேண்டிய அனைத்து

தேவைப்பாடுகளும் நிறைவேறுவதற்கு வசதியின்மை என்பதாக எளிமையாகச் சொல்லிக் கொள்ளலாம். மேலும் அவ்வாறு அதிகரிப்பவர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் போராட்டம் அவ் இனத்தை அழித்து நிற்கும் என்பதே மானுடரின் வாழ்வில் பெறக்கூடிய முடிவான முடிவாகும்.

இதனால் பூமியின் பாரம் அதிகரிக்கும்போது இவ்வாறு பூமாதேவி சென்று மன்றாடுவதாகவும் அதன்போது இறைவன் அவதாரம் எடுத்து மக்கள் அழிக்கப்படுவதையும் விஞ்ஞான ரீதியிலும் சரியானதென நிறுவிச் செல்லலாம்.

பாரத்தை அதிகரித்து அழித்தல் என்ற கோட்பாட்டை நாம் எளிதாக விளங்கிக் கொள்ளலாம். ஒரு வாகனத்தில் பாரத்தை ஏற்றுவதாக வைத்துக் கொள்வோம். உதாரணமாக ஒரு பேரூந்தில் பயணிகளை ஏற்றிக் கொள்ளும்போது அளவுக்கு அதிகமாகப் போகும்போதே அதனால் வண்டிக்குப் பழுதோ அல்லது ஓடிக் கொண்டிருக்கும்போது விபத்தோ ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

பூமி சீராக இயங்கிக் கொண்டிருக்கும்போது அதன் பாரமும் வெகுவாக அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஒரு நிலையில் அதன் பாரத்தைத் தாங்காது அதிலே பலரையும் அழிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அந்த நிலைமை காத்தற் கடவுளால் ஏற்படுத்தப் படுகின்றது என்பதை மகாபாரதம் சொல்லிச் செல்கின்றது.

இங்கே துயரப்பட வைக்கும் விடயம் என்னவெனில் களைகளை எடுப்பதாகச் சொல்லி கதிரையும் எடுத்து விடுகின்றனர். துஷ்டரை அழிக்க முற்படும்போது சில நல்லவர்களும்.. அல்ல பல நல்லவர்களும் சேர்ந்தே அழிக்கப்பட்டு விடுகின்றனர். அதைப் பொதுவான விதிகளுக்கு உள்ளாக இயற்கை அழிவு அல்லது தர்ம யுத்தம் என்ற வகையினிற் சேர்த்து விடுகின்றனர்.

மெல்லவும் முடியாததாக விழுங்கவும் முடியாததாக இவ்வாறான விடயங்களை இளையவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப் போகின்றார்கள் என்பதில் அனைவருக்கும் சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. பிறந்த நாள் முதலாக அவலத்தை அன்றி வேறு எவற்றையும் அறிந்திடாத எம் இளைய சமுதாயத்தினருக்கு இந்த வேதாந்தத்தை விளக்கிக் கொள்ள முடியுமா?

ஆனால் ஒன்றை மட்டும் நாம் நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும். எந்தவொரு செயலும் நடவடிக்கையும் காரண காரியம் இன்றி நிகழ்த்தப் படுவதில்லை. உலகில் நடைபெறுவது கிடையாது. இதுவும் எம்மைச் சமாதானப்படுத்திக் கொள்வதற்காக மட்டுமன்றி மற்றவர்களுடைய குற்றங்களை மறைப்பதற்காக அல்ல.

ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிக் கொண்டே ஒவ்வொருவரும் இங்கே வந்து சேர்கின்றார்கள். அவரவர் விருப்பப்படியும் வினைப்படியும் விளையாடுகின்றார்கள். தங்களுடைய ஆட்டம் முடிவடைந்ததும் தத்தமது வழியே சென்று விடுகின்றனர்.

இப்பிறவியில் நாம் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்பவே அடுத்த பிறவி அமையும் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். நல்லதைச் செய்பவன் நற்பயனையும் தீமையைச் செய்பவன் தீவினையையும் அடைவான் என்றும் சொல்லுகிறார்கள்.

வெறும் காற்றாக எழுந்து கண்ணுக்குப் புலப்படாது இருக்கும் இந்த உயிருக்கு இங்கிருந்து எந்தப் பொருளையும் எடுத்துக் கொண்டு செல்லும் வல்லமை கிடையாது என்பதை ஏற்கெனவே நாம் அறிந்திருக்கின்றோம். அவை உயிரின் பாவ புண்ணியங்களை மட்டுமே சுமந்து செல்கின்றன.

அவ்வாறு சுமந்து செல்லும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மறுபிறவியை அடைவதாகவும், நல்லதாகவோ கெட்டதாகவோ வாழ்வதாகவும் சொல்லுகிறார்கள். அவற்றைக் கண்ணாற் கண்டவர் யாரேனும் உள்ளனரா? என்று கேட்டால் பதிலளிப்பது கடினம்.

கண்ணுக்குத் தெரியாததைக் கடவுள் என்று உருவகித்த மனிதனின் பகுத்தறிவு இவ்வாறான விடயங்களை உணர்வுகள் வாயிலாகக் கொண்டு வந்திருக்கலாம். அல்லது, வாழ்பவரின் செயற்பாடுகள் வான் புகழ வேண்டும் என்பதற்காக வலுக்கட்டாயமாகப் புகுத்தியிருக்கலாம்.

எதுவாக இருப்பினும் நாம் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட நோக்கத்துடன் வந்திருப்பதும் அதன் அடிப்படையில் எமது தேடல் அமைவதும், தேடும் வரையிலும் எமது வாழ்க்கை நிலைக்கும் என்பதையும் யாரும் மறந்துவிடல் ஆகாது. வாழ்க்கையின் தேடலை விரைவிலே அறிந்து கொள்பவன் அதிஷ்டசாலி ஏனெனில் அவன் வேறு எந்த விடயத்தையும் தேடச் சென்று வீணான விளைவுகளை உருவாக்கி விடமாட்டான்.

சரி இந்தத் தேடலுடனான வாழ்க்கை திட்டமிடப்படும் விதத்தையும் ஒழுங்கமைக்கப்படும் வகையையும் இனி நோக்குவோம்.

## 10. ஆட்டத்தைத் தொடங்கவென வந்தவர்கள்

பூமியில் அனைத்தும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையே என்பதை மெய்ஞ்ஞானம் சொல்லிவிட்டுச் சென்றது. அவை மரணத்தின் பின்பாகவும் ஜனனத்தின் முன்பாகவும் அவ் ஆக்கக் கூறுகள் பிரிக்கப்படும் போதும் சேர்க்கப்படும் போதும் பூமியில் சமநிலை பேணப்படுகின்றது.

மனித உடலை எடுத்து பூவுலகில் அவதரித்து, தம் இஷ்டப்படி பாவ புண்ணியங்களைச் செய்து கொண்டுவிட்டு, வினையை மட்டும் எடுத்துக் கொண்டு விரும்பியோ விரும்பாமலோ வெளியேறிவிடுவது, மனித உயிரின் இயல்பு ஆகும். தனது தேவைக்காக ஒரு வீட்டில் தங்கியிருந்துவிட்டு, தேவை முடிந்ததும் வெளியேறிவிடும் வாடகைத்தலம் போன்றே இந்த உடலை வர்ணித்திருக்கின்றனர்.

அதை மிகவும் எளிய முறையிற் பின்வருமாறு விளக்கலாம்:- சுமார் மூன்று அல்லது நான்கு வயதை அடைந்த, விளையாடத் தெரிந்த ஒரு குழந்தையிடம் பொருட்களை அமைத்துக் கொள்ளக்கூடிய கட்டடங்களை அமைக்கும் விளையாட்டுப் பொருட்கள் (building blocks) வழங்கப்படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். தனது திறமையைப் பாவித்து, அந்தக் குழந்தை பொருட்களைச் செய்து கொள்கின்றது.

மரம், கட்டடம், ஊர்தி எனத் தான் கண்டு கொண்டிருந்த வடிவங்களைப் பிள்ளை செய்கின்றது. அது செய்து சிறிது நேரம் விளையாடிய பின்னால் இவற்றை உடைத்து எடுத்து மறுபடியும் பைக்குள் போட்டு வைத்துக் கொள்கிறது.

அவ்வாறு பொருட்களை அமைப்பதும், தேவை முடிவடைந்ததுடன் பைக்குள் போட்டுக் கொள்வதைப் போன்றதுமானதே மனிதனது ஜனனம், மற்றும் மரணம் போன்ற நிகழ்வுகளாகும். பாசத்தின் பிடியில் ஆழ்ந்துவிட்ட மனிதன், காட்சியில் திளைத்த மனிதன், கட்டவிழ்ப்பதைப் பொறுத்துக் கொள்ளாமல் துடிப்பது போன்றதே மரணம்.

மேலே குறிப்பிட்ட குழந்தை மீண்டும் வேறு ஒரு உருவைச் செய்கின்றது என்று வைத்துக் கொள்வோம். இவ்வாறாகச் செய்வதும் தகர்ப்பதுமாக இருந்த குழந்தை சிறிது நேரத்தின் பின்னதாகத் தான் முன்னே செய்ததைப் போலவே ஒரு உருவைச் செய்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போன்றதுதான், இன்னாருடைய அம்சமாக வேறொருவர் அவதரிப்பர் என்பது.

சுவாமி விவேகானந்தரும் இக்கொள்கையை வலியுறுத்தி இருக்கின்றார். இயற்கையில் பலவிதமாக அமைப்புகளில் மனிதர்கள் இருந்த போதும் பல ஆண்டுகளின் பின்பாக அதே வடிவில் இன்னொருவர் தோன்றுவார் என்பதைச் சொல்லியிருக்கின்றார்.

அந்த ஒற்றுமைப்பாட்டை வைத்து எழுந்ததுதான் உவமை என்றும் உருவகம் என்றும் சொல்லப்படும் அணிகள் ஆகும். பெண்ணுக்கு அழகு சேர்ப்பதற்காக நகைகளை அணிவதன் போலே, படைப்புக்கு அணிகளாக இவற்றைச் சேர்த்து நிற்பர். இந்த பொதுத்தன்மைகளை ஆயும் ஆவல் படைப்பின் சிறப்புக்களைச் சொல்லி நிற்கும்.

இந்த ஒப்புநோக்குதலில் இருந்து எழுந்தது கணிதம் ஆகும். ஒரு பொருளை விடவும் மற்றயது பெரியது எனும் போதும் சிறியது எனும் போதும் சமமானது எனும் போதும் கணிதம் நுழைந்து விடுகின்றது. இலக்கியத்தில் ஏதாவது ஒரு பொதுத்தன்மையை எடுத்துச் சொல்வதுபோல அமைந்து விடாமல் எவ்வளவு பெரியது அல்லது எவ்வளவு சிறியது என்பதைக் கணித மாதிரிகளைக் கொண்டு கணிப்பிட முயன்றது கணிதம்.

ஆக எந்த ரீதியில் நோக்கினாலும் பொதுத்தன்மையையும் ஒப்பு நோக்குதலையும் கடந்துவிட முடியாது என்பதைத் தீர்க்கமாகச் சொல்லிக் கொள்ளலாம். இது பாரதத்தில் முக்கியமாக விரிவாகக் காட்டப்பட்டு உள்ளது.

யாதவகுல சிகாமணியாகிய வசுதேவருக்கு தேவகி, உரோகிணி

என்னும் இரண்டு மனைவியர் இருந்தனர். அவர்களில் உரோகிணிக்கு பலராமனும், தேவகிக்கு கிருஷ்ணனும் ஆக இரண்டு உருவத்தில் நாராயணன் பிறந்தார்.

இவ்வாறாகவே பாரதத்தில் அஷ்டலட்சுமிகள் அம்சமாய் ருக்மணி முதலிய எட்டுப் பட்டஸ்திரீகள் பிறந்தார்கள். அப்சர ஸ்திரீகள் அம்சமாகக் கோபியர் பிறந்தனர். சனற்குமாரர் முதலான முனிவர்களும் அம் முனிவர்களின் குமாரர்களும் குந்திபோஜன் முதலான யாதவ அரசர்களாகப் பிறந்தார்கள்.

பிரபாசன் என்கின்ற எட்டாம் வசு காங்கேயனாகப் பிறந்தான். அசுர குல குருவாகிய சுக்கிராச்சாரி அம்சமாக துரோணாச்சாரி பிறந்தான். ஏகாதச ருத்திரர் அம்சமாக கிருபாச்சாரி பிறந்தார். சூரியன் அம்சமாகக் கர்ணனும், துவாபர புருஷன் அம்சமாக சகுனியும் பிறந்தான். கந்தர்வர்க்கு அரசனாகிய அமிசன் அம்சமாக திருதராட்டிதன் பிறந்தான். வசுமதி எனப்படும் தேவதை அம்சமாக காந்தாரி பிறந்தாள்.

கலி புருஷன் அம்சமாய் துரியோதனன் பிறந்தான். இரணியகசிபு அம்சமாகச் சிசுபாலன் பிறந்தான். பிரகலாதன் அம்சமாய் சல்லியன் பிறந்தான். விப்பிரசித்தன் என்னும் அரக்கன் அம்சமாய் ஜராசந்தன் பிறந்தான். அலி என்னும் அரக்கன் அம்சமாய் சிகண்டியும் மருத்துவர் அம்சமாய் பாஞ்சாலன், விராடன், சாத்தகி ஆகியோர் பிறந்தனர்.

திரிகுணன் அம்சமாக விதுரன் பிறந்தான். யஷக அரசன் அம்சமாக பாண்டுராஜன் பிறந்தான். சித்தி புத்தி என்ற இரு தேவதைகள் அம்சமாகக் குந்தி, மாத்திரீ இருவரும் பிறந்து பாண்டுவுக்கு மனைவியானார்கள். யமன் அம்சமாய்த் தருமராஜன் பிறந்தான். வாயு அம்சமாய் பீமனும் இந்திரன் அம்சமாய் விஜயனும் அசுவினி தேவர்கள் அம்சமாய் நகுல சகாதேவர்களும் பிறந்தார்கள்.

ஸ்ரீதேவி அம்சமாய் திரௌபதியும் அக்கினி அம்சமாய் திருஷ்டதுய்மனும் பிறந்தார்கள்.

இவ்வாறு உருவான பாரத வீரர்கள் பலகிப் பெருகி முடிவில் போர்க் கோலம் கொண்டு பூமி பாரத்தை நீக்கி இறுதியில் அவரவர் இருப்பிடத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். இதுவே பாரதக் கதையின் முடிவின் மூலம் கடவுளால் உணர்த்தப்பட்டது.

குழந்தை விளையாடுவதைப் போல உலகத்தைப் படைப்பதும் அழிப்பதும் சரியானதா? இதனைத்தான் முட்டாள் தனமாகக் கடவுள் செய்து கொண்டிருக்கிறாரா? என்று குதர்க்கம் பேசுபவர்களும் இல்லாமல் இல்லை.

இங்கு நாம் ஒரு விடயத்தை மனதிற் கொள்ளவேண்டும். இருப்பதில் இருந்தே அனைத்தும் உருவாக்கிக் கொள்ள முடியும். ஆண்டாண்டு காலம் பலவித செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் இயற்கையின் சமநிலை என்பது மாறி விடுவதில்லை. அது தனக்கென ஒரு நிலையைத் தக்கவைத்துக் கொண்டேயிருக்கும்.

ஒருவன் தன்னுடைய சிறிய வட்டத்திற்குள் நின்று கொண்டு யாரையும் விமர்சிப்பது பொருத்தமாகி விடாது. ஒருவர், தான் என்று மட்டும் சிந்திக்கும்போது உலகின் சமநிலையை விளங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆனால், அனைத்தும் உள்ள உலகம் என்பதையும் தாமும் ஒரு அங்கம் என்பதையும் விளங்கிக் கொள்வானாயின் அவனிடம் குழப்பம் எழுவதில்லை.

உலகின் உண்மையை அறிந்து கொள்பவனுக்கு, உலக வாழ்வில் பற்றுதல் ஏற்படுவதில்லை. நீர்க்குமிழியைப் போன்றது உலகம் என்பதை உணர்ந்து விட்டால், தாமரை இலையிற் தண்ணீரைப் போல் உலகில் ஒட்டுதல் இல்லாமல் வாழ்வதற்குப் பழகிவிடுவான்.

பழுத்த சித்தர்களும் யோகிகளும் ஞானிகளும் இவ்வாறே தங்களுடைய வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருந்தனர். ஏனையவர்களைப் போல எதையும் நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் மாயையில் அவர்கள் விழுந்து விடவில்லை. ஓடும்

புளியம்பழமும் போல, ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்க நோக்கிடும் பண்பினராக வாழ்ந்து வந்தனர்.

பகவத்கீதையின் படி 'உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்' என்ற வசனத்தை உற்று நோக்குவோமாயின், அதற்குள்ளே மிளிரும் பலவிதமான விடயங்களையும் அவதானிக்க முடியும். அனைத்தும் உள்ள இந்த உலகம் பொருட்களாலான ஒரு பெரிய பொக்கிஷத்தைப் போன்று கிடக்கின்றது.

இங்கு இருக்கும் அனைத்துமே எங்கள் ஊனக் கண்களுக்குப் பட்டு விடுவதில்லை. எமது பெற்றோர் மற்றும் எம்மைச் சார்ந்தவர்களால் எமக்குப் பரிச்சயம் ஆக்கப்படும் விடயங்களை நாம் எடுத்துக் கொள்ளப் பழகுகின்றோம். இது அதிஷ்டத்தால் அல்லது பிரயாசையாற் கிடைக்கின்றது.

அப்படியானால் எமக்கு சம்பந்தமே இல்லாத விடயங்கள் எம்மை வந்தடைவது எப்படி? என்ற கேள்வி சாதாரணமாவே எழுகின்றது. உதாரணமாக ஒரு பணக்காரனின் மகன் பணக்காரனாவது இயல்பாக நடைபெறுகின்றது. ஆனால் ஒரு ஏழை எவ்வாறு பணக்காரன் ஆகின்றான்? அதேபோல் ஒரு வைத்தியரின் மகன் வைத்தியனாக வருவது என்பது வெகு சாதாரணமானது. ஆனால் ஒரு படிப்பறிவு இல்லாதவனின் மகன் வைத்தியனாவது எப்படி?

கடந்த காலத்தில் வருண வேறுபாடுகளை அடிப்படையாகக் காட்டி இவ்வாறான நிலைமைகளை அசாத்தியமாகக் காட்டியிருந்தார்கள். அதிலும் மகாபாரதத்தில் ஏகலைவன் என்ற ஒரு வேடுவனுக்குக் கல்வி புகட்ட முடியாது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அவனுக்கு கல்வியை வழங்க மறுத்த துரோணர் இவ்வாறான கருத்தைக் கொண்டிருந்தவர்தான்.

"இயற்கையிடத்து காணப்படும் கரையில்லாத் திறமைகள் பாமரர்களிடம் இருப்பதில் அர்த்தமில்லை" என்று சொல்லியது எம்

காதுகளில் ஒலிக்கின்றது. "அரும்பெரும் செயல்களைச் சாதிக்க உதித்த அருச்சுனன் போன்றோருக்கு அஸ்திர சாத்திர வித்தைகளில் பாண்டித்தியம் இருப்பதுதான் உசிதம்" என்று அவர் கடுமையாக வற்புறுத்தினார். இருப்பினும் அவருடைய உதவி இல்லாமலே ஏகலைவன் பயின்று முன்னேறினான்.

ஆனால், 1453 இன் பின்பாக ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும், ஐரோப்பியர்களின் நாடுகாண் பயணத்தின் காரணமாக இலங்கையும் அவர்களின் வசமானதும், கல்வி என்பதற்குத் தடையிடாத அவர்களின் பங்களிப்பும் பிற்காலத்தில் இலவசக் கல்வியின் தந்தை சீ.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களின் அளப்பரும் சேவையும் சாதாரண மக்களும் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை எடுத்துக் காட்டியது.

அனைவருக்குமான கல்வி என்பது பல வாய்ப்புக்களை எடுத்துச் சொல்லியது. நான் முன்னதே குறிப்பிட்டதாகிய நிலைமைகள், அதாவது வறியவர்களிடம் இருந்தும் கல்விமான்கள் உருவானது சாத்தியமாயிற்று. ஏழைகளுக்கு எட்டாத கல்வியை எட்டும் வகையில் ஆக்கிய இலவசக் கல்வியின் தந்தை அவர்கள் எவராலும் போற்றுதற்கு உரியவரே.

பலவிதமான துன்பங்களையும் கடந்து எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருக்கும் எமது இளவல்களுக்கு எவ்விதமான உதவிகள் யார் மூலமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது எமக்குத் தெரிந்ததுதான். ஆனால் எம்மவர்களே முயற்சி செய்ய வேண்டும். கர்ணனைத் தன் தோழனாக்கி அவனுக்கு அரசாட்சி கொடுத்த துரியோதனனைப் போலும் பலர் முளைத்து எழ வேண்டும்.

ஆனால் கர்ணனின் அறமும் செஞ்சோற்றுக் கடனும் துஷ்டனுக்குத் துணைபுரிந்ததைப் போன்ற ஒரு நிலையை இங்கு ஏற்படுத்திவிடக் கூடாது. எங்களுக்கு இப்பொழுது இருக்கும் ஒரேயொரு நம்பிக்கை எனது இளைய தலைமுறையினரே. அவர்களைத் திசை திருப்பிவிடும் எந்த

ஒரு காரியத்தையும் செய்வதற்கு எமது பகுத்தறிவு விட்டுவிடக் கூடாது.

இலவசக் கல்வியினால் இன்னின்னார்க்கு மட்டுமே இவையிவை பொருந்தக்கூடியது என்ற நிலைமை மாறுதலைடைந்து முயற்சியுள்ளவர் யாவரும் முன்னேறலாம் என்ற பொருளைக் காட்டியது. இதனால் இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் கல்வியின் தரம் வெகு விரைவாகவே உயர்ந்தது.

அதிலும் இன்றைய நாட்களில் தொழில்நுட்பத்தில் அபரிமித வளர்ச்சியால் கல்விக்கான வாசல் இலகுவாகவே திறக்கப்பட்டு இருக்கின்றது. மாணவச் செல்வங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் எல்லாம் கல்வியை வழங்குவதற்கு இணையத் தளங்கள் இன்று தயாராக இருக்கின்றன. ஒரு காலத்தில் ஏழைக்குக் கண்களைக் கட்டிவிட்ட கல்வி இன்று வரப் பிரசாதமாகவே அமைந்திருக்கின்றது.

ஆனால் அவ்வாறான கல்வியின் வளர்ச்சி மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்பி விடுமா என்ற கேள்வியும் எழுகின்றது. கல்விக்காக மட்டுமே ஆசிரியரை அடைய வேண்டும் பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்பதை எல்லாம் நாம் கருத்திற் கொள்ளவில்லையே. அவர்களிடம் காணப்படவேண்டிய பண்புகள் இவற்றையெல்லாம் கணனி சொல்லிக் கொடுத்துவிடுமா?

அடிப்படையை நாம் அவதானித்து நிற்போமானால், வேதாங்கள் எனப்படுபவை எம் வாழ்க்கைக்கு ஏற்ற முறைகளாக முன்னோரால் வழங்கப்பட்டவையே. அவற்றை வலியுறுத்தவென ஒவ்வொரு மொழியிலுமே இலக்கியங்களைப் படைத்தும் விமர்சித்தும் வளர்த்தும் இருக்கின்றோம்.

கணனி சொல்வதையும் ஒரு மொழி எனக் கொள்வோமாயின், கணனியின் மொழி மனித வாழ்க்கையின் விழுமியங்களைச் சொல்லிக் கொடுத்துவிடுமா? வாழவேண்டிய முறையைத் தெரிவிப்பதுண்டா? வாழ்க்கையின் வேகத்தில் மானுடத்தைக் காட்டி நின்றுவிடுமா?

இல்லை. நிச்சயமாக இல்லை. மனிதனுடைய வேகத்தை மேலும் பெருக்கிக் கொள்வதே அதன் நோக்கமாகும். ஆயின் அது மேலும் குழப்பங்களையே கொண்டு வரப்போகின்றது என்பதை நாமாகவே உணர்ந்து கொள்ள முடிகின்றது. இதனால் இன்றைய கல்வியின் கதவுகள் மனிதத்தை எந்தவிதத்திலும் பெருமையடையச் செய்யாது என்பதே உண்மையாகும்.

கல்வி எவ்வளவு உயர்ந்து நின்றபோதும், அதற்கு ஏற்றவாறு தொழில் வாய்ப்பும் பொருளாதாரமும் இல்லாதுவிடின் கற்ற கல்வியின் உச்சப் பயனைப் பெற முடியாது என்பது இலங்கையில் கல்வி கற்ற இளைஞர்களின் எண்ணப்பாடாகும். இதனால் மூளைசாலிகளின் வெளியேற்றம் என்ற விடயம் வெகு சாதாரணமாகப் போய்விட்டது.

கல்வியைக் கற்பித்த நாடு பயன் பெற முடியாது போய்விட்டது ஒரு புறம் இருந்தாலும் அவர்கள் வெளிநாடுகளில் வேலைசெய்து அந்நியச் சொலாவணியைப் பெற்றுத் தருவது அதற்குள்ளே ஒரு முக்கியமான விடயமாகும். கல்வியில் ஏற்பட்ட எழுச்சி கைத்தொழிற்றுறையின் விருத்திக்குப் பங்களிக்கவில்லை என்று ஆதங்கம் எழுந்தபோதும், உலகத் தொழிற் சந்தையில் எம்மவருக்கு உரிய பங்கைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சி பிறக்கின்றது.

கற்றதனாலும் தொழில் சரிவரப் பெற்றதனாலும் அனைவருக்கும் உதவி செய்து வையத்தில் வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற விடயம் அனைவரின் வாழ்க்கையிலும் வற்புறுத்தப்படுகின்றது. இது அனைத்து மானுடருக்கும் இருக்கவேண்டிய பொதுத்தன்மையாகும். இது இல்லாதவர்களை அவர்கள் மனிதர்களா என்று சந்தேகிக்கப்படும் நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கு வையத்தில் வளம்பெற சிறப்புற வாழ்வது தெய்வத்துக்குள் வைக்கப்படுவதற்காகவே

என்பதைச் சொல்லுகின்றது. மனிதனாக வாழவேண்டிய அரிய பெரும் கடமைகளையும் உணர்த்துகின்றது.

பூமியில் நாம் ஒவ்வொருவரும் தோற்றம் பெறும் ஜன்ம திதியையும் லக்கினத்தையும் கொண்டு மனுஷ கணம் என்றும் தேவ கணம் என்றும் ராஷச கணம் என்றும் மக்கள் பிரிக்கப்படுவது உண்டு. இங்கு தேவ கணத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் அமைதியான சுபாவம் உள்ளவர்களாகவும் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாதவர்களாகவும் நல்லவர்களாகவும் காணப்படுவர்.

ஆனால் ராஷச கணத்தைச் சேர்ந்தவர்களோ மிகுந்த துடியாட்டம் உள்ளவர்களாகவும் துஷ்ட சிந்தனை உள்ளவர்களாகவும் மற்றவர்களுக்குக் கெடுதல் செய்வதற்கு முன் நிற்பவர்களாகவும் காணப்படுவர். மனுஷ கணத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் இருவருக்கும் இடைப்பட்டவர்களாக இருப்பர்.

மனிதரிடையேயுள்ள பொதுத்தன்மையை நோக்கி வளர்ந்த கலையே சாத்திரம் என்பதை இப்போது வெகுவாகவே அனைவரும் புரிந்து கொண்டிருப்பர். பொதுவான இயல்புகளை உற்று நோக்கி, அவ்வாறு அனுபவித்தவர்களின் வாழ்க்கையைத் தெரிவித்து அதன் மூலம் வளர்ந்ததே சாத்திரம். அவ்வாறு மற்றவர்களினுடைய எதிர்காலத்தைச் சொல்வதற்கு எண்கணிதமும் மனோ தத்துவமும் துணை செய்கின்றன. இவ்வாறே பொதுத்தன்மைகள் அவற்றினால் நோக்கப்பட்டன

# 11. ஆடுகளத்திற்கு குருகுல வீரர் வருகை

பிரபஞ்சத்தில் மக்கள், தேவர், நரகர் எனப் பல்வேறுபட்டோர் வாழ்ந்து கொண்டிருப்பதாக நம்பிக் கொள்ளும் போதிலும், எமது கண்ணுக்குப் புலப்படுபவர்களாகவும் கருத்தினைக் கவருபவர்களாகவும் இருப்பவர்கள் மனிதர்களே. வாழ்க்கையை வாழவேண்டிய, வாழ்க்கையில் துடிப்புடன் இயங்க வேண்டியவர்கள் மானுடர் எனப்படும் சாரார் ஆகவே இருக்கிறார்கள்.

எமக்குத் தெரிந்த இவ்விடத்தை வைத்துக் கொண்டு அவ்வாறு நினைக்கின்றோமா, அல்லது நாம் என்ற சிறிய வட்டத்திற்குள் அவ்வாறு புனைய முனைகின்றோமா என்பதும் ஆய்வுக்கு உரியதே. ஆயினும் ஏற்கெனவே கடந்து வந்த பயணங்கள் இந்த வாக்கியத்தை நிறுவி நிற்கின்றன.

ஒரு வேளை அவற்றைப் மிகைப்படுத்திருந்தாலும்கூட, எம்மால் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்களாக இருக்கும்போது அவற்றை நம்புவதனாற் தவறில்லை. அது தவிரவும் இவ்வாறாக அற்புதமாக ஒன்றை வியாசர் புனைந்திருந்தாலுமே அவர் போற்றப்பட வேண்டியவரே.

பண்டைக்கால வரலாறு அல்லது புனைவுகளில் அரக்கர் எனப்படு வோர் மிகவும் பராக்கிரமம் உடையவர்களாகவும், துஷ்டர்களாகவும் அவலட்சணமான தோற்றம் உடையவர்களாகவும் இருந்தார்கள் எனவும் தேவர் எனப்படுபவர்கள் மிகவும் மென்மையானவர்களாகவும், நல்ல நிகழ்வுகளுக்குப் பொறுப்பானவர்களாக நன்னடத்தை கொண்டிருப்பவர் களாகவும் அமைதியான சுபாவம் உள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது.

அவை இரண்டிற்கும் இடைப்பட்டவர்களாக மனிதர்கள் காணப்படு கின்றனர். அதிலும் சத்திரியர் எனப்படுபவர்கள், அரக்கர்களை எதிர்க்கும் ஆற்றல் உள்ளவர்களாக இருந்திருக்கின்றனர். அதற்குப் பல சான்றுகளையும் இதிகாசங்களிலும் புராணங்களிலும் சொல்லி இருக்கின்றார்கள்.

ஒருநாள் சொர்க்கலோகத்துக்கு அதிபதியாகிய நாடகசாலையின் பெண்ணாகிய ஊர்வசி என்பவள். மலர் கொய்துவர பூங்காவனத்துக்குச் சென்றாள். அவளை அசுரர்கள் வழி மறித்து, தேரிலே ஏற்றித் தங்கள் இருப்பிடத்திற்குக் கொண்டு சென்றனர். அப்பொழுது அவள் ஓலம் எழுப்பியபோது தேவர்களுக்கு அந்தச் சத்தம் கேட்டிருந்தாலும், இந்திரன் முதலானோர் அசுரர்களை எதிர்க்கச் சக்தியின்றி வாளாவிருந்தனர்.

அந்த ஓசையைக் கேட்டு, புரூரூவச் சக்கரவர்த்தி என்னும் அரசன், இரதத்தில் ஏறி ஆகாயத்தில் சென்று, ஊர்வசியைக் கொண்டுபோன அசுரனை மறித்து, தன் வில்லைச் சரமாரியாகப் பொழியத் தொடங்கினான். அசுரர்களை வென்று ஊர்வசியை அழைத்துக் கொண்டு அவளின் இருப்பிடத்தைக் கேட்டு அங்கு சேர்ப்பதற்குச் சென்றான்.

இங்கு ஒன்றைக் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பெண்களை இழிவு படுத்துபவர்கள், அவர்களைக் கவர்ந்து செல்பவர்கள் அசுரர்களாகவே இருந்திருக்கின்றனர். இராமாயணத்தில் சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனும் அவர்களை ஒத்த தன்மையுடையவனே.

தற்காலத்திலும் பெண்களை இழிவுபடுத்துபவர்கள் இல்லாமற் போகவில்லை. விரோதம், ஆசை, பழி தீர்த்தல் என்ற பலவிதமான காரணங்களைச் சொல்லியும் பெண்களை நயவஞ்சமாகவும் பலாத்கார மாகவும் அழைத்துச் சென்று இழிவுபடுத்துபவர்கள் அக்காலத்திலும் எக்காலத்திலும் அரக்கர்களாகவே கணிக்கப்படுகின்றனர்.

அண்மைக் காலங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிலும் பலர் சேர்ந்து தனிமையிற் செல்லும் பெண்ணை சீரழிப்பது என்பது அடுத்தடுத்து நடந்து கொண்டே யிருக்கிறது.

மானுடத் தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் இவ்வாறான செயல்களைச் செய்பவர்கள் இராட்சசர்களாகவே கருதப்படுவர். மனித குலத்துக்கே உரித்தான அன்பு, இரக்கம், கண்ணியம் ஆகியவற்றை

ஏதோவொரு காரணத்திற்காகத் தொலைத்து விடுபவர்களை எவ்வாறு மனிதர்களாகக் கருதிக் கொள்ள முடியும்?

ஆனால் அந்த இடத்திற்கு விரைந்து சென்று, அவ்வாறான இராட்சசரின் பிடியில் இருந்தும் பெண்களைக் காத்து எடுப்பவர்கள் மானுடர்கள் ஆவார். அன்று புரூரூவச் சக்கரவர்த்தி செய்ததைப் போல விரைந்து சென்று பெண்ணைக் காப்பாற்றி, மனிதன் என்ற பெருமையைக் காப்பாற்றி விடுகின்றனர்.

பூவுலகம் என்ற இந்த விளையாட்டு மைதானத்தில் விரும்பியோ விரும்பாமலோ வந்து சேர்ந்து, கட்டாயமாக ஓடியே ஆக வேண்டும் என்ற நிபந்தனையுடன் சுவட்டில் ஏறி நின்று கொள்பவர்கள்தாம் மனிதர்கள். இங்கு சந்தோசமாகவும் விருப்பமாகவும் ஓடுபவர்களை விடவும் சந்தர்ப்பத்துக்காக ஓடுபவர்களே அதிகம்.

இந்தமைதானத்திலேகடவுளுக்கும்தேவர்களுக்கும்கொடுக்கப்படும் இடம் என்ன என்பதைக் கேட்கின்றீர்களா? தேவர்களுக்குக் கொடுக்கப்படும் இடம் பார்வையாளருக்குரிய ஸ்தானமாகும். நல்லது நடக்கும்போது பூமாரி பொழிந்து ஆசீர்வதிப்பதைப் போல மழையைப் பெய்விப்பதும், கெடுதல் நடைபெறும்போது, இடியையும் மின்னலையும் வரவழைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பதுமாக அவர்களது வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறாக ஒரு மானுடனின் வீரமும் மனிதாபிமானமும் எழுந்து தேவலோக மங்கையைக் காத்தது. தன் கையில் சேர்ந்து விட்ட அப்பெண்ணை நோக்கிய அவனுக்கு, அவளின் அழகின் மீது மையல் உண்டானது. அவளை இந்திரனிடம் அழைத்துச் சென்று அனுமதி வேண்டிவிட்டு, அவளைத் தன்னுடைய மனைவியாக்கிக் கொண்டான். அவர்களுக்கு ஆயுவென்கின்ற மகன் பிறந்தான்

அதன் பின்னால் ஆயுவென்பவன் சகலகலை வல்லவனாகி, தந்தையினும் எண் மடங்கு அதிகமாக தருமத்தைச் செய்து மன்னுயிர்

களைத் தன்னுயிர் போல் காத்து வந்தார். அவனுக்கு நகுஷன் எனப்படும் மகன் பிந்தான்.

நகுஷன் மனுநீதி தவறாமல் ஆட்சி செய்தது மட்டுமல்ல, நூறு அஸ்வமேத யாகங்களைச் செய்து சொர்க்கத்துக்குத் தலைமையாகிய இந்திரன் பட்டம் பெற்றான். சொர்க்கத்தை ஆள்வதோடு மட்டும் அல்லாமல் இந்திரனின் மனைவியாகிய புலோமிசை மீது காதல் கொண்டு அவளை அழைத்து வருமாறு தேவ தூதரை அனுப்பினான்.

பட்டத்தையும் பதவியையும் பணத்தையும் பார்த்துப் பெண்கள் அவர்கள் பின்னால் சென்று விடுவார்கள் என்று பலரும் தப்பாக எடை போட்டுக் கொள்கின்றனர். ஆனால் பெண்கள் எதிர்பார்ப்பது அவற்றை அல்ல. அதைத் தவிரவும் ஒருவனை மனமிசைந்து மணந்து கொண்டவள் எத்தகைய பெருமைக்கு உரியவனையும் கெட்ட எண்ணத்துடன் பார்ப்பதில்லை.

நகுஷனின் அழைப்பை அறிந்து கொண்ட புலோமிசை துணுக்குற்றாள். அவள் தன்னுடைய குல குருவாகிய பிரகஸ்பதியிடம் முறையிட்டாள். அதனை உபாயத்தினால் வெல்லவேண்டும் என்று எண்ணிக் கொண்ட அவர் இவ்வாறு சொன்னார்.

"பழைய இந்திரன் என்னிடம் எப்படி வருவானோ அதன்படி வரச் சொல்லு. அதன்படி புதிய இந்திரன் சப்த ரிஷிகள் சுமந்தவாறு வரும் முத்துச் சிவிகையில் வருவான்.. அப்போது. அவன் சும்மா இராமல் ஏதாவதொரு வசனம் சொல்லுவான். முனிவர்கள் அவனைச் சபிப்பார்கள்" என்று சொன்னார்.

தான் ஈடுபாடு வைத்திருக்கும் பெண் எதைச் சொனாலும் ஆண்கள் அதை நம்பி விடுகின்றனர். ஒரு பெண் எந்தச் சந்தர்ப்பத்தில் எதற்காக எவ்விதமாக வாயைத் திறக்க முற்படுகின்றாள் என்பதை சிந்தனையிற் கொள்வதில்லை. அவர்களின் நடத்தைகளால் துன்பம் வருமளவிற்கும் அவர்களின் அறிவு திறப்பதில்லை.

பெண்ணுக்கு கட்டுப்பாடுகளும் வளையங்களும் தாங்களாலேயே அமைக்கப்படுகின்றன என்பதை விரைவிலே மறந்து விடுகின்றனர். அந்த வளையங்களை விட்டு அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு பண்பாடு உதவி செய்வதில்லை என்பதை ஏனோ அநியாயத்திற்கு மறந்து தொலைக்கின்றனர்.

கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் ஒரு புறமாக இருப்பதில் ஏற்படும் சிரமம் என்பது இதுதான். தன் மனைவி ஒரு கட்டுக்கோப்புக்குள் இருக்க வேண்டும் என்று இடையறாது கருதுபவர்கள், தான் இச்சை கொள்ளும் பெண்ணின் கணவனும் அதையே நினைத்துக் கொள்வான் என்பதை நினைவிலும் கொள்வதில்லை.

அதை விடவும் தன்னுடைய அழைப்பிற்கு மறுப்பில்லாத ஒத்துழைப்பே வேண்டும் என்று தீர்க்கமாக எண்ணி விடுகின்றனர். அந்த ஒத்துழைப்பு அவர்களின் கண்களைக் கட்டுவது போலவே பெண்களின் கண்களையும் கட்டி விடுவதற்கு சமுதாயம் விட்டுவிடுமா?

இவ்வாறு குருவின் ஆணைப்படி அல்லது அவரின் உபாயப்படியே அவள் தேவ தூதர்களிடம் சொல்லி அனுப்பியதும், அவர்கள் சென்று நகுஷனுக்குத் தெரிவித்தனர். தன்னைச் சூழ்ந்து கொள்ளும் இருளை உணர்ந்து கொள்ளாத நகுஷன், அகஸ்தியர், அத்திரி, ஆங்கீரசர், கவுதமர், காசிபர், புலத்தியர், வசிஷ்டர் என்னும் ஏழு முனிவர்களையும் அழைப்பித்துச் சிவிகையை கொண்டு வரச் சொல்லி அச் சிவிகையில் ஏறிச்சென்றான். அப்போது சும்மா இராமல் வேகமாகச் செல்லுங்கள் என்னும் பொருள்படும் விதமான (ஸர்ப) எனும் தேவமொழியை அவன் கடுகடுத்துச் சொல்ல அகஸ்தியர் கேட்டு, "எங்களை மதிக்காமல் விரைவில் செல்லச் சொன்னதால் பெரும் பாம்பாகப் போவக் கடவது" என்று சாபமிட்டார்.

வெற்றியைப் பெற்ற போது இறுமாந்திருந்த நகுஷன், தேவலோகமுமே தனக்கு அடிமைப்பட்டு விட்டதாக எண்ணிப் பெருமிதம் அடைந்தவன்,

ஒரு கணப்பொழுதிலே அத்தனையையும் இழந்தவனாக நின்றான். சாபம் வந்துவிட்டதும் அவனிடம் இருந்த தலைக்கனம் காற்றாகிப் போய் விட்டது.

எத்தனை பெருமை வாய்த்தவனாக இருந்தபோதும், பிறன்மனையை நோக்கும்போது ஒருவன் கீழாம் நரகத்தில் விழுந்து விடுகின்றான். அவனிடம் தோன்றும் காம உணர்வு அடுத்தவர்களின் வாழ்வைக் குலைக்கும் அளவிற்குச் சென்று விடுகின்றது.

எத்தனை சக்கரவர்த்தியாக இருந்து அகிலம் எல்லாம் ஆட்சி செய்த இராவணன் பிறன்மனை நோக்கியதால் தனக்கு அழிவினைத் தானே தேடிக் கொண்டான் என்று இராமாயணம் சொல்லிவிட்டுச் சென்றது. அதேபோல ஒரு விதி நகுஷனுக்கும் எழுதப்பட்டு இருந்தது.

பலருடைய வாழ்க்கையைப் பாதிப்பதால் இவ்வாறான விடயங்கள் அந்தக் காலத்திலுமே கட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. இந்நாளிலும் இவ்வாறான விடயங்கள் இல்லாமற் போகவில்லை. இதனால் பல கொலைச் சம்பவங்களும் குற்றச் செயல்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

பிறன்மனை நோக்குதல் என்பது காமத்தால் மட்டும் எழுவதில்லை. மற்றவர்களை இழிவுபடுத்தவும் பழி தீர்க்கவும் எனப் பல்வேறு காரணங்களால் தோற்றம் பெறுகின்றது. அத்தனையிலும் அடிப்படையில் மனிதாபிமானத்தைப் பேணிக் கொண்டால் இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"**

என்ற பொய்யாமொழிக்கு ஏற்றவாறு சான்றோர்க்கு ஏற்ற ஒழுக்கங்களில் அன்பு, வாய்மை, ஒப்புரவு, நாணயம், கண்ணோட்டம் என்பவற்றுடன் நின்றுவிடாது, பிறன்மனை நோக்காத பேராண்மையும்

என்பதை சொல்லிச் செல்கின்றது.

**"அறன் நின்றாருள் எல்லாம் பிறன்கடை**

**நின்றாரின் பேதையர் இல்"**

பிறனுடைய மனைவியை விரும்பிச் சென்று அவனுடைய வாசலில் நின்றதைப் போல் அறிவிலிகள் கிடையாது. அவர்கள் அறத்தை விட்டுத் தீய வழியிற் செல்லும் அனைவரை விடவும் கீழானவர்களாகவே அமைந்திடுவர்.

அவ்வாறு அவன் செல்வது எதனாலோ என்று எண்ணும்போது, இந்தச் செயல் எளியது என எண்ணி பிறனுடைய மனைவியிடம் நெறிதவறிச் செல்லுதல் வாழ்வில் எப்போதுமே அழியாத பழியினையே தேடிக் கொள்ளுவான்.

**எளிது என இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்**

**விளியாது நிற்கும் பழி**

**விளிந்தாரின் வேறல்லார் மன்ற தெளிந்தாரில்**

**தீமை புரிந்து ஒழுகுவார்**

ஐயமில்லாமல் தெளிந்து நம்பியவருடைய மனைவியிடத்தே விருப்பம் கொண்டு தீமையைச் செய்து நடப்பவர், செத்தவரைவிட வேறுபட்டவர் அல்லர். அதனால் இது கடையிலும் கடையான செய்கை, கீழ்மையிலும் கீழான ஒழுக்கம் என்பதை திருக்குறள் தெளிவாகவே காட்டி நிற்கின்றது.

இவ்வாறாக கீழாகக் காணப்பட்ட நகுஷன், சாபத்தைக் கேட்டதும் கதிகலங்கி, நடுக்கமுற்று அதற்கான விமோசனத்தை வேண்டவும், அம்முனி மனமிரங்கி, "ஓ நகுஷனே! உன் சந்ததியில் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என ஐவர் பிறக்கப் போகின்றனர். அவர்கள் ஒரு காரியமாக வனத்துள் வருவார்கள். அப்போது வீமனை பிடித்து நீ விழுங்குவாய். அப்போது உன் சாபம் நீங்கும்" என்று சொல்லிச்

சென்றார். அதன்படி அவன் சாபம் நீங்கி கதியை அடைந்தான்.

சாபம் என்பதும் வரம் என்பதும் எவ்வாறாக மனிதரிடம் சென்று சேர்கின்றது என்பதை இங்கு பார்ப்போம். எமக்குக் கொடுக்கப்படும் இந்த உடல் அபரீத சக்தி வாய்ந்தது என்பதை ஏற்கெனவே ஒரு அத்தியாயத்திற் குறிப்பிட்டு இருந்தேன். மனம் அவாவும் எந்த ஒரு செயலையும் மனிதனின் உடல் செய்துவிடும். இதற்கு உதாரணங்கள் பல இருக்கின்றன.

தன்னைப் பரிசோதனை செய்து கொள்ளுபவன், தன்னுடைய தவறுகளை நினைத்து நொந்து கொள்ளுபவன் அதற்கு வழங்கப்படும் தண்டனையை சந்தோசமாக ஏற்றுக் கொள்கின்றான். பெரியவர்கள் அல்லது முனிவர்களின் வாயால் எதையாவது சொல்லும்போது அது நடந்துவிடும் என்பதைத் திடமாக நம்புகின்றான்.

இதனாலேயே சாபம் என்பது நடைமுறைப் படுத்தப்படுகின்றது. தன்னுடைய தவறுக்குப் பிராயச்சித்தமாகப் பெரியவர் சொல்லும் தண்டனையை மனமுவந்து ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிகின்றான். அவர்கள் தரும் தண்டனையை மகிழ்வுடன் ஏற்று அனுபவிக்கிறான்.

வரம் என்பதும் அதனைப் போன்றதே. ஒருவர் வாயினால் நல்லதைச் சொல்லும்போது, மிகுந்த சந்தோசத்துடன் அதனைச் செயற்படுத்துவதற்கு முன் நிற்போம். இதனாலேயே அந்த விடயம் எமக்குக் கைகூடி விடுகின்றது.

வரங்களும் சாபங்களும் இந்தக் காலத்தில் இடப்படுவதில்லையா என்று கேட்கலாம். ஏனில்லை? ஒருவனால் ஏதும் கெடுதியை அனுபவிக்கும்போது கையிலே மண்ணை அள்ளி சாபத்தைத் தருபவர்கள் எம்மிடையே இருக்கிறார்கள். அவர்களின் அதிர்வுகள் எங்களிடம் வந்து சேர்ந்து துன்பங்களைத் தருவதற்குத் தயங்குவதில்லை. இருப்பினும் அவற்றை சாபமாக நாம் உணருவதில்லை.

வரம் என்பது நேரடியாகச் சொல்லப்படா விட்டாலும் அவரவர் வாழ்த்துக்கள் மூலமும் உண்மையான புகழ்ச்சி மூலமும் இடம்பெற்றுக் கொள்கின்றன. பிறந்த நாட்களில் பிள்ளைகளை வாழ்த்துகின்றோம். அவர்களின் உச்சந் தலையைத் தொட்டு ஆசீர்வாதம் செய்கின்றோம். இவற்றின் காரணமாக மகிழ்ச்சியை அடையும் குழந்தைகள் நன்றாகக் கல்வி கற்று நல்ல நிலைக்கு வருகின்றனர்.

இன்பத்திலோ துன்பத்திலோ, கோபத்திலோ பாபத்திலோ பயனில்லா சொற்களைச் சொல்லிவிடல் ஆகாது என்று எமது மொழியிற் தரப்பட்டுள்ளது இதனாலேதான். நல்லதாகட்டும் தீயதாகட்டும். சொன்னது பலிக்கும் என்ற நிலைப்பாடு இருப்பதால் நல்லவற்றையே சொல்லவேண்டும் என்று நயமாகச் சொல்லியிருக்கிறார்கள் போலும்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"**

என்ற பொய்யாமொழி நல்லதைச் சொல்லவேண்டிய கட்டாயத்தை எடுத்துச் சொல்லுகின்றது.

ஒருவரால் மற்றவர்களுக்கு நல்லதை நினைக்கவும் செய்யவும் முடியுமாயின், போட்டி என்ற விடயம் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டுவிடும். போட்டிகள் குறையுமிடத்து சன்மார்க்க நெறியிலே சகலதும் அமைந்துவிடும். அனைவரின் வாழ்க்கையின் வெற்றி எமது வாழ்க்கையில் வெற்றியை மறைமுகமாகத் தந்துவிடும்.

•

## 12. தந்தையின் வயிற்றில் உதித்த தனயன்

கல்விஎன்பது ஒருவனுக்கு அறிவைக் கொடுக்கின்றது. வாழவேண்டிய உலகத்தையும் வகுக்க வேண்டிய வழிமுறைகளையும் காட்டுகின்றது. கற்றவனுக்கு அழகையும் சிறப்பையும் ஒருங்கே கொடுக்கின்றது.

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு.**

என்ற நாலடியார் கற்றவனுக்கு உரித்தாகும் அழகினைச் சொல்லி நிற்கின்றது. கற்றவர்களின் களிப்பும் முகத்திலுள்ள தெளிவும் அவர்களுக்கு அழகு தருகின்றது என்றும் கொள்ளலாம்.

இந்நாளில் பார்ப்போமானால் இலங்கை போன்ற நாடுகளில் தொழிலுக்குரிய மேற்படிப்பானது கடுமையான போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றது. அதனால் நல்ல தொழில் நிலையைப் பெறுபவர்கள் சிறந்த கல்விமான்களாகவும் கடும் முயற்சி உடையவர்களாகவும் இருக்கின்றனர்.

அவ்வாறான ஆண்களின் பெறுமதி கல்வியைப் பொறுத்தே மதிப்பிடப்படுகின்றது. ஆண்களின் படிப்பு, தொழில் என்பவற்றை வைத்து, ஒரு பெறுமதியைக் கொண்டு அவர்களுக்கு வரன் தேடுவதில் அனைவரும் முனைவர்.

தகுந்த பெறுமதியைக் கொடுக்க விழைபவர் மனையாளாகத் தெரிவு செய்யப்படுவர். ஆக இந்த இடத்தில் அவர் கற்ற கல்வியே அவருக்கு அழகையும் பெறுமதியையும் கொடுப்பதை எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.

ஒருவன் எந்தவொரு இடத்தில் பிறந்திருந்தாலும் வாழ்ந்திருந்தாலும் கல்வியால் மேல் நிலையை அடைவான் என்பதை வரலாறு காட்டி நிற்கின்றது. அவ்வாறு பெறுதற்கரிய செல்வம் ஒருவனிடம் அமைந்

திருக்கும் போது அவனின் நிலையைப் பாராது சென்று அதனைப் பெற்றுவிடவே அனைவரும் முனைந்திடுவர்.

முன்னொரு காலத்தில் மூன்று உலகங்களையும் ஆள வேண்டி தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நடந்தது. அசுரர்கள் அழிக்கப்படும்போது அவர்களின் குருவாகிய சுக்கிராச்சாரியார், சஞ்சீவினி என்னும் வித்தையைக் கொண்டு அவ்களை உயிர்ப்பித்தார்.

இந்த வித்தை தேவர்களுக்குத் தெரிந்திராத காரணத்தால், அவர்களுக்குப் பெரும் துன்பமாக இருந்தது. உயிர் காக்கும் மருந்தைத் தாமும் பெற்றுவிட முனைந்தனர்.

அவர்கள் ஒன்று கூடித் தமது குருவாகிய பிரகஸ்பதியின் மகனாகிய கசன் என்பவனிடம் சென்று, "நீங்கள் இளம் பிராயத்தினனாகவும், அழகு பெற்றவனாகவும் இருப்பதால் சுக்கிராச்சாரியரடம் சேர்ந்து, அவருக்குப் பணிவிடை செய்து, அவருடைய நம்பிக்கையையும் அவரின் மகளின் அன்பையும் பெற்று, சஞ்சீவினி வித்தையை எப்படியாவது கற்றுத்தர வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதற்கிணங்க கசனும் சுக்கிராச்சாரியரிடம் சென்று அவரின் சீடனாகத் தன்னை எற்றுக் கொள்ளுமாறு இறைஞ்சினான். தகுந்த சீடன் ஆசாரியாரிடம் தன்னை பிரம்மச்சாரியாக ஏற்கும்படி கேட்டால் மறுக்க முடியாது. அவர் அவனை ஏற்றுக் கொண்டார்.

அதன்படி பல வருட காலமாக கசன் சுக்கிராச்சாரியாருக்கும் அவரின் மகளான தேவயானிக்கும் சேவை செய்தான். அசுரர்கள் அதனை அறிந்து அவனை அழித்துவிடுவதற்கு முயற்சிகள் பல செய்தனர்.

ஒருமுறை அவனைப் பிடித்துக் கொண்டு துண்டு துண்டாக வெட்டி நாய்களுக்கு இரையாகப் போட்டுவிட்டனர். தேவயானியின் வற்புறுத்தல் காரணமாக சஞ்சீவினி வித்தையைப் பாவித்து, அவனை சுக்கிராச்சாரியார் உயிர்ப்பித்தார். மற்றொரு நாள் தேவயானிக்காக பூப்பறிக்க வனம்

சென்றபோது, அசுரர்கள் கசனைப் பிடித்துக் கொண்டு அவனின் உடலை அரைத்து சமுத்திர நீரிற் கரைத்துவிட்டனர். அம்முறையும் தேவயானியின் வேண்டுகோளுக்கு அமைய அவனை உயிர்ப்பித்தார்.

அடுத்த முறை அவனுடைய உடலை எரித்துச் சாம்பலாக்கி அந்தச் சாம்பலை மதுபானத்தில் சேர்த்துக் கலந்து சுக்கிராச்சாரியாருக்கே கொடுத்து விட்டனர். அவனைக் காணாத தேவயானி மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டிக் கொண்டாள். அவனை எங்கு தேடியும் கண்டிராத சுக்கிராச்சாரியார், தன்னுடைய வயிற்றுக்குள் அவன் இருப்பதைப் பார்த்ததும் நடந்ததை அவன் மூலமாக அறிந்துகொண்டார்.

மகானுபவரும் அளவறிந்த மகிமை உள்ளவருமாகிய சுக்கிராச்சாரியர், மதுபானத்தால் தாம் அடைந்த ஏமாற்றத்தை எண்ணிக் கோபத்துடன் எழுந்து இவ்வாறு சொன்னார்.

"எவன் அறிவின்மையால் மதுபானம் செய்கின்றானோ, அவனைத் தருமம் உடனே விட்டுவிலகும். எல்லோராலும் இகழப்படுவான். இது என்னுடைய முடிவு. இதையே இன்று முதல் ஜனங்கள் சாத்திரமாக வைத்துக் கொண்டு நடக்க வேண்டும்.

இக்காலத்தில் உலாவிவரும் கதை ஒன்றினையும் இந்தவிடத்தில் தெரிவிக்க நான் விரும்புகிறேன். ஒருவனிடம் ஒரு மது போத்தல், ஒரு பெண், ஒரு குழந்தை இவர்களைக் கொடுத்து, மதுவை உண்ணுதல், பெண்ணைச் சீரழித்தல் அல்லது குழந்தையைக் கொல்லுதல். இதில் உனக்கு ஏற்ற ஒரு பாவத்தைச் செய் என்று யாரோ சொன்னார்களாம்.

அவனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. பின் இரண்டு பாவங்களை விடவும், மதுவை அருந்துவது பாவம் குறைவானது என்று முடிவெடுத்து மதுவை அருந்தினான். பித்தம் தலைக்கேறியதும் அடுத்த இரண்டு பாவங்களையும் அவனாகவே செய்துவிட்டானாம்.

மது அருந்துதல் என்பது பாவங்களுள் தலையானது என்பதே இந்தக் கதையால் விளக்கப்படுகின்றது. மது அருந்துபவர்கள் முதலாவது

மதுப் போத்தலைத் தங்கள் விருப்பப்படி உட்கொள்ளுகின்றனர். அடுத்தடுத்த போத்தல்களை அதுவாகவே எடுத்துக் கொள்கின்றது என்று அறிந்தவர்கள் சொல்கின்றார்கள்.

பொய், கொலை, கள், களவு, காமம் என்னும் பஞ்சமாபாதகங்கள் விலக்கப்பட வேண்டியவை என்று சகல வேதங்களும் சாத்திரங்களும் சொல்லுகின்றன. இவை இந்து மதத்தில் மட்டுமல்ல அனைத்து மதத்திலும் விலக்கப்பட வேண்டிய விடயங்களாகவே இருக்கின்றன.

**பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும் என்றும்**

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு**
**பொய்யா விளக்கே விளக்கு**

என்பதும் பொய்யா மொழியாகும் புறத்தே இருக்கும் விளக்குகள் ஒன்றும் விளக்காக மாட்டா. சான்றோர்க்கு அகத்து இருள் நீக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும் என்று சொல்லியிருக்கிறார்.

இவ்வாறு பொய்யாமையை கடைப்பிடிக்கும் சான்றோர்கள் கள்ளுணப்பதையோ கள்ளையோ விரும்பமாட்டார்கள்.

**உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப்பட வேண்டாதார்.**

என்று சான்றோரால் நன்கு உணரப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம். என்றுமே பொருமைப்பட வேண்டியவன் எட்டி நின்றும் மதுவை நோக்கான் என்பது இதனாற் புலனாகின்றது.

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**கள்ஒற்றிக் கண்சாய்பவர்**

உறங்கினவர்கள் இறந்தவர்களைவிட வேறுபட்டவர்கள் அல்லர்.

அதேபோல மது அருந்துபவர்களும் அறிவு மயங்குவதால் நஞ்சு உண்பவர்களுக்கு ஒப்பாகிவிடுவர்.

போதையைப் பெறுபவர் உலகத்தவர்களால் இகழ்வது மட்டுமன்றி, தன்னுடைய உடலையும் ஆரோக்கியத்தையும் பணத்தைச் செலவழித்துக் கெடுத்துக் கொள்கின்றார். மது அவர்களுடைய உடலின் சமநிலையை இழக்கச் செய்கின்றது நரம்பு மண்டலத்தின் சமநிலையைக் குழப்புகின்றது.

அது மட்டுமல்ல, மனிதனின் உடலில் உணவு சேமிப்பகமாகிய ஈரலை இது தாக்குகின்றது. இதனால் உடலில் சக்தி சேமிப்பு என்பது இல்லாமற் போகின்றது. இது பலவீனத்திற்கும் பலவிதமான நோய்களுக்கும் காரணமாக அமைகின்றது.

குடி குடியைக் கெடுக்கும் என்று சொல்லுவார்கள். குடிப்பவனுக்குப் போதை மயக்கத்தில் கண்மண் தெரிவதில்லை. வீட்டுக்குத் தேவைக்கு வைத்திருக்கும் காசைக் கையாடச் சொல்லும். மற்றயவர்களிடம் இரந்து நிற்கச் சொல்லும் அனைத்து விதமான பாவங்களுக்கும் தூண்டி நிற்கும்

இவ்வாறாக மதுவை எடுக்கும்போது, போதை ஏறிப் போகும்போது தெரியும் உலக மயக்கம் தெளிவடைந்ததும் மற்றவர்களை வருத்தி நிற்கும். முன்னை விடவும் மோசமான நிலையை வழங்கிவிடும்.

இவ்வாறாகத் தனக்கு வழங்கப்பட்ட மதுவை எந்த எண்ணமும் இன்றிக் குடித்ததால் வந்த விளைவு சுக்கிராச்சாரியாரை உறுத்தியது. அந்த நேரத்தில் என்ன செய்யலாம் என்று சுக்கிராச்சாரியாருக்கு விளங்கவில்லை.

இக்கட்டான நிலையைத் திட்டமிட்டுத் தீர்ப்பதே சிறந்தது எனறு அவருக்குத் தோன்றியது. பலவாறாக எண்ணி அவர் இவ்வாறு திட்டமிட்டார்.

தனது வயிற்றுக்குள் இருந்த கசனுக்கு சஞ்சீவினி வித்தையை உபதேசம் செய்தார். அவன் அந்த வித்தையின் மூலமாக வெளியே

வரவும், சுக்கிராச்சாரியார் வயிறு கிழிந்து இறந்து கீழே விழுந்தார்.

கசன் மறுபடியும் அந்த வித்தையைப் பாவித்து சுக்கிராச்சாரியாரை மீட்டான். கசன் மீட்கப்பட்டதும் சுக்கிராச்சாரியர் உயிர்த்து எழுந்ததும், கசனுக்கு உயிர் காக்கும் வித்தை உபதேசிக்கப்பட்டதும் ஒரு சேர நடந்து நிறைவேறியது.

"வித்தையில்லாதவனுக்கு வித்தையைத் தந்த ஆசிரியர் தந்தை ஆவார். அதுவுமன்றி உமது வயிற்றிலிருந்து நான் சிசுவாகவே அவதரித்திருப்பதால் எனக்கு நீர் தாயுமாக ஆகின்றீர்" என்று சொல்லி நமஸ்கரித்தான்.

இவ்வாறு உயிர் காக்கும் வித்தையைக் கற்றுக் கொண்ட கசன் தொடர்ந்தும் சுக்கிராச்சாரியாருக்குப் பணிவிடைகளைக் குறைவறச் செய்தும், அவளுடைய மகளுக்கு ஒத்தாசை புரிந்தும் தன்னுடைய ஒழுக்கத்தைப் பேணி வந்தான்.

அவனின் ஒழுக்கத்திலும் நேர்மையிலும் பணிவிடையிலும் மனம் மகிழ்ந்த தேவயானி, அவனை பாணிக்கிரணம் செய்து கொள்ள விரும்பினாள். தன்னுடைய விருப்பத்தை கசனிடம் தெரிவித்தாள். அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

தன்னுடைய குரு தேவரின் புதல்வி என்பதாலும் அவளின் ஒழுக்கத்திலும் அளவு கடந்த மதிப்பை வைத்திருந்த கசனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவ்வாறான எண்ணம் அவளுக்கு வந்தது சரியல்ல என்பதை உணர்த்தி, அவளை ஆற்றுப்படுத்தினான்.

அவன் வந்த நோக்கத்தையும் நடந்து கொண்ட முறைமையும் கொண்டு அவனின் தர்மத்தைப் புரிந்து கொண்ட தேவயானி அவனை வற்புறுத்த விரும்பவில்லை. அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டாள்.

பல வருடம் தொடர்ந்து அவன் சுக்கிராச்சாரியரிடம் கற்றுக் கொண்ட படிப்பு முடிந்ததனால் கசன் தன்னுடைய உலகமாகிய தேவலோகம்

செல்லப் புறப்பட்டான். அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு தன் பாதையிற் சென்றுவிட்டான்.

நமக்கு நியாயமாகத் தோன்றிய போதும் முறை கடந்துவிடும் ஆசைகளாற்றான் அழிவுகள் வந்து விடுகின்றன. அவ்வாறாக ஆசைகள் எழும் கட்டத்தில் அவற்றைத் துடைத்துவிட்டு நேர்வழியில் நடப்பதே சிறந்தது.

உறவினர்கள் அல்லாத வேற்று ஆண்-பெண் இடையிலான தொடர்பு எப்பொழுதுமே திருமணத்தில் சென்று முடிவடைந்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமல்ல. அந்தத் தெளிவு அவர்களில் யாராவது ஒருவரிடம் எழுந்தால் மட்டும் போதுமானது. அனைத்துக் குழப்பங்களும் தீர்ந்து விடுகின்றன. ஆனால் அதையும் இதையும் சொல்லி அயலவர்களின் தேவையற்ற கதை முடிச்சுக்களைச் சுமந்து அந்த பந்தத்திற்குள் வலியவே சென்று இணைந்து கொள்பவர்களும் எம் மத்தியில் இல்லாமற் போவதில்லை.

சாதாரணமான பழக்கத்தையும் உண்மையான நட்பையும் சரிவரப் புரிந்து கொள்ளாமல் இருவரை அருகருகே கண்ணுறும் போதே இதுதான் என்று சொல்வதற்கு எமது சமுதாயம் தயாராக இருக்கிறது. எமது சமுதாயத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் அவ்வாறானது ஆகையால் அவற்றை விலத்தி நின்று பார்க்கும் மனநிலை எம்மைச் சார்ந்தவர்களுக்கு அத்தனை எளிதில் ஏற்பட்டு விடுவதில்லை. ஆனாலும் அந்த நிலைமை மாறவேண்டும்.

தமிழ் சமுதாயம் பெண்களைச் சுற்றி வளையங்களை அமைத்தது தவறல்ல. ஆனால், அந்த வளையங்களைச் சிறியதாக அமைத்து ஒவ்வொரு சிறிய செயலுக்கும் அதைத் தாண்டி வெளியே செல்வதைப் போன்று காட்டுவதுதான் தவறானது.

இன்றைய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப வளர்ச்சி எமது இளையவர்களை எங்கெங்கோ இழுத்துச் செல்வதற்குத் தயாராகின்றது.

பலவிதமான விடயங்களையும் அவர்களுக்குக் காட்ட முனைகின்றது. இந்த நிலையில் பெண்பிள்ளைகளை ஏதாவது காரணத்திற்காக வீட்டுக்குள் முடக்க முனைவதும், மறுபாலருடன் பழகும் வாய்ப்பை வழங்க விடாது இருப்பதும் அவர்களுக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். இது சமுதாயத்தினரிடையே அவர்களைப் பின் தள்ளுவதற்குக் காரணமாக அமையும்.

பெண்களுக்குத் தாராளமாக சுதந்திரம் வழங்கப்பட்ட ஒரு சில வரலாற்றுப் பகுதிகள் காட்டப்பட்டு இருக்கின்றன. சுதந்திரமாக உலாவி வந்தாள் என்ற வகையில் சாவித்திரியையும், வலிந்து நின்று வனத்துக்குச் சென்றாள் என்ற வகையில் சீதையையும், கணவனுக்காக வழக்குரைத்து நின்றாள் என்ற வகையில் கண்ணகியையும் ஓரளவு சுதந்திர உணர்வுடன் நோக்க முடிகின்றது.

மகா பாரதத்தைப் பொறுத்த வரையில் பெண்களை முன்னாகக் கொண்டு வந்து காட்டி அவர்களின் அழகை, அற்புதமாக எடுத்துரைத்து, அவர்களை சந்ததியைப் பெருக்குதல் என்ற ஒரு விடயத்திற்கு மட்டுமே பாவித்திருந்ததாக நான் ஏற்கெனவே எழுதியிருந்தேன். ஆனால் தேவயானி என்ற பாத்திரம் அவர்களில் இருந்து வேறுபட்டவளாக, முன்னோடியான ஒரு கதாபாத்திரமாக அமைக்கப்பட்டிருப்பது இங்கே கட்டாயமாகக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அனைத்து சுதந்திரத்துடன் ஆண்மகன் போலவே உலாவக் கூடியவளாக அந்தப் பெண்பாத்திரம் அங்கு இடம்பெற்று இருக்கின்றது. அவளின் முடிவுகள் கருத்துச் சுதந்திரம் மற்றும் தந்தையால் அவளுக்கு அளிக்கப்பட்டு இருந்த இடம் என்பன போற்றுதற்கு உரியதாக அமைகின்றது.

இன்னொரு விடயத்தை நாம் இங்கு கவனித்தாக வேண்டும். அசுர குரு சுக்கிராச்சாரியாரின் பிரியமான புதல்வி என்பதால் அவள் சாதாரணமானபெண்களைப்போல்அல்லாதுதனக்குவேண்டியவற்றைத்

தானாகப் பெற்றுக் கொள்ளும் வல்லமை உடையவளாகத் திகழ்ந்தாள். ஒரு பெண்ணுக்கு முதலில் அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டிய இடம் அவளின் குடும்பம் என்பது இதனாற் புலனாகின்றது. தனது முதலாவது இடத்தில் அதாவது குடும்பத்திற் கொடுக்கப்படாத சுதந்திரத்தையும் வசதிகளையும் வேறு எவ்விதமாகவும் அவர்கள் பெற்றுவிட முடியாது என்பது கண்கூடு

எத்தனை வருடங்களுக்கு முன்னாலே நிகழ்ந்திருந்தாலும் இந்தக் காலத்திற்கு உரிய பலவற்றை அப்பொழுதும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு சில விடயங்களைத் தவிர அனைவரின் வாழ்க்கையும் எந்தக் காலத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கின்றது. அவர்களிடையே போட்டா போட்டி மனப்பான்மையும் இன்றைய நாட்களைப் போலவே இருந்திருக்கின்றது.

மனித குலம் தோன்றிய காலத்தில் இருந்து இந்த போட்டிகள் குறைவடைந்தது கிடையாது. அவ்வாறு போட்டிகளினாற் சமர்களும் குற்றச் செயல்களும் இம்சைகளும் கொடுமைகளும் உருவாகாமல் விட்டதுமில்லை.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னதாக சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் மனிதாபிமானம் என்ற கோட்பாடு பின்பற்றப்பட்டு போரின் போட்டியின் உக்கிரப் போக்கு ஓரளவிற் தணிக்கை செய்யப்படுகின்றது. ஆனாலும் சர்வதேசத்தின் கண்களைக் கட்டிவிட்டு உள்ளுக்குள்ளாக நடத்தப்படும் சில மனித உரிமை மீறல்களும் அதாவது மனிதாபிமானம் அற்ற செயற்பாடுகளும் உலகில் இன்று குறைந்தபாடில்லை. இவையெல்லாம் சமுதாயத்தை வேருடனே விழுத்திவிடக் கூடிய புயல் காற்றைப் போன்றது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொண்டு இருக்கவேண்டும்.

# 13. ஏட்டிக்குப் போட்டியாகும் வாழ்க்கை

அண்ட வெளியில் இருந்த பெரிய கோளாகிய சூரியனை ஒரு பெரிய கோள் வந்து மோதியதால் அது துண்டு துண்டாகச் சிதறியது. அவ்வாறு சிதறடிக்கப்பட்ட துணிக்கைகள் சூரியனின் ஈர்ப்பு விசையினால் அதைச் சுற்றி ஒரு ஒழுக்கில் (நீள் வளையப் பாதையில்) சுற்றிவரத் தொடங்கின.

புவியின் தோற்றம் பற்றிய ஒரு சிலர் கூறிய கருத்துக்களில் இருந்து அவ்வாறு எடுக்கப்பட்டது. அவ்வாறு சிதறடிக்கப்பட்ட கோள்கள் காலப்போக்கில் குளிர்வடைந்து கல்லில் இருந்து மண்ணையும் மண்ணில் இருந்து கடலையும், கடலில் உயிரினத்தையும் அவ்வாறே கூர்ப்படைந்து அழகான உலகமும் தோற்றுவிக்கப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது.

இயற்கையில் அழகு சேர்ப்பதற்கு மரங்கள் செடிகள் கொடிகள் பூக்கள் என பல்லாயிரக்கணக்கான தாவரங்களை அமைத்து வைத்தார் இறைவன். தாவரங்களைப் பலவகையிலும் பல்வகை நிறத்திலும் அமைத்தார். விதவிதமான பட்சிகளையும் பிராணிகளையும் படைத்தார்.

அழகிய வானமும் அதை ஆர்வத்தோடு நோக்கி நிற்கும் பூமியும் அந்த இரு எல்லைகளுக்கு இடையில் கொட்டிக் கிடக்கும் பசுமை வீசும் சோலைகளுமாக ஒவ்வொன்றையும் படைத்த கடவுளுக்கு உலகம் உயிரோட்டம் இன்றிக் காணப்படுவது போல தெரிந்தது.

இயற்கையையும் அழகையும் உணரவும் ரசிக்கவும் அனுபவிக்கவும் ஆடவும் பாடவும் அடிக்கவும் கிழிக்கவும் ஏற்றவர்களாக அமைத்து நிற்க வேண்டுமென்று நினைத்தான். அந்த வேளையில் மனதனது படைப்பு உருவானது.

இயற்கையின் அழகினில் உணர்ந்தும் ரசித்தும் மட்டும் வாழ்ந்து கொள்ளும் மானுடனால் பண்டமில்லை. அனைத்தையும் மாற்றவும் ஆக்கவும் வேண்டுமென யோசித்தான். இதற்குப் பகுத்தறிவு மனிதனுக்கு

உருவாக்கப்பட்டது. பகுத்தறிவைக் கொண்ட மானுடன் பலவழிகளிலும் ஆற்றலைப் புலப்படுத்தினான். அவற்றில் இருந்து சரித்திரம் எழுந்தது.

சாதாரண மானுடனின் வாழ்வின் நின்றும் விலத்தி, சாகசங்களாகவும் சரித்திரங்களாகவும் வீரத்தையும் தீரத்தையும் வெளிப்படுத்துபவன் மக்கள் மத்தியில் பிரபலமாக உருவெடுத்தான். அவ்வாறு வீரத்தை ரசித்ததனாலே சத்திரியர்கள் எனும் குலத்தினர் உருவாக்கப்பட்டனர்.

இவ்வாறான சத்திரியர்களையும் அவர்களின் வாழ்வியலையும் மையமாகக் கொண்டே அநேகமான இலக்கியங்கள் எழுந்தன. அக்காலத்தின் காவியங்கள் பெரும்பாலும் அரச குலத்தினரைச் சார்ந்ததாக இருந்தது.

சுக்கிராச்சாரியாருடைய மகள் தேவயானியும், அசுர ராஜ கன்னிகைகளும் ஒரு நாள் வனத்தில் விளையாடிவிட்டு குளத்தில் நீராடிக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது காற்றடித்ததால் அனைவருடைய ஆடைகளும் ஒன்றாகக் கலந்து போய்விட்டன. நீராடிவிட்டு கரைக்கு வந்த விருஷ பர்வ ராஜாவின் மகளான சர்மிஷ்டை, தெரியாமல் தேவயானியின் ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டாள். இதைப் பார்த்த தேவயானி,

"அசுரப் பெண்ணே! மரியாதை தெரியாதவளாக இருக்கின்றாயே! சிஷ்யன் மகள், குரு குமாரத்தியின் வஸ்திரத்தை எடுத்து அணிந்து கொள்ளுவதா?" என்று கேட்டாள். பாதி உண்மையாகவும் பாதி வேடிக்கையாகவும் சொல்லப்பட்டு இருந்தாலும் இது ராஜகுமாரி சர்மிஷ்டைக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது.

"என் தகப்பனார் அசுர அரசன் முன்னால் உன் தந்தை தினமும் குனிந்து வணங்குவதை மறந்துவிட்டாயா? என் தகப்பன் கொடுத்ததை வாங்கிக் கொள்ளும் யாசகனின் பெண் அல்லவா நீ. நீ கையை ஏந்திக் கொள்ளும் ஜாதி. நானோ அள்ளி வழங்கும் குலம்" என்று பலவாறாக அவள் மிகக் கடுமையான சொற்களைப் பாவித்து ஏசத் தொடங்கினாள்.

கடுமையான வார்த்தைப் பிரயோகம் எவ்விதமான நன்மையையும் அழித்து விடுகின்றது. அது இருவருக்கிடையில் புரிந்துணர்வின்மையைப் பன்மடங்காகப் பெருக்கிக் கொண்டே செல்கிறது.

அவர்களுக்கு இடையிலே தொடங்கிய வாய்த் தர்க்கம், வரவர வலுத்துப் போய்விட்டது. கோபம் அதிகரிக்க சர்மிஷ்டை தேவயானியின் கன்னத்தில் அறைந்து தண்ணீர் இல்லாத ஒரு கிணற்றில் தள்ளிவிட்டாள். அவள் இறந்துவிட்டாள் என்றெண்ணி அசுரப் பெண்கள் திரும்பிப் பாராமல் அரண்மனைக்குப் போய்விட்டனர்.

கிணற்றில் தள்ளப்பட்ட தேவயானி, மேலே ஏற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தபோது, தற்செயலாக பரத குலத்தைச் சேர்ந்த யயாதி என்னும் சக்கரவர்த்தி அவ்வழியே வந்தான். வேட்டையாடிக் களைத்துப் போய், தாகத்துக்குத் தண்ணீர் தேடிக் கொண்டு அந்தக் கிணற்றுக்கு அருகில் வந்தான். கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தபோது உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அழகிய பெண்ணைக் கண்டான்.

அவளை யார் எனக் கேட்டபோது அவளும் தான் சுக்கிராச்சாரியாரின் மகள் என்பதைத் தெரிவித்து, தன்னை வெளியே தூக்கி விடுமாறு கேட்கவும், யயாதி கிணற்றில் இறங்கி அவளது வலது கையைப் பற்றி அவளை வெளியே தூக்கிவிட்டார்.

தன்னுடைய வலது கரம் பற்றி உயிர் காத்ததால், தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டிய அவளை ஆற்றுப்படுத்தி தனது இல்லம் செல்லுமாறு கட்டளையிட்டான். அதன் பிறகு அவன் தன் நகரத்திற்குச் சென்றுவிட்டான். தேவயானியோ வீடு செல்ல மனமில்லாது ஒரு இடத்தில் துக்கத்துடன் அமர்ந்து இருந்தாள்.

ராஜகுமாரி சர்மிஷ்டையின் செயல் அவளுக்குப் பெருத்த அவமான மாகத் தென்பட்டது. அதனால் தந்தையைப் பார்ப்பதற்காகவேனும் அந்த நாட்டுக்குச் செல்வதற்கு அவளுக்குப் பிரியம் வரவில்லை.

அவளின் வீணான தற்பெருமையை நினைத்துப் பார்த்தாள். அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பெருமைக்கு உரியவர்களை விடவும் அவர்களுடன் தொடர்புபட்டவர்களே அதன் பலனைத் தொடர்ந்து அனுபவிக்கின்றனர் என்ற விடயம் அவளுக்கு உறைத்தது.

அரச குடும்பத்தில் பிறந்துவிட்டதால் மட்டும் அவள் உயர்ந்து நின்றதாக அவள் சொன்னதை தேவயானியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அனைத்து அசுர குலத்து அரசர்களும் வாழ்வதற்கு வழிகாட்டுபவர் தன்னுடைய தந்தையே என்ற எண்ணமும் தீவிரமாக எழுந்தது.

தன்னுடைய தந்தையையும் மதித்திராத அசுர ராஜ குமாரத்தியின் வன்சொற்களும் தன்னைக் கையேந்தும் குலம் என்றதும், அவளுக்குத் தாங்க முடியாததாக இருந்தது. அவர்கள் இருக்கும் நாட்டின் பக்கமாகச் செல்வதைக் காட்டிலும் வனத்தில் வாழ்வது உத்தமம் என்று நினைத்து, அங்கே பார்த்துக் கொண்டு நின்றாள்.

மகளைப் பிரிந்த சுக்கிராச்சாரியார் மிகுந்த விசனம் கொண்டார். ஒரு பெண்ணை அழைத்து அவளைத் தேடி வருமாறு பணித்தார். வனத்தில் சுற்றிப் பார்த்த அப்பெண் தேவயானியைச் சந்தித்து என்ன நடந்தது என்பதை வினாவினாள்.

"அம்மணி! விரைவாகப் போய் என் தந்தையிடம் சொல். விருஷ பர்வனுடைய நகரத்திற்குள் இனி நான் காலடி வைக்க மாட்டேன்" என்று தேவயானி சொல்லிவிட்டு அவளை அனுப்பிவிட்டாள்.

அந்தப் பெண் இச்செய்தியைக் கொண்டு சென்று சுக்கிராச்சாரியரிடம் சொல்லியதும், செய்தியறிந்து மகளின் மீது அளவு கடந்த பாசம் கொண்ட தகப்பன் வனத்திற்கு ஓடோடியும் வந்தார்.

மகளை ஆரத் தழுவி "துக்கமும் சந்தோசமும் வெளி நிகழ்ச்சிகளில் இல்லை. நீ யாரையும் கோபிக்காதே. பிறருடைய குண தோஷம் எமக்கு

எதுவிதமான கெடுதலையும் உண்டுபண்ணாது" என்று சொல்லி அவளைத் தேற்றப் பார்த்தார்

இருந்தாலும் சர்மிஷ்டை நடந்து கொண்ட விதமும் அவள் தன்னைக் கையேந்தும் குலம் என்று சொல்லியதால் அவர்கள் ஆட்சி செய்யும் இடத்தில் தான் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்து தந்தையுடன் செல்வதற்கு மறுத்தாள்.

இவ்விடத்தில் மகளுக்கு உபதேசிப்பதைப் போல சுக்கிராச்சாரியர், உலகுக்கு உபதேசிக்க முனைகின்றார்.

அயலார் சொல்லும் நிந்தனைச் சொற்களை எவன் பொறுத்துக் கொள்ளுகின்றானோ அவன் உலகத்தை எல்லாம் ஜெயிப்பான். கடிவாளத்தைப் பிடிப்பது மட்டும் சாரதிக்குப் போதாது. குதிரையை அடக்கினால்தான் சாரதி. குதிரையை அடக்குவதுபோல வந்த கோபத்தை எவன் அடக்குகின்றானோ அவன்தான் வீரன் ஆவான். பாம்பு செட்டையை உரிப்பது போல வந்த கோபத்தை எவன் நீக்கி விடுகின்றானோ அவன்தான் ஆண்மை படைத்தவன்

பிறர் எவ்வளவு வருத்தினாலும் எவன் வருத்தாமல் இருக்கின்றானோ அவனே காரிய சித்தி பெறுவான். மாதம் தவறாமல் யாகம் செய்து கொண்டு நூறு வருட காலம் கழித்தவனைக் காட்டிலும், கோபிக்காதவன் மேலானவன் ஆகின்றான்.

கோபத்தைக் கொள்பவர்களுக்கு சிநேகிதனும், சகோதரனும், பாரியையும், பெற்ற புத்திரனும் விட்டு விலகிப் போவார்கள். தருமமும் சத்தியமும் எல்லாமே விட்டு விலகிப் போய்விடும்

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்**

தன்னையே அழிக்கவல்ல இந்தக் கோபத்திற்கு இடமளிப்பது முறையல்ல. அதன் விளைவுகளைக் கருத்திற் கொண்டு மற்றவர்களுக்குப்

பயன்படுவதற்காகவாவது நாம் நம்முடைய நடவடிக்கைகளை மாற்றியாக வேண்டும் என்று பலவாறாகவும் அவர் மகளுக்கு உபதேசித்தார்.

அவரின் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவம் அவளிடத்தில் காணப்படவில்லை. இதனால் சுக்கிராச்சாரியாருக்கும் அவளின் முடிவுக்கு இணங்குவதைத் தவிரவும் வேறு எவ்வழியும் தென்படவில்லை.

அதனால் நேரே விருஷபர்வனிடம் போனார். அவன் சிங்காசனத்தில் வீற்றிருந்தான். அசுரரின் பாவங்கள் எல்லையைக் கடந்து சென்றுவிட்டன என்றும் கசனைக் கொல்வதற்கு அசுரர்கள் பலவழிகளிலும் முயன்றதையும், தான் அவனைக் காத்ததையும் இறுதியில் தன் மகள் கிணற்றில் தள்ளப்பட்டதையும் சொன்னார். அதனால் தானும் மகளும் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிடுவதாகவும் சொன்னார்.

அதனைக் கேள்விப்பட்டு அரசன் திகைத்தான். தனக்கு எதுவும் தெரியாது என்றும் குலகுருவான அவர் தன்னைவிட்டு எங்கும் போகவேண்டாம் என்றும் வேண்டிக் கொண்டான்.

ஆனால் சுக்கிராச்சாரியாரோ தன்னுடைய மகளை சமாதானப்படுத்தினால் மட்டுமே தான் அவ்விடத்தில் தங்கிக்கொள்ள முடியும் என்பதைத் தெளிவாகச் சொன்னார். அதனால் தன்னுடைய சுற்றத்தாரை அழைத்துச் சென்று தேவயானியை சமாதானப்படுத்த அரசன் முயன்றான்.

"யாசிப்பவனின் மகள் என்று என்னைச் சொல்லிய சன்மிஷ்டை எனக்கு வேலைக்காரியாக அமைய வேண்டும். என்னுடைய பிதா என்னை எவ்விடத்தில் தாரை வார்த்துக் கொடுக்கிறாரோ அங்கே அவளும் வேலைக்காரியாக வரவேண்டும்" என்று தேவயானி பிடிவாதமாகச் சொன்னாள்.

சன்மிஷ்டையும் அவள் சொன்னதை ஏற்றுக் கொண்டு பணிந்தாள். தேவயானி எவ்வாறு ஆசைப்படுகிறாளோ அவ்வாறே நடக்கட்டும் என்றும் தன்னுடைய நடத்தையால் தந்தை ஆசாரியாரை இழக்க வேண்டாம்

என்றும் ஒப்புக் கொண்டாள். இதன்படி அவள் சமாதானம் அடைந்து மறுபடியும் சுக்கிராச்சாரியாரும் மகளும் நாட்டுக்குச் சென்றனர்.

தன்னுடைய காரியத்தைச் சாதித்து விட்டதாக தேவயானி அப்போது நினைத்தாள். ஆனால் பிந்நாளில் நடந்தேறிய சம்பவங்கள் அவளின் நிம்மதியை மேலும் குலைத்தன.

ஒருவரைப் பழிவாங்குவதற்கும் பழி தீர்த்துக் கொள்வதற்குமென நாம் வாழ்க்கையைப் பாவித்துவிடக் கூடாது. பக்குவம் அடைந்திடாத மனத்தினளாய் இருந்ததால் அவளுக்கு அப்போது புரிந்திருக்கவில்லை. தான் சொல்லியது, கேட்டது அனைத்தும் நடந்துவிட்டது. அதிலும் ராஜகுமாரியாகிய சன்மிஷ்டை வேலைக்காரியாக வந்துவிட்டாள் என்றது பெரும் மகிழ்ச்சியை உண்டு பண்ணியது.

பழிதீர்த்துக் கொள்ளும் நோக்கிலும் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத்துடனும் திருமணம் செய்து கொள்ளும் ஒரு சிலர் எம் மத்தியிலும் இவ்வாமற போய்விடவில்லை. கடந்த முப்பது வருடங்களாக நிகழ்ந்து கொண்டிருந்த அசம்பாவித சம்பவங்கள், இவ்வாறான பலவிதமான திருமணங்களையும் அதற்குப் பின் ஏற்படும் மனவுழைச்சல்களையும் மண முறிவையும் மட்டுமல்ல பல குற்றச் செயல்களையும் எமக்கு எடுத்துக் காட்டத் தவறவில்லை.

போட்டிகளை எல்லாவிடத்திலும் பாவித்து விடவும் முடியாது. அதுவும் குறிப்பாகக் கணவன் மனைவி என்ற விடயத்திலும் புகுந்த வீடு என்ற சூழ்நிலையில் போட்டி மனப்பான்மை இயல்பாகவே எழுவதுதான் அவற்றைக் குறைத்துக் கொண்டு, சந்தோசமாக இயங்குவதைப் பற்றியே கருதிற் கொள்ள வேண்டும்.

பெண்களுக்குப் போட்டி தொடங்கும் இடம், மணமான பின்பாக புகுந்த வீட்டிலேதான். பொதுவாகத் தன்னுடைய தாய் தந்தையருடன் வளரும்போது செல்லமாக வளர்க்கப்படும் அவள் திருமணமானதும் அனைத்துமே மாற்றப்படுகின்றன. புதிய உறவுகளையும் புது இடத்தையும்

பழகிக் கொள்வதற்குப் பெண் திண்டாடிக் கொள்ளும் அதே வேளையில், தன்னுடைய மகனின் பாசத்தில் குறுக்காக வந்துவிட்டாளே என்று விசனப்படும் மணமகனின் அன்னையைச் சமாளிக்க வேண்டும். இதன் அடிப்படையில் எழுந்ததே மாமியார் மருமகள் வாதம்.

மாமியாருடன் நின்று விடுவதில்லை. அங்கு மைத்துனிகளும் கிட்டத்தட்ட சம வயது உடையவர்களாக இருப்பதால் அவர்களிடமும் போட்டி உருவாகும். அவர்களைப் பற்றி இவளும் இவளைப் பற்றி அவர்களும் மாறி மாறி ஓதிக் கொண்டிருப்பதால் ஆண்மகனின் நிம்மதி குலைக்கப்படும்.

யாரைச் சமாளிப்பது என்று யோசியாமல் தன்னுடைய மனைவியைப் போட்டுத் தாக்கும் எண்ணம் அவனுக்கு எழுந்துவிடும். அவ்வாறு மனைவியையும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவன், வேறு பெண்ணைத் தேடி ஓடிவிடுவான்.

ஆக.. போட்டியாக எங்கோ ஆரம்பிக்கும் விடயம் வேறு எதிலோ சென்று முடிந்துவிடும். குடும்பத்தில் வெட்டுக் குத்துக்களைத் தவிர்ப்பதற்கேனும் போட்டி மனப்பான்மையைக் குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

அவ்வாறானதொரு மனநிலையில் வேலியிலே ஓடிக் கொண்டிருக்கும் ஓணானை யாராவது பிடித்து வீட்டுக்குள் விட்டு விடுவார்களா? அதுபோல ஒரு செயலைத்தான் தேவயானி அன்று செய்தாள். பழிவாங்கிக் கொள்ளவெனத் தம் வாழ்க்கையை யாரும் பலியிட்டுக் கொள்ளலாமோ?

தன் தோழியைத் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவள் விரும்பியதில் என்னதான் நியாயம் இருக்க முடியும்?

பொருளையோ அல்லது குழந்தையைப் போன்று அல்லவே! பெண்மைக்கு நேரம் வந்தால் பெண்மை என்றும் பெற்றவர் சொந்தமில்லை என்று சொல்லுவார்கள். ஒரு பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்க

வேண்டிய நேரத்தில் தானமாகப் பெற்றுச் சென்றால் அதன் விளைவுகள் என்னாகும்?

தன் சகோதரியையோ, மைத்துனியையோ அல்லது யாரும் உறவு முறைப் பெண்களையோ அவ்வாறு அழைத்துச் செல்ல முடியுமா? அவ்வாறு சென்றால் அவளின் வாழ்க்கை என்னவாகும்? கதைகதையாக எத்தனையோ புத்தகங்களிலும் சினிமாக்களிலும் பார்க்கவில்லையா?

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்துவிடல்**

என்ற உண்மையை அறிந்திராத பேதை என்பதால் விதிவழியே மதியைச் செல்லவைத்து வீணான துன்பத்தில் மாட்டிவிட்டாள். அதிகமாக ஆசைப்படும் ஆணும் அதிகமாகக் கோபப்படும் பெண்ணும் நன்றாக வாழ்ந்ததாக சரித்திரம் இல்லையாமே என்ற உண்மையை நிரூபித்துவிட்டாள்.

வளர்ந்து மங்கையாகிவிட்ட அவளுக்கும் மனது இருப்பதை அறிந்திடாது, அவளைப் பழி வாங்குவதாக நினைத்து தனக்குச் சேறு பூசிவிட முனைந்தாள். ஆனால் விளைவு..? அனைத்துப் பெண்களும் தங்களுடைய கண்களை அகலத் திறந்து வைத்திருக்க வேண்டிய தருணம் இது.

## 14. வளைந்து செல்லும் வாழ்க்கைப் பாதை

பக்குவமடையாத ஆத்மாவானது பாரிலுள்ள வளங்களைக் கொள்ளும்போது அதில் உண்டாகும் அபரிமிதமான பிடிப்பும் ஆசையும் அதன் வேடத்தை மறைத்து அதற்கு அடிமையாக்கிவிடும். அதுதான் உலகிலே உண்மையானது என்னும் மாயையைத் தோற்றுவித்துவிடும்.

மாயையில் இருந்து விலத்தி ஓடி முடியாத அவனின் மனது, அறுசுவை உடைய உணவைக் கண்முன்னே காட்டிவிட்டு, தட்டிப் பறித்துவிட்டதைப் போல உணர்ந்து கொள்ளும். அதை முழுமையாகப் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்துடனே தொடர்ந்து ஓடிக் கொள்ளும்.

மனிதனுடைய ஆசை என்பது கூட்டல் விருத்தியைப் போன்றது. ஏதோ சிறியதாக நிறைவேறும்போது பெரிது பெரிதாகக் கற்பனையில் வளர்த்துக் கொள்ளும். வானத்தை முட்டுவதாக வளர்ந்து வந்துவிடும். ஆனால் சிறு அடி விழுந்தாலும் பூமிக்குட் புதையுண்டதாக உடைந்துவிடும்.

இந்திர வாழ்வை அடைந்தவுடன் சாபத்தைப் பெற்ற ஒரு அரசன் என நகுஷனைக் குறிப்பிட்டிருந்தேன். நகுஷனுக்கு யயாதி, சங்கியாதி, பிரயாதி என்னும் புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனாகிய யயாதி, தரும தேவதையை நான்கு பாதங்களிலும் நடப்பித்து, தன்னுயிர் போல மன்னுயிரையும் பாதுகாத்து மனுசாத்திர விதிப்படி அரசாண்டு வந்தான்.

மற்றவர்களை அனுசரித்து அவர்களின் நலத்தைப் பேணி வருபவர்கள், எக்காலத்திலும் யாராலும் விரும்பத்தக்கவர்களாக இருப்பர்கள் என்பது உண்மை. அவ்வாறானவர்களுடன் பழக்கத்தை ஏற்படுத்தவும் அவர்களை உறவுக்காரர் ஆக்கவும் பலரும் முன்வந்து நிற்பர். அவர்கள் இளம் வயதில் இவ்வாறு செய்வார்கள் ஆனால் அவர்களைத் திருமணம் செய்துகொள்வதற்கு முண்டியடித்துக் கொண்டு வந்துநிற்பார்கள்.

முதல் அத்தியாயத்திற் குறிப்பிடப்பட்டது போல தேவயானி கிணற்றுக்குள் தள்ளப்பட்ட நிலையில் யயாதிச் சக்கரவர்த்தி வந்து அவளைக் காப்பாற்றி கிணற்றுக்கு வெளியே அழைத்து வந்தார் என்பதைக் குறிப்பிட்டு இருந்தேன். காலத்தின் கோலத்தால், அந்த யயாதியை மறுபடியும் தேவயானி, சந்திக்கும் சந்தர்ப்பம் அமைந்தது.

“எனது வலது கையைப் பிடித்துக் கரை சேர்த்த நீர் என்னை மணம் செய்துகொள்ள வேண்டும்” என்று மறுபடியும் யயாதியைக் கேட்டுக் கொண்டாள். யயாதியின் உலக அறிவு அவனை நிதானிக்கச் செய்தது.

ஆனாலும் சத்திரியன் ஒருவன் பிராமணப் பெண்ணைக் கைப்பிடிக்கலாகாது என்பது வழக்கமாகும். இதனால் தன்னால் திருமணம் செய்ய முடியாது என்பதைச் சொல்லவும், சுக்கிராச்சாரியரிடம் சென்று அவரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை தேவயானி தெரிவித்தாள். இதன்படி சுக்கிராச்சாரியாரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர்.

யயாதியும் தேவயானியும் வெகு நாட்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டாயிற்று. செல்வங்கள் பலவும் சூழ்ந்து கொண்டன. சிறப்பாக வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆனாலும் விதி வந்து இடைமறித்தது.

ஒவ்வொருவரினதும் வாழ்க்கைப் பாதையும் நேர் வழியாகவோ சீராகவோ இருந்துவிட்டால் வாழ்க்கையில் அனுபவங்கள் எழுவதில்லை. அவ்வாறு அனுபவங்கள் சேராதவிடத்து வாழ்வில் சுவை இருப்பதில்லை. இதனால் நிலைமாறும், தடம் மாறும் கட்டங்களை ஒவ்வொருவருடைய வாழ்விலும் இயற்கை புகுத்தியிருக்கும்.

சீராக ஓடிக் கொண்ட யயாதியின் வாழ்வில் ஒரு தடவை அவனைத் தனிமையிற் சந்தித்த சர்மிஷ்டை தன்னையும் விவாகம் செய்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டாள். அவளை தாசிப் பெண் என்று

நினைத்து அவன் மறுத்தபோது யயாதிக்கு தன்னுடைய பூர்வீகத்தை எடுத்துச் சொல்லி அவனை இணங்க வைத்தாள்.

தேவயானிக்குத் தெரியாமல் அவளை இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டான். அவர்களுடைய வாழ்விலே புத்திரர்கள் பிறந்திருக்கவும் சர்மிஷ்டையில் தேவயானிக்கு சற்று சந்தேகம் எழுந்தது. இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாத விதத்தில் சன்மிஷ்டை அவதானமாக இருந்தாள்.

களவியலில் ஈடுபடும் அனைவருமே தங்கள் நிலையை மற்றவர்கள் ஆதரிப்பர் என்ற தப்பான எண்ணத்துக்குச் சென்று விடுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் எழக்கூடிய பாரதூரமான விளைவுகள் அவர்களின் கண்களில் தென்படுவதில்லை.

வேறு வழியில்லாமல் யயாதியும் சன்மிஷ்டையும் இவ்வாறு இணைந்திருப்பார்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. அந்த வீட்டுக்குள் மட்டுமே வாழ்க்கையைக் கடத்த வந்த ஒரு பெண் எவ்வாறு தன்னுடைய நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதும் இங்கு யோசித்தாக வேண்டும். ஆராய்ந்து பார்த்தால் இந்த விளைவுக்கு முதற்காரணம் தேவயானியே என்பது புரிகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு சிறு வயதிற் படித்த ஒரு கதை நினைவுக்கு வருகின்றது. சிறுவர்கள் சிலருடன் விளையாடிக் கொண்டிருந்த ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன், ஒரு குகையருகில் வருகிறான். தன்னுடைய நண்பர்களைக் காணாத ஏக்கமும் தனிமையும் அவனுக்கு அச்சத்தை ஊட்டுகின்றது.

அந்த இடத்தில் யாரும் இருக்கிறார்களா என்று அறிய முயற்சி செய்கின்றான். "யாராவது இங்கு இருக்கிறீர்களா" என்று கேட்கவும் அதே வார்த்தை அவனுக்குத் திரும்பவும் கேட்கிறது. அவனுக்கு சந்தேகம் வருகிறது. சற்று உரத்த குரலில் மறுபடியும் கேட்கின்றான்.

அதே போன்ற உரத்த குரலில் திரும்பவும் கேட்கவும் அவனுக்குக் கோபம் வருகிறது. "டேய் யாரடா நீ? என் முன்னே வா" என்று கடுமையாகக் கேட்கின்றான். என்ன அதிசயம். அதே குரல் திரும்பவும் ஒலித்தது.

அவனுக்குக் கோபம் மேலிடவே அழுதழுது கொண்டு சென்று தந்தையிடம் சென்று அன்று நடந்தவற்றை எல்லாம் சொன்னான். தந்தை மகனுக்கு அறிவூட்ட எண்ணி, அவனை அழைத்துக் கொண்டு அந்த இடத்திற்கு வந்தார். தான் அருகில் இருந்தபொழுது அழைக்கச் சொல்லிச் சொன்னார்.

மகன் அழைத்ததும் அதே குரல் கேட்டது. "அதனால் பரவாயில்லை. என் ஆருயிர் நண்பனே என் எதிரே வா என்று இதமாகச் சொல்" என்றார். அவ்வாறே சொன்னபொது சிறுவன் வியந்தான். அரசன் புன்முறுவல் பூத்தான்.

"பார்த்தாயா. நீ எவ்வாறாகச் சொல்லி அழைக்கின்றாயோ, அதேபோன்று தான் எதிரொலியும் உனக்குக் கேட்கும். அன்பும் அடக்கு முறையும் உன்னாலே உருவாக்கப்படுகின்றது" என்று தந்தையார் சொன்னார்.

உலகமும் அவ்வாறுதான். எமக்கு எதிரொலியைப் போன்றே தொழிற்படுகின்றது. நாம் எவ்வாறு உலகை நோக்குகின்றோமோ, எவ்வாறு மற்றவர்களுடைய நலனைக் கருதுகின்றோமோ அவ்வாறே தான் உலகம் எம்மையும் பார்த்துக் கொள்ளும். இதனால் எல்லாரையும் ஏமாற்ற நினைப்பவன், தான் ஏமாற்றத்தைத் தேடுகின்றான்.

அடுத்தவரை ஒறுக்க நினைப்பவன் தானாக துன்பத்தைத் தேடிக் கொள்கின்றான். அதேபோல் அடுத்தவருக்கு நன்மை செய்ய நினைப்பவன் நல்லவனாக அனைவராலும் விரும்பப்படுபவனாக விளங்குகின்றான்.

தான் ஒலிப்பதுதானே தனக்கு எதிரொலியாக வந்து நிற்கும். அவளின் வயதையொத்த அவளது தோழியை தனக்குத் தாசியாக வரவேண்டும். அதுவும் தான் திருமணம் செய்து போகும்போது அவளும் கூடவர வேண்டும் என்று விரும்பியதும் தேவயானிதானே.

தேவயானி யயாதியை மணம் செய்துவிட்டு சந்தோசமாக வாழ்ந்து வந்துபோது கட்டுண்டு கிடந்ததைப் போல சன்மிஷ்டை துடித்தாள். அந்தக் கூண்டுக்குள் இருந்து வெளியேறி வந்து தன்னுடைய வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியவில்லை. தந்தை அவளுக்கு இட்ட கட்டளையும் தான் அறியாமற் செய்த தவறும் அவளை வாட்டி எடுத்தன.

பொருளாதார நிலை காரணமாகவும் பாதுகாப்பின்மை காரணமாகவும் தனது சகோதரர்களின் துணைகளைத் தமக்குத் துணையாக்கிக் கொண்ட ஒரு சிலரும் எம்மிடையே இல்லாமற் போகவில்லை. அவர்களும் இவ்வாறான இக்கட்டான நிலையிலேதான் இருந்திருப்பார்கள் என்று தோன்றுகின்றது. இருந்தாலும் அது உலக வழக்கிற்கு ஒப்பானதாக அமைவதில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் சர்மிஷ்டையால் செய்ய முடிந்ததையே அவள் செய்திருந்தாள். ஆனால் அதை உலகமோ சுக்கிராச்சாரியாரோ ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.. இதனால் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கவில்லை.

ஆனாலும் இரகசியமாக நாம் எதை வைத்திருக்க முனைகின் றோமோ, அது உடனடியாகவே அனைவருக்கும் தெரிந்து விடுகின்றது. மற்றவர்களுடைய வீட்டு விடயங்களில் ஒருவருக்கு இருக்கும் அக்கறை என்பதா அல்லது இரகசியம் பேண முடியாத மனிதனின் ஆவல் என்பதா?

யயாதிச் சக்கரவர்த்தி, தனது தாதியை இரகசியமாக மணம் செய்திருப்பது தேவயானிக்குத் தெரிய வரவே அவள் கோபத்திற் துடித்தாள். தனக்குத் தந்த வாக்குறுதியை சக்கரவர்த்தி மீறிவிட்டார் என்று தந்தையிடம் முறையிட்டுக் குற்றம் சுமத்தினாள். சுக்கிராச்சாரியார் கோபம் கொண்டு, யயாதிச் சக்கரவர்த்திக்கு மூப்பு உண்டாகட்டும் என்று சபித்துவிட்டார்.

நடு யௌவனப் பருவத்தில் இவ்வாறு மூப்பைப் பெற்றுக் கொண்ட யயாதி சுக்கிராச்சாரியாரைப் பலவாறு வேண்டிக் கொண்டான். தனது தவறைப் பொறுத்தருள வேண்டும் என்று இறைஞ்சினான். ஒரு பொழுது தன் மகளின் உயிரைக் காத்தவன் என்ற காரணத்தால் சுக்கிராச்சாரியார் சற்று மனமிரங்கினார்.

கொடுத்த சாபத்தை நீக்க முடியாது. ஆனால் மாற்றிக் கொள்ள முடியும். அவனது சாபத்தைப் பெற்று அனுபவிப்பதற்கு யாரேனும் முன்வந்தால் அதை மாற்றலாம் என்று சொன்னார். தனக்காக அவர்களுடைய இளமையைக் கொடுத்து முதுமையைப் பெற்றுக் கொள்பவன் யாரேனும் இருப்பார்களா என்று யயாதிக்குத் தெரியவில்லை.

பெற்றோரிடம் அபிமானம் வைத்துக் கொண்ட பிள்ளைகள் எப்படியும் அவர்களுக்கு வேண்டியதைச் செய்வார்கள் என்று யயாதி நினைத்தான். வேறு யாரிடமும் சென்று இரப்பதைப் பார்க்கிலும் பிள்ளைகளிடம் கேட்பது சிறந்தது என்று அவன் நினைத்தான். ஆனால் அவர்கள் பருவம் அடையாதவர்களாக இருந்தனர்.

அவர்கள் யௌவனப் பருவம் அடையுமளவும் பொறுமையுடன் காத்திருந்த யயாதி, தனக்குப் பிறந்த ஐந்து சத்திரிய குமாரர்களிடம் சென்று தனக்கு இளமையை வழங்குவதற்கு யாரேனும் தன்னுடைய முதுமையைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்று கேட்டான்.

யௌவனப் பருவம் என்பது உலக வாழ்க்கையின் ஆசைகளின் திறவுகோலாக விளங்கும் பருவம். அந்தப் பருவத்தில் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொருவருக்குமே உலக வாழ்க்கையில் எண்ணிறைந்த கனவுகள் எழுந்துவிடும்.

உலகின் அழகுகளைக் கண்கள் ரசிக்கத் தொடங்கிவிடும். தனக்குக் கிடைத்திருக்கும் அழகையெல்லாம் எண்ணிப் பெருமைப்படத் தொடங்கிவிடும். தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி கோட்டைகளையே கட்டத் தொடங்கிவிடும்.

இவ்வாறு யௌவனத்தை அடைந்துவிட்ட தன்னுடைய குமாரர்களை அணுகி தனது முதுமையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டான். தந்தையின் விசித்திரமான வேண்டுகோளை முதல் மூவரும் மறுத்துவிட்டனர். அதனால் தன்னுடைய நான்காவது மகனிடம் சிறிது காலத்திற்கு மட்டும் முதுமையை வாங்கிக் கொள்ளுமாறும், அதற்குப் பிறகு, இளமையையும் அரசாட்சியையுமே தருவதாகவும் சொன்னான்.

அவனும் மறுத்துவிடவும் யயாதி மிகவும் சோர்வை அடைந்தான். தன்னுடைய கடைசி மகனாகிய புருவிடம் சென்று தன்னுடைய வேண்டுகோளைச் சொல்லிக் கேட்டான். தந்தையின் சொல்லைத் தட்டாத அவனுக்கு அவரின் வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை.

அவனின் சம்மதத்தைத் தெரிவித்ததும் அவனை ஆரத்தழுவினான் யயாதி. அவ்வேளை புருவினுடைய இளமையை யயாதி பெற்றுக் கொள்ளவும், நரை திரைகளுடன் மூப்பை அடைந்தான் புரு. அவனின் உடல் கோரமான தோல் மடிப்புகளையும், நரையையும், தள்ளாமையையும் பெற்றுக் கொண்டது.

தனது இரு மனைவிமாருடன் சுகமாக வாழ்ந்து வந்தான் யயாதி. இருப்பினும் அவனுடைய வாழ்வில் சந்தோசமோ திருப்தியோ அடைந்த தாக அவனுக்குத் தோன்றவில்லை. தனக்காக இளம் வயதிலேயே இளமையைத் தந்துவிட்டு சொல்லொணாத் துயர்களைத் தாங்கி வாழ்ந்து கொண்டிருந்த மகனுடைய நிலைமை மனதை வருத்தியது. அவன் திரும்பவும் மகனிடத்து வந்தான்.

"பிரியமான மகனே. இளமையிலும் உடல் சுகத்திலும் ஒருவனுக்குள்ள ஆசை எவ்வளவு அனுபவித்தாலும் அடங்காது. அது மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கும். ஆனால் அதனால் சந்தோசம் ஏற்படாது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அதனால் பழையபடி என்னுடைய முதுமையைப் பெற்றுக் கொண்டு வெறுப்பு இல்லாத சாந்த நிலையை அடைய வேண்டும் என்று விரும்புகின்றேன்" என்று சொன்னார்.

அதன்படி அவரிடம் இருந்து இளமையைப் பெற்றுக் கொண்ட புரு, தந்தையிடம் இருந்து அன்பளிப்பாகப் பெற்ற தேசத்தை ராஜபரிபாலனம் பெற்று நற்கதியடைந்தான். யயாதி பன்னெடுகாலம் தவம் செய்து சுவர்க்கம் அடைந்தான்.

சாதாரணமாக ஒரு மனிதனுக்கு பதினெட்டு வயதில் தொடங்கிவிடும் இளமைப் பருவம் முதுமையின் உச்சத்தை அடையும் வரையிலும் தொடர்ந்து சென்றுகொள்ளும். அளவுகடந்த ஆற்றலும் எதையும் செய்யும் திறமையும், உலகத்தாருக்கு உதவும் பண்புகளும் என்று பலவிதமான ஆளுமைகளையும் புலப்படுத்த வைக்கும் பருவம் இந்த இளமைப் பருவம் ஆகும்.

எத்தனை வயது கடந்த பின்னும், எவற்றையெல்லாமோ அனுபவித்த பின்னாலும் இளமையைத் துறந்துவிட எவருக்கும் மனம் வருவதில்லை. அந்தக் காலத்தில் செய்யக்கூடிய அளவில்லாத விடயங்களினாலேயே அவ்வாறு எண்ணம் எழுகின்றது. ஆனால் யயாதியைப் போல சிற்றின்பத்திலே மூழ்கிக் கிடந்து இறுதியில் எஞ்சியது எதுவுமில்லை என்று சொல்லுபவர்களும் இருக்கின்றார்கள்.

இளமையை நன்கு பாவித்துக் கொள்ளுவதற்கு, இளையவர்களுக்கு உரிய நேரத்தில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு செய்யப்படாத விடத்து அவர்களின் ஆற்றல்கள் தேசவிரோதச் செயல்களை நோக்கிச் சென்றுவிடும். அவற்றினால் நாடு அனுபவிக்கும் தீவினைகளில் இருந்து அத்தனை சீக்கிரத்தில் மீண்டு கொள்ள முடியாது.

மக்கள் சேவையில் ஈடுபடுபவர்கள் இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். வருத்தமில்லா வாலிப வயதினரைக் குழப்பமில்லாப் பாதைகளில் இட்டுச் செல்வதற்கு தங்களால் ஆனவற்றைத் தாராளமாகவே செய்து கொடுக்க வேண்டும். அது எமது சமுதாயத்திற்கு தம்மால் செய்யப்படும் அரும்பெரும் செயலாகும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

## 15. கதா நாயகனின் முதல் நகர்வு

வாழ்க்கையின் ஓட்டத்தை ஓரளவில் ஆயினும் விளங்கிக் கொண்டவர்களே படைப்பாளிகளாக உருவாக முடியும். அதாவது கதையின் அமைப்பு, அனைவரைக் கவர்ந்திடும் கரு, கதையைக் கொண்டு செல்லும் விதம் என்பன நடைமுறைக்குப் பொருந்துவதாக இருக்கவேண்டும்.

ஒரு நிகழ்ச்சி ஒழுங்கு படுத்தப் படும்போது அதில் சம்பந்தப் பட்டவர்கள், ஆயத்தமாக வேனும் எதேச்சையாகவேனும் அந்த இடத்திற்கு வந்து விடுவர். எமக்கு முன் அறிவிப்பு இல்லாமல் இவ்வாறு நடக்கும் செயல்களுக்கு அதிஷ்டம் என்றோ நேரம் என்றோ பெயரை வைத்து விடுவோம். எம்மையும் மீறிய படைப்பாளியான வியாசர் தன்னுடைய கதாநாயகனின் வரவை இவ்வாறு சொல்கின்றார்.

ஒரு மாலை வேளையில், உலகிற்கு வளம் கொழிக்கும் கங்கா நதியருகில் உலாவிவந்த சந்தனுவின் மனதில், இயற்கையின் அழகுதரும் மகிழ்ச்சியில் மனம் இலேசாக சேர்ந்து கொண்டது. அந்த வேளையில் வெண்ணிற ஆடையுடைய மங்கை ஒருத்தி முன்வந்து நின்றிடக் கண்டான்.

மனதில் ஏற்பட்டிருந்த அமைதியும் அந்தி நேரக் குளுமையும், அந்த தேவதையைக் கண்ட உவகையும் அந்தவிடத்தில் வேறு யாரும் இருக்கவில்லை என்ற துணிச்சலும் அவனின் மனத்தில் இருந்ததை உதட்டுக்குக் கொண்டு வந்தன.

பெண்ணுடன் பழகும்போது பாவிக்கவேண்டிய மென்மையான சொற்பிரயோகத்துடன் தன்னை மணம் செய்து கொள்ளுமாறு அவன் அவளிடம் வேண்டிக் கொண்டான்.

அவளுக்கு உள்ளூர உவகை மேல் எழுந்தது. 'வீரத்திற் சிறந்த சந்தனுவா என்னுடைய அழகுக்கு கணப்பொழுதில் அடிமை ஆகிவிட்டான்!' என்று யோசித்தாள். இருப்பினும் நாடி வந்த நோக்கம்

அவளை நடப்புகளை எடுத்துச் சொல்ல வைத்தது. அவனைப் போன்று உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடாது, ஆறுதலான புன்னகையுடன் வாய் மலர்ந்தாள்.

முன்பின் யோசியாமல் சந்தனு கொண்ட கருத்து சாத்தியமாகுமா என்று கேட்டாள். அவளை அடைவதற்கு எந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பதை அவன் உறுதிப் படுத்தினான்.

அவனின் கருத்தை நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொண்டாள் அம்மங்கை. அவள் யார் என்று ஒரு காலமும் கேட்கக் கூடாது. அது மட்டுமல்ல அவள் என்ன செய்தாலும் அவளைத் தடுக்கக்கூடாது. எக்காரணம் கொண்டும் கோபிக்கக்கூடாது. பிரியமற்ற மொழிகளைச் சொல்லக்கூடாது. இவ்வாறு செய்யாது இருக்கும் வரை அவனோடு வாழ முடியும் என்பதை அவள் தெரிவித்தாள்.

அனைத்துப் பெண்களும் வேண்டும் நிபந்தனைகளாக இதனை மகா பாரதத்தில் சேர்த்திருக்கலாம் என்றே தோன்றுகின்றது. ஆனால் திருமணத்தில் பெண்ணுக்கு வேண்டியவை மறைமுகமாகவும் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைப்பதாகவும் இருக்கும்போது ஆணுக்குரிய நிபந்தனைகள் வெளிப்படையாகவும் தீர்க்கமானவையாகவும அமைந்து விடுவதை எவ்வாறு உறுதி செய்து கொள்ள முடியும்?

ஒப்பந்தம் செய்து கொண்டு வாழ்க்கையில் இணைவதாக ஒரு சில கதைகள் தற்போது சினிமாவிலும் புத்தகங்களிலும் இடம்பெற்று வருகின்றன. திருமணம் என்பதும் சட்டத்திற்கு முன்னால் ஒரு ஒப்பந்தமே. ஆனால் சட்டங்களை வகுப்பதற்கு முன்பாகவும் இவ்வாறு ஒப்பந்தத்துடன் திருமணம் செய்து கொண்டதாக மகாபாரதத்தில் காட்டியுள்ளனர்.

திருமணத்திற்கு முன்னால் எவ்விதமான நிபந்தனைகளையும் யோசனையின்றி ஏற்றுக் கொண்டு விடுவார்கள். ஆனால் அதில் பணம் சம்பந்தப் படக்கூடாது. வாழ்ந்து வரும்போதில் கொடுத்த வாக்கே நம்மை

ஏய்த்துவிட முனையும். இது சந்தனு மகாராஜாவுக்கும் விதி விலக்கு அல்ல.

அவள் சொன்னதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்ட சந்தனு அவளை முறைப்படி விவாகம் செய்து சிறப்புடன் வாழ்ந்து வந்தான். அவளின் வினயமும், ஒழுக்கமும், உபசாரமும் அவளின் நேர்மையான பாரபட்சமற்ற அன்பும் அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. அவளின் துணையுடனே இல்லறத்தை ஆண்டு வந்தான்.

இல்லற சாகரத்தில் முத்து முத்தாக குழந்தைகளைப் பெற்றெடுத்தாள் அப்பெண். சூரிய ஒளியைப் போன்ற தேஜஸ் கொண்ட அந்த சிசுக்கள் பிறந்தவுடனுமே அவற்றைக் கொண்டு சென்று கங்கை ஆற்றில் எறிந்துவிட்டு மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள்.

இந்த அருவருப்பான நடவடிக்கையைப் பார்த்து சந்தனுவிற்கு துக்கமும் கோபமும் மேலிட்டுப் பொங்கியது. ஆனால் அவளுக்குக் கொடுத்த பிரதிக்ஞையை மறந்து எதுவும் செய்ய முடியாதவனாக அவன் வாளாவிருந்தான். தன்னுடைய விம்பமான அந்த வாரிசுகள் பிறந்தவுடனேயே பெற்ற தாயினால் அழிக்கப்படுகின்றன என்று மனதிற்குள் குமுறிக் கொண்டான்.

ஏழு குழந்தைகளை இவ்வாறு கொன்ற பிறகு எட்டாவது குழந்தையை எடுத்துக் கொண்டு கங்கா நதியை நோக்கிப் புறப்பட்டாள் அப்பெண். அதுவரை காட்டிய பொறுமை எல்லையைக் கடந்து விடவே அவளுக்கு முன்னாக வந்து நின்றான் சந்தனு.

"நில். கொடியவர்களும் செய்யக் கூசும் இந்தக் காரியத்தை நீ செய்யலாகுமா? நீ என்ன அரக்கியா. பேயா பிசாசா? நீ யார்? எதற்காக இவ்வாறு செய்கிறாய்" என்று வெகுண்டெழுந்து கேட்கவும் புன்முறுவல் பூத்தாள் அப்பெண்.

இவ்வாறான கேள்விகளைக் கேட்கும்போது நாமும் சிரித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். ஏழெட்டு வருட வாழ்க்கையின்பின், குழந்தைகள் பெற்றதன் பின் மனைவியை சந்தேகப்பட்டு, கணவனை

சந்தேகப்பட்டு வாழ்க்கை விரயமாக்குபவர்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்கள். அதனால்தான் ஏழு வருடங்களின் பின் இல் வாழ்க்கையில் சலிப்பு வருவதாகப் பொதுப்படையாகச் சொல்லுகின்றார்கள்.

அதுவரை தேவனாகத் தேவதையாகத் தோன்றியவர்கள் அதற்குப் பின்னால் அரக்கராகவும் பேயாகவும் பிசாசாகவும் மாறிவிடுவது இல்லறத்தில்தானோ! இதனால்தான் ஒரு சிலர் தெரிந்த தேவதையைக் காட்டிலும் தெரியாத பிசாசே நன்று என்று சொல்லி வாளாவிருக்கின்றனர்.

மனப் பொருத்தமோ உடற் பொருத்தமோ உள்ளவர்கள்தான் தாமாகவே அல்லது சாத்திரப் பொருத்தத்தின் மூலமாகவோ இணைக்கப் படுகின்றனர். எவ்வாறாக வாழ்க்கை அமைக்கப்படாலுமே அதை ஏற்றுக் கொள்ள முதன் முறையில் அவர்கள் பழக்கப்பட்டு விடுகின்றார்கள்.

அதைத் தவிரவும் ஆண், பெண் என்ற இருவருக்கு இடையிலான கவர்ச்சியும் ஈர்ப்பும் ஆரம்பத்தில் இருந்து கொள்ளும். இது குறை குற்றங்களை நோக்காது அவர்களை பிணைத்து வைத்துக் கொள்ளும். மனிதர்களில் அதிகமானோர் இந்தப் பிரிவில் அடக்கப்பட்டு விடுவர்.

ஆனால் காலப்போக்கில் இந்த ஈர்ப்புக் குறைவடைந்து கொண்டே செல்லும். வெகுகாலப் பழக்கம் அவர்களிடையே உள்ள குற்றம் குறைகளை அறிய வைத்துவிடும். தொடர்ந்து குடும்பத்தில் ஏற்படுத்தப் படும் சுமைகள் தம்பதியரிடையே ஒருவரின் மீது ஒருவர் எரிந்து விழவும் வெறுப்பு அடையவும் செய்துவிடும்.

அவ்வாறானதொரு சாதாரண மனிதனாகவே சந்தனுவும் இருந்தான். அவனுடைய முதலாவது வாரிசை, பட்டத்திற்குரிய இளவரசை அந்தப் பெண் கொன்றபோது அவன் வாளாவிருந்தான். ஆனால் தொடர்ந்து அவள் அவ்வாறு நடந்து வந்தது பொறுக்க முடியாமலும், காலங்கள் கடந்து சென்றதனால் அவனுக்கும் ஈர்ப்புக் குறைந்து விட்டபடியால் இந்தச் செயலை எதிர்க்க வந்தான்.

தான் யார் என்பதையும் மறந்து கொடுத்த வாக்கையும் மறந்து உணர்ச்சிக்கு ஆட்படும் ஒரு சாதாரண மனிதனாகவே ஆகிவிட்டான்.

குற்றச் செயலைத் தடுக்க முயலும் ஒரு வேகமே அவனிடம் அப்போது இருந்தது. ஆனால் அவளோ அவனைப் பார்த்து சிரித்தாள்.

ஆயிரம் அர்த்தங்களுடன் அவனைப் பார்த்துப் புன்னகைத்த அப்பெண், "கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்ட மன்னவா. இனி உனக்கு நான் உரியவள் அல்லேன். நான் யார் என்கின்ற மயக்கம் விடு. என்னைப் பற்றிச் சொல்கிறேன்" என்றவாறு அந்தப் பெண் பேசத் தொடங்கினாள்.

"நான் அரக்கியோ பிசாசோ என்று நீயும் ஐயுறாதே. உலகையே போஷிக்கும் கங்கையுடைய அதிதேவதை நான். நான் உன்னைத் திருமணம் செய்ய வந்ததற்கும் குழந்தைகளைப் பெற்றெடுத்ததற்குமான வரலாற்றைச் சொல்கின்றேன். கேள்" என்றவாறே கங்காதேவி கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

ஆகாயத்தில் வசிக்கும் அஷ்ட வசுக்கள் ஒரு தடவை தம் மனைவி மார்களுடன் வசிஷ்டரின் ஆசிரமம் இருந்த மலைச்சாரலுக்கு வந்து அங்கே குன்றுகளிலும் வனங்களிலும் சஞ்சரித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது வசிஷ்டரின் பசுவாகிய நந்தினி மேய்ந்து கொண்டிப்பதை ஒரு வசுவின் மனைவி பார்த்துவிட்டாள்.

அதனைப் பிடித்துக் கொண்டு போவதற்கென ஆசைப்பட்டாள். ஆனால் அவளின் கணவனோ, "தேவர்களாகிய எமக்குப் பூவுலகத்துப் பொருட்கள் எதற்கு?. பசு முனிவருடையது. இந்தத் தபோவனத்திற்கு அவர் உடையவர். இதன் பாலைக் குடித்து அவர்கள் பயன் பெறுவார்கள். தேவர்களாகிய எமக்கு அதனால் பயன் ஒன்றுமில்லை." என்று சொல்லி அவளின் கோரிக்கையை மறுக்கப் பார்த்தான்.

அனால் அவளோ பிடிவாதமாக இருந்தாள். அதனால் ஏனைய வசுக்களுடன் சேர்ந்து, பசுவைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். வசிட்டர் ஆசிரமத்துக்குத் திரும்பியதும் தம் நித்திய கருமங்களுக்குத் தேவையான பசுவும் கன்றும் இல்லாதது கண்டு நிகழ்ந்தவற்றை தன்னுடைய ஞானக் கண்ணினால் அறிந்து கொண்டார். அவருக்குக் கோபம் எழுந்தது.

"பூவுலகத்துப் பொருளுக்கு ஆசைப்பட்ட அந்த எண்மரும் பூவுலகிற் பிறக்கக் கடவது" என்று சாபமிட்டார். அந்த சாபத்தை அறிந்துகொண்ட அந்த வசுக்கள் நிலைகுலைந்து விட்டார்கள். அவர்கள் வேகமாகத் தபோதனரிடம் வந்தனர்.

தங்களை மன்னித்துக் கொள்ளுமாறு இறைஞ்சினர். முனிவருக்கு அவர்களின் மீது பரிவு உண்டானது. இருந்தாலும் சாபத்தை மாற்ற முடியாதே. அதனால் களவுக்கு உதவி புரிந்த அந்த ஏழு பேரும் பூமியில் பிறந்தவுடனும் விடுதலை அடைவார்கள் என்றும், களவுக்கு முழுப் பொறுப்பாளியான பிரபாசன் மட்டும் பூமியிற் பன்னெடு காலம் இல்லற சுகமின்றி எல்லாப் புகழுடனும் வாழ்ந்து, ஈற்றில் தன் பழைய நிலையை அடைவான் என்று சொன்னார்.

இந்த வரங்களைப் பெற்ற அவர்கள் கங்கையை நாடி வந்தார்கள். தகுந்த கணவனை அடைந்து தங்களைப் பெற்றெடுத்து உடனடியாக விடுதலையை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு இசைந்த கங்கை சந்தனுவின் முன்னாலே கங்கைக் கரையில் தோன்றி அவனை மணந்து குழந்தைகளைப் பெற்றாள்.

கதையை இடைநிறுத்திய கங்கை மேலும் தொடர்ந்தாள்.

"இதோ இவன்தான் அந்த பிரபாசன். இவன் உலகில் பன்னெடு காலம் வாழப்பிறந்தவன். இவனைப் பதினாறு வயது வரை நான் வளர்த்துவிட்டுக் கொடுக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அவள் மறைந்தாள்.

காட்சியைக் கண்ட சந்தனு திகைத்து விட்டான். தன்னுடைய அவசர புத்தியினால் மனைவியை இழந்துவிட்டோம் என் வருத்தம் கொண்டான். அவளைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தான். கங்கைக் கரைக்குச் சென்று பிரமை பிடித்தவன் போல இருந்தான்.

திருமணம் எனப்படும் சட்ட ரீதியான ஒப்பந்தத்தில் ஆண்கள் மாறுவார்கள் ஆயின் இந்த கங்காதேவியைப் போல தனித்து சென்றுவிட, அதுவும் பச்சிளம் பாலகனுடன் சென்றுவிட எல்லாப் பெண்களாலும்

முடிவதில்லை. அவர்களுடைய பொருளாதாரமும் வாழ்வதிலுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளும் அவர்களை மௌனமாக்கி விடுகின்றன. இவ்வாறான விடயங்களைக் கண்டும் காணாமலும் அவர்கள் இருக்கப் பழகி விடுகின்றனர்.

பூவுலகத்திற்குப் பெண்களைப் போல் அல்லாமல் தேவலோகத்துப் பெண்கள் சுதந்திரத்துடன் காணப்பட்டதாக சரித்திரத்தில் காட்டப்படுகின்றது. அவர்கள் எண்ணப்படி வருகின்றார்கள். பிடிக்கா விட்டால் சென்றுவிடுகின்றனர். திருமணத்தின்போது அவர்களுடைய சுதந்திரம் கட்டப்படுவதில்லை என்பதைப் பல சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் இவ்வாறு குறிப்பிடுவது உண்மையில் தேவலோகப் பெண்களையா அல்லது ஆண்களின் அடிமைத்தனத்தில் சிக்காமல் சுதந்திரமாக நடமாடித் திரிந்த மானுடப் பெண்களையா என்றும் கேள்வி எழாமல் இல்லை. எதுவாக இருப்பினும், பெண்களுக்கு உரித்தான பேதமைக் குணங்கள் அவர்களிடம் சற்றுக் குறைவாகவே காணப்பட்டது என்று கொள்வதற்கு முடியும்.

கங்கையை நினைத்து சந்தனு உருகியதைப் போல வேறு ஆடவர் யாரும் உருகி நிற்பதில்லை. அதிலும் அந்நாளைய அரசர்கள் பலதாரம் என்பது மறுக்கப்படாத காலத்தில் வாழ்ந்தவர்கள். அவர்கள் உடனடியாக மறு தாரத்தைக் கொண்டு வந்துவிடுவர். ஆனால் சந்தனு அவ்வாறு செய்யவில்லை. பெண்களிடம் இருந்த ஆசையை விடுத்து, வைராக்கியத்துடன் இராச்சியத்தைப் பரிபாலித்து வந்தான்.

பதினாறு ஆண்டுகளின் பின்பாக கங்கைக் கரையில் நின்றவாறு சந்தனு தன்னுடைய இறந்த காலத்தைப் பற்றி நினைவு மீட்டிக் கொண்டு இருந்தபோது, தேவர்களைப் போன்ற அழகும் உடல்வாகும் கொண்ட ஒரு வீரனைக் கண்டான். அவனின் விளையாட்டு சந்தனுவின் கவனத்தை ஈர்த்தது.

ஓடிவந்து கொண்டிருந்த கங்கையின் பிரவாகத்தை அஸ்திரப் பிரயோகம் செய்து தடுத்துக் கொண்டிருந்தான். அவனை அவதானித்த

போது ஏதோ அவனுக்குத் தோன்றவும் பழைய சிரிப்பொலியுடன் கங்கை அங்கு பிரசன்னமானாள்.

அந்த வீரதீரமிக்க இளைஞன் சந்தனுவின் புதல்வனாகிய தேவவிரதன் என்பதைத் தெரிவித்து அவனிடம் ஒப்படைத்தாள்.

"பதினாறு வயது வரையிலும் என்னால் வளர்க்கப்பட்ட உன்னுடைய புதல்வன் இவன். வசிட்டரிடம் வேதங்களைப் பயின்றிருக்கின்றான். சுக்கிராச்சாரியாரிடம் சாத்திரங்களைக் கற்று அறிந்திருக்கிறான். பரசுராமரிடம் விற்பயிற்சி பெற்றிருக்கிறான். வில்லாளியும் வீரனும் ராஜநீதிகளை அறிந்தவனுமாகிய உன்னுடைய புத்திரனை அழைத்துச் செல்" என்று சொல்லிவிட்டு கங்கை மறைந்து விட்டாள்.

அன்னையோ தந்தையோ ஒரு பிள்ளையைத் தனித்து வளர்த்து எடுப்பது என்பது அந்தக் காலத்திலும் நடக்காத ஒன்று அல்ல என்பதை இச்சம்பவம் காட்டி நிற்கின்றது. தனித்து பெண்ணாக வளர்த்து எடுத்த அந்தத் தேவவிரதன் பிற்காலத்தில் பாரதத்தையே கலங்க வைக்கும் நாயகனாக மிளிர்ந்து நின்றான்.

ஒப்பீட்டளவில் பெற்றோர் தமக்குள் ஓயாமல் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போது வளரும் பிள்ளைகளை விடவும், தனியாக தந்தையுடனோ அல்லது அன்னையுடனோ வளர்க்கப்படும் பிள்ளைகள் சிறந்த மன வளர்ச்சி உடையவர்களாக இருக்கின்றனர் என்பதை இன்றைய ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

இதற்கு ஐந்தாம் வேதமாகிய மகா பாரதத்தில் இருந்தும் சான்றுகளைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. தேவவிரதன் மட்டுமல்ல குரு குலத்தின் வாரிசுகளாகத் தோன்றி பின்நாளில் உலக சரித்திரம் படைத்த பாண்டவர்களும் அன்னையினால் வளர்க்கப்பட்டவர்களே.

இனி அன்னை என்னும் சுமைதாங்கியை அனைத்து சோகங்களுக்கு இருப்பிடமான மானுட அன்னையை நோக்குவோம்.

# 16. தேவர்களுக்கு மேலாக மானுட அன்னை

இயற்கையிலுள்ள அனைத்துப் படைப்புக்களிலும் மேலானது அன்னை என்னும் படைப்பு. ஒரு சுமை என்ற உணர்வின்றி உதரத்தில் தாங்கி, சுவை முதற்கொண்டு தன்னுடைய சுகம் அனைத்தையும் பிள்ளைக்காக அர்ப்பணம் செய்து, உடல் நொந்துபோக மகவைப் பெற்றெடுத்து, எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி வளர்த்தெடுக்கும் அன்னைக்கு ஈடாக எதனையும் சொல்லிவிட முடியாது.

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை" என்பது முதுமொழி. நமக்கு அனைத்துமாக கைகூப்பி வணங்குவதற்கு ஒரு உருவம் தேவையேல் அது அன்னையின் உருவமாக இருக்கட்டும் என்பது மானுடப் பிரிவினரின் எண்ணம்.

இறைவன் தன்னுடைய அன்பை அனைவரிடம் பெறச் செய்வதற் காகவே அன்னை என்பவளைப் படைத்தான் என்று அறிந்திருக் கின்றோம். ஆனாலும் இறைவனையும் காட்டிலும் அன்னையின் பணி அளவிட முடியாதது. இதனாலேயே உலகைச் சுற்றிவரச் சொன்னபோது தன்னுடைய அன்னையையும் தந்தையையும் சுற்றிவந்து வணங்கிய விநாயகர் ஞான(ப்பழ)த்தைப் பெற்றார் என்று புராணம் சொல்லுகின்றது.

சந்தனுவைச் சேர்ந்து பீஷ்மன் முதலாகிய எட்டுக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆகாய கங்கை பூமிக்கு வருகின்றாள். ஏன் சத்திரியப் பெண்கள் இல்லையா என்ற சந்தேகம் யாருக்கும் வரலாம். ரகு வம்சத்திலே ஆண்கள் மட்டுமே அழிக்கப்பட்டனர். பெண்களுக்கு எவ்வாறு பஞ்சம் ஏற்பட்டது என்று யோசிக்கலாம்?

அஷ்ட வசுக்கள் செய்த அநியாயத்திற்காக அவர்களை பூமியிற் சென்று பிறக்குமாறு வசிட்டர் சாபமிட்டு இருந்தாலும், அவர் சாபத்திற்கு ஒரு விமோசனத்தையும் சொல்லியிருந்தார். அதாவது பிரபாசன் என்கின்ற ஒரு கந்தர்வனை விடவும் அனைவரும் பிறந்தவுடனுமே விடுதலை பெறுவர் என்றும் பிரபாசன் மட்டும் பன்னெடுகாலம் வாழ வேண்டும் என்றும் சொன்னார்.

பூமியிற் பிறந்த உடனும் விடுதலை பெறுவது என்பது, அன்னையின் உடலில் வெளியே வந்ததும் அவர்களைக் கொன்று விடுவதாகும். இத்தகைய செயலை மானுடப் பெண் செய்ய மாட்டாள். எந்த வறுமையில் பிள்ளையைப் பெற்றவளும், தான் பெற்ற பிள்ளையை எக்காரணம் கொண்டும் கொன்றுவிட மாட்டாள்.

கிருஷ்ணாவதாரத்திற்கு முன்பதாக தேவகியின் வயிற்றில் தோன்றிய ஆறு பிள்ளைகளை கம்சன் அடித்துக் கொன்றதாகவும், ஏழாவது பிள்ளையாகிய பலராமனின் உருவாக்கத்திற்கு வேண்டிய கரு தேவகியின் வயிற்றில் இருந்து உரோகிணியின் வயிற்றுக்கு மாற்றப்பட்டதாகவும், எட்டாவது குழந்தையாகிய கண்ணனின் பிறப்பு நெருங்கியபோது மிக பாதுகாப்புக்கு மத்தியில் வசுதேவரையும் தேவகியையும் வைத்திருந்ததாகவும் கண்ணனின் வரலாறு சொல்லுகின்றது. அந்த இடத்தில் குழந்தைகளைக் கொல்லுபவனை அரக்கன் என்று சொன்னார்கள்.

அத்துடன் நிற்கவில்லை. பிறந்த குழந்தையைப் பால் கொடுத்துக் கொல்வதற்காக பூதகி எனப்படும் அரக்கி ஒருத்தி கம்சனால் அனுப்பப்படு கின்றாள். வேறு பல அரக்கர்களும் இதே நோக்கத்துடன் படையெடுத்து வருகின்றனர்.

உயிர்களைத் துன்புறுத்துதல், உயிர்க் கொலை செய்தல், மற்றவர் களுடைய துன்பத்தைப் பார்த்து இரசித்தல் போன்ற காரியங்களைச் செய்பவர்கள் அரக்கர்கள் என்று அந்நாளில் கருதப்பட்டனர். அவர்களுக்கு இருக்கும் திறமை, வீரம், ஆற்றல் என்பவற்றைத் தீய வழிகளில் பயன்படுத்தி மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதில் அவர்கள் முன் நிற்பவர்களாக இருந்தார்கள்.

இதனால் கங்கையின் செய்கையைக் கண்ணுற்ற சந்தனுவுக்குக் கோபம் வந்தது. "நீ என்ன அரக்கியோ பேயோ பிசாசோ" என்று தன்னையறியாமலே கேட்டுவிட்டான்.

சந்தனு ஒரு மானுடச் சக்கரவர்த்தி. அன்னையரின் அன்பையும் அரவணைப்பையும் நன்கு தெரிந்து கொண்டதனால் அவ்வாறு கேட்டான். அன்னையருக்கு உரிய வடிவமும் இடமும் பூவுலகிலே அழகாக சித்தரிக்கப்பட்டு இருப்பதனால் அவ்வாறு கேட்டான்.

பிரசவத்தின்போது ஒவ்வொரு பெண்ணும் மறுபடியும் பிறக்கிறாள் என்று சொல்லுவார்கள். முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து, அங்கமெல்லாம் நொந்து பெற்றுக் கொள்ளும் மகவை அன்னையர் தூக்கி எறிவதில்லை. தன் நோவைப் பொருட்படுத்தாது, தன்னுடைய நலத்தைப் பாராது இரவிரவாகக் கண்விழித்து பிள்ளையைப் பெற்றெடுப்பாள் அன்னை.

கூனோ, குருடோ, செவிடோ, முடமோ என்று பாராமல் பிள்ளைக்குப் பாலூட்டுவாள். அது தரும் தொந்தரவுகளை எல்லாம் இன்பமாகக் கொண்டு அதை அரவணைப்பாள்.

வயிற்றுக்குள் இருந்து கொண்டு அது உதைக்கும் பொழுதினில், பிள்ளையின் ஊசாட்டம் தெரிகின்றது என்று சொல்லி நிம்மதியடைவாள். குழந்தையின் பாரத்தை சந்தோசமாகத் தாங்கி பூமாதேவிக்கும் மேலாவாள்.

அன்னை என்று பொதுப்படையாகவே சொல்லி நின்றாலும் மானுட அன்னை தேவர்களுக்கு மேலான இடத்தைப் பெற்றுக் கொள்கின்றாள். எவ்வாறு எனக் கேட்கின்றீர்களா?. பூமியின் பாரம் அதிகரிக்கும்போது அதைச் சுமக்கும் தேவ அன்னை பூமாதேவி தன்னுடைய பாரத்தைக் குறைப்பதற்காக அவதாரம் எடுக்குமாறு பகவானைத் தூண்டிநிற்பாள் என்று புராணங்கள் சொல்லுகின்றது.

அதாவது உலகில் நல்லன பெருகி மக்கள் சந்தோசமாக வாழ்ந்து அளவில் பெருகும்போது, அந்தப் பாரத்தைத் தாளவியலாமல் பூமாதேவி சென்று பகவான் கிருஷ்ணரிடம் முறையிடுவாள். அந்த வேளையில் காக்கும் கடவுள் அவதாரம் எடுத்து துஷ்டர்களை அழிக்கின்றேன், அதர்மத்தை ஒழிக்கின்றேன் என்ற பெயரில் பூமியின் பாரத்தைக்

குறைத்து விடுவார்களாம்.

ஆனால் தன்னுடைய குழந்தை எத்தனை சுமையானது ஆயினும் அதைப் பாரமாக மானுட அன்னை நினைப்பதில்லை. மார்பில் தோளில் சுமந்து அவர்களை வளர்த்தெடுத்து நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு அவள் போராடிக் கொண்டிருப்பாள். எக்காரணம் கொண்டும் தனது சுமையைக் குறைப்பதற்காக குழந்தைகளை அழிப்பதற்கு அவள் விடுவதில்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தன் குழந்தை பாரமென மானுடப் பெண் நினைத்திருப்பாளா? அல்லது மானுடப் பெண் பூமியைத் தாங்குவதாக இருந்தால், அடிக்கடி அழிக்கப்பட்டும் பாரம் குறைக்கப்பட்டும் நடைபெறும் எந்த நடவடிக்கையும் நடைபெறுமா?

தேவர்களிடம் இல்லாத உயர்ந்த பண்பும் அன்பும் இருப்பதால் அவர்களிலும் உயர்ந்த ஸ்தானம் மானுடப் பெண்ணிடம் இருக்கின்றது என்பதற்கு வேறு என்ன உதாரணத்தைச் சொல்லிக் கொள்ள வேண்டும்?

இதனால் பிறந்தவுடனும் பிள்ளையைக் கொல்லுவதற்கு மானுடப் பெண் உடன்பட மாட்டாள் என்ற காரணத்தினால் கங்கையை உலகிற்கு கொண்டு வந்தனர். அவள் முதலில் பிறந்த ஏழு பேருக்கும் பிறந்தவுடனும் விடுதலையை அழித்துவிடவும், எட்டாவது பிள்ளைக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட சாபத்தின்படி அவர் பன்னெடுங்காலம் பூமியில் வாழவேண்டி ஏற்பட்டது.

பூவுலக அன்னையரின் மகிமை சொல்லில் அடங்காது. ஒரு நாள் தாமதமாகப் பிறந்தால் மகன் சிறப்பினை அடைவான் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட ஒரு அரசி தனது காலைத் தலைகீழாகக் கட்டித் தூக்கும்படி சொல்லி, ஒரு நாள் கழித்துப் பிள்ளையைப் பெற்றுவிட்டு, தான் இறந்துவிடுகின்றாள். பிள்ளையின் எதிர்காலத்திற்காக உயிரையே விடத் துணிந்த அன்னையரை வேறு எந்த உலகிலாவது கண்டுகொள்ள முடியுமா?

பல ஆண்டு காலம் தவம் செய்தேனும் அல்லது நடு இரவில் ஒரு பிணத்தின் மீது அமர்ந்து கொண்டு மந்திரத்தைப் பயமில்லாமல் ஓதுபவனுக்கு சிறப்புக் கிடைக்கும் என்ற செய்தியைக் கெள்விப்பட்டாள் ஒரு அன்னை. அவளின் ஐந்து வயது மகன் சிறப்பாக வாழவேண்டும் என்று எண்ணினாள்.

மகனுக்குப் படிப்படியாக மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தாள். மகன் நன்கு கற்றுக் கொண்டதும் ஒரு நாள் அவனை இருட்டியதும் வெளியில் அழைத்துச் சென்று அவனுக்குப் பாலூட்டிவிட்டு தனக்கு மேல் உட்கார வைத்து மந்திரத்தைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கும்படி சொன்னாள்.

அன்னையின் மீது இருப்பதால் பயமில்லாதவனாக அவன் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். தான் நினைத்தவாறே நடந்ததைக் கண்டதும் கொண்டு சென்றிருந்த வாளை எடுத்துத் தன் தலையை வெட்டிவிட்டு உயிர் நீத்தாள் அப்பெண்.

அவளின் தியாகத்தை மெச்சிய கடவுள் அவனுக்கு உயிர்கொடுத்து மகனுக்கு அனைத்துப் பேற்றையும் அளித்தார். அந்த அன்னையின் தியாகத்துக்கு நிகராக வேறு எதனையும் சொல்லிக் கொள்ள முடியாது.

பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்கிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் கால்களிலே சக்கரத்தைக் கட்டிக் கொண்டு திரியும் அம்மாமார் எம் மத்தியிலே இல்லாமற் போகவில்லை. மூன்று வயது நிரம்பியவுடனும் படிப்புக்காக அவர்களை அழைத்துக் கொண்டு வெயிலில் உழலும் அம்மாமாரே இந்நாட்களில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இலவசக்கல்வி அருமையாக வழங்கப்படும் இந்தக் காலத்திலும் பிள்ளைகளின் வாழ்க்கைக்காக அவர்களைக் கொண்டு திரிந்து, அவர்களின் பாடங்களைத் தாங்கள் படித்து, அவர்களுடைய பாடவேளைகளை மனப்பாடம் செய்து அவர்களுடன் சேர்ந்து படித்துக் கொள்ளும் அம்மாமாரே இன்று பெருமளவிற் காணப்படுகின்றனர்.

அவர்களின் தன்னலமில்லா சேவையை யாரும் உணர்ந்து கணக்கிட்டுக் கொள்கிறார்களா என்பது கேள்விக் குறி....?.

இந்த மாயப் பூவுலகிற்கு வருவதற்கு இவ்வாறானதொரு வழியை அமைத்தது இதற்குத்தானா என்று எண்ணத் தோன்றுகின்றது. அன்னை- தந்தை என்ற இருபாலரின் பங்களிப்புடன் கருவறைக்குள் பத்திரமாக வைத்தெடுத்து, மடியில் தவழ வைத்தது இதற்குத் தானா?

இவ்வுலகை ஒரு விளையாட்டு மைதானமாகக் கருதிக் கொண்டால் இதற்குரிய ஒரேயொரு நுழைவாயில் அன்னையின் கருவறைதான். யாரும் வானத்தில் இருந்து குதித்து வந்ததாகக் காட்டவில்லை. எந்த ஒரு மகானும், முனிவனும் தேவனும் ஏன் இறைவனுமே இந்த வாசலின் வாயிலாகவே பூவுலகிற் சஞ்சரிக்க வருகின்றார்.

தேவர்களுக்குக் கிடைக்காத அந்தப் பாக்கியம் மானுடனுக்கு மட்டுமே கிடைக்கின்றது. மானுடம் என்பதே அன்பு மார்க்கத்தையே சொல்லி நிற்கின்றது. அன்னையின் கையில் தொடங்கும் அன்புச் சிறை தந்தையின் கவனிப்பில் வலுப்பெற்று, உலகை வீரத்துடன் பார்க்க வைக்கின்றது. பெற்றோரால் வழங்கப்படும் ஆதரவும் சுதந்திரமும் ஒரு பிள்ளையை எங்கோ கொண்டு செல்கின்றது.

மேனகை என்கின்ற தேவலோகப் பெண் விசுவாமித்திரரின் தவத்தைக் கலைக்க வரும்போது சகுந்தலை என்கின்ற பெண்மகவைப் பெற்றுவிடுகின்றாள். ஆனால் என்ன பயன்... தேவலோக அன்னையிடம் பிறந்ததால் அன்னையின் அரவணைப்பின்றி அநாதையாகவே வளரும் நிலை சகுந்தலைக்கு ஏற்படுகின்றது.

சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய முருகனை பெற்றோர் வளர்த்திருக்கவில்லை. உலகைக் காக்கும் பரம சிவனுக்கும் பராசக்திக்கும் பிள்ளையை வளர்த்தெடுக்க முடியவில்லை. கார்த்திகேயனைக் கார்த்திகைப் பெண்களே வளர்த்து எடுத்து இன்று வானில் நட்சத்திரமாக மிளிர்கின்றனர்.

அந்த வகையில் நாங்கள் அதிஷ்டசாலிகளே. பெற்றோரின் பிடிக்குள் வாழ்ந்து வரும் பேறு பெற்றவர்களே. பெற்றோராலும் நல்லதையும் கெட்டதையும் உணர்ந்து கொள்ளும் பெருமை பெற்றவர்கள். வாழ்வுக்கு வழிகாட்டியாகப் பெற்றோரைப் பின்பற்றும் பேறு பெற்றவர்கள்.

அன்னையின் அரவணைப்பில் அனுபவிக்கும் குழந்தைப் பருவம் என்பது எந்த நேரத்தில் எண்ணிப் பார்த்தாலும் சந்தோசத்தை ஏற்படுத்தும் கால கட்டமாகும். கவலைகள் எதையுமே உணர்ந்து கொள்ளாத அந்த பருவம் ஆண்டவனுக்கும் தேவர்களுக்கும் கிடைத்திருக்குமா என்பதும் கேள்விக் குறிதான்.

அன்னையின் கையில் வைத்து நிலாக் காட்டிச் சோறு ஊட்டும்போது ஒரு குழந்தையின் ஐம்புலன்களும் தூண்டப்படுகின்றது என்பதை மருத்துவ விஞ்ஞானம் சொல்லுகின்றது. அன்னையின் கண்களை நோக்கிக் குழந்தை கதை கேட்கத் தொடங்கும்போது குழந்தைக்கு உலகம் புலனாகத் தொடங்குகிறது.

இறைவன் ஒரு முறை உலகிற்கு வருவாராயின் இந்த அன்னையரின் அர்ப்பணிப்பை உணர்ந்து கொள்வாராயின் இயற்கையின் பல நேர்மாறல்களை இல்லாது ஒழித்துவிடுவார் என்பது எனது அபிப்பிரா யமாகும். மானுட அன்னையின் அரவணைப்பைத் தெரிந்து கொள்ளாத தனால் தானோ, வாழ்க்கையின் அபத்தமான விடயங்களை சகஜமாக முன்னெடுத்து நிற்கின்றார்.

ஆனாலும் தாய்மையை வழங்குவதற்கு பண்பாடுகள் தடையாகும் போது, அநாதைகளாக உருவாக்கப்படுகின்றார்களா? அவர்களின் வாழ்க்கையில் ஒளியினை ஏற்றுவது எவ்வாறு இயலும்?

அநாதைகள் பிறக்கின்றார்களா? இல்லை. அவர்கள் உருவாக்கப் படுகின்றார்கள். அவர்கள் அநாதைகளாக இந்த உலகிற்கு வந்திருப்பார்களா? எந்த ஒரு மகானும் இங்கு வருவதற்கான நுழைவாயில் ஆண்-பெண் இருவரின் உறவு என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். அப்படியானால்

அவர்களை உலகிற்குக் கொண்டு வந்தவர்கள் இருவர் இருப்பார்களே!

இந்த இருவரைக் கொண்டு வந்தவர்கள் நால்வர் இருப்பார்கள். அந்த நால்வரைக் கொண்ட வந்தவர்கள் எட்டுப் பேர் இருப்பார்கள். ஆக இது பெருக்கல் விருத்தியாகப் பெருகிக் கொண்டே போகின்றதே. இதில் எந்த இடத்தில் அவர்கள் தனியன்கள் என்ற நிலையைப் பெற்றிருப்பர்?

சமுதாயத்திற்குப் பயந்து தாய் தந்தையருக்கு வரக்கூடிய அவப் பெயர்களைக் கருத்திற் கொண்டு பிறந்த பிள்ளைய்யை வீசிவிடுவதும், கர்ணனை ஆற்றிலே விட்டது போல விட்டுவிடுவதும், குப்பைத் தொட்டியிலே போட்டுவிட்டுச் செல்வதும், அதிலே அகப்பட்டும் உயிர் தரிப்பவர்களை அநாதை என்ற பெயரால் அழைப்பதும் எந்த விதத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியது?

சமுதாயத்திற்குப் பயந்து தன்னைச் சுற்றியுள்ளவர்களின் அவச் சொல்லுக்குப் பயந்து தன்னுடைய கண்ணீரை மறைத்து நடமாடிக் கொண்டிருக்கும் அவ்வாறான தாய்மார் பரிதாபத்துக்கு உரியவர்களே. அனைத்தையும் நிலைநிறுத்திக் கொள்வதாகச் சொல்லும் எமது சமுதாயமும் மனிதத் தன்மையையும் இழந்து நடைபோட வேண்டி இருப்பதும் பரிதாபத்திற்குரியதே.

இவ்வாறு ஒரு சாரார் வருந்திக் கொண்டிருக்கும்போது நாம் சந்தோசமாகத்தானே இருக்கிறோம் என்று யாரும் நினைத்து விடக் கூடாது. எந்தவொரு பெரியாரும் மதத் தலைவர்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவே போராடி இருக்கின்றார்கள். அவர்களின் கண்ணீரைத் துடைத்தெறியவே அவர் முயன்றிருக்கின்றார்கள் என்பது நினைவுபடுத்திக் கொள்ளவேண்டியது.

# 17. செயற்கரிய செய்த பீஷ்மர்

மனித வாழ்வும் வெற்றியும் பொதுவாக சாதாரணமான நிகழ்வுகளைச் சார்ந்து வந்தாலும் செயற்கரிய செயல்களைச் செய்பவர்களும் மனிதரிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்

**செயற்கரிய செய்பவர் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலாதார்**

என்ற பொய்யாமொழியை மெய்ப்பிக்கும் வகையில் அரிய செயல்களினால் உயர்ந்து நின்றோர், அனைத்து மக்களாலும் எக்காலத்திலுமே போற்றப்படுபவர்களாக இருந்துள்ளார்கள். அவர்கள் பெரியார்கள் அல்லது சான்றோர்கள் என மக்களால் இனம் காட்டப்பட்டார்கள்.

குறிப்பிட்ட ஆயுளைக் கொண்டு, மிகக் குறுகிய வளங்களைக் கொண்டு தோற்றம் பெறும் மானுட வாழ்க்கையானது, அர்ப்பணிப்பு மிக்கது ஆகும்போது, மற்றவர்களுக்காக வாழ்ந்து வரும்போது தெய்வீகம் நிறைந்ததாக அமைகின்றது.

ஒரு அரசனின் மகனாகப் பிறப்பெடுத்த சித்தார்த்தர் தன்னுடைய அரசபோகம் மனைவி மக்கள் அனைத்தையும் துறந்து உலகின் உண்மையான முகத்தைக் காணவிழைந்தார். யார் யாரையெல்லாமோ சந்தித்தார். ஆனாலும் அவருக்குத் தெளிவு கிடைக்கவில்லை.

ஒரு வெள்ளரச மர நிழலில் இருந்து சிந்தித்தபோது அவருக்குப் பல விடயங்கள் புலனாகத் தொடங்கின. யாக்கை பற்றிய முழுமையான விளக்கம் அவருக்குக் கிடைத்தது. தன்னுடைய ஞானத்தை மற்றவர்களின் மேன்மைக்காகப் பயன்படுத்தினார்.

எம்மால் ஆட்சி செய்யப்படுவதாக அமைந்த போதும் எமது உடலால் மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது நாமும் மேன்மை பெறுகின்றோம். பிறவிப் பயனை அடைகின்றோம். மற்றவர்களின் நலன்மீது எமக்கு இருக்கும் உத்வேகம், எம் காரியங்களை ஏவிவிடுகின்றது.

மனித உடலானது மனதால் ஆட்சி செய்யப்படுவதும் இங்கு சுயநலம் மேலோங்கி நிற்பதும் யாவரும் அறிந்ததே. எந்தெந்தப் பெயர்களினால் சொல்லிக் கொண்டாலும் அனைத்து மனிதர்களுமே சுயநலவாதிகளாகவே இருக்கின்றனர். அவர்களின் சுயநலம் அவர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையை வழியமைக்கின்றது. பண்படுத்தி ஒழுங்கமைக்கின்றது.

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப்பால்**

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கு, ஒருவன் சுயநலமாக இருந்து மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாதிருக்க வேண்டும் என்பதைச் சொல்கின்றது. இவ்வாறு பிறருக்குத் தீங்கினை இழைக்காதவன் மற்றவர் களுக்கு நன்மையைச் செய்வானாயின் அவன் மதிப்புப் பெறுவான்

இவ்வாறு தீங்கு செய்யாது இருந்தால் மட்டும் போதுமா? உலகம் இயங்கிவிடுமா என்று கேட்பது புரிகின்றது. அவ்வாறல்ல நல்லது செய்யவும் வேண்டும் ஒருவரிடம் உள்ள செல்வங்கள் அனைத்தும் பலரின் வாழ்வுக்குப் பயன்பட வேண்டும். அப்போதுதான் அந்த செல்வத்திற்கு மதிப்பு அளிக்கப்படும்.

ஒருவரின் வயிற்றுப் பசியைத் தீர்த்த பின்பே அவனுக்கு சமயம் போதிக்கலாம் என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கின்றார். தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டு செய்த பல பெரியாரும் சமூகத் தொண்டையும் செய்தே சிறப்படைந்தனர்.

தேவார முதலிகள் அற்புதங்கள் என்ற பெயரில் சாதாரண மக்களால் செய்யமுடியாத பலவற்றையும் செய்து சிறப்புற்றனர். புலவர்களில் ஔவையார் உட்பட மக்களுக்குத் தொண்டு செய்து நன்நிலையை அடைந்தனர்.

காவிய நாயகர்கள் கடும் தியாகங்களையும் செயற்கரிய காரியங் களையும் செய்ததாகக் காட்டப்பட்டுள்ளார்கள். மகா பாரதத்தில் பல்வேறு

நாயகர்கள் இருந்தாலும் பன்னெடுங் காலம் வாழ்ந்தவர் என்ற வகையிலும் பாரதப்போரில் பங்குபற்றியவர் என்ற வகையிலும் நாயகர் என்ற இடத்தில் பீஷ்மரே வந்து நிற்கின்றார்.

பீஷ்மரை பதினாறு வயது வரையிலும் அவரின் அன்னையான கங்காதேவி வளர்த்து விடவும் பின்னால் அவரைத் தந்தையான சந்தனுவிடம் ஒப்படைக்கின்றார் என்பதை ஏற்கெனவே தெரிந்து கொண்டோம். கங்கையின் மைந்தன் தேவவிரதனின் வருகைக்குப் பின்னதாக சந்தனுவின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் வந்ததைப் போல இருந்தது. அரசுக்கு உரியவன் ஆற்றலும் அழகும் உடையவன். அவனை அழைத்துச் சென்று அவனுக்குப் பட்டாபிஷேகமும் செய்து வைத்தான்.

நான்கு வருடங்கள் கழிந்த பின்பு, ஒரு முறை யமுனை ஆற்றங் கரைக்குப் போயிருந்தபோது, அங்கே ஐம்புலன்களையும் கவர்ந்து செல்லுமாறு நாசியின் வழியாக வந்த திவ்ய வாசனை அவனைக் கவர்ந்தது. அந்த வாசனை வந்த வழியாக அவன் சென்றபோது அழகிய பெண் ஒருத்தியை அவன் கண்டான்.

முனிவர் ஒருவரிடம் பெற்ற தவத்தின் பயனாக அந்த வாசனை எழுகின்றது என்பதை அவள் சொல்லக் கேட்டதும் வியப்படைந்தான். அத்தனை காலமாக அவனுக்குள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு உணர்வு அவனை மறுபடியும் எழுப்புவதைப் போல இருந்தது.

கங்கையை விட்டுப் பிரிந்த அந்த இரண்டு தசாப்தங்களில் அவனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த இல்லற இன்பம், அவனுக்கு முன்னதாக எழுந்து வந்தது. அந்தக் கன்னிகையைத் தன்னுடைய மனைவியாக அடைய வேண்டும் என்ற தன் விருப்பைத் தெரிவித்தான். அவளோ அது சம்பந்தமாக தன்னுடைய தந்தையாரை அணுகுமாறு சொல்லிவிட்டுச் சென்றாள்.

அனுமதி பெறவென அவளது தந்தையான செம்படவர்களின் தலைவனை அணுகினான். அவளின் தந்தை மிகுந்த சாமர்த்தியசாலியாக

இருந்தான். ஆனால் ஒரு நிபந்தனையை விதித்தான். சத்தியவதியின் குமாரருக்கு அரசாட்சி கிடைக்குமாறு செய்ய வெண்டும் என்று கேட்டான்.

பட்டத்திளவரசராக தேவவிரதன் இருக்கும்போது இது சாத்தியப்படுமா?. இவ்வாறான வார்த்தைகளைக் கேட்டுக் கொள்ளவே சந்தனுவுக்குப் பிடிக்கவில்லை. அதனால் பதில் சொல்லாமலே அவ்விடத்தின் நின்றும் சென்றுவிட்டான்.

ஆனாலும் அந்த விடயத்தை மறந்துவிட முடியவில்லை. அவளது தந்தையாரின் மோசமான நிபந்தனையை ஏற்றுக் கொள்ளவும் முடிய வில்லை. இதனால் வேதனையுடனேயே நாட்களைக் கழிக்கலானான். விடயத்தை யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தனக்குள் வியாகூலப்பட்டு இளைத்துப் போனான்.

மனித மனம் என்பது இவ்வாறுதான் குரங்கு போல தாவிக் கொள்ளும். கங்கையையும் மைந்தனையும் பிரிந்தபோது அவனிடம் இருந்த வைராக்கியம் மகன் வந்து சேர்ந்த பிற்பாடு அவனிடம் இல்லாமற் போய்விட்டது. சொந்தங்களைக் கண்டவுடன் மேலும் பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே மனம் தீர்மானிக்கும். அதற்கு ஆதாரமாக வாழ்க்கையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வளங்களைச் சேர்த்துக் கொள்ளும்.

இவ்வாறாக மகனுக்கு ஒரு அன்னை. அரசுக்கு ஒரு பட்டமகிஷி. அரசாங்கத்திற்கு வேண்டிய வாரிசுகள் என அவர்களின் வாழ்வு பரந்துபட்டே செல்லும். தங்களுடைய சிறிய ஆசைகளுக்கு பெரிய காரணங்களைக் காட்டி நிற்கும்.

தந்தையின் உடலிலும் வதனத்திலும் தென்பட்ட மாற்றங்களை ஓரளவு ஊகித்துக் கொண்டவனாக தேவவிரதன், அதற்கான காரணத்தைக் கேட்டான். வெளிப்படையாகவோ நேரிடையாகவோ அவரால் எதையும் சொல்ல முடியவில்லை.

சந்திர குலவம்சத்தின் விருத்தியைக் கருதிக் கொண்டு நன்

மக்களைப் பெற வேண்டுவதாகவும் பட்டத்து இளவரசனுக்கு கொடுக்க வேண்டிய ஆதரவுகளைப் பற்றி சிந்திப்பதாகவும் என்று பலவாறாகவும் சொன்னார். அவரிடம் ஏதோ பெரிய விடயம் பொதிந்து கிடக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டான்.

இதனால் அவரின் சாரதி மூலமாக யமுனா நதிக்கரையில் நடந்தவற்றைத் தெரிந்து கொண்டு, அந்த செம்படவத் தலைவனிடம் தானே சென்று அவன் மகள் சத்தியவதியைத் தகப்பனாருக்குப் பெண் கேட்டான்.

அவனோ சந்தனு மகாராஜாவிடம் சொல்லியதையே மீண்டும் சொன்னான். அப்போது தேவ விரதன், தன்னுடைய அரச போகத்தைத் துறந்துவிடுவதாகவும் அவனின் சந்ததியில் வந்தவர்களுக்கு அதை வழங்குவதாகவும் அந்தக் கணமே அவனுக்கு வாக்களித்தான்.

சத்தியவதியின் தந்தை மீண்டும் ஒரு கேள்வியை எழுப்பினான்.

"தேவர்களிலும் மேலானவர் நீர். உமது வாக்கில் அடியேன் சந்தேகப்படவில்லை. ஆனால் நீரோ மாவீரர். உமக்குப் பிறக்கும் சந்ததியினரும் இணையில்லா வீரராகவே விளங்குவர். காலப்போக்கில் அவர்களுக்கும் எனது சந்ததியினருக்கும் போர் மூண்டால் உமது சந்ததியினரே வெற்றி பெறுவர். எனது சந்ததியினர் தோல்வியடைந்து இராச்சியத்தை இழந்துவிடுவர்" என்று தனக்கெழுந்த சந்தேகத்தைத் தெரிவித்தான்.

அந்தப் பொழுதில் தேவவிரதன் யாருமே எதிர்பாராத விதமாகக் கடுமையான பிரதிக்ஞையைச் செய்தான்.

"நான் ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருப்பேன். என்னால் சந்ததி உருவாகாதவாறு பார்த்துக் கொள்வேன்" என்றார். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். "பீஷ்மர்.. பீஷ்மர்" என்று ஆகாயத்தில் இருந்து குரல் ஒலித்தது. பீஷ்மன் என்றால் செயற்கரிய செயலைச் செய்தவன் என்பது பொருள். அதுவே அன்று முதல் தேவவிரதனுக்கு

வழங்கப்பட்டது.

அந்த செம்படவத் தலைவனுக்கு நடுக்கம் உண்டானது.

"நீர் உயர்ந்தவர். நீர் தேவர். இந்தப் பெண்ணுக்கும் இனி நீரே தந்தை. அவளை அழைத்துச் சென்று மன்னருக்கு மணம் செய்து செய்து வையுங்கள்" என்று கைகளைக் கூப்பியவாறு அவன் சொன்னான். தன்னை வணங்கியவாறு வந்த சத்தியவதியை அழைத்துச் சென்று தந்தையாருக்குத் திருமணம் செய்து வைத்தார்.

கங்கையின் வாக்குப்படி தேவவிரதனின் வாழ்க்கை இல்லற இன்பம் மட்டும் இல்லாததாக அனைத்துப் புகழுடன் வாழ்வதாக அமைந்தது. தான் விரும்பும் போதே மரணம் வரும் என்ற வரமும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. குரு குலத்தின் காவலனாக அனைத்து வீரர்களுக்கும் தலைவனாக அவரின் வாழ்க்கை பன்னெடு காலமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது.

பீஷ்மரின் செயல் எதிர்பாராததாக இருந்த போதிலும், ஒரு செயல் வீரன் செய்யத் துணிந்ததையே அவரும் செய்து நின்றார். செயலை நோக்கிச் செல்பவனுக்கு தன்னுடைய உயிரும் ஒரு பொருட்டல்ல என்பதை அழகாகக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்.

தந்தையின் சொல்லுக்காக தனது அரசாட்சியைத் துறந்து பதினான்கு ஆண்டுகளுக்கு வனவாசம் மேற்கொள்ளுவதற்காகச் சென்ற இராமபிரான் இந்தக் காட்சியில் எமது மனத்திரையிலே வந்துவிடுகின்றார். ரகு வம்சத்திலே தசரதச் சக்கரவர்த்திக்கு முதல் மகனாகத் தவப்புதல்வனாகப் பிறந்து, கலைகள் அனைத்திலும் தேறி, நற்பண்புகளைக் கொண்டு மகுடாபிஷேபத்திற்குத் தயாரான நிலையில் அவர் இவ்வாறு காட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டது ஏனோ கண்களை உறுத்திவிடுவதாக இருக்கின்றது.

வனவாசத்தை முடித்த பிற்பாடு அரசாட்சி கிடைத்திருக்கும்தானே. இதிலென்ன தியாகம் இருக்கிறது என்று யாரும் நினைக்கலாம். சத்திரிய

தர்மப்படி பதினான்கு ஆண்டுகள் ஒருவன் அரசாட்சியைத் துறந்து காடு சென்று தவம் செய்வானானால், அவனுக்குரிய ஆட்சி பறிக்கப்பட்டுவிடும். இதன் காரணமாகவே பதினான்கு ஆண்டுகள் என்ற நிபந்தனையை விதித்திருக்கின்றார்கள்.

அது தவிர்வும் ஓரளவு இளம் வயதிலே திருமணம் செய்திருந்தாலும் மணவாழ்க்கையின் இரண்டு தசாப்த காலத்தை அவர்கள் செலவழித்து இருந்தனர். அதன் பிறகு வனவாசம் சென்று மீள்வதாயின் இளமையும் ஆற்றலும் போய்விடும். அதற்குப் பிறகு அவரால் ஆட்சியை ஏற்று நடத்த முடியாது என்பதை அவர்கள் நம்பினார்கள்.

பதினான்கு ஆண்டுகள் பரதன் ஆண்டுவிட்டுத் தன்னுடைய தமையனுக்குத் திரும்பவும் வழங்கப் போவதில்லை. மண்ணாசை என்பது அனுபவித்தவனுக்குத் திகட்டுவதில்லை. இதனால் பரதனிடம் இருந்து ஆட்சியைப் பறித்துவிட முடியாது என்றும் கைகேயி தீவிரமாக எண்ணியிருந்த காரணமாகவும் இருக்கலாம்.

ஆனால் கொடியவர்கள் நினைத்தது எதுவும் நடைபெறவில்லை. பரதன் அரசாட்சியை ஏற்றுக் கொள்ளவே இல்லை. தமையனின் பாதுகையைப் பெற்று அதனைச் சிங்காசனத்தில் வைத்து அண்ணனின் அம்சமாகவே வழிபட்டு ஆட்சி செய்தான். பதினான்கு ஆண்டுகளின் பின்னதாகத் தமையன் வராவிட்டால், தான் தீக்குளித்து விடுவதாகச் சொல்லி அண்ணலின் வழிநோக்கிக் காத்திருந்தான்.

இங்கு பீஷ்மரின் நிலை அவ்வாறானது அல்ல. அவர் முற்றுமுழுதாகவே தனது அரசுரிமையைத் துறந்து விடுகின்றார். அது மட்டுமல்ல தன்னுடைய இளமையைத் துறந்து தன்னால் சந்ததி உருவாகாத வண்ணம் பார்த்துக் கொள்வதாக வாக்களித்தார். இதிலே பீஷ்மரின் செயலே மேலானது என்பது தெளிவாகின்றது.

வனவாசத்திலுமே மனைவியை அழைத்துக் கொண்டு சென்றார் இராமர். ஆனால் வாழ்க்கையையே துறந்து நின்றார் பீஷ்மர். வனவாசம்

மேற்கொண்டு பதினான்கு ஆண்டுகளைத் தியாகம் செய்தார் இராமர். நகரத்திற்குள் இருந்தவாறு மற்றவனின் கையில் ஆட்சியைக் கொடுத்து பரிபாலனம் செய்தார் பீஷ்மர். இராமரின் முன்னால் பீஷ்மர் செயற்கரிய செயலைச் செய்தவரே என்பது தெளிவாகின்றது.

அனைத்தையும் செய்வதற்கு அவர்க்கு உறுதுணையாக அமைந்தது தந்தையின் மீது அவர் கொண்ட பாசமும் மரியாதையும். தன்னுடைய தந்தைக்கு செய்யும் கைமாறாக அவர் இதைக் கருதியிருக்கலாம்.

**மகன் தந்தைக்காற்றும் நன்றி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல் எனும் சொல்**

என்ற திருக்குறளுக்கு அமைவாக தந்தைக்கு நற்பெயரையும் பேறையும், அதனால் தனக்கு அழியாப் புகழையும் தேடிக் கொண்டான்.

வாழ்வின் வெற்றி என்பது அன்பையும் தியாகத்தையும் சார்ந்தே வருகின்றது. ஒரு சிலரை மட்டும் கோடிட்டுக் காட்டுவதற்காகவே இவ்வாறான சோதனைகள் அவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகின்றன.

மனித வாழ்க்கையில் பலவிடங்களிலும் மற்றவர்களுடன் எம்மை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். அதுவும் நாம் நேசிக்கும் ஒரு பொருள் நம்மிடம் கிடைக்காதபோது, மற்றவர்களின் வாழ்க்கை எமது கண்களில் குத்தப்பட்டுப் பொறாமை உணர்வு ஏற்படுகின்றது.

மற்றவர்களுக்குக் கெடுதலை மனதால் எண்ணிப் பார்க்கின்றோம். அதனால் அவர்கள் துயரப்பட வேண்டும் என்று நினைக்கின்றோம். அடுத்த கட்டம் அவர்களுக்குக் கெடுதல் வரும்போது அதனைக் கண்டு மனம் மகிழ்கின்றோம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது சாடிவிட்டுச் செல்கின்றோம்.

மறுபுறம், இவை எல்லாவற்றையும் நாம் அனுவிப்பவர்களாக இருக்கும்போது மிகவும் துயர் அடைகின்றோம். இவற்றைத் தாங்கிக்

கொள்ளவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதே என்று கலங்குகின்றோம். அதைவிட்டு விலத்தி ஓடவும் முடியாமல் அதற்குள்ளே இழுபடவும் முடியாமல் தவிக்கின்றோம். ஆனால் அவற்றை சந்தோசமாக முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோமாயின் செயற்கரிய செய்தவர்களாக நாமும் ஆகிவிடுவோம். எம்மைத் துரத்தி வரும் விதி எம்மைத் தீண்டும் முன்பாகவே நாம் விழித்து எழுந்துவிடலாம்.

நிகழ்வுகள் எவற்றையும் தாங்கிக் கொள்ளும் மனத்தினையும், அவற்றை இன்முகத்துடன் எதிர் கொண்டு எம்மைச் சுற்றி இருப்பவர்களின் நலனைப் பேணும் வகையில் எம்முடைய எண்ணங்கள் தூய்மையான தாகவும், இக்கட்டான நிலையில் திடமாக இருக்குமாறும் மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த நிகழ்வோடு முடிந்து விடாமல் பீஷ்மரின் வைராக்கியத்தைத் தகர்த்தெறியுமாறு பலவிதமான சோதனைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. அவற்றை அவர் நீந்தி வந்தாரா அன்றேல் அதற்குள் மூழ்கித் தவித்தாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## 18. பேதை என்பதாற் பேதமையா?

அனைத்து தேவதைகளின் அம்சமான பெண்கள், அன்னைக்கு நிகராக மதிக்கப்படுகின்றார்களா என்ற கேள்வி இயல்பாகவே எம்மிடம் எழுகின்றது. ஒவ்வொருவரும் தன்னுடைய அன்னைக்குக் கொடுக்கும் இடத்தை ஏனைய பெண்களுக்கும் கொடுப்பார்களாக இருக்குமானால் உலகத்தில் எத்தனையோ பிரச்சினைகள் நடந்தேறி இருக்காது என்பது உண்மையாகும்.

மகாபாரத்திற் சந்ததியைப் பெருக்குதல் என்ற விடயத்தில் மட்டும் பெண்கள் இடம்பெற்று இருக்கின்றார்கள். அதிலும் பலவிடங்களிலும் சிறுமிகள் பாவிக்கப்பட்டு இருக்கின்றார்களே என்று ஒவ்வொருவரிடமும் கேள்வி எழுகின்றது.

இங்கே அவர்கள் சொல்லுவது உண்மையாகவே சிறுமிகளையா? அல்லது வளர்ந்தும் சிறுமிகளாக இருக்கும் பேதைப் பெண்களையா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. "வளர்ந்தாலும் நான் இன்னும் சிறு பிள்ளைதான். நான் அறிந்தாலும் அதுகூட நீ சொல்லித்தான்.." என்ற சினிமாப் பாடலைப் போல அறியாமையால் அவதிப்படும் பெண்களைச் சொல்லிச் சென்றார்களா என்பது சிந்தனையைத் தூண்டுகின்றது.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பால்நிலைக் கல்வி என்பது உரிய வயதில் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவற்றைப் பற்றிக் கதைப்பதற்கும் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் வளர்ந்தாலும் இவ்வாறான விடயங்களில் சிறு பிள்ளைகளாகவே அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் ஆண்பிள்ளைகளுக்கு வழங்கப்படும் அளவு கடந்த சுதந்திரத்தில் அவர்கள் அந்த அறிவை எப்படியோ பெற்றுவிடுகின்றனர். இந்த விடயம் சார்ந்த பேதமை என்பது அவர்களிடம் என்றுமே இருப்பதில்லை.

பேதமையாற் பெண்கள் சீரழிவுகளை எதிர்கொள்ளுவது ஒன்றும் உலகத்தில் நடக்காதது அல்லவே. இதற்குக் காரணம் என்ன என்பதை

ஆராய்ந்து கொண்டே செல்லும்போது முதற்காரணமாக கருத்துச் சுதந்திரம் இன்மைதானோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

அது எவ்வாறு என்று கேட்கின்றீர்களா? ஒரு விடயத்தை ஆண் வினாவும்போது, அவள் தன்னுடைய உண்மையான எண்ணத்தை மறைத்துப் பாதுகாப்பு உணர்வின்றிப் பயத்துடன் சம்மதம் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றாள். இது எவ்வளவு படித்த பெண்களுக்கும் எல்லா நிலையிலும் பொருந்துவதாகவே அமைகின்றது.

பொதுவாக வீட்டு விடயத்திலோ அல்லது அலுவலகம் சார்ந்தவற்றிலோ தன்னுடைய உண்மையான நிலையையோ வேலையின் முடிவையோ சொல்ல முடியாமல் இருக்கிறாள். ஆண் என்ற கட்டுக்குள் எவ்வாறோ அவளது கருத்துச் சுதந்திரம் முடக்கப்பட்டு விடுகின்றது. இதற்கு அவர்களின் குடும்பச் சூழ்நிலையும் காரணமாக அமையலாம். குடும்பம் என்ற விடயத்தில் அவர்களுக்கு இருக்கும் ஆதரவின்மை அதாவது வீட்டு வேலைகளிலோ பிள்ளைகளை வளர்க்கும் விடயத்திலோ பிள்ளைகளின் தந்தையின் ஒத்துழைப்புக் காணப்படாமையால் இவ்வாறு நிகழ்கின்றது.

இவ்வாறு ஆரோக்கியமற்ற சுற்றாடலில் வாழும் பெண்கள் சிறு சிறு விடயங்களிலும் தாங்கள் மேலதிகாரிகளின் முன்னால் எரிந்துவிட வேண்டிய நிலைமையில் வாழ்வார்கள். அவர்களுக்கு தாங்கள் கருத்துப் பற்றிய எந்தவொரு கருதுதலும் வழங்கப்படுவதில்லை. அப்படி வாயைத் திறந்தால் மேலதிகாரிகளாற் கிடைக்கும் சிறு சிறு சலுகைகளும் கிடைக்காமற் போய்விடும் என்று நினைத்துக் கொள்கின்றார்கள். தொழில் பற்றிய பயம் அவர்களிடத்தில் எழுகின்றது.

இவையெல்லாம் தனியார்த் துறையில் இருப்பவர்களுக்குத் தானே. அரச துறைகளுக்கு இவ்வாறான கட்டாயம் இல்லையே என்று யோசிப்பதும் புரிகின்றது. உண்மைதான் அரசாங்கத் துறையிலே வேலை செய்பவர்களுக்கு, அரசின் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் அலுவலகம் என்ற கோட்டைக்குள்ளே நானே ராஜா என்று ஆட்டம் போடும் மேலதிகாரிகளும் இல்லாமற் போவதில்லை.

அவர்களுக்கு மேலாக அதிகாரிகள் இல்லையா என்று கேட்பதும் புரிகின்றது. ஆயிரம் பேர் இருந்தும் என்ன? அந்தக் கோட்டைக்குள் வதைப்படும் போது அதைக் கேட்பதற்கு யாரும் வருவதில்லையே! அல்லாது அவர்களைப் பற்றிய புகார்களை எழுப்பும்போது, ஆண் அதிகாரிகள் தங்கள் வார்த்தையால் வெட்டிவிடுவதும் நடப்பதுதானே.

இதனால் இவ்வாறான விடயங்களைப் பெண்கள் வெளியிட விரும்புவதில்லை. அநாவசியமான பிரச்சினை எதிர்கொள்ள முனைந்தால், வேலையை விடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுமே என்று கலங்குகின்றார்கள். அதனால் படித்துப் பட்டம் பெற்ற பின்னும் சமுதாய ஒடுக்கல் என்ற விடயத்தில் பேதைகளாகவே இருக்கின்றனர்.

இவற்றை எல்லாம் ஆராய்ந்து அறிந்துள்ளது அரசாங்கம். இருப்பினும் இவற்றை இல்லாமற் செய்வதற்கு யாராலும் முடிவதில்லை. ஆனாலும் பாலியல் ரீதியான வன்முறையை ஓரளவு குறைக்கும் நோக்கத்துடன், எமது நாட்டில் ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டின் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. இங்கே பாலியல் வன்முறையின்போது பெண்ணின் சம்மதம் என்பதைக் கருத்துச் சுதந்திரம் மறைக்கின்றது என்பது மறைமுகமாகச் சொல்லப்படுகின்றது.

முதலாவதாக உடன்பாட்டுடனான வல்லுறவு என்பது இங்கே முக்கியமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதாவது பல்வேறான சந்தர்ப் பங்களிலே பெண்ணின் சம்மதத்துடனேயே கொள்ளப்படும் உறவும் வல்லுறவு என்ற அடிப்படையில் அமைந்துவிடும். அதாவது அடிப்படையில் கருத்துச் சுதந்திர முடக்கல் என்பது விசுவரூபம் பெறுகின்றது.

பெண்ணின் சம்மதம் என்பது, ஒரு கட்டுக்காவலில் உள்ளபோதோ, அல்லது ஆயுதங்கள் எவற்றையும் பாவித்துப் பெற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்திலேயோ, அதுவும் பாலியல் வல்லுறவு என்ற வகையிலேயே அடங்கும் என்பது இத்திருத்தச் சட்டத்தில் முந்நூற்று அறுபத்து ஐந்தாம் பகுதியிற் சொல்லப்படுகின்றது.

தெளிவான பெண்களையும் பேதைகளாக்கும் வேறு சில சந்தர்ப்பங்களும் இல்லாமற் போய்விடவில்லை. நாள்தோறும் எத்தனையோ விடயங்களைப் பத்திரிகையிலும் வானொலியிலும் பார்த்திருக்கின்றோம். ஓரளவு சுதந்திரமாக நடமாடும் பெண்களுக்கு குளிர்பானம் என்ற பெயரில் மதுவை வழங்கிவிடுவார்கள். அந்தப் பெண் மது போதையில் இருக்கும்போது காட்சியை முடித்து விடுவார்கள்.

ஆனால் பெண்ணானவள் போதைப் பொருள் பாவித்தோ அல்லது அற்ககோல் எதையும் பாவித்தனால், தந்நிலை மறந்திருந்தால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவளாகவே முன்வரலாம் அல்லது, அந்நேரத்தில் அவளிடம் இருந்து சம்மதம் சுலபமாகவே பெறப்படலாம். ஆனாலும் சம்மதம் என்பது அச்சந்தர்ப்பத்தில் செல்லுபடி ஆவதில்லை. சம்பந்தப்படும் ஆண்கள் இதே சட்டத்தின் கீழ் சிறைக்காவல் தண்டனையைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதை சட்டம் சொல்கிறது. ஆக திட்டமிட்டுச் செய்யப்படும் ஒரு சில விடயங்களில் இருந்து பெண்களைக் காப்பாற்றி விடுகின்றது.

மேலும் இலங்கையைப் பொறுத்தவரை பதினெட்டு வயது வரையிலும் குழந்தைகள் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிடுகின்றனர். பதினாறு வயதுக்கும் பதினெட்டு வயதிற்கும் இடைப்பட்டவர் திருமணம் செய்ய விரும்பினால், பெற்றோரின் அனுமதியுடன் திருமணம் செய்து கொள்ள முடியும். ஆனால் பதினாறு வயதுக்குட்பட்டவர் திருமணத்திற்குப் பொருத்தமானவர் அல்லர்.

இதனால் பதினாறு வயதிற்குட்பட்டவரை, அப் பெண்ணின் சம்மதத்துடனேயேனும் உறவு கொண்டிருந்தாலும் அதுவும் இதே போல கருதப்படும். ஆணுக்குத் தண்டனை என்பது உறுதியாகிவிடும். இந்த சந்தர்ப்பத்தில் காதலித்ததால் தண்டனை பெற்றுக் கொண்டான் என்று யாரும் திரிவு படுத்தி விடக்கூடாது என்பதால் இவ்விடயம் இரு சாராருக்கும் கடுமையாகச் சொல்லப்படுகின்றது

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிலைமையிலும் ஆணுக்குரிய தண்டனை சட்டத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அதாவது ஏழு தொடக்கம் இருபது வருடங்களுக்குக் குறையாத தண்டனையை ஆண் அநுபவித்தாக வேண்டும்.

அது தவிரவும் பின்வரும் உறவு முறையானவர்களுக்கு இடையிலான உடலுறவு என்பது பாரதூரமான குற்றம் என்பதை இச்சட்டம் தெளிவுபடுத்துகின்றது. பெற்றோர் அல்லது தத்தெடுத்துக் கொண்ட பெற்றோர் முறையானவர்கள், இச்சட்டத்தின் கடுமையான கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதேபோல சகோதரன் முறையில் உள்ளவர்களும், பேரன் முறையில் உற்றவர்களும் இவ்வாறான செய்கைகளில் ஈடுபட்டிருப்பார்களே ஆனால் அவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்

ஏற்கெனவே சொல்லப்பட்டு இருந்த பல்வேறு நிலைமைகளைத் தவிர வேறு நிலைமைகளிலும் உடன்பாட்டுடனான வல்லுறவு என்பது கருத்திற் கொள்ளப்படுகின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உடன்பாடு என்பது திணிக்கப்படுவதாகவே இருக்கின்றது.

ஒரு பெண் அவளின் அலுவலகக் காவலிலோ அன்றி, கட்டுக் காவலிலோ வைக்கப்பட்டிருக்கும்போது அவளின் சம்மதம் பெறப்பட்டிருந் தாலும் அதுவும் குற்றமாகவே கொள்ளப்படும். உதாரணமாக தனக்குக் கீழே வேலை செய்யும் ஒரு பெண்ணிற்குத் தொழில் பற்றிய பயத்தை உண்டாக்கி அவளிடம் இருந்து சம்மதம் பெறுதல் தவறானதாகும்.

இவ்வாறான விடயங்கள் இன்று பரவலாகவே காணப்படுகின்றன. தொழில் தருவதாகவும் தொழிலில் நிலைக்கச் செய்வதாகவும் அல்லது தொழிற் தளங்களில் சில வசதிகளைச் செய்து கொடுப்பதாகவும் சொல்லி பெண்களை ஆற்றுப்படுத்துபவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் இவ்வாறான வலைகளில் பெண்கள் வீழ்ந்துவிட வேண்டிய அவசியம் கிடையாது. இவ்வாறு நடந்து கொள்பவர்கள் எக்காலத்திலுமே யாராலுமே விரும்பப்படாதவர்களே.

அவ்வாறான அணுகுமுறை பலனளிக்காத சர்தர்ப்பத்தில் இவளை சொற்களால் இம்சைப்படுத்தி வேறுவழியாகப் பழிவாங்குவதற்கு முற்படுவார்கள். இது பால் நிலை ரீதியான துன்புறுத்தல்களுக்கு கீழாகக் கருதப்படும். இது அநேகமாக வெளியே தெரிவதில்லை. மறைமுகமான அணுகுமுறையால் இதைக் கவனமாகக் கையாள்வார்கள்.

இவ்விதமான பால்நிலை ரீதியான வன்முறைகளுக்கு தெளிவான விளக்கமும் சட்ட ரீதியான தண்டனைகளும் கிடையாது. அந்த இடத்தில் பெண்கள் தமது மூளையை முற்று முழுதாகப் பாவித்து அதிலிருந்து மீள்வதே செய்யக்கூடியதாகும். இவை அனைத்துமே அடிப்படையில் பெண்களைப் பேதைகளாக்கி செய்து கொள்ளும் காரியம் ஆகும்.

இனி பாலியல் வன்முறைகளுக்கு வருவோம். இவை வெளிப்படையானவை. அனைவரின் கருத்தையும் ஒரே வேளையில் ஈர்ப்பவை. கடும் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படுபவை. ஏற்கெனவே குறிப்பிட்டிருந்த நிலைமைகள் தவிரவும் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு பெண்ணின் சம்மதத்தைப் பெற்றிருந்தாலும் அதுவும் வல்லுறவு என்ற வகையினிலேயே அடங்கிவிடுகின்றது. அதற்குத் தண்டனை வழங்கப்படுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் அனைத்திலுமே, இராவணனுக்குப் பிரம்மன் இட்ட சாபம், சீதையைத் தீண்டவிடாது காப்பாற்றியதைப் போல, இந்தச் சட்டத்தின் வாக்கியங்கள் அவர்களைக் காப்பாற்றும். தவறும் இடத்திலும் கடுமையான தண்டனைகளை வழங்கி அவர்களுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்கும்.

ஒரு பெண் நோயாளியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரு நிலைமையைக் கற்பனை செய்து கொள்வோம். அவ்வாறான நேரத்தில், வைத்தியசாலை வட்டாரத்தாலோ அல்லது யாரும் உத்தியோகத்தராலோ அவ்வாறு நிகழ்த்தப்பட்டிருப்பின் அதுவும் பாரதூரமான குற்றமாகவே கொள்ளப்படும். அவற்றை விடவும், மன

நோயாளியாகவோ, அங்கவீனராகவோ இருக்கும் சந்தர்ப்பத்திலும் இது குற்றமாகவே கொள்ளப்படும்.

மேற் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில், 10 தொடக்கம் 20 வருடங்களுக்குக் குறையாத தண்டனை வழங்கப்படும். இதைவிடவும் இப்படியான ஒரு செயலுக்குத் தண்டிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படும் போது அநாவசியமான அலைச்சலும் மன உளைச்சலும் ஏற்படும்.

'சீறும் பாம்பை நம்பு. சிரிக்கும் பெண்ணை நம்பாதே' என்று தத்துவம் பேச வேண்டிய நிலைக்கு வந்துவிடுவார்கள். எதுவும் நடக்கும் முன்பே வெகு உஷாராக இருக்க வேண்டியது, ஆண் பெண் இருவரினதும் கடமையாகும்.

யுத்த காலத்தில் பெற்றோரையும் சகோதரர்களையும் இழந்து அவயவங்களையும் இழந்து வாழும் ஒரு பெண் தன்னுடைய உறவினர்கள் வீட்டில் இருந்து கல்வி கற்றிருக்கின்றார். அவளையும் கலியுகத்தின் அரக்க குணம் விட்டுவிடவில்லை. அவளை இம்சித்து ஒரு குழந்தைக்குத் தாயாக்கிவிட்டார்கள். தானே தனித்து இயங்க முடியாத அந்தக் குழந்தைக்கு இன்னொரு குழந்தை. அவர்களை யார் காப்பாற்றுவார்கள்? அடிப்படை வசதிகளை யார் வழங்குவார்கள்? என்பதெல்லாம் கேள்விக் குறியே.

ஒன்றை மட்டும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒருத்தனுக்கு ஒருத்தி என்று எமக்குப் போதிக்கும் சமுதாயம், இக்காலத்தில் ஆண்களுடன் இருந்து படிக்கக்கூடாது என்றோ, ஆண்கள் இருக்குமிடத்தில் வேலை செய்யக்கூடாதென்றோ எமக்குச் சொல்லவில்லை. ஆண் பெண் இருவரிடையே காணப்படும் நட்பு, நெருக்கமாகிவிடாதபடி இருவருமே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

உடன்பாடுஎன்பதுஒருஅறிகுறியேஅல்ல. பெண்உடன்படுவதற்கான காரணங்களாக எத்தனையோ நிலைமைகளை நாம் எற்கெனவே பார்த்திருக்கின்றோம். அதனால் என் மனைவி இல்லாத ஒருத்தி

என்னோடு வர இணங்கிவிட்டாள் என்ற புளகாங்கிதத்தில் தம்மை மறந்து நடப்பது, பயங்கரமான ஆபத்தாகவே முடியும் என்பது இந்தவிடத்திற் தெளிவாகின்றது.

அது மட்டுமல்ல. வெளிப்பாடு என்ற விடயத்தில் பெண்கள் மிகவும் பின்தங்கியே நிற்கிறார்கள். யாருக்கும் தெரிந்துவிட்டால் பிரச்சினை வந்துவிடுமோ என்று கடுமையாக யோசிக்கிறார்கள். பண்பாட்டில் ஊறிவிட்ட எமது சமுதாயம் இவ்வாறு வெளிப்படுத்தும் பெண்களை எவ்வாறான கண்ணோட்டத்தில் நோக்கும் என்பது அவர்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. இதனால் மௌனமாகி விடுகின்றனர்.

அவர்களின் அசாதாரணமான மௌனம் பல சந்தர்ப்பங்களில் ஆண்களுக்குச் சார்பாக அமைந்து விடுகின்றது. சட்டங்களையும் உரிமைகளையும் தெரிந்து கொண்ட பின்னால் பெண்கள் மௌனிக்க வேண்டியது அவசியமில்லை. அவற்றை வெளிப்படுத்திக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் வெளிப்படுத்துவதில் இருக்கும் சிரமத்தையும் நாம் அறிவோம்.

இவை எதுவும் முடியாமற் போனாலும்கூட இந்தத் தொழிற் சதுரங்கத்தை ஒழுங்கான நகர்வின் மூலம் வென்றுவிட முடியும். அவர்களுக்கு மரியாதை செய்வதாகக் காட்டிக் கொண்டு எந்த நிலையிலும் தனக்குப் பிரச்சினை வராதவாறு நடந்து கொள்ள வேண்டியதே இதற்குரிய நகர்வு ஆகும். ஆனால் இவை மிகுந்த அவதானத்துடன் செய்யப்பட வேண்டியவை.

தொழிலையும் வீட்டையும் கவனிப்பதோடு மட்டுமல்லாமல் இவ்வாறான புல்லுருவிகளுடனும் மல்லுக்கட்ட வேண்டியதாக இருக்கின்றதே என்று பெண்கள் சோர்ந்து விடத் தேவையில்லை. இதுவும் ஒரு சதுரங்க நகர்வுதான். இதைக் கவனமாக நகர்த்துவதால் அரிய பல விடயங்களைச் சாதித்துக் கொள்ளலாம்.

ஆனால் இவை எவற்றையுமே அறிந்திராத அன்றைய நாட்களின் நிலைமை சொல்லிட முடியாது. பெண்கள் தொடர்பான உரிமைகள்

சட்டங்கள் எதையும் தெரிந்திராத அந்தக் காலத்தில், அவரவர் விருப்பப்படி ஏதோ காரணங்களைச் சொல்லிக் கொண்டும், செயல்களுக்கு நியாயம் கற்பித்தும் இருந்தது தெளிவாகின்றது. அவர்களால் அநாதைகள் தோற்றம் பெற்றனர். பெண்களுக்கு உரிய சுதந்திரத்தையும் தெளிவையும் ஏற்கெனவே வழங்கியிருந்தால் எமது சமுதாயத்தில் அநாதைகள் உருவாகாமற் தடுத்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகின்றது.

## 19. இடம்மாறிடும் இளமையும் முதுமையும்

தந்தையின் நல்வாழ்வுக்காகத் தான் பிரம்மச்சாரியம் மேற்கொண்டு அவரது வாழ்வை ஈடேற்றுவது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. அதிலும் சத்திரிய வம்சத்தில் உதித்த மகா பராக்கிரம சாலி ஒருவர் அரசையும் துறந்து, அதற்காகத் தானும் சந்ததியைத் துறந்து நிற்பது என்பது கனவிலும் நினைக்க முடியாதது.

ஆனால், வாழ்வின் அருமையை விளிம்பியல் நிலையில் கொண்டு சென்று காட்டுவது கதைக்கு சிறப்பு. ஏழை பணக்காரனாவதும், மூடன் அறிவாளி ஆவதும், என முரணுக்குள் மாற்றத்தைக் கொண்டு சேர்த்து, பிரமிப்பு ஊட்டுவது வாழ்வியலில் அவசியம் என்பதை இந்த உலகை இயக்குபவர் அறிந்து வைத்திருக்கிறார். இதனால் கதையில் திடீர் திருப்பங்கள் வருவதைப் போல, பலரின் வாழ்க்கையிலும் வேறுபட்ட நிலைகளைத் திடீர் திடீர் எனக் காலம் காட்டுகின்றது.

சுவாரஸ்யமான கதைகளை எழுதுவதிலோ, வாழ்க்கையின் திருப்பங்களைக் காட்டுவதிலோ எழுத்தாளர்களை விடவும் கடவுளுக்குத் திறமை அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கின்றேன். அந்த ஓட்டத்தை ஓரளவு ஊகித்துக் கொள்பவர்கள் பிரபல சாத்திர விற்பனர்களாகவும் தீர்க்க தரிசிகளாகவும் அமைகின்றனர். அவர்கள் மற்றவர்களின் வாழ்க்கை சம்பந்தமான பல விடயங்களையும் எதிர்வு கூறுகின்றனர்.

பீஷ்மருடைய வாழ்க்கை இல்லறம் இல்லாது அமையப் போகின்றது என்பது தெளிவாகத் தெரிந்திருந்தும், அவரின் செயல் அற்புதமாகவே காட்டப்படுகின்றது. இங்கு ஒரு முக்கியமான விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கதையின் ஓட்டம் தெரியாமலேயே எம்மால் வழங்கப்படுகின்ற பொருத்தப்பாடுகள் எமது பகுத்தறிவுத் திறமையைக் காட்டுகின்றதா அல்லது முற்பிறவியை நினைவூட்டுகின்றதா?

தனது பிறவியின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாத பீஷ்மர் தன்னுடைய தந்தை மீது கொண்ட பிரியத்தினால், எழுந்தமானமாகச்

சொன்னது அவரின் முற்பிறவியின் தொடர்ச்சியைக் குறித்தது. அதை அவர் இப்பிறப்பில் தெரிந்து கொள்ளாது இருந்தாலும், அந்த நேரத்தில் பொருத்தமாக நடந்திருக்கின்றார்.

பீஷ்மர் இளமை இருக்கவும் வாழ்வை இழந்து நின்றார். ஆனால், புருவோ இளமையையும் துறந்துவிட்டு அதனால் வாழ்வைத் தொலைத்து நின்றார். இதிலே யாருடைய தியாகம் பெரியது என்பதை யாராலும் சொல்லிவிட முடியாது.

முதுமை, பிணி, சாக்காடு என்பவற்றைத் தெரிந்து கொள்ளாமல் இன்பலோகத்தில் திளைத்திருந்தார் சித்தார்த்தர். ஆனால் விதிப்பயனின் காரணமாக அவற்றைப் பற்றி அறிந்து கொண்டவுடனுமே தன்னுடைய குடும்பத்தையும் அரசாட்சியையும் துறந்து ஆண்டியாகி சென்றுவிட்ட கௌதம புத்தராக இந்தக் கட்டத்தில் நினைவுக்கு வருகின்றார்.

அண்ணனை விடவும் இளையவனுக்கே அரச இலட்சணங்கள் அதிகமாக அடைந்திருக்கின்றன என்பதைக் கெள்விப்பட்டவுடனும் குதித்தெழுகின்றான் அண்ணன். குழப்பம் எதுவுமே கொள்ள வேண்டாம் என்று சொல்லி காவியுடையுன் சென்றுவிடுகின்றார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் என்னும் காவியம் அவராலேயே இயற்றப்பட்டது.

ஆண்டவர் பெயரைச் சொல்லி ஆசைகளைத் துறந்துவிட்ட அனைவரும் இவர்களின் வரிசையில் வந்து நின்றுவிடுவார்களே. உலக வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் சுகங்களைக் காட்டியிருந்தாலும் அவை வேண்டாமெனக் களைந்தெழுந்த எம் இளையவர்கள் இவர்களின் மனநிலையிலேயே இருந்திருப்பர்.

இளமையையும் உலக வாழ்க்கையையும் துச்சமென மதிக்கும் அவர்களுடைய மனோநிலையை அத்தனை எளிதாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு சின்ன விடயத்தையும் இழந்துவிடக் கூடாது என்று அங்கலாய்க்கும் இந்த அற்ப மனதினால் அவர்களுடைய ஒப்பற்ற தியாகத்தை எடைபோட முடிவதில்லை.

பிள்ளைகளைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து எடுப்பதற்கு கடுமையான முயற்சிகளையும் தியாகங்களையும் செய்து கொள்ளுவர். ஆனால் அவர்களுக்கு முக்கியமான இளமையைத் தந்துவிடு என்று கேட்கும் தந்தையரை விசித்திரமாகவே பார்த்துவிடத் தோன்றுகின்றது.

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு விடயத்திற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. அதை தகுந்த நேரத்தில் கடைப்பிடிக்காது விடுவதும், தன்னுடைய சந்தர்ப்பம் முடிந்தபின்பும், மற்றவர்களிடம் இருந்து தட்டிப் பறித்துக் கொள்ள முனைவதும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

பலவிதமாக சமூகப் பிரச்சினைகளும் இதனாலேயே உதித்தெழுகின்றன. இளமையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம், இருக்கும்போது பொய்யான வேடங்களைப் புனைந்து, உலகிற்கு நடிப்பதற்கு முனைகின்றனர். இதற்காகப் பல கோடிக் கணக்காகப் பணமும் செலவிடப்படுகின்றது.

ஐம்பது வயதில் முதுமை வந்துவிடாது என்று சொல்லித் தங்களுடைய அங்கங்களைப் புதுப்பிப்பதற்கு செல்வந்தர்கள் முயற்சி செய்கின்றனர். அறுபது வயதைத் தாண்டிய ஒருவர் தன்னுடைய முகத்தின் உறுப்புகளை சத்திர சிகிச்சை செய்து மாற்றியமைத்துக் கொள்வதும், சாயங்களைப் பூசி நரையை மறைக்க முனைவதும் சாதாரணமாக நடக்கின்றது. அது மட்டுமல்ல வெண்ணிறத் தாளில் வர்ணம் தீட்டி அழகு பார்ப்பதைப் போல வெண்ணிற முடியில் விதவிதமான சாயங்களையும் இட்டு மற்றவர்களுக்குப் பீதியை உண்டாக்குகின்றார்கள்.

அறுபது வயது ஆடவர் ஒருவர் இருபது வயதிலே ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முயன்றார். தன்னுடைய கடும் முயற்சியால் அவளின் உள்ளத்தை வென்று விட்டார். திருமணத்தின் பின்னால் கண்டுபிடித்து விடுவாளே என்று நினைத்து தலைமுடி காணப்படும் இடங்களில் எல்லாம் கடும் சாயத்தைப் பூச முனைந்திருக்கிறார். அந்த சாயங்களிலுள்ள ஈரம் உடலுக்குட் சென்று இறுதியில் உயிரை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இவ்வாறான பலவிதமான சம்பவங்களை எளிமையான நகைச் சுவைகளின் மூலம் சினிமாப்படங்களில் காட்ட முயற்சி செய்கிறார்கள். அனைத்தையும் பார்வையிட்ட பின்னாலும் இளமைத் தோற்றத்தைத் தேடித் திரியும் முயற்சிகள் எம்மவரிடையே குறைந்த பாடில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக பயிற்சிகள் மூலம் உடம்பின் அளவை அதிகரிக்காமற் பார்த்துக் கொள்கின்றனர். விதவிதமான சிகை அலங்காரங்களையும், நவீன ரக ஆடைகளையும் உடுத்திக் கொள்கின்றனர் ஆண்களும் பெண்களும்.

பிள்ளைகளை அருகில் அழைத்துக் கொண்டு செல்லும்போது அவர்களுக்கு சகோதரர்களைப் போல தென்படுகின்றனர். அவர்கள் உங்கள் சகோதரரா என்றோ அல்லது நீங்கள் வயது குறைந்தவராகத் தென்படுகின்றீர்கள் என்று யாரும் சொல்லி விட்டாலோ அன்று நித்திரையும் வராது இவர்களுக்கு.

ஆனால் அவ்வாறு சித்தரிப்பதால், பிள்ளைகளுக்கு வயதாகி விடுவதைப் போன்று அமைந்து விடுகின்றது. அவர்கள் தங்கள் வயதுக்கு முன்பாக முதுமைத் தோற்றத்தை அடைந்ததாகக் காட்டப்படுகின்றனர்.

முன்னைய நாட்களில் அம்மாவினுடைய படத்தை வரையச் சொல்லி ஒரு குழந்தையிடம் கேட்டால், அது சேலையுடன் பூவும் பொட்டுமாகக் காணப்படும் ஒரு பெண்ணின் படத்தை வரைந்து காட்டும். ஆனால் இன்றைய நாட்களில் அந்த விடயத்தைப் பிள்ளைகளுக்குச் சொன்னால், சல்வார் அணிந்து ஸ்கூட்டியுடன் நிற்கும் ஒரு பெண்ணைப் பிள்ளைகள் வரைந்து காட்டுவார்கள். அன்னையின் படத்தை வரையச் சொன்னால் தவறாக அக்காவின் படத்தை வரைகிறார்கள் என்று பிள்ளைகளைக் கண்டிக்க நேரிடுகின்றது.

தங்களது இளமையை மீட்டுக் கொள்வதற்காகவும் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அவர்கள் செய்யும் காரியம் இவ்வாறாக மட்டுமே பிள்ளைகளைப் பாதித்து விடுவதில்லை. வேறு பல சமுதாயச்

சீரழிவுகளும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு செயற்கையாக இளமையைப் பெற்றுக் கொண்ட ஆணோ பெண்ணோ தன்னிலும் வயது குறைந்தவர்களின் கண்ணில் பட்டுவிடவும் அவர்களுக்குள் மறுபடியும் இளமை ஊஞ்சலாடத் தொடங்குகின்றது. இதனால் அவர்களிடையே புதிய தொடர்புகள் உருவாக்கப்பட்டு, பிள்ளைகள் அநாதைகளாகத் தெருவில் வந்துவிடும் நிலை ஏற்படுகின்றது.

போலியாக வாழ்வதற்கு முனைவதால் ஏற்படும் விளைவுதானே இது! இயற்கையால் எமக்கு வழங்கப்படுபவற்றை ஒழுங்காகப் பொறுமையாக அனுசரித்து வாழ்வதனால் இவ்வாறான பிரச்சினைகளைத் தடுக்க முடியுமே.

குழந்தைப் பருவத்தில் அரும்பாக முளையிடுவதைப் போன்று, யௌவனப் பருவத்தில் பூத்துக் குலுங்குவதைப் போன்று, முதுமைப் பருவத்தில் பழுத்த பழமாக ஞானியாகத் திகழ வேண்டியவர்கள் நாம். இளையவர்களுக்குப் போட்டியாக, அவர்களைப் போல காட்டிக் கொள்ள முனைவது தேவையற்ற ஒரு விடயமாகும்.

அந்தந்த வயதுகளில் அவ்வாறே தோற்றம் அளிப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். அதனால் எம்மைப் பார்த்து யாரும் நகைத்துவிட மாட்டார்கள். ஆனால் முகச் சுருக்கத்தையும், தலையின் திரையையும் மறைப்பதற்கு முயற்சி செய்தால் நகைக்கப்படுவது உண்மை.

அதைவிடவும் வாழ்க்கையில் அடிபட்டவன் அல்லது பக்குவப்பட்டவன் என்று பலராலும் கணிக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டோம். எமது வாழ்க்கையின் ஒப்பற்ற குறிக்கோளை அடைவது எமது பயணம் வெகுவாகத் தொடர்கின்றது என்பதையே எமது பக்குவப்பட்ட தோற்றம் காட்டுகின்றது.

இந்த வயதில் அனுபவ முதிர்ச்சியும் அதன் காரணமாக முகத்தில் தெரியும் ஒளியும் அப்படியானவர்களிடம் நெருக்கமாக நினைக்கும் இளையவர்களின் எண்ணத்தையும் மறந்துவிட்டு பல்லை இளித்துக் காட்டுவதற்காக அலங்காரம் செய்து நிற்கின்றார்கள்.

வாழ்க்கையில் மிக முக்கியமான விடயங்கள் எத்தனையோ இருக்கும்போது, வயதைக் குறைத்து சொல்ல லேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, சிறியவர்களைப் போல நாம் காட்டிக் கொள்வதனால் எமக்கு என்ன நன்மை விளைப் போகின்றது என்று கேட்டால் யாராலுமே பதிலளிக்க முடியாது.

இவ்வாறான துன்பங்களை எல்லாம் கருத்திற் கொண்டுதான் பீஷ்மரும் புருவும் இளமையில் முதுமை அடைந்தார்களோ!

அவர்களைப் போலவே முதுமையை விரும்பி ஏற்றுக் கொண்ட பெண்களும் இருக்கிறார்கள். ஔவையார் தன்னுடைய திருமணத்திற்குப் பெற்றோரால் ஆயத்தம் செய்யப்பட்ட வேளையில், பிள்ளையாரின் அருளால் இளமையைக் கொடுத்து முதுமையை வாங்கிக் கொண்டார்.

தமிழுக்குத் தொண்டு செய்வதற்கு திருமணத்தைத் தவிர்க்கும் முகமாக அவ்வாறு அவர் இரந்தார் என்று சொன்னார்கள். "திருமண பந்தம் வேண்டாம். நிலையில்லாத இந்த இளமை வேண்டாம். என்றும் தமிழுக்குத் தொண்டு செய்ய வரம் தா" என்று விநாயகரிடம் கேட்டாராம்.

ஆனால் இன்றைய நாட்களில் பெண்களின் பாதுகாப்பு இன்மை யையும் பெண்களுக்கு வழங்கப்படும் கொடுமைகளையும் நோக்கும் போது அவரின் நடவடிக்கையின் இன்னொரு பக்கம் துலங்குகின்றது. எம்மைக் கேளாமலே என்னென்னவோ எண்ணங்கள் எழுகின்றன.

வீட்டுக்குள் பூட்டப்பட்ட பாதுகாப்புக்குள் அமர்ந்திருக்கும் குடும்பப் பெண்ணுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கும்போது, இளம் பெண்ணுக்கு, அதிலும் தமிழுக்குத் தொண்டு செய்யவென வெளியில்

புறப்பட்டுத் திரியும் பெண்ணுக்கு என்ன பாதுகாப்பு இருக்குமோ என்று யோசித்ததால் அவ்வாறு பெற்றிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

இவ்வகையிலான காரணங்களினாலோ என்னவோ பிரசித்தம் என்ற விடயத்தில் பெண்கள் பின்னாலே நிற்பதும், பெண்களில் பலரும் வயது கடந்த பிற்பாடே எழுத்துலகிற்கும் அரசியலுக்கும் வருவது அதனாற்றானோ!

கணவன் தன்னை விட்டுப் பிரிந்ததும் பேய் உருவம் கொண்டார் ஒரு பெண். இல்வாழ்வு இல்லை என்றாகிவிட, தமிழுலகுக்கு புலமையால் தொண்டு செய்யப் புறப்பட்ட காரைக்கால் அம்மையாரும் ஔவையாரைப் போன்றே நினைத்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

கணவன் இல்லாதபோது இளம் பெண்ணுக்குரிய மனப்பக்குவத் தையும், தற்காப்பையும் பேய்க் கோலம் தந்துவிடும் என்று அவர் நினைத்துக் கொண்டது சாலப் பொருத்தமானதே.

ஆக இளமைக்கும் முதுமைக்கும் இதுதான் என்ற இடைவெளி கிடையாது. அவரவர் விருப்பத்தையும் ஆற்றலையும் நோக்கத்தையும் பொறுத்தது, அவை இரண்டையும் தக்க வைத்துக் கொள்ளும் வழி.

இளமையின் வயதையும் வாலிபத்தையும் கொண்டிருப்பினும் அவயவங்களை இழந்தும் ஆதரவுகளை இழந்தும் முதியவர்போல் தோற்றம் பெறும் எம் இளையவர்கள், இவ்வரிசையிற் கொண்டு வரப்படுகின்றனர். முதியவர்களைப் போல மற்றவர்களின் பராமரிப்பில் கட்டாயமாகத் தங்கிவிடத் தேவையாகும் இவர்களுடைய வாழ்க்கையில் இளமையை ஏற்படுத்துவது எவ்வாறு என்ற கேள்வி அவர்களின் நலனில் அக்கறையுடைய ஒவ்வொருவரிடமும் தோன்றுவது இயல்பானதே.

ஆனால் அவர்களின் வாழ்க்கையை வளமாக்க முடியும். அவரவர் திறமைக்கும் செயற்பாடுகளுக்கும் ஏற்றவகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். அவ்வாறும் செய்ய

முடியாதவர்களுக்கு அரசினால் சிறு சிறு மானியங்களை வழங்க முடியும். அவர்களைச் சோர்ந்து போகவிடாது, சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அங்கங்களை இழந்தவர்களுக்கு அங்கங்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று மாங்குளத்தில், பனிக்கங்குளத்தில் நிறுவப்பட்டுள்ளது. பலவிதமான துறைகளிலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. இருப்பினும் அரசாங்கத்தின் கவனம் இவ்வாறான விடயங்களில் முற்று முழுதாகச் செல்லவேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும்.

இவ்வாறு இளமையைத் தொலைத்துக் கொண்டவர்கள், தமது பாட்டுக்கே திண்டாடும் நிலை ஒரு புறம் இருக்க, வசதியுடைய இளையவர்கள், போதை மற்றும் மோசமான பழக்க வழக்கங்களிற்கு அடிமையாகி வேகமாக முதுமையைத் தேடிச் செல்லும் நிலைமையும் காணப்படுகின்றது. இவை தொழில்நுட்பத்தின் உச்ச கட்ட வெறியாட்டமா? அல்லது எம்மைப் போன்றதான மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கப்பட்ட சாபமா என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறான நாடுகளில் இளம் சமுதாயத்தினை வேரறுக்கவல்ல அனைத்து அட்டூழியங்களும் தலை விரித்தாடுகின்றன. அவற்றுக்கு எல்லாம் அடிப்படை நல்ல கல்வியும் தொழிலும் இன்மை என்று பொதுப்படையாகச் சொல்லிக் கொண்டாலும் பண்பாட்டு விழுமியங்களை அவர்கள் தெரிந்து கொள்ளாமையும், கலை, கலாசார விடயங்களில் ஈடுபடாமையும் செல்வாக்கு செலுத்துவதாகப் பலரும் கூறுகின்றார்கள். இளையவர்களைப் பீடித்துக் கொள்ளும் எந்தவொரு பிரச்சினையும் இரத்தப் புற்றுநோயைப் போன்றது. அது மிகவேகமாக எல்லா இடங்களிலும் பரவி உயிரைக் குடித்து விடுகின்றது.

அதைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்கின்றீர்களா? மாறவேண்டும். நாம் அனைவரும் மாறவேண்டும். பிள்ளைகள் பெற்றோரின் அறிவுரைகளைக் கேட்டு வளரக்கூடிய வயது ஆறு தொடக்கம் பத்து வயதாகும். இந்தக் காலத்தில் தாய்- தந்தையருடனான நெருக்கத்தை உறுதிசெய்து கொள்ளவேண்டும். பெற்றோர் தங்களுடைய ஓட்டத்தை சற்றுத் தளர்த்தி இந்த வயதுகளில் குழந்தைகளுடனான தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இவற்றைக் கேட்கும்போது உடனடியாகவே செய்தாக வேண்டும் என்று ஆசை எழுந்தாலும் அவை பின்பற்றப் படுவதில்லை. உலகத்தின் ஓட்டத்தில் நாமும் சேர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. யாரைப் பார்த்து யார் நிற்பது.... ஆகட்டும் ... இப்பொழுது நானும் ஓட வேண்டியிருக்கிறது. பல விடயங்களை ஆராய வேண்டி இருக்கிறது.

## 20. மன்னரை மயக்கியோடிய மான்

இராமாயணத்தில் சீதையைத் தனிமைப் படுத்துவதற்காக மாரீசன் என்னும் அரக்கன் மானின் வேடம் பெற்று அவளின் முன்னே செல்கின்றான். எதையுமே ஆசைப்பட்டுக் கேட்டிடாத அந்தப் பெண் அழகிய பொன்மானைக் கண்டதும் அதைப் பிடித்துத் தருமாறு தன் கணவனிடம் கேட்டாள்.

ஏனைய விலங்குகளை விடவும் மான் மிகவும் பதுமையானது, மென்மையானது. அதைப் பிடிப்பது என்பது அத்தனை கடினமல்ல சுலபமாகத் துரத்திப் பிடித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் இலக்குவனைத் துணையாக நிறுத்திவிட்டு மானைத் தொடர்ந்தான் இராமன்.

அவருக்குப் போக்குக் காட்டிக் கொண்டே சென்ற மான் அவரை வெகு தூரத்திற்கு அழைத்துச் சென்று விடுகின்றது. கதைகளின் திருப்பத்தில் இவ்வாறான மான்களைப் பாவிக்கும் வழக்கம் காலம் காலமாகவே இருந்து வருகின்றது. கதையின் களத்தைத் திடீரென மாற்றுவது நோக்கமாக இருந்திருக்கலாம்... நிற்க.

யயாதிக்கும் சர்மிஷ்டைக்கும் பிறந்த கடைசி மகனாகிய புரு, தந்தைக்கு இளமையைக் கொடுத்து தான் முதுமையைப் பெற்றுக் கொண்டதை ஏற்கெனவே சொல்லியிருந்தேன். பிந்நாளில் அவனின் இளமையும் இதற்குச் சன்மானமாக அரசாட்சியும் அவனுக்குக் கிடைத்தது.

இவன் சாத்திரவிதி தவறாமல் அரசினை ஆட்சி செய்து வருகின்ற நாளில் கேகயராஜன் புத்திரியாகிய கௌசலையை மணந்து ஜனமேஜனைப் பெற்றான். ஜனமேஜனின் மகன் பிராசீனன் அவன் மகன் சய்யாதி. சய்யாதி சார்வ பூமனைப் பெற்றான். அவனிலிருந்து அவன் மகன் பேரன் என ஜயசேனன், நயுதன், குரோதன், தேவாபி, உருசகன், அரிசகன், மதிவான், திடன், நீலன் அவ்வாறே சென்று நீலன் இரத்தினமாலை என்ற பெண்ணை மணம் செய்து துஷ்யந்தனைப் பெற்றாள்.

துஷ்யந்தனாலே சந்திரவம்சம் மிகவும் பெருமை பெற்றது. அந்த மகாராஜன் இளமையிலேயே, தன் பகுதியில் விளைநிலங்களில் உயர்ந்து பருத்து விளங்கியிருந்த பெரிய மலைகளை எல்லாம் பார்த்தவர்கள் வியக்குமாறு களைந்தெறிந்து மக்களைக் காத்தான்.

ஒரு நாள் அவனுடைய சபைக்கு மக்கள் குழாம் விரைந்து வந்தது. தங்கள் பயிர்களை மிருகங்கள் சேதப்படுத்துவதால், அசௌகரியத்தை எதிர்நோக்குவதாக முறையிட்டனர். அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு வேட்டையாடச் செல்லவெனத் தீர்மானித்தான்.

தங்களுடன் வேடர்கள் வலைஞர்களையும் அழைத்துக் கொண்டு, மந்திரிகள் முதலானோர் புடைசூழ வாத்தியங்கள் கடல் போல் ஒலிக்கச் சென்றார்கள். வேடர்கள் அவர்களுக்கு முன்னதாகச் சென்று காடு முழுவதும் வலையைக் கட்டி விலங்குகள் தம்மை நோக்கி வரும்படி செய்தனர். அவ்வாறு அகப்பட்ட மிருகங்களை வேட்டையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு மான் அரசரிடம் இருந்து தப்பி வேகமாக ஓடத் தொடங்கியது.

அந்த மானைத் துரத்திக் கொண்டே அவர் ஓடியபோது, அது அதிவேகமாக நெடுந்தூரம் சென்று பாலை நிலத்தைக் கடந்து மறைந்தது. அந் நிலத்தின் வெம்மை, மெய் முழுவதும் வியர்வையை ஏற்படுத்தவும் நீரைத் தேடிச் செல்லலானார்கள்.

அந்தத் தருணத்தில் ஒரு பக்கத்தில் இருந்து குளிர்ச்சியான காற்று வீசியது. அந்தக் காற்று வந்த திசையை நோக்கிச் செல்கையில், உலக மாதாவாக விளங்கும் கங்கையைக் கண்டு அதில் நீர் அருந்திவிட்டு விநோதங்களைப் பார்த்தபடி சென்றனர்

அப்படி வருகின்றபோது சூதவனம் தோன்றியது. கண்ணுவ மகரிஷி இருக்கும் ஆசிரமம் என்பதை அறிந்ததும், அவரைக் கண்டு ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் மன்னன் முன்னோக்கிச் சென்றான்.

கண்ணுவ மகரிஷி அந்த இடத்தில் இல்லாதபோது, அழகே உருவாக ஒரு இளம்பெண் வருவதைக் கண்டதும் அரசன் கண்ணுவ மகரிஷி எங்கே என்று வினவியபோது, அவர் சென்ற காரியத்தைச் சொன்னாள்.

கண்ணுவரிடம் இருந்த அளவுகடந்த மரியாதையால், அந்தப் பெண் யாரெனக் கேட்கவும் அவள் அவரின் மகள் என்றும் தனது பெயர் சகுந்தலை என்றும் சொன்னாள். பிரம்மச்சாரியாரான கண்ணுவருக்கு ஒரு மகள் இருப்பதைக் கண்டதும் அவளைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எழுந்தது.

பொதுவாகவே மானுடரின் மனோநிலை இவ்வாறுதான் அமைந்து கொள்கின்றது. ஒருவரைப் பற்றி மேலான எண்ணத்தைத் தாங்களாகவே ஏற்படுத்திக் கொள்வார்கள். ஆதாரம் இல்லாமலே எதையாவது கேள்விப்படும்போது, கணப்பொழுதில் அவர்களைப் பற்றி குழப்பம் அடையத் தொடங்குவார்கள். தான், கண்ணுவர் பிரம்மச்சாரி என்று எண்ணம் வைத்தருந்ததனால் கண்ணுவரின் மகள் எனச் சொல்லப்படுபவள் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆவல் எழுந்தது.

அவளின் பூர்விகத்தை அவளிடம் மகரிஷி சொல்லியிருக்கவில்லை எனினும், பெண்களுக்குத் தம்மைப் பற்றி அறியும் ஆவல் தீவிரமாகவே காணப்படும். இதனால் ஏற்கெனவே சில நாட்களுக்கு முன்பாக கண்ணுவ மகரிஷி சதானந்தருக்குச் சொன்னபோது தான் அறிந்து கொண்ட தனது வரலாற்றை அந்தப் பெண் எடுத்தியம்பினாள்.

முன்பு ஒருநாள் விசுவாமித்திரர் இமயமலைச் சாரலில் அகோரமான தவத்தைச் செய்து கொண்டிருந்தார். அதன்போது தவத்தால் எழுந்த அக்கினி திரி லோகங்களையும் தகிக்கத் தலைப்பட்டது. சொர்க்க லோகத்தில் இருந்த இந்திரன் முதலான தேவர்கள் மிகவும் அச்சம் அடைந்தனர்.

அந்தத் தவத்தின் உக்கிரத்தை நோக்கியதால், வரம் பெற்றதன் பின்பாக அவன் வேறொரு சிருஷ்டியைச் செய்துவிட முடியும் என்று எண்ணியவர்கள் தேவலோகப் பெண்ணாகிய மேனகையை அழைத்து விசுவாமித்திரரின் தவத்தைக் கலைப்பதற்கு அனுப்பினார்கள்.

விசுவாமித்திரருக்கு முன்பாக மேனகை நின்றதும் அவளின் அழகும், அணுகுமுறையும் அவளைக் கவரவே அவரின் தவம் கலைக்கப்பட்டு, அவர் மேனகையை அடைந்தார். அவர்களின் உறவினால் பிறந்த பெண்ணே தான் என்றும் தன்னை மேனகை விட்டு விட்டுத் தேவலோகம் செல்லவும், விசுவாமித்திரர் விட்டுத் தவம் செய்யப் போய்விட்டார் என்றும் அவள் சொன்னாள்.

பகல் வெப்பத்தினால் தாக்குண்டுக் கதறிய அந்தக் குழந்தையை சாகுந்தலப் பறவைகள் வந்து காத்து நின்றன. அவ்வழியில் கண்ணுவர் வந்தபோது சிசு அழுத குரலைக் கேட்டு, அவருடைய சிவந்த கரங்களில் ஏந்தி, சகுந்தலை என்று பெயரிட்டு வளர்த்தார் என் அந்தப் பெண் சொல்லி நின்றாள்.

பிறந்த நாள் முதலாக தந்தை, தாயின் அரவணைப்பை இழந்து வாழ்ந்தவள் சகுந்தலை. சத்திரிய குலத்திற் பிறந்து, பிந்நாளில் தவம் செய்து முனிவரான விசுவாமித்திரருக்கும், தேவலோக மங்கையான மேனகைக்கும் மகளாகப் பிறந்திருந்தும் தூக்கி வீசப்பட்டவள் என்ற எண்ணம் அவளிடம் மேலோங்கி நின்றது.

கண்ணுவர் கண்ணாக வளர்த்த போதிலும் ஒரு பெண்ணின், அதிலும் இளம் பெண்ணின் மனதை எவ்வாறு அவர் அறிந்திருக்க முடியும்? பாசத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் அவளை எவ்வாறு அவர் ஆற்றுப்படுத்தியிருக்க முடியும்?

முனிதல் என்றால் கோபித்தல் என்று பொருள்படும். உலகத்திலுள்ள பொருட்களைக் கண்டு, அவற்றின் நிலையாமையையும், போலியான வாழ்க்கையைத் தேடும் மனிதரையும் கண்டு முனிந்து கொள்ளும்

அவர்களால், ஒரு இளம் பெண்ணின் தேடலை அறிந்து கொள்ள முடியுமா? அப்படியே அறிந்து கொண்டிருந்தாலும் அதை நியாயமானது என ஏற்றுக் கொள்வாரா?

தனது பிறப்பினாலும் பெற்றோரின் பாராமுகத்தினாலும் விரக்தி அடைந்து இருந்த சகுந்தலை, தனக்கு ஒரு கட்டுப்பாட்டை விதித்து ஒரு வட்டத்திற்குள் இயங்கி வந்தாள். அதனால் துஷ்யந்தனைக் கண்டபோது அவள் சலனப்பட்டு விடவில்லை.

சாதாரணமாக அந்த இடத்தை நோக்கி வருபவர்கள் முனிவர்களாகவே இருந்ததாலும், அவர்கள் தம்மை உபசரிக்காதுவிடின் எளிதிற் கோபங் கொண்டு சாபமிட்டு விடுபவர்களாகவும் இருந்தமையால் யாருடனும் எளிதிற் மரியாதையுடன் பேசிக் கொள்ளும் பழக்கம் அவளிடம் இருந்தது. அதைப் பிழையாக அவள் கருதி இருக்கவில்லை.

கள்ளங்கபடம் இல்லாதவர்கள் என்று சொல்லப்படும் பெண்கள் இவ்வாறு இக்காலத்திலும் இருக்கிறார்கள். யாருடனும் எளிதில் சிநேகம் கொண்டு பழகுவார்கள். அவர்களிடம் இருக்கும் கள்ளம் இல்லாத உள்ளமே அனைவரிடமும் இருக்கும் என்று எதிர்பார்ப்பார்கள்.

கண்ணுவரின் ஆசிரமச் சிறைக்குள் வைக்கப்பட்டிருந்த அந்தப் பெண்ணின் விதியும் மான் உருவில் வந்தது என்றுதான் கொள்ள முடியுமா? பூட்டிய வீட்டுக்குள் இருக்கும் பெண்களுக்கும் பாதுகாப்புக் கிடைப்பது அருமையானதா?

இலக்கியத்தில் ஒரு இடத்தில் சாவித்திரி என்று அழைக்கப்பட்ட மன்னர் அசுவபதியின் புதல்வியைக் காட்டுகின்றார்கள். பெண்ணாக பூட்டிய வீட்டுக்குள் இருந்து கொள்ளாமல் காட்டில் தனியாக நடமாடும் அளவிற்கு சுதந்திரம் கொண்டவளாக அந்தப் பெண் இருந்ததாகச் சொன்னார்கள்.

அவள் மிகவும் சுதந்திரமாக தனக்குரிய துணையைத் தானாகவே தேடிக் கொண்டு, விவாகம் செய்து இறுதியில் இயமனையும் வென்று

விட்டதாகக் காட்டப்பட்டது. எந்த ஒரு ஆணாலும் முடியாததை, அதாவது மரணத்தை வெல்லுதல் என்ற விடயத்தை ஒரு பெண் செய்து காட்டியிருக்கிறாள்.

ஆனால் இங்கு ஆசிரமத்தில் இருந்த சகுந்தலைக்கு ஆரவாரத்தைக் கொடுக்கும் விதி அரசர் உருவிலே வந்து சேர்ந்தது.

**சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை**

என்ற முதுமையான குறட்பா இதையே சொல்லி நிற்கின்றது. அன்றைய காலத்தில் ஆண்கள் வெளியில் சென்று பொருள் ஈட்டி வருகையில் பெண்கள் வீட்டுக்குள் இருந்து வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அறியாமலேயே அவர்களின் சம்மதத்துடனும் அவர்களுக்கு சிறை விதிக்கப்பட்டது.

ஆனால் இன்றைய நாட்களில் பெண்கள் பூட்டிய வீட்டுக்குள் இருப்பதில்லை. தொழில் நிமித்தமாக வெளியில் சென்று வரவேண்டிய தேவை இருக்கின்றது. அதைவிட வேறு காரணங்களுக்காகவும் வெளியே தனியாகவும் வேறு யாருடனும் சேர்ந்து சென்று வருகின்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய நாட்களில் பல்வேறு காரணங்களினாலும் அதிகரித்துவிட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களினால் பெண்கள் கட்டாயமாக வெளியில் சென்று வேலை பார்த்துவர வேண்டிய நிலைமை அவசியமாகின்றது. இதனால் அவர்களைச் சந்தேகித்தாக வேண்டியதில்லை. பெண்களுக்கு அடக்கம் அவரவர் மனதினுள் இருக்கின்றது.

“பெண்களுக்கு நகங்களும் பற்களும் இல்லையா ..?” என்று மகாத்மா காந்தி கேட்டது எனக்கு நினைவுக்கு வருகின்றது. ஆண்கள் போலவே நாங்களும் மனித இனத்தைச் சேர்ந்தவர்களே. பிறகு எதற்காக அவர்களுக்குப் பயந்து நடக்க வேண்டும்? அதுவும் பெண்களின்

உரிமைகளும் சுதந்திரமும் உணர்த்தப்படும் காலம் இது. இந்தக் காலத்தில் செய்ய முடியாததை எக்காலத்திலுமே செய்துவிட முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

பெண்களுக்கு ஆயுதத்தைக் காட்டுபவனிடம் இருந்துகூட தப்பித்துவிடலாம். ஆனால் அன்பைக் காட்டுபவனிடம் இருந்து அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. அவ்வாறான வலைகளில் விழுந்து எழ முடியாமல் மாண்டு போனவர்கள் அநேகர். அவர்களின் வாழ்க்கையில் விடியல் என்பது வருவதே கிடையாது.

எத்தனை வயதான பிறகும் பேதைகளாக இருந்ததாக பெண்களைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். ஆனால் உலகத்தைத் தெரிந்து கொள்ளாத வயதிலே, உண்மையான வேடத்தைப் புரிந்துகொள்ளாமல் பொய்வேடத்தில்மயங்கிவாழ்க்கையைத்தொலைத்துக்கொண்டவர்களாக அநேகப் பெண்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சிறு வயதில் தெரியாமற் செய்த தவறுக்காக வாழ்நாள் முழுவதுமே விமோசனம் இல்லாமல் வாழ்கின்றனர்.

குடி, குடங்குடமாகக் குடிக்க வைத்துக் குடும்பங்களை அழித்து விடுவது நாம் அறிந்ததே. அவ்வாறாகக் குடிகாரக் குடும்பங்களில் பிறந்து தொலைத்த பெண்கள் தாய் தந்தையரின் சண்டைக்கு மத்தியில் எப்படியோ வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்து விடுகின்றனர். அவர்களுடைய எதிர்பார்ப்பு அந்த மோசமான இடத்தில் இருந்து விடுதலை என்பதை நோக்கியதாக இருக்கும்.

இந்தத் தருணத்தில் அவர்களின் வயதைச் சூறையாடுவதற்கு வாலிபர்கள் முனைந்து கொள்வர். அவளின் குடும்பத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பதால் அவளின் சின்னச்சின்ன எதிர்பார்ப்புகளை அறிந்து கொண்டு அவற்றைத் தீர்த்து வைத்து அவளிடம் நன்மதிப்பைப் பெற்று விடுவர். இவ்வாறாகத் தொடங்கும் அவர்களுடைய தொடர்பு, காந்தர்வ மணமாகத் தொடங்கி எங்கோ ஓடிச் செல்லும் அளவிற்கு வந்து விடுகின்றது.

தன்னுடைய நுனியிலே இரையைக் கொழுவியபடி தம்மை நோக்கி நீண்டு கொண்டிருக்கும் விதி என்ற தூண்டிலிலே அவர்கள் சுலபமாக மாட்டிவிடுவர். கண்டேன் என் இராமனை என்று சொல்லிக் கலந்திட்ட விவாகம், மாதக் கணக்கிலோ அல்லது நாட்கணக்கிலோ சந்திக்குக் கொண்டு வரப்பட்டு அவரவரின் உண்மையான முகம் காட்டப்படும். விதியை நொந்து கொண்டு வாழப் பழகிவிடுவாள் அந்தப் பெண்.

இவ்வாறான நிலைமைகள் காலங்காலமாகத் தொடர்வதற்கு என்ன காரணம் என்பதை யாரும் சிந்தித்துப் பார்த்திருப்போமா?. பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் முறையிலே ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கின்ற வித்தியாசமே இவ்வாறான நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றது. அல்லது காலங்காலமாகக் கடத்துகின்றது. இந்த இடத்தில் எந்தவிதத் தற்பெருமையும் இன்றி அனைவரும் நிதானத்துடன் சிந்தித்தாக வேண்டும். இவ்வாறான விடயங்களை எல்லாம் இனிக் கதைகளில் மட்டுமே எம்மவர் காணவேண்டும்.

இவ்வாறு இளமைப் பருவத்திலேதான் பெண்கள் ஏமாற்றப்படு கின்றார்கள் என்பதற்கில்லை. அவர்களுக்குரிய இலக்கு வயதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எழுவதில்லை. படிப்பு, பணம் போன்றவற்றும் பணயக் காய்களாக வைக்கப்படும் அவற்றைப் பற்றித் தொடர்ந்து வரும் அத்தியாயங்களிலே பார்ப்போம்.

## 21. நம்பிக்கைப் பயிரிலே விளைவாகும் துரோகம்

சகுந்தலையின் வரலாற்றைக் கேட்ட துஷ்யந்தனுக்கு, அவள் சத்திரிய குலப் பெண் என்பது புரிந்து விடவே தன்னுடைய காதலைச் சொல்லி அவனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான். அவனின் மீது அவளுக்கு இருந்த மரியாதை காரணமாக அவனின் வார்த்தைகளைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டவள், திருமணத்திற்கு அவள் தந்தையைப் போல் வளர்த்த கண்ணுவரின் அனுமதியைப் பெற வேண்டும் என்றாள்.

இதிலே எங்கே, எப்போது, எவ்வாறு காதல் வந்தது என்பது அனைவருக்கும் அதிசயமாகத்தான் இருக்கின்றது. சொற்ப நேரத்திற்கு முன்னதாகவே அவளைக் கண்டான். அப்பொழுதுதான் அவளுடைய கதையைக் கேட்டான். உடனடியாகவே தான் அவளைத் திருமணம் செய்ய விரும்புவதாகச் சொல்கின்றான் என்றால் இதை எந்த வகையில் அடக்கிக் கொள்வது என்பது சகுந்தலைக்கே புரியவில்லை. இந்த இடத்தில் ஏனைய பெண்கள் சொல்வதைப் போன்றே அவளும் சொல்லியிருக்கின்றாள்.

அவள் அரசரின் மகள் ஆதலால் அரசனைத் தேடி மணத்தலே உத்தமம் என்று கண்ணுவரும் அவளுக்கான வரனைத் தேடுவார். அதனால் தன்னை மணப்பதில் எந்தத் தவறும் கிடையாது என்று அவளுக்கு தைரியம் ஊட்டினான். ஆனால் சகுந்தலையோ "உலகிலுள்ள பெண்கள் மணம் செய்யாமல் வேறு ஒரு புருஷனைக் கூடினால், அப் பெண்ணை உலகத்தார் இகழ்வார்கள்" என்று சொல்லி மறுத்தாள். அவளுக்குச் சொல்லுவதாக துஷ்யந்தன் இவ்வாறு சொன்னான். பெண்களை விவாகம் செய்தல் எட்டு வகைப்படும். அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், அராக்கதம், பைசாசம் என்பதாகும்.

இதிலே பிரம்மச்சாரிக்குக் கன்னிகையைத் தீ முன்னே கொடுப்பது பிரமமணம் என்றும் தலைமகன் இனத்தார் வேண்டத் தலைமகள்

இனத்தார் உட்பட்டு ஓமத்தீ முன்னால் கொடுப்பது பிரசாபத்திய மணம் என்றும்,

ஒன்றிரண்டு பசுவும் எருதும் வாங்கிக் கொண்டு நங்கையைத் தீ முன்னர் கொடுப்பது ஆரிட மணம் என்றும், வேள்வியால் வந்த பெண்ணை அக்கினி முன் கொடுப்பது தெய்வ மணம் என்றும்,

கொடுப்பாரும் கேட்பாரும் இன்றி இருவரும் தனியிடத்துக் கூடுவது காந்தர்வ மணம் என்றும், பெண்ணுக்குப் பொன் பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன் வேண்டுவென கொடுத்துப் பெறுவது அசுர மணம் என்றும்,

பெண்ணும் பெண்ணினமும் உடன்படாமல் வலிதிற் கொள்வது ராசஷ மணம் என்றும், உறக்கத்தில் இருப்பவளைக் சென்று கூடுவது பைசாச மணம் என்றும் சொல்லப்படுகின்றது. இதிலே கொடுப்பாரும் கேட்பாரும் இல்லா காந்தர்வ மணத்திலே நாம் இணைவோம் என்று துஷ்யந்தன் சொன்னான்.

தனிமையில் இருக்கும் பெண்ணை ஆற்றுப்படுத்தும் விடயத்தில் இவ்வாறு வேத சாத்திரங்களை எல்லாம் இழுத்துக் கதைக்கும் அளவிற்கு எமது ஆடவர் இருந்திருக்கிறார்கள் என்பது சரித்திரத்தில் காட்டப்படுகின்றது. அது மட்டுமல்ல இந்தக் காலத்தில் வல்லுறவு, வன்முறை என்று சொல்லிப் பாவிக்கும் அனைத்து வார்த்தைகளையும் திருமணம் என்ற பெயருக்குள் அடக்கிப் பாவித்திருக்கிறார்கள் என்றும் புரிகின்றது.

எப்படிப்பட்ட வாழ்க்கை அமைக்கப்பட்டு இருந்தாலும் பெண் அதனைப் பொறுத்துக் கொண்டு வாழவேண்டும் என்று வற்புறுத்தப்படு கின்றது. இதனாலே கணவன் மாதவியிடம் சென்ற போதும் அதை மறுத்துவிட முடியாத நிலையிற் கண்ணகி இருந்தாளோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

கணவனாலே விலை பேசப்படும் போதும் வாளாவிருக்க வேண்டிய நிலை சந்திரமதிக்கு உண்டானது. கணவனாலேயே தீக்குளிக்கப்

பணிக்கப்படும்போது மௌனமாகத் தீயினில் இறங்க வேண்டிய நிலை சீதைக்கு ஏற்பட்டது.

பெண்களுக்குப் பாடம் சொல்லவென ஆண் புலவர்கள் புனைந்த கவிகள் எதைச் சாதித்தன என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அவர்கள் இவ்வாறு படைத்ததால் அனைத்துப் பெண்களையும் பொறுமையின் சிகரம் எனக் கொண்டு விட்டார்களா என்று சிந்திப்போமானால், இல்லை என்ற பதில்தான் எமக்குக் கிடைக்கின்றது. விவாத மேடைகளில் ஒவ்வொரு சரித்திர நாயகியையும் காவிய நாயகியும் விமர்சனம் என்ற பெயரால் தோலுரித்துக் களைகின்றார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லையே

ஆறுதலாக யோசித்துப் பார்த்தால் பெண்களுக்குப் பெரும் பொறுப்பை சுமத்தி கலாசாரத்தைப் பேணும் பண்பை அமைத்திருக்கிறார்கள். தாங்கள் மிகவும் சுதந்திரமாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள்

இவ்வாறான சமுதாயக் கட்டுப்பாடுகள் ஒரிருவரால் தளர்த்தப்படும் போது எத்தனை விதமான இடர்ப்பாடுகள் சமுதாயத்தில் எழுகின்றன. அப்படியானால் இன்று எமது சமுதாயம் இத்தனை பின்நிலைக்குத் தள்ளப்பட்டதற்குக் காரணம் காலம் காலமாகவே நிகழ்ந்துவரும் சமப்படுத்தலின்மையா என்று வாய்விட்டுக் கேட்டு விடவே தோன்றுகின்றது.

சமுதாயத்தில் தமக்கு இருக்கும் சுதந்திரமும் நம்பிக்கையும் ஆண்களை பல விடயங்களை முன்னெடுப்பதற்கு வைத்து விடுகின்றது. அதன் பாரதூரமான விளைவுகளைப் பற்றி ஆராயும் அளவிற்கு அவர்களுக்கு முதிர்வோ அனுபவமோ இருப்பதில்லை.

பெண்களை ஆற்றுப்படுத்தும் இவ்வகையான சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஆண்கள் ஞானிகள் போலவும், பெண்களின் முற்போக்கான விடயங்களை ஆதரிப்பவர்களாகவும், பெண்களைத் தெய்வத்துக்கு நிகராக மதிப்பவர்களாகவும் காட்டிக் கொள்கின்றனர். முக்கியமாக

அந்தப் பெண்ணையன்றி யாரையுமே ஏறெடுத்தும் பார்த்ததில்லை என்று சொல்லி விடுகின்றனர்.

அது தம்மை விழுத்தும் ஆயுதம் என்பதை முற்றிலும் அறிந்திருந்தும் பெண்கள் தாமாகவே வலையில் விழுந்து கொள்கின்றனர். அந்தக் கட்டத்தில் ஆண் பெண் என்ற எதுவித வித்தியாசமும் இன்றி இருவருமே பிழை செய்ததாகக் கணிக்கப்பட வேண்டியவர்களே. இலக்கியத்தில் இவ்வாறான கட்டங்களை அருமையாகவே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஒருவாறு உச்ச பட்ச நம்பிக்கையை உருவாக்கிக் கலந்த பின்பாக துஷ்யந்தன், தான் வேட்டையின் நிமித்தம் அந்தப் பகுதிக்கு வந்ததாகவும், தன்னுடைய படைகளுடன் சென்று நகரத்திற்குச் சென்று மீளவும் வந்து அவளை அழைத்துச் செல்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றான்.

ஆசிரமத்தில் சகுந்தலையானவள், கணவன் பிரிந்து சென்ற வருத்தத்தோடு திவ்ய ஞானியாகிய கண்ணுவர்க்கு என்ன பதிலைச் சொல்லப் போகின்றேனோ என்ற வருத்தத்துடன் காணப்பட்டாள். அவரின் முகத்தை சந்திக்கவும் திறன் அற்றவளாக அதை நினைத்துக் கொண்டிருந்தபோது கண்ணுவரும் ஆசிரமத்துக்குள் வந்தார்.

எதையும் மறைக்க முடியாமல் மனக் கிலேசத்துடன் இருந்தவள், கண்ணுவரைக் கண்டதும் காலடியில் சென்று வணங்கித் தன்னுடைய நிலைமையைச் சொல்லிவிட்டாள். நடந்ததை தன்னுடைய ஞான திருஷ்டியால் அறிந்துவிட்ட கண்ணுவர், எதிர்காலத்தை மனதிற்குள் பூட்டிவிட்டார்.

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, கண்ணுவர் அவள் சொன்னது குறித்து சந்தோசம் அடைந்து, அவள் வயிற்றிலுள்ள சிசு, எதிர்காலத்தில் இந்த கடல் சூழ்ந்த உலகை ஆண்டு கொள்ளும் வல்லமை படைத்தவனாக வருவான் என்று சொல்லி அவளைத் தேற்றினார். அவளும் சமாதானம் அடைந்து, தனது இருப்பிடத்திற்குச் சென்றாள்.

சாதாரணமாக ஒரு தமிழனின் வாழ்க்கையில் திருமணம் என்பது பலருடைய உழைப்பில் இருவரது வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக அமையும். திருமணம் என்பது பல்லாயிரம் ஆண்டுகாலப் பயிர் எனக் கணிக்கப்படுவதால், தங்கள் வீட்டிலுள்ள பெண்ணின் வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதில் அப்பகுதியைச் செர்ந்த ஆண்கள் அனைவரும் பங்குகொள்வார்கள்.

உறவினருக்குள்ளாகவே திருமணங்கள் இடம்பெறுதல் அக்காலத்தில் முக்கிய வழக்கமாக இருந்தது. அன்றியும், தங்களால் நன்கு அறியப்பட்ட ஒரு குடும்பத்தில் இருந்து நன்கு அறியப்பட்டவர்களிடம் இருந்தும் பெண் எடுக்கும் வழக்கம் காணப்பட்டது.

வாழ்க்கையில் புது உறவினை ஏற்படுத்தும் விடயத்தில் பலபேருடைய பங்களிப்பு என்பது ஒரு வகையில் சாட்சியாகவும், இன்னொரு வகையில் பெண்ணுக்குக் காட்டப்படும் பாதுகாப்பு உணர்வாகவும் கருதப்படு கின்றது. இந்து சமயத்தைப் பெறுத்தவரையில் திருமணத்திலே நிறைய சடங்குகளை உள்ளெடுத்துக் கொள்வார்கள். அந்த சடங்குகளில் பல பேர் பார்வையாளர்களாக அமைவர்.

யாருமே அறிந்திடாத வகையில் காந்தர்வ மணம் எனும்போது அதில் உச்ச பட்ச நம்பிக்கை பேணப்படுதல் வேண்டும். மனித மனம் சாதாரணமாகவே குரங்கு போன்று தாவித் தரிவதால் இவ்வாறான மணத்தை தமிழில் பெரிதாக ஆதரிக்கவில்லை.

முருகன் வள்ளியைத் திருமணம் செய்ததும் இவ்வகையிலான காந்தர்வ மணத்தின் மூலம் என்று புராணத்தில் சொல்லப்படுகின்றது. ஆனால் கடவுள் ஆனதால் அந்தத் திருமணம் வெற்றியாகவே முடிந்தது. ஆனால் மனித மனம் அடிக்கடி மாறுவதால் அவர்களிடையே இந்த மணம் பெரிதாக எடுபடாமல், பல பேருடைய சாட்சியத்துடன் இடம்பெறும் திருமணங்களே வெற்றி பெற்றதாகக் கதையை அமைத்திருக்கிறார்கள்.

வாழ்க்கையில் எதையுமே எதிர்வுகூற முடியாதது ஆகையால், அவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை பொருத்தம் பார்த்தல் என்ற ஒருவிதமான சாத்திரத்தின் மூலம் கணிப்பிடுவார்கள். தனித்தனியே ஒவ்வொருவரினதும் சாதகத்தைப் பார்த்தல் போன்று அமையாமல் அவர்களுக்கு இடையிலான பொருத்தத்தை நோக்கி அவர்கள் இணைந்தால் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதைச் சொல்லுவார்கள்.

இங்கு சகுந்தலையின் நிலைமையோ சொல்லிவிட முடியாது. ஆதரவுக்கென யாரும் இன்றி சாட்சியாக ஒருவரும் இன்றி முடிந்த அவளது திருமணத்தில் அவளுக்கு உள்ளாக வளர்ந்து கொண்டிருந்த அந்த ஒரேயொரு சாட்சியே உலகிற்கு வருவதற்குத் தயாரானது.

எவரைப் பற்றிய சிந்தனையும் இல்லாமல் காலம் வேகமாக ஓடிக் கொண்டது. கண்மறைவில் நடந்ததைக் கண்ணெதிரில் வெளிப்படுத்தும் விதமாக சகுந்தலையில் மணி வயிற்றில் பார் புகழும் புதல்வன் உருவானான்.

சகுந்தலையிடம் பிறந்த அந்தப் புத்திரனுக்கு, கண்ணுவர் பல ஆசிகளை வழங்கி, செய்யும் சடங்குகளை எல்லாம் கிரமப்படி செய்து, பரதன் என்று பெயரிட்டார். ஐந்து வயதிற்குப் பின்பாக வேதாகமங்கள் அறுபத்து நான்கு கலைக்கியானங்கள் முதலியவற்றைப் போதித்து, ஏழு வயதிற்குப் பிறகு வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றை கற்பித்து மிகவும் பிரியமாக அவனை வளர்த்து வந்தார்.

அப்புத்திரனுக்குப் பன்னிரண்டு வயதான பிற்பாடு கண்ணுவர் சகுந்தலையை அழைத்து, "நீ உன்னுடைய கணவனுடன் சென்று இன்புற்று வாழ்ந்திருக்க வேண்டும். உன்னை மந்திரிகளால் அழைத்துக் கொள்கிறேன்" என்று சொல்லிய மன்னன் இன்னும் அழைத்துக் கொள்ளவில்லை. இனியும் தாமதிப்பது சரியல்ல. நீ அத்தினாபுரத்துக்குச் சென்று அவனை சந்தித்துக் கொள்" என்று சொல்லி சில சீடர்களுடன் அவளை அனுப்பிவைத்தார்.

வாழ்க்கையின் சில விடயங்களைப் பிள்ளைகள் நேரடியாக முகங்கொடுக்க வேண்டும் என்று தந்தையர் நினைப்பர். இதுதான் அன்னைக்கும் தந்தைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். இதனால் துஷ்யந்தனிடம் சென்று சேர்ந்துவிடுமாறு சகுந்தலையை அவர் அனுப்பிவைத்தார்.

ஏன் கண்ணுவரும் உடன் போயிருக்கலாமே. அவர் சென்றிருந்தால் நிலைமை மாறியிருக்குமே. அவருக்குப் பொய்யைச் சொல்லுவதற்கு துஷ்யந்தனுக்கு மனம் வந்திருக்காது. அவளை சுலபமாகவே ஏற்றுக் கொண்டிருப்பானே. சகுந்தலையைப் பெற்றவள் இருந்திருந்தால் இவ்வாறு தனியே செல்ல விட்டிருப்பாளா என்று அன்னையர் ஆதங்கப்படுவது தெரிகின்றது.

இலக்கியத்திலே எல்லா இடத்திலுமே பெண்களுக்கு சோதனையை வைத்துப் பார்ப்பதில் எமது ஆண்கள் முன்னணியிலே நிற்கின்றார்கள். பரீட்சை வினாத்தாளும் கடிகாரமுமாக அவர்கள் நிற்கும்போது, முன்னாலே வரும் பெண் சோதனையை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லுவதை யார்தான் ஏற்றுக் கொள்ளமுடியும்?

ஆனானப்பட்ட இராமரே தீயில் இறக்கித் தன்னுடைய பத்தினியை சோதனை செய்தார்? வாய்மை மாறாத அரிச்சந்திர மகாராஜா இன்னொரு வனுக்கு அடிமையாக விற்றுச் சோதனை செய்தார். கானகத்திலே காரருளில் காதலியை கைவிட்டு ஓடிச் சென்று ஒளிந்து நின்று பார்த்தார் நளன். அவளின் பத்தினியும் சோதனையில் வென்று தன்னுடைய தந்தையின் நாட்டுக்குச் சென்றுவிட்டார்.

இந்தக் காலத்தில் சோதனைகள் நடத்தப்படுவதில்லையா என்று கேட்கலாம். ஏன் இல்லை?. நிறையவே சோதனைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் சோதனையின் முடிவில் அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படு வதில்லை. விளைவாக்கும் அனைத்தும் கண்ணீர்ப் பரிசுகளே.

கணவன் வெளிநாட்டில் வாழும்போது அங்கிருக்கும் பெண்கள் அரும்பாடுபட்டு வெளிநாட்டுக்குச் செல்வார்கள். அங்கு அவர்கள் சந்தோசமாக

வாழ்கின்றார்களா என்றால் அது இல்லை. ஆக சோதனையின் பின் வரும் முடிவும் இன்னொரு சோதனைதான். இதற்குத் தமிழ் சமுதாயத்திலே பிறந்த எந்தவொரு பெண்ணும் தப்பிவிட முடியாது. சோதனைகள் குறைக்கப்பட வேண்டும் என்று இங்கு நான் சொல்லப் போவதில்லை. ஆனால் சாதனைகள் பதிவாக்கப்பட வேண்டும். இல்லாத்தரசிகளாக இலைமறை காய்களாக உழைத்துக் கெண்டிருக்கும் பெண்களின் உழைப்புகள் கணக்கில் இடப்பட வேண்டும். அவை சமுதாயத்தின் நலமென வெளிக் காட்டப்படுதல் வேண்டும்.

பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னால் பல விதமான சோதனைகள் அவளுக்கு நடத்தப்படும். அவற்றில் எல்லாம் அவள் தேறிவிடுவாள். அது பிழையானதெனக் கொள்ளப்பட மாட்டாது ஏனெனில் இவ்விதமான சோதனைகள் ஆண்களுக்கும் ஏற்படுத்தப்படுவதே.

திருமணத்திற்குப் பின்னால் அவ்விதமான சோதனைகள் நடத்தப் படக் கூடாது. இது வாழ்வின் அத்திவாரத்தையே தகர்த்துவிடும். பெண்களை திருமணத்திற்கு முற்பட்ட காலத்தைப் போலவே சுதந்திரமாக சிந்திப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். அவற்றை எல்லாம் வழங்க வேண்டிய முக்கிய களம் அவர்களின் மனையாக இருக்க வேண்டும்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்று சொல்லுவார்கள். ஊரார் பிள்ளையான தனது மனைவியை சந்தோசமாக வைத்திருந்தால், தனது பிள்ளை தானே வளரும் என்பதுதான் அதற்குப் பொருள். எனவே மனைவிக்கு உரிய இடத்தைச் சரியாக வழங்கி அவர்களை வாழ்க்கையில் மிளிரச் செய்யலாம்.

அதனால் பெண்கள் தாமாகவே முன்னேறிவிடுவார்கள் என்பதற் கில்லை. எத்தனை கோள்கள் ஒளியை சூரியனிடம் இருந்து பெற்றுப் பிரகாசித்தாலும், சுயவொளியுள்ள ஆதவனுக்கே பெருமை அனைத்தும் சென்று சேரும். அதேபோல் பெண்கள் எவ்வளவு மேன்நிலைக்கு வந்தாலும் அவர்களை உயர்த்திய பெருமை அந்தந்த ஆண்களுக்கே சென்று சேர்ந்துவிடும்.

## 22. காலமின்றிக் கவர்ந்திழுக்கும் களவியல்

மானுடராகப் பிறந்த அனைவரையும் ஒரே நேரத்தில் வசீகரப்பட வைக்கும் ஒரு விடயம், வயது வேறுபாடின்றி அனைவரையும் இரசிக்க வைக்கும் விடயம் ஒன்று இருக்குமானால் இது காதலே என்பது அனைவரின் அபிப்பிராயமாகும்.

"காதல்... காதல்... காதல்...

காதல் போயிற் ..

சாதல்.. சாதல்... சாதல்..." என்ற பாரதியாரின் கவிதைகள் காதலை எடுத்துச் சொல்கின்றன.

மானுட வாழ்க்கையானது அன்பின் அடிப்படையிலே உருவாக்கப் பட்டது என்பதை கடந்த அத்தியாயம் ஒன்றிலே குறிப்பிட்டிருந்தேன். அன்புடன் அழகையும் கவர்ச்சியையும் அற்ப சந்தோசத்தையும் வழங்கி விட முனையும் ஒரு விடயம் இருக்குமானால் இது காதலே என்பது காதலர்களின் கருத்தாகும்.

காதலுக்குக் கண்கள் இருப்பதில்லை. காதல் அடிப்படையில் அழகுக்கான கவர்ச்சியாக இருந்தாலும் அதைப் பாராத காதலும் இருக்கின்றது. ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் ஒதெல்லோ என்ற கதாபாத்திரம் அழகினை அன்றி அகத்தின் ஆழத்தை நேசித்த டெஸ்டமோனாவின் அன்பைச் சொல்லுகின்றது.

தமிழ் சினிமா உலகத்தில் எத்தனையோ திரைப்படங்கள் தோன்றி யிருந்தாலும் அதிலே காதல் கலப்பில்லாத படங்களைத் தெரிந்தெடுப்பது மிகவும் கடினம். பல்வேறு கோணத்தில் சொல்லியிருந்தாலும் அவை காதல் என்னும் ஒரே வகுப்பினுள்ளே வந்து சேர்ந்து விடுகின்றன.

உலகின் நிலையாமையை விளக்க முனைந்து எதற்காகக் களவியலில் இறங்கிவிட்டீர்களோ என்று கேட்பது புரிகின்றது. அதிலும் எத்தனையோ கலவி சம்பவங்களைச் சொன்ன பிற்பாடு இதிலென்ன

காதலில் ஆராய்ச்சி என்று யோசிப்பதும் புரிகின்றது.

சகுந்தலையின் காதையில் தான் முதன் முதலில் காதல் இடம்பெறுகின்றது. கண்கள் தரிசித்து உள்ளம் தரிசித்து, அதற்குப் பின்னதாக கலவி எனப்படும் விடயம் இந்தவிடத்தில் தான் காட்டப்பட்டுள்ளது. இரு மனங்களின் உண்மையான ஈடுபாட்டை இங்குதான் சொன்னார்கள். ஆனால் அந்தக் காதலுமே காரணமின்றித் தோல்வியடைந்ததோ என்று எண்ணி உலகக் காதலர் சமுதாயமே அழும் குரல் கேட்டது.

சகுந்தலையை வளர்த்தவர் கண்ணுவர் என்னும் மகரஷி என்பதால் உரிய காலத்தில் அவளைக் கணவனிடம் அனுப்பி வைப்பதற்கு அவர் தீர்மானித்தார்.

கணவனைக் காண்பதிற் சந்தோசம் அடைந்திருந்தாலும், அத்தனை காலமும் அவன் வராதிருந்த காரணத்தினால், அவளுக்கு நம்பிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. சகுந்தலை ராஜனின் கொலு முன்னால் வந்து, தனது மகனோடும் வணங்கி நின்றாள். அங்கு அரசனோடும் வீற்றிருக்கும் 181 மந்திரிகளும் 3371 மகுட வர்த்தனரும், இம பண்டிதர் இராஜ புரோகிதர், ஆசிரியர்கள் 56 தேசாதிபர்கள் அனைவரும் சகுந்தலையையும் பரதனான வாலிபனையும் நோக்கி அவர்களின் தேஜஸை அவதானித்து அவர்கள் அந்த இராஜசபைக்கு வந்திருப்பது எதனாலோ என்று எண்ணத் தொடங்கினர்.

ஆனால் அரசன் தன்னை வணங்கிய சகுந்தலையையும் புத்திரனையும் உற்று நோக்கியதும் அனைத்தும் நினைவுக்கு வந்திருந்தாலும், அந்த விடயத்தை வெளியிற் சொல்லிக் கொள்ள ஏனோ மனம் வரவில்லை. அவனுடைய மனம் பலவாறாகவும் எண்ணத் தொடங்கியது. "நாம் இவள் கருத்துக்கு விரோதம் வராமல் இவளை அழைத்துக் கொள்வோம் என்றால் இதோ இருக்கிற நமது புத்திரனுக்கு நமக்குப் பின் மந்திரி முதலானோர் பட்டம் கட்ட மாட்டார்கள். அதனால் நாம் இவளை நிராகரிப்போம். அப்போது நாம் சாட்சியாக வைத்த

ஆகாய வாணி வந்து ஒப்புக் கொள்ளச் செய்வாள்" என்று யோசித்தான். அவளைத் தெரியாததுபோல அவளை நோக்கி அவர்கள் யார் என்ற கேள்வியைக் கேட்டான்.

அதைக் கட்டதும் சகுந்தலைக்குக் கவலையாக வந்தது. தன்னை அடைந்து கொள்வதற்கு எத்தனையோ நியாயங்களை எடுத்துச் சொன்ன அவன், தங்களைப் பாராது இருந்தது மட்டுமன்றி, அன்று நேராகச் செல்லும்போதும், தெரியாதவர்போல வினாவுவதைப் பார்த்தாள். மிகுந்த கவலையுடன் தன்னை அவன் நாடி வந்த சம்பவத்தைச் சொன்னாள்.

அதற்குச் சாட்சி என்ன என்று வினவியபோது, "ஆகாயமும் பூமியுமே சாட்சி" என்று அவள் சொல்லிவிடவும் மன்னன் நகைத்தான். அவை ஏன் சாட்சிக்கு வரவில்லை என்று கேட்டான். சகுந்தலை ஆற்றாத் துயரத்துடன் கதறத் தொடங்கினாள்.

"ஐயோ நான் பாவி. விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பெண்ணாய்ப் பிறந்தும், கண்ணுவ மகரிஷியின் கண்ணருளால் வளர்ந்தும், சிங்காசன அதிபதியாகிய சந்திர குலத்து அரசனுக்கு மனைவியாக விளங்கியும், ஆதவனைப் போன்ற அருட்குமாரனைப் பெற்றும், என்னைப் பற்றிய துன்பம் நீங்கியபாடில்லை. இது யான் செய்த பாபம்" என்று சோர்ந்து கொண்டே அந்த இடத்தை விட்டு வெளியேறத் தலைப்பட்டாள்.

அத்தருணத்தில் ஆகாயவாணி அந்த இடத்திற்கு வந்து, "ஓ! அரசனே இந்த சகுந்தலை ஒரு உத்தமி. இவள் சொல்லியவை எல்லாம் உண்மைதான். இவளை மனைவியாக்கிக் கொண்டு அந்தச் சிறுவனுக்குப் பட்டம் கட்டுக. இச் சிறுவனால் உன்னுடைய வம்சம் பெருமையடையும்." என்று சொல்லவும் அரசனுக்குத் திருப்தி உண்டாயிற்று.

உடனே ஓடோடியும் வந்து சகுந்தலையை அணைத்துக் கொண்டு, சபையோர்கள் அறிந்திடும் வண்ணம் தங்களது உறவை வெளிப்படுத்தினான். அந்த சபை அவளை மகாராணியாக ஏற்றுக் கொண்டது.

அதற்குப் பிறகு அரசியாக சகுந்தலையும் அரசனும் ஒன்றாகப் பல காலம் வாழ்ந்ததன் பிறகு உலக ஆசைகளின் மீது வெறுப்புண்டாகி மறுமைப் பயனை அடைய வேண்டும் எனக் கருதி, தன்னுடைய புத்திரனாகிய பரதனை அழைத்து, வேத வேதியர்கள் ஆசி கூறவும், ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் மந்திரிகளும் கொண்டாட மகுடாபிஷேகம் செய்வித்தான். அதன்பிறகு தான் தன் மனைவியோடு காட்டிற்குச் சென்று அருமையான தவத்தைச் செய்தான். பின்பு சில நாட்களில் துஷ்யந்த மகாராஜாவும் சகுந்தலையும் பரம பதம் சேர்ந்தனர்.

இங்கு பரத மகாராஜன் சாத்திரவிதி பிசகாமல் செங்கோல் செலுத்தி, அநேக யாகங்களைச் செய்து தேவர்களுக்கு மகிழ்வுண்டாக்கி, தரும தேவதை நான்கு பாதத்தில் நடக்கத் தன்னுயிர் போல மன்னுயிர் காத்து வந்தான். அவன் கேகய நாட்டரசன் மகளாகிய சுனந்தையை மணம்புரிந்து சுகமாக வாழ்ந்து வந்தான். அவனின் சிறப்பினால் சந்திர வம்சத்திற்குப் பரத வம்சம் என்றும், அம்மரபின் அரசர் கதைக்குப் பாரதம் என்றும் பெயர் வந்தது.

பரதனுக்கும் சுனந்தைக்கும் பௌமன் பிறந்தான். பரதன் அப் பௌமனுக்கு மகுடாபிஷேகம் செய்துவிட்டு, காட்டிற் சென்று தவத்தைச் செய்து பரமபதம் அடைந்தான். அப் பௌமன் தசானவர்த்தன் மகளாகிய விசையையை மணம் புரிந்து சுகோத்திரனைப் பெற்றான். சுகோத்திரன் வீமராஜன் புதல்வியாகிய கௌசலா தேவியை மணந்து அஸ்தனைப் பெற்றாள்.

அஸ்தன் சூரகேது மகளாகிய சந்தனவதி சமேதனாகி மனுநீதி தவறாமல் அரசு செலுத்தி, இந் நகரத்தைப் புதுக்கி வீதிகள் ஏற்படுத்தினான். இதனால் அஸ்தினாபுரம் என்று இந்கரத்திற்குப் பெயர் வந்தது.

அஸ்தனுக்கு நிகும்பன் பிறந்தான். நிகும்பன் பட்டாபிஷேகனாகி சுவேதையை மணந்து அவளிடமாய் அரசர்மீளி என்றொரு புத்திரனைப் பெற்றான். அரசர்மீளி மகுடாபிஷேகனாகி உருக்காதேவி, கௌசலாதேவி, விசாலாதேவி என்கின்ற மூவரை மணந்து, நூற்றிருபத்து நான்கு

புத்திரர்களைப் பெற்றான். அப்புத்திரர்களில் சவ்வருணன் என்பவன் மாத்திரமே அரசுக்கு யோக்கியனாக இருந்தமையால் அவனுக்கு பட்டங்கட்டி அரசர்மீளி பரமபதம் அடைந்தான்.

சவ்வருணனுக்கும் சூரிய புதல்வியாகிய தபதிக்கும் பிறந்த புதல்வனுக்கு, தன்னுடைய குருவின் அருளால் கிடைத்தவன் ஆகையால் குரு என்று பெயரிட்டு வளர்த்தான். இதனால் இந்தச் சந்திர வம்சத்திற்குக் குருகுலம் என்று பெயர் இடப்பட்டது. அப் புத்திரன் மகுடாபிஷேகத்திற்கு தன் தந்தையிலும் எண்மடங்கு அதிகமாகத் தருமத்தை நடத்தி, அநேக யாகங்களைச் செய்து, தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் காப்பாற்றி மனத தேசாதிபதி புத்திரி சுவாலையை மணம் புரிந்தான். அவன் யாகம் செய்த இடம் குருஷேத்திரமென்று பெயராயிற்று. அவர் அவ்வளவு பிரபலமாய் அரசு செய்து ஒரு புத்திரனைப் பெற்று, அவனுக்குப் பரீட்சித்து என்று பெயரிட்டு தன் மகுடத்தை அவனுக்குச் சூட்டினார்.

பரீட்சித்து மகாராஜன் கேகய தேசாதிபதி புத்திரியாகிய சுபத்திரையை மணந்து பிரதீபன் என்ற புத்திரனைப் பெற்றான். பிரதீபன் பீமராஜன் புதல்வியாகிய சுனந்தையை மணந்து தேவாபி சந்தனு என்னும் இரு புத்திரர்களைப் பெற்றான். இவ் இருவரில் மூத்தவனாகிய தேவாபி காட்டிற்குச் சென்று தவம் செய்திருந்தான். இளையவன் சந்தனு மகுடாபிஷேகனாகி தன்னுயிரைப் போல மன்னுயிரையும் காப்பாற்றிக் கொண்டு வந்தவன், ஏற்கெனவே பழைய அத்தியாயத்தில் குறிப்பிட்டவாறு கங்கையையும் சத்தியவதியையும் மணம் செய்து பாரதத்தில் முக்கியமான பங்கை வகித்துக் கொண்டார்.

கங்கையின் மைந்தனாகிய பிதாமகர் இல்லறத்தைத் துறந்து ஏனைய அனைத்துப் புகழுடனும் வாழ்ந்தார் என்பது எமக்குத் தெரியும். மச்சகந்தி என்று அழைக்கப்பட்ட சத்தியவதியை மணம் செய்து சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்ற சந்தனு, இறைபதம் அடைந்ததன. பின்னாக சத்தியவதியின் வாரிசுகள் அரசைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று நினைத்த அவளது

தந்தையின் நோக்கம் நிறைவேறவில்லை. சித்திராங்கதன், கந்தர்வன் ஒருவனுடன் போரிட்டு இறந்தான்.

விசித்திர வீரியன் காசி அரசனின் புத்திரிகளாகிய அம்பிகை மற்றும் அம்பாலிகை ஆகிய இருவரை மணந்து சந்ததி இல்லாமலே இறந்தான். சந்ததியை உருவாக்கும் பொருட்டு, வேதவியாசரை மணந்து அம்பிகை மற்றும் அம்பாலிகை இடத்து திருதராட்டிதன் மற்றும் பாண்டுவையும் அவளின் தாதியின் மூலம் விதுரனையும் பெற்றார்கள். இவர்கள் இளம் பிள்ளைகள் ஆதலால் பிதாமகர் அவர்களுக்குக் காவலாக இராச்சியத்தைப் பரிபாலித்து வந்தார்.

திருதராட்டிதன் கண்களை இழந்த காரணத்தால் அரசுப் பதவியை ஏற்கவில்லை. அவன் காந்தாரியை மணந்து சுயோதனன் என்றழைக்கப்படும் துரியோதனன் முதலாக நூறு புத்திரர்களைப் பெற்றான். பாண்டுராஜன், குந்தி — மாத்ரி என்னும் இரண்டு ஸ்திரீகளை மணந்து யுதிஷ்டன் என்று அழைக்கப்படும் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன் மற்றும் சகாதேவன் என்னும் பஞ்ச பாண்டவர்களைப் பெற்றான். பாரதத்தில் பல அரிய பெரிய சாதனைகளைச் செய்த பஞ்ச பாண்டவர்கள் பிறந்த நள் முதலாக சாதனை செய்தவர்கள் ஆனார்கள்.

இப் பஞ்ச பாண்டவர்கள் ஐவரும் பூர்வ புண்ணிய வசத்தால் பாஞ்சாலியைத் திருமணம் செய்து தருமனுக்குப் பிரதிவிந்தனையும், பீமனுக்கு சுருதீசனையும், அருச்சுனனுக்கு சுரத கீர்த்தியையும் நகுலனுக்கு சநாதிகனையும் சகாதேவனுக்கு சுதசேனனையும் பெற்றாள். அவர்கள் அனைவரும் உப பஞ்ச பாண்டவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

அவர்களைத் தவிரவும் பஞ்ச பாண்டவர்களின் வாரிசுகள் இருந்தார்கள். தருமன் சுயம்வரம் மூலமாக மாளவ தேசாதிபதி புத்திரியாகிய வேதிகையை மணம் புரிந்து மிகுந்த சாந்தத்தை உடைய சாதேயனைப் பெற்றான். பீமன் சலதரை என்னும் கன்னியை மணம் செய்து சுகுணனையும் இடும்பி எனப்படும் அரக்கியை மணம் செய்து கடோற்கசனையும் பெற்றான். அருச்சுனன் கிருஷ்ணரின் தங்கையாகிய

சுபத்திரையை மணந்து அபிமன்யுவையும் உரகபதி மகளாகிய நாககன்னியை மணந்து அரவானையும் பெற்றான். நகுலன் இலகீர்மதி என்னும் கன்னிகையை மணந்து மித்திரனையும் சகாதேவன் விஜையை மணந்து வேத்திரனையும் பெற்றான்.

இப் பன்னிரண்டு புத்திரர்களில் அருச்சுனன் மகனாகிய அபிமன்யு, விராடனின் மகளாகிய உத்தரையை மணந்து பரீட்சித்துவைப் பெற்றாள். மகா பாரதப் போரில் அனைத்து இளைஞர்களும் அழிக்கப்பட்ட பின்னால் பதினெட்டு வருடங்கள் கடந்ததன் பின்னால் பரீட்சித்துவுக்கு முடிசூட்டி பாண்டவர்கள் வனத்திற்குச் சென்றுவிட்டார்கள். பரீட்சித்து மாத்திரை என்னும் கன்னிகையை மணந்து ஜனமேஜன் என்ற அரசனைப் பெற்றான். ஜனமேஜன் வபுஷ்டையை மணந்து சநாதிகளைப் பெற்றாள். சநாதிகன் வைதேகியை மணந்து அஸ்வமேதனைப் பெற்றான். இதுவே சந்திர வம்ச பரம்பரை. சந்திரன் முதல் அஸ்வமேதன் ஈறாக நாற்பத்தேழு தலைமுறைகள் ஆயின.

இந்தத் தலைமுறையில் காணப்பட்ட சிறப்பான அம்சம் எதுவெனில் பெண்களின் பெயர்களும் இடம் பெற்றிருப்பதாகும். அநேக இலக்கியங்கள், இதிகாசங்கள் வரலாறுகளில் இடம்பெற்ற பெண்களின் பெயர்கள் மறைக்கப்பட்டு அல்லது நினைவுபடுத்தப் படாது இருந்தன. ஆனால் இந்தக் கதைகளில் அநேகமான பெண்களின் பெயர்கள் நினைவு கொள்ளப்படுகின்றன.

எம்மிற் பலருக்கு எமது மூன்றாந் தலைமுறையினரின் வரலாறு தெரியாமல் இருக்கும்போது சந்திர வம்சத்தின் நாற்பத்தேழு தலைமுறையினரின் வரலாறு சொல்லப்பட்டு இருப்பதால் மகா பாரத வீரர்களின் பாரக்கிரமமும் புகழும் அளவிடத்தக்கதன்று. இருப்பினும் இக்காலத்திற்கு அவசியம் தேவையான பல விடயங்களும் உள்ளே புதைந்து வைரத்தைப் போன்று இருப்பதால் அவற்றை வெளியே எடுத்து பட்டை தீட்டி இந்தக் காலத்திற்கு ஏற்ற வகையில் பாவித்துக் கொடுக்க வேண்டியது எமது கடப்பாடு ஆகும்.

# 23. நற்பிரசைகளை உருவாக்குவதில் இன்றைய கற்றலின் பங்கு

கல்வியைக் கற்பதனால் உண்டாகும் பலன்கள் யாவன என்று வினாவும்போது, உலகை அறிந்து உணர்ந்து கொள்தல் என்றும் உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்றுப் பொருளீட்டல் என்றும், இறைவனை உணர்ந்து வழிபடுதல் என்றும் பலவாறான நல்ல கருத்துக்களை எம் முன்னோர் சொல்லி இருக்கின்றார்கள். எந்த ஒரு கல்வியினதும் அல்லது தொழில் முயற்சியினதும் பயன் மனிதாபிமானத்திற்காக உழைத்தல் (serving for humanity) என்பது பொதுப்படையாகச் சொல்லப்படுகின்றது. அதிலும் குறிப்பாக நாட்டுக்குப் பலன்தரும் நற்பிரசைகளை உருவாக்குதில் இன்றைய கல்வி எவ்வாறான பங்கைச் செய்கின்றது என்பதை ஆராய்ந்து அறிய வேண்டியது அவசியமாகின்றது.

கற்றல் என்பது என்ன என்பதைப் பார்ப்போமானால், எமது இளமைக்காலத்தில் பாடசாலையில் சென்று பெற்றுக் கொண்டது என்று எமக்கு சொல்லத் தோன்றும். ஆனால் கற்றல் என்பது தொடரும் அனுபவங்களின் பலனாக எமது நடத்தையில் நிரந்தரமாக ஏற்படுத்தப்படும் மாற்றமே என்று ஆங்கிலேய அறிஞராகிய பிரென் சுமித் என்பவர் சொல்லியிருக்கிறார். அதை விடவும் கற்றலில் மூன்று வகையினைக் குறிப்பிட்டு அதை classical conditioning, operant learning மற்றும் சமூகக் கற்றல் அதாவது social learning என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவற்றிலே இயற்கையின் நிகழ்வுகள் காரணமாக காலங்காலமாகப் பழக்கப்பட்டு வந்தவற்றை classical conditioning என்றும், ஊக்குவிப்புக்கள் மற்றும் தண்டனைகள் மூலம் புகுத்தப்பட்டவற்றை operant learning என்றும் சமூகக் கற்றல் என்பதில் அவதானங்களும் சொந்த அனுபவங் களும் (observations and own experience) என்பதைக் குறிப்பிட்டு ஏட்டுக் கல்விக்கும் அப்பாற்பட்ட கற்றலைச் சொல்லியிருக்கிறார்.

எனினும் இலங்கை மக்களுக்கு ஐந்து வயது பூர்த்தியானதற்குப் பின்னதாகக் கட்டாயமாக இலவசக்கல்வி வழங்கப்பட்டிருப்பதால் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வருவதில் பாடசாலை முன் நிற்கின்றது என்பதை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம். இதனால் பள்ளியின் கற்றல் ஒருவனின் நடத்தையில் மாற்றத்தை உண்டாக்கும் என்பதையும் ஊகித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொருவருக்கும் உள்ளே அமைந்திருக்கும் திறமைகள் வெளிக்கொணரப்படவேண்டும். அவை மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும். ஒரு மனிதனின் வாழ்வில் அதற்குரிய வாய்ப்பை வழங்கும் முதலாவது களமாகப் பாடசாலை அமைகின்றது. ஒருவரது குணாதிசயங்கள், நடத்தை போன்றவை வெளிக்கொணரப்பட்டு மேம்படுத்தப்படும் இடம் இதுவே.

வாழ்க்கையில் பெரும்பகுதியை அதாவது கிட்டத்தட்ட ஒன்பது தொடக்கம் பதின் மூன்று வருடங்களை பாடசாலையிலே செலவிடு கின்றோம். பாடசாலையில் இருந்து வெளியேறும்போது கல்வியை மட்டுமல்ல பண்பு, பழக்கவழக்கங்கள் அதாவது norms and values போன்றவற்றை சுமந்துகொண்டு சமுதாயத்தினுட் காலடி வைக்கின்றோம்.

இலங்கையில் இலவசக் கல்வி சீ டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா அவர்களினால் 1944 ஆம் ஆண்டு தொடக்கி வைக்கப்பட்டது. இலவசக் கல்வியின் முழுப்பயனையும் பெறுவதற்கு புத்தகங்களையும் இலவசமாக வழங்க வேண்டும் என்று 1980 இல் அந்நாளைய சனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன அவர்களால் முன்மொழியப்பட்டு இலவசப் பாடநூல் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1993 இல் அன்றைய சனாதிபதி ஆர் பிரேமதாச அவர்களினால் இலவச சீருடை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வரையிலும் இதன் பலனை முழுமையாக அனுபவிக்கும் மாணவர்களாகவே நம்மிற் பெரும்பாலானோர் இருந்திருக்கின்றோம்

பொதுவாக அனைவருக்கும் கிடைக்கும் வாய்ப்புகளாக எமது நாடு இவற்றை வழங்கியிருப்பினும், போட்டிகள் மற்றும் விழாக்களின் மூலம் திறமையானவர் வெளிக்காட்டப்படுவதும் கௌரவிக்கப்படுவதும் சில பாடசாலைகளுக்குக் கிடைக்கின்றது. பொதுவான நோக்கங்களாக பரீட்சையில் சித்தி என்ற விடயம் கருத்திற் கொள்ளப்பட்ட போதும் போட்டிகளில் வெற்றியடைய வேண்டும் என்பதும் பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற உந்துதல் மாணவர்களுக்குள் புத்துணர்வை ஏற்படுத்துகின்றது. இதனால் கல்வியின் அதியுயர் இலக்காகிய சித்தி என்பது தானாகவே வந்து சேரும்.

இதனாலே இன்றைய நாட்களில் பாடசாலைகளில் பரிசளிப்பு விழா என்பதும் விளையாட்டுப் போட்டியைப் போன்று முக்கியமாகக் கருதப்படுகின்றது ஏட்டுப்படிப்பைத் தவிரவும், விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மாணவர்களுக்கு முக்கியம் என்பதைக் கல்வியமைச்சு அனுமானித்துக் கொண்டிருப்பதால் பரிசளிப்பு விழாக்களின் மூலமாக மாணவர்களுக்குரிய ஊக்குவிப்பை முழுமையாக வழங்கவேண்டும் என்பதை பாடசாலைச் சமூகம் தீர்மானிக்கின்றது.

எப்போதாவது மழையின் முன்பாகத் தோன்றும் வானவில்லைப் போன்று அல்லாது இன்று கல்வி என்பது அகன்று விரிந்த வானத்தைப் போன்று வந்துவிட்டது. தொழினுட்பத்தின் விருத்தி, அனைத்து விடயங் களையும் வலையத்தினுட் தேடலாம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டு வந்து விட்டது. ஆசிரியர்களை நோக்கி ஓட வேண்டியதில்லை. புத்தகங்களைத் தேடித்திரிய வேண்டியதில்லை. முக்கியமான சில எழுத்துக்களை மட்டுமே கணனியிற் பதிவிடும்போது, அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்தையும் கண்ணுக்குக் காட்டும் அளவிற்கு அவற்றைப் பிரதி செய்து அச்சில் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு இன்றைய விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. கல்விமானாக ஆவதற்குரிய தடைகள் தகர்த்தெறியப்பட்டுவிட்டன. குருநாதர் இல்லாமற் கல்வி கற்றுக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை இக்காலத்தில் வந்துவிட்டது.

ஆனால் இணையத்தளங்களால் கல்வியை மட்டுமே வழங்க முடியும். ஒழுக்கத்தைச் சொல்லித்தர முடியாது. கல்விமான்களை மட்டுமே உருவாக்க முடியும். நாட்டுக்குத் தேவையான நல்ல பிரசைகளை உருவாக்க முடியாது. கற்றலின் அடைவாகிய நடத்தையில் மாற்றம் என்பதை உண்டாக்கிவிட முடியாது. ஆனால் பாடசாலைகளால் இவை இரண்டையுமே அடைவிக்க முடியும். அந்தக் குறிக்கோளை அடைவதற்காகவே இணைப்பாடவிதானங்களை கல்வித்திட்டத்தினுள் இணைத்திருக்கின்றார்கள். அதனால் இளமையிலே, அதாவது பள்ளிக்காலத்திலே அதற்குரிய சந்தர்ப்பங்களை அடைந்திருக்கும் மாணவர்கள் அதிஷ்டம் பெற்றவர்களே.

இன்று கல்வித்துறைக்காகவும் சுகாதாரத்துறைக்காகவும் பெருமளவு பணத்தை செலவழிக்கும் வறிய நாடாக எமது நாடு காணப்படுகின்றது. அத்தனை செலவினங்களும் முழுப்பயனைத் தருகின்றனவா என்று நினைக்கும்போது பதிலைச் சொல்ல முடியாதவர்களாகவே நாம் காணப்படுகின்றோம். அதற்கு முக்கியமாக இருக்கும் விடயங்களில் ஒன்று தொழில் வாய்ப்புத் தொடர்ந்தும் பிரச்சினையாக இருத்தல் என்பதாகும்.

அதாவது career guidance என்பது வழங்கப்படாமை, மற்றையது, creativity அதாவது உருவாக்கத் திறனை விருத்தி செய்ய முனைந்திடாத எமது கல்வியறிவு. இவற்றுக்கு இடையிலான இடைவெளியைக் குறைத்து வெற்றியை ஈட்டித்தரக் கூடிய இடம் பாடசாலை மட்டுமல்ல சமுதாயத்துடனும் இணைந்துகொள்ள வேண்டும். அதைத் தரக்கூடியவர் களாக ஆசிரியர்கள் மட்டுமல்ல தொழிற்றுறையில் இருப்பவர்களும் சமூக ஆர்வலர்களும் கைகோர்த்து வரமுடியும். ஆனால் அதற்கான அணுகுமுறை எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமானதாக அமையவில்லை.

மேலைநாடுகளில் எமது நாட்டைப் போன்று கல்வி திணிக்கப்படு வதில்லை. மூன்று வயதே நிரம்பிய பிள்ளையை அழைத்துச் சென்று

வலுக்கட்டாயமாக எழுத்துக்களை எழுதச் சொல்லி அடிப்பதில்லை. அவர்கள் பலர் வாழும் சமுதாயத்தில், பலருக்கு முன்னிலையில் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கான பயிற்சிகளை வழங்குகின்றார்கள். வீட்டுக்கு வெளியே திறந்த கண்களுடன் காலடியை எடுத்து வைப்பதற்கான பயிற்சிகளை வழங்குகின்றார்கள். இதனால் கற்றலில் அதியுச்ச பலனாகிய நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது தானாகவே அங்கு ஊட்டப்படுகின்றது. அவ்வாறான விடயங்கள் எமது கற்பித்தலில் உள்ளடக்கப்பட்டாலும் தொடர்ந்து கண்காணிக்கப் படுவதில்லை அல்லது வழிப்படுத்தப்படுவதில்லை.

படிப்பில் ஏற்படுத்தப்படும் போட்டிகளும் சவால்களும் மாணவர்களின் தனிப்பட்ட நேரத்தை விழுங்கி விடுகின்றன என்பது பொதுவான அபிப்பிராயமாகும். ஆறுதலாக இருந்து ஒரு பாடத்தை இரசித்துப் படிக்கும் நேரம், பாடங்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்புகளை ஒப்பிட்டு அறியும் ஆவல், மூளையைக் கசக்கி சிந்திக்கும் ஆற்றலை (brain storming) வளர்த்துக் கொள்ளும் திறமை என்பன தனிப்பட்ட வகுப்புக்களுக்குச் செல்லும் காரணத்தால் முடக்கி விடப்படுகின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

தனிப்பட்ட இலாபத்தைக் கருத்திற் கொண்டு தனியார் வகுப்புகளை நடத்துபவர்களாகிய அரச பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், இப்படியான விடயங்களைக் கருத்திற் கொள்ளாமல் மாணவர் சமுதாயத்தை திசை திருப்புகின்றார்கள் என்பதும் பொதுவான அபிப்பிராயமாகும். இதனால் தொழிற்பயற்சியைத் தேர்ந்தெடுக்கக்கூடிய போட்டிப் பரீட்சையாகிய உயர்தரப் பரீட்சையில் சித்தி அடையாதுவிட்டால் ஒருவனின் எதிர்காலமே கேள்விக்குறியாகும் நிலை இங்கு காணப்படுகின்றது.

கற்றலின் நோக்கமானது ஒருவனது நடத்தையில் ஏற்படுத்தப்பட வேண்டிய நிரந்தரமான மாற்றம் என்பதால், மாணவர்களின் பெற்றோரும் அதில் முக்கிய பங்கினைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பாடசாலைக் கல்வியைக் கற்றிருந்தாலும் கல்லாது விட்டிருந்தாலும்

சமூகக்கல்வியை அதாவது social learning ஐ அறிந்தவர்களாக இருப்பதால் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டவேண்டிய ஒவ்வொரு வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு வேண்டிய பாரிய பொறுப்புக்களைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதைவிடவும் பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோர்களின் செயல்களை உன்னிப்பாகக் கவனித்து அவர்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். அதனால் பிள்ளைகளுக்கு உதாரணகர்த்தாவாக ஒழுகவேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.

ஆனால் அவர்களும் இன்றைய வேகமாக உலகத்திலே விரைவாக ஓடிக் கொண்டிருப்பவர்களாக இருக்கின்றார்கள். அதைத் தவிரவும், பிள்ளைகள் தங்களுடைய வினைத்திறனாக பொழுதை பாடசாலைக்குள்ளாகக் கழித்துவிட்டு மிகுதி நேரத்தை மட்டுமே பெற்றோருடன் செலவழிப்பதால் அவர்களை வழிநடத்தும் நேரம் இளம் பிராயத்தில் அவர்களிடம் முழுமையாக அமைவதில்லை.

தற்காலத்தில் தொழில்நுட்ப விருத்தியும் பண வீக்கமும் அனைவரின் வாழ்க்கைப் பாதையையும் வேகமாக்கியது மட்டுமல்ல உணர்ந்து கொள்ள முடியாத அளவிற்குத் திசைதிருப்பியிருக்கிறது. பெரியவர்கள் இவ்வாறு திசை திருப்பப்பட்டிருக்க இளம் பிராயத்தினரின் பாதை வழிகாட்டியின்றி புயலில் அகப்படும் சிறு துரும்பைப் போன்று அமைந்துவிட்டது. இன்றைய உலகின் வேகமாக ஓட்டம் அறிவை மட்டுமே தருகின்றது. ஆனால் வழிகாட்டலையோ வாழும் வழியையோ சொல்லவில்லை. இதனால் பிள்ளைகளுக்கு வழிகாட்டாத எமது சமுதாயத்தினரின் போக்கும் பெற்றோர்களையும் ஆசிரியர்களும் போலவே இந்த இடத்தில் நினைவுபடுத்தப்பட வேண்டியதே.

இது இவ்வாறிருக்க தொழில் தகைமையைப் பெறுவதற்குக் கடினமான போட்டிப் பரீட்சையைத் தாண்டி வரவேண்டிய அவசியம் ஒவ்வொரு மாணவனுக்கும் இருக்கின்றது. அவ்வாறு பிரயாசைப்பட்டு கடும் தடைகளைத் தாண்டி வெற்றியைப் பெற்றுக் கொண்ட ஒருவன் நல்ல நிலைக்கு வந்ததன் பின்னதாக தன்னுடைய சுயநலத்தை

மட்டுமே சிந்திப்பானே தவிர நாட்டைப் பற்றியும் மற்றவர்களுக்கு உதவுவதைப் பற்றியும் நினைப்பதற்குத் தவறிவிடுகின்றான். அவனுக்கு எதுவும் இலகுவாகக் கிடைத்திருக்கவில்லை. அதனால் தானும் யாருக்கும் உதவி செய்வதற்குத் தேவையில்லை என்ற எண்ணமே அவர்களிடம் தோன்றும். ஆனால் என்ன பரிதாபம்! சமுதாயத்தில் நல்ல நிலையில் இருப்பவன் சமுதாயத்தைப் பற்றி சிந்திக்க முடியாவிட்டால், சாதாரண வேலையைச் செய்யும் தொழிலாளர்களால் அதைப் பற்றி சிந்திக்க முடியாதே. தன்னுடைய பாதைக்காக அவன் சிந்திய ஒவ்வொரு துளி வியர்வையும் சமுதாயம் என்கின்ற பாரிய தோட்டத்திற்கு உரமாக வேண்டும் என்ற எண்ணத்தையல்லவா ஊட்ட வேண்டும். அதனை எமது கற்றல் செய்துவிடுகின்றதா?

இவ்வாறெல்லாம் கற்றலின் பாங்கில் நடத்தையில் மாற்றத்தைக் கொணர்வதற்கு ஆசிரியர், பெற்றோர், சமுதாயம் என்று பலரைக் கருதிக் கொண்டிருப்பினும், ஒரு சாதாரண மனிதனின் சிந்தனை ஆசிரியர்களின் மீது நிலைக்க முனைவதால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் இடம் சம்பந்தமாக ஒரு விடயத்தை இவ்விடத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஏனைய தொழில்களைப் போன்று ஆசிரியத் தொழிலில் ஒருவருடைய வெற்றி சம்பளத்தையும் அடைவுகளையும் கொண்டு அளக்கப்படுவதில்லை. மாறாக மாணவர்களின் எதிர்காலத்தைக் கொண்டே அவர்களின் வெற்றி மதிப்பிடப்படுகின்றது. ஏனைய தொழில்களைப் போன்று அங்கீகாரமும் இலாபமும் பெறப்படுவதில்லை என்பது ஆசிரியர்களுக்கிடையில் காணப்படும் பொதுவான கருத்தாகும்.

அந்த நாட்களைப் போன்று ஆசிரியத் தொழில் மகத்துவமானது என்ற கருத்தைக் கொள்ளாது, வருமானம் ஈட்டுவதற்கு என்னென்ன வழிகள் என்பதை ஆயும் நோக்கில் அமையப் பெற்றதால் அதன் மகத்துவம் தெரியாமலே அதை ஒரு தொழில் என்ற வகையில் மட்டும் எடுத்துச் செய்வதால் பலவிதமான சிக்கல்களும் எழுகின்றன. இதனால் ஆசிரியத் தொழிலில் ஏற்படுத்தப்படும் உந்துதல் நடவடிக்கைகள்

நிச்சயமாக நற் பிரசைகளை உருவாக்கும் என்பதைக் கருத்திற் கொள்வோம்.

இன்றைய வாழ்க்கையின் வேகத்தைக் குறைத்து நிதானித்து தம்மையும் பிள்ளைகளையும் பற்றித் தெளிவாக சிந்திப்பதற்குப் பெற்றோருக்கு விழிப்புணர்வை வழங்க முடியுமா?

கற்றலின் உண்மையான இலக்கு இந்தக் கல்வி முறையில் பெறப்படுமா? நிரந்தரமான நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு இவ்வாறான ஆக்கங்கள் துணை புரியுமா?

சுருளியில் அகப்பட்டு உழலுவதைப் போன்ற மாணவர்கள் சுற்றுவதை நிறுத்தி அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் ஆராயும் சந்தர்ப்பம் வழங்கப்படுமா?

இளம் பிராயத்தினர் சம்பந்தமாக அவரகளுடன் நேரடித் தொடர்பில் இருக்கும் பெற்றோரும் ஆசிரியரும் கலந்துரையாடி அவர்களின் பாதை வரைவுபடுத்த முடியுமா?

சமுதாயத்தைப் பற்றித் தீர்மானிப்பதில் எமது சமூகத்தின் பெரியவர்கள் எத்தகைய பங்கை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்? அல்லது வழங்க முடியும்?

ஆசிரியத் தொழிலிலே motivation அல்லது desire to work அதாவது வேலையை விருப்பத்துடன் செய்வதற்கான உந்துதல் வழங்கப்படுமா? அவ்வாறாயின் அவற்றைச் செய்ய வேண்டியவர்கள் யாவர்?

அல்லது

இவற்றையெல்லாம் யோசித்துப் பார்ப்பதற்கு வேறு ஒரு கால எல்லையை வரையறுக்க வேண்டுமா? இந்தச் சதுரங்கம் எவ்வாறு நகர்த்தப்படுதல் வேண்டும்?

- யாவர்க்கும் சுபம் -




978-955-38691-0-4

விலை : ரூ.300.00

Vaani Computer Prinitng Centre, Vavuniya 024 2223658